LB
N12
118501

4411

கடவுள் துணை.

# இராஜரிஷி
# வீரமாமுனிவர்
# வாகடத்திரட்டும்
# தெளிபொருள் விளக்கவுரையும்.

முதற் பாகம்.

இஃது,
யூனானி வைத்திய
தாருட்யகிர்த்திபோதினி முதலிய
பல வைத்திய சாஸ்திர கிரந்தகர்த்தாவாகிய
ஹக்கீம்
பா-முஹம்மது அப்துல்லா சாஹிபு
அவர்களால்

சுதேசவைத்தியர்களின் உபயோகத்திற்காக

சென்னை
முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

FIRST EDITION.

1912 வரு

Rigistered Copyright.

கைவிலை ரூ. 1-0-0. வி-பி. ரூ 1-2-0.

LB 1112
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
118501
சென்னை-600 008

கடவுள் துணை.

இராஜரிஷி

வீரமாமுனி மகானுபாவர்

அருளிச்செய்த

# நசகாண்டம்.

வெண்பா - ர.

மூலம்.

காப்பு.

திசைமேவுந் தென்கிரியிற் சேருமுனி நூலாய்ந்து
நசகாண்ட மென்று நவில - அசைவில்
உருவில்லா னொன்றா யொருபொருளான் பூவோர்க்
கருள்வான் பதங்காப்ப தாம். (௧)

அவையடக்கம்.

பண்ணுற்ற விந்நூல் படித்துணர்ந்த வர்க்காமே
புண்ணுற்ற கைக்கண்ணாடி போலவே - யெண்ணுற்ற
சிற்றறிவோ ராருந் திறமறிய வேசொன்னேன்
கற்றறிந்தோர் தள்ளக் கடன். (௨)

நூற்றிறம்.

காதறிந்தோ னாகிற் றனைப்பயந்த தாயாக
மாதாவென் றெண்ணி மகிழுவார் - வேதநெறி
பத்திக்கு மாதிப் பரனைப் பணிவோர்க்குச்
சித்திக்கு மிந்நூற் றிறம்.

### (1) மாந்தக் கஷாயம்.

வேளைவேர் சுக்குடனே வெர்தயமும் வெள்ளுள்ளி
பாளை வசம்பு பகரோமம் - வேல்விழியே
ஒன்றாகக் கூட்டி யுடன்குழந்தைக் கீயக்
கண்டவுடன் மாந்தம்போங் காண். (ச)

### (2) உதிரவாயுக் குடிநீர்.

தாளொன்றும் வெள்ளுள்ளி தப்பா தடப்பேற்றி
வேளொன்று மக்கினியில் வேகவைத்து-எளொன்றும்
இஞ்சி யுடன்சேர்த் தெரித்தந்த நீர்குடிக்க
மிஞ்சுதிர வாய்வில்லை மேல். (ரு

### (3) விக்கல்சத்திச் சூரணம்.

பன்னும் பருத்திகிளைப் பாரிலுள்ள நெற்பொரியும்
கன்னுதிறை திப்பிலியு மேலமுடன் - நன்றுபொடி
சர்க்கரையுந் தேனுங் கலக்கக் குழைத்துண்ண
விக்கல்சத்தி போகும் விரும்பு. (சா

### (4) அஷ்டபாகச் சூரணம்.

சப்புபறங் கிப்பட்டை செய்பகருஞ் சீரகமும்
ப்பிலிசி ஞக்காரஞ் சேர்பலமுங் - தப்பில்லாச்
ங்கின்வேர் சந்தனமுஞ் சாருகில வாவாரை
சங்கத்தா ரிப்பட்டை தேடி. (எ

தோர்பட்டையுடன்தேறுமுடக்கொற்ருன்வே
மாவ்வொன்றரையாய்ப் பாவித்து-ராடிபெடு
தச்சர்க்கரையிற் றாயகனைக்காயுன் னுங்
ல்மண்டலமுங் காண். (



## விளம்பரம்.

இதனால் சகலமான வர்களுக்குந் தெரியப்படுத்துவது யாதெனில்:—“ இராஜரிஷிவீரமாமுனிவர் வாகடத்திரட்டும் தெளிபொருள் விளக்க உரையும் என்ற முதற்பாகமாகிய” இக்கிரந்தம் கஅசுஎ௵ (உரு-வது) ஆக்டின் (உ0-வது) பிரிவில் (சு-வது) விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மத்ராஸிலும்,

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆகையால், இக்கிரந்தத்தையாவது, அல்லது, இதை வேறு பாஷையில் மொழிபெயர்த்தாவது, அல்லது, இதில் ஏதேனும் பாகத்தையாவது, என் உத்தரவின்றி ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால், மேற்கண்ட ஆக்ட்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகும் நஷ்டமனைத்தும் வசூல் செய்யப்படும்.

ஹக்கீம். பா - முகம்மது அப்துல்லா.

# விசேஷ விளம்பரம்.

எம்மால் அச்சிடப்பட்டிருக்கும் கிரந்தங்களின் டைட்டில்பேஜில் அடியிற் கண்டிருக்கின்ற என்னுடைய பெயர் எழுதப்பட்டிருக்கும். அவ்விதப் பெயர் எழுதப்படாத கிரந்தங்கள் மாறுபாடானவையாயிருக்கும்; ஆனதுபற்றி, அப்படிப்பட்ட கிரந்தங்களைக் கொண்டுவந்து கொடுக்குமவர்களுக்கும், அல்லது, அப்படிப்பட்ட கிரந்தங்களை வைத்து விற்பனை செய்யுமவர்களைக் காண்பிக்குமவர்களுக்கும் தக்க வெகுமதி கொடுக்கப்படும்.

☞ ஹக்கீம். பா - முகம்மது அப்துல்லா.

## புத்தக விளம்பரம்.

இதனடியிற் கண்ட புத்தகங்கள் வேண்டியவர்கள், சென்னை மாபூஸ்கான் தேவடி, அப்புமேஸ்திரி வீதி, 12-வது நெம்பர் கிரகத்தில் இருக்கும் ஹக்கீம்-பா - முகம்மது அப்துல்லா சாஹிபு அவர்களிடத்தில்
கைவிலேக்கும், வாலியூ பேயபல் போஸ்ட் மூலமாகவு
ம், இதனடியிற்கண்ட விலை விகிதப்படி பெற்றுக் கொ
ள்ளலாம்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| பூநாதி வைத்திய தாருட்யவிருத்திபோதினி முதற்பாகம், டை 2-ஆம் பாகம் | 1—5—0 |
| பூநாதி தாருட்டிய விருத்திபோதினித் திறவுகோல் | 2—0—0 |
| பிரமேக நிவாரண போதினி | 0-10—0 |
| சிராவக நிவாரண போதினி | 0-12—0 |
| ஆயுர்வேத சிரோமணி யென்னும் வைத்திய சிந்தாமணி முதற்பாகம் | 0-13—0<br>0-14—0 |



| | |
|---|---|
| சரபேந்திர மேக நிவாரண போதினி | 1—0—0 |
| சரபேந்திர கபமருத்து மஞ்சரி | 0—8—0 |
| சிரோரோக நிவாரண போதினி யென்னும் பூநாதி சிகிச்சாசார சங்கிரகம் | 1—5—0 |
| பூநாதி சிகிச்சாசாரசங்கிரகமென்னும் நயனரோக நிவாரணபோதினி | 1—5—0 |
| பிளேக் சிகிச்சா போதினி | 0—8—0 |
| அநுபோக வைத்திய நவநீதம் முதற்பாகம் | 1—0—0 |
| டை இரண்டாம் பாகம் | 1—0—0 |
| டை மூன்றும் பாகம் | 1—0—0 |
| டை நான்காம்பாகம் | 1—0—0 |
| டை ஐந்தாம்பாகம் | 1—2—0 |
| டை ஆறும்பாகம் | 1—0—0 |
| மூலரோகச் சிகிச்சா போதினி | 1—0—0 |
| வைத்தியத் திருப்புகழ் | 0-12—0 |
| விஷபேதி நிவாரணி | 0—4—0 |
| கடுக்காய்ப் பிரபாவ போதினி | 0—2—0 |
| அகத்திய மகாமுனிவர் அருளிச்செய்த மகாதிராவகம் என்னூறு | 1—0—0 |
| அகத்திய மகாமுனி வைத்தியப் பின்னைத்தமிழ் | 1—4—0 |
| அகத்தியர் மெய்ஞ்ஞானம் | 1—4—0 |
| அகஸ்தியர் பன்னிரு | 1—2—0 |
| அகத்தியமாமுனி வைத்திய அந்தாதி | 1—0—0 |
| இராஜவைத்திய மகுடமென்னும் தேரையர் எதுகையமகவெண்பா 1-ம்பாகம் | 1—5—0 |
| டை இரண்டாம்பாகம் | 1—5—0 |
| இராஜவைத்தியமகுடமென்னும்தேரையர் எதுகையமகவெண்பா மூலம் | 0—6—0 |

| | |
|---|---|
| தேரையர் வைத்திய மகாகரிசல் | 0-10-0 |
| போகரேழாயிர சூஸ்திர மெழுநூறு | 0-12-0 |
| தன்வந்திரி சூக்ஷ்ம வைத்தியம் | 0-5-0 |
| இலக்க சௌமிய சாகரம் 1-ஆம் பாகம் | 1-0-0 |
| ஷை 2 ஆம் பாகம் | 0-14-0 |
| ஷை 3 ஆம்பாகம் | 0-14-0 |
| ஷை 4 ஆம்பாகம் | 0-14-0 |
| ஷை 5 ஆம்பாகம் | 1-0-0 |
| இரசவாதசிந்தாமணிமுதற்பாகம் | 1-5-0 |
| ஷை 2 ஆம் பாகம் | 1-5-0 |
| கொங்கணர் வாதகாவியம் மூவாயிரம் | 1-8-0 |
| யூகிமுனிச்சுருக்கம் | 0-2-0 |
| இரசவாத மஞ்சரி | 1-2-0 |
| ஞாய அஷ்டாங்க தீபம் | 0-4-0 |
| அசன்பேசரித்திரம் | 0-8-0 |
| மனோவசிய தத்துவம் | 2-0-0 |
| மாணிடவசியம் | 2-8-0 |
| சந்திரகாசனைச் சாமர்த்தியத்தால் விழுங்கிய தாசி | 0-2-6 |

## இஸ்லாமார்க்கப் புத்தகங்கள்.

| | |
|---|---|
| தரீகுல் இஸ்லாம் வ தரீருன்னஜாத் | 0-12-0 |
| இஸ்லாத்தின் சிறப்புகள் | 0-6-0 |
| கோன்பாளி நன்கொடை, சிமோன்கள் செங்கொடை | 0-10-0 |
| பத்ஹுல் மன்னான் | 0-10-0 |
| அறபுதமிழ் அகராதியின் முதல்வாலியம் | 3-0-0 |

கடவுள் துணை.

## வீரமாமுனிவர் வாகடத்திரட்டின் அட்டவணை.


| அ. | பக்கம். |
|---|---|
| அக்கினிகுமார செந்தூரம் ... ... | 15-71 |
| அஷ்டபாகச் சூரணம் ... ... | 2-29 |
| அண்டத் தைலம் ... ... | 100 |
| அப்பிரக பற்பம் ... ... ... | 150 |
| அம்பர் மாத்திரை ... ... | 136-209 |
| அயக்காந்தச் செந்தூரம் ... ... | 15-72 |
| **இ.** | |
| இரச சுத்தி ... ... ... | 93 |
| இரசிதாமிர்த சஞ்சீவி ... ... | 111-172 |
| இராஜ தம்பன மாத்திரை ... ... | 136-210 |
| இலகுபாஷாண பற்பம் ... ... | 154 |
| இலிங்க செந்தூரம் ... ... | 130-158-203 |
| இளநீர்க்கிருதம் ... ... ... | 10-54 |
| **உ.** | |
| உதிரவாயுக் குடிநீர் ... ... | 2-26 |
| உதிரவாயு லேகியம் ... ... | 26 |
| **க.** | |
| கசகசாத்தோற் கஷாயம் ... ... | 210 |
| கருங்குழம்பு ... ... ... | 8-48 |
| கர்ம நிவர்த்தி ... ... ... | 17 |
| கலிக்கம் ... ... ... | 9-51 |

| கா. | பக்கம் |
| --- | --- |
| காந்தசுத்தி ... ... ... ... | 50 |
| காமாக்கினி ஜீவகசம் ... ... | 114-178 |
| **கி.** | |
| கிட்ட சுத்தி ... ... ... ... | 49 |
| கிருஷ்ண அப்பிரேக செந்தூரம் ... ... | 159 |
| **கு.** | |
| குண்டலாதித் தைலம் ... ... ... | 11-56 |
| குதிரைக் குளம்பு சுத்தி ... ... ... | 39 |
| குதிரைக்குளம்பு பற்பம் ... ... | 39 |
| **கெ.** | |
| கெந்தகசுத்தி ... ... ... | 98 |
| கெந்தகத் தைலமுறை விபரம் ... ... | 100 |
| கெந்தகத்தைலம் ... ... ... | 83-98 |
| **கோ.** | |
| கோரோசனை மெழுகு ... ... ... | 42 |
| **ச.** | |
| சஞ்சீவி சூதபற்பம் ... ... | 142 |
| சஞ்சீவிலோக செந்தூரம் ... ... | 138-213 |
| சர்வ சஞ்சீவி பற்பம் ... ... | 205 |
| சர்வரோக சஞ்சீவி பற்பம் ... ... | 132 |
| சன்னிவாதக் குளிகை ... ... | 6-40 |
| **சா.** | |
| சாறுவாரா மூலிகைகள், உலர்ந்தமூலிகைகள் ஆகியவற்றிற் சாறெடுக்கும் வகை. | 76 |





| சி. | பக்கம். |
| --- | --- |
| ந்தர் குளிகை ... ... ... | 6-41 |
| ந்தாமணிக் குளிகை ... ... | 3-31 |
| **சு.** | |
| காதார மனோவாரம் ... ... | 107-167 |
| வர்ண அப்பிரேகம் ... ... | 152 |
| **தா.** | |
| தாதுபுஷ்டி புசிதம் ... ... | 10-53 |
| ம்பிர பற்பம் ... ... ... | 145 |
| தாரபற்பம் ... ... ... | 155 |
| தாளகபற்பம் ... | 12-58-129-137-201-202-212 |
| **தி.** | |
| திராவக வாலே ... ... ... | 77 |
| திரிகடுகுக் குளிகை ... ... ... | 4-36 |
| **து.** | |
| துஷ்டரோக சண்டப்பிர சண்டமாத்திரை | 134-207 |
| **ந.** | |
| நவச்சார எண்ணெய் ... ... | 174 |
| நவச்சாரக் கட்டு ... ... | 82-88-93-94 |
| நவச்சார பற்பம் ... ... | 13-60 |
| நவச்சாரப் பதங்கம் ... ... ... | 92 |
| நவச்சார மெழுகு ... ... | 83-96-97 |

நா. பக்கம்

நாகசுத்தி ... 9

நாகசெந்தூரம் ... 14-6

நி.

நிராசை நிவாரண இலா ... 141-21

நிராசை நிவாரண நெய் ... 141

ப.

படிக்காரச் சுண்ணம் ... 90

பராக்கிரம சஞ்சீவி ... 119-188

பலாண்டக் களிம்பு ... 9-50

பவள பற்பம் ... 13-63

பா.

பாஷாண மெழுகு ... 84-103

பாரியாள் நேசம் ... 9-52

பி.

பிரதாப லிங்காமிர்தம் ... 115-181

பிரமேக பைரவி ... 113-176

ம.

மகா மேகாமிர்தம் ... 117-183

மகாவீரிய பாலரசாமிர்தம் ... 143

மகாவீரிய லிங்க செந்தூரம் ... 122-123

மகாவீரிய லிங்க பற்பம் ... 120-190

மகாவீரிய லிங்க மெழுகு ... 124-194

ஷை மெழுகின் இரசவாதம் ... 125





பக்கம்.

[illegible]வீரிய லேகியம் ... 193

[illegible]க்கினீர் ... 89

[illegible]பானக்குளிகை ... 7-44

மா.

மா[illegible] கஷாயம் ... 2-21

மா[illegible] ஷர்பத் ... 25

மா[illegible] திராவகம் ... 23

[illegible]நவிச் செந்தூரம் ... 16-73

மே.

மே[illegible]ச் சூரணம் ... 3-30

[illegible]சுத் இலா ... 115-180

யோ.

யோகராஜ கோகிலம் ... 110-170

லோ.

[illegible]வீரியாமிர்தம் ... 146

வி.

[illegible]ந்திச் சூரணம் ... 2-28

விருத்த கௌமார சஞ்சீவி ... 118-186

விருத்த கௌமார சிவகாமி பற்பம் ... 131-204

வீ.

[illegible]லிங்க செந்தூரம் ... 140-215

[illegible] இலா ... 128-200

[illegible]விருத்தி லேகியம் ... 125-127-196

வெ.

| | | பக்கம். |
|---|---|---|
| வெடியுப்புக் கட்டு | ... ... ... | 88 |
| வெண்கார பாகம் | ... ... | 90 |
| வெள்வங்க சுத்தி | ... ... ... | 107 |
| வெள்வங்க பற்பம் | ... | 12-57-107-151-153 |
| வெள்ளிப் பற்பம் | ... | 157 |
| வெள்ளைப் பற்பம் | ... ... | [illegible] |
| வெள்ளை யெண்ணெய் | ... | 10-[illegible] |

ஜீ.

| | | |
|---|---|---|
| ஜீவாமிர்த லாடு | ... ... | 110-[illegible] |
| ஜீவாமிர்த லிங்க பற்பம் | ... ... | 130-[illegible] |

வீரமாமுனிவர் வாகடத்திரட்டு முதற்பாக அட்டவணை முற்றிற்று.

---



கடவுள் துணை.

இராஜரிஷி

வீரமாமுனி மகானுபாவர் அருளிச்செய்த

வாகடத் திரட்டின்

## முகவுரை.

கனவான்களே! இத்தலைப் பெயரமைந்த இந்நூலானது, இராஜரிஷியும், மகா சாதுவும், ஆங்கிலம், தமிழ் முதலியவைகளில் மிகவுந் தேர்ச்சியுற்றுத் தமிழில் பல நூல்களியற்றிக் கீர்த்தி பெற்றவருமாகிய வீரமாமுனிவரால் செய்யப்பட்ட நசகாண்டம், நவரத்தினச் சுருக்கமாலை, மகா வீரியச்சிந்தாமணி யென்னும் மூன்றினையும் ஒருங்குசேரத் திரட்டிய காரணத்தால் "வாகடத் திரட்டென்றும்" திருநாமம் பெற்று விளங்கும் பெருமை வாய்ந்தது.

இந்நூலாசிரியராகிய மேற்கண்ட வீரமாமுனிவரென்னும் மகானுபாவரின் அருமை பெருமைகளைத் தமிழ்பயின்ற பெருமக்களியாவரும் நன்குணர்ந்திருக்கலாம். இவர் பல்லாண்டுகட்கு முன்னர் உரோமாபுரியென்னும் உத்தமதலத்திற் பிறந்து, ஆங்கிலமுதலிய பாஷைகளில் அளவற்றுச் சிறந்து உண்மைகண்டு, உலகவாசைமுற்றுந் துறந்து, தமக் குடன்பாடாகிய கிறிஸ்துமதப் பெருங்குருத்துவம் பெற்று, கர்னல் பிஸ்கி யென்னும் பெயருடனுலாவிச் சின்னாட்களுக்குப் பின்னர் இந்திய நாட்டிற்புகுந்து பலவிடத்துஞ் சஞ்சரித்

தச்சில இந்துமார்க்க முனிசிரேஷ்டர்களோடும் பெரியோர்களோடு முறவாடி, இந்நாட்டு வழக்கங்களையுந் தெரிந்தனுசரித்து, முடிவில் இத்தமிழ்நாடடைந்து; இந்நாட்டுத்துறவியரோடு பெருநேசங்கொண்டு, தம்மதக்கொள்கையைப் பல விடங்களிலும் பிரசங்கித்து, தமிழ்ப்பாஷையானது மிக்க அருமைவாய்ந்ததாகவும் மிகவும் நுட்பமான விஷயங்களடங்கிய பல நூல்களுடையதாகவு மிருப்பது தெரிந்து, இத்தமிழ்ப் பாஷையை மிக்க ஆவலுடன் கற்று, இதிலுள்ள ஐந்திலக்கணமுந் தெரிந்து, புராணேதிகாசங்கள், வைத்தியம், மாந்திரீகம், சோதிடம் முதலிய பலவகைப்பட்ட நூல்களையும் ஆராய்ந்து, தாம் தமிழ்ப்பாஷையிற் றேர்ச்சியடைந்து, அதற்கறிகுறியாக இத்தமிழ் நாட்டுக்கொள்கைகளையனுசரித்தே எண்ணிலாப் பெருமை வாய்ந்த சில பெரிய நூல்களை யியற்றிப் பெரும்புகழ்படைத்த பெருந்தகையார். இவர் தமிழில் தமிழ்நாட்டாரினும் மிக்க தேர்ச்சியுடையாரென்பதற்கு இவரியற்றிய "ஐந்திலக்கணத் தொன்னூல், தேம்பாவணி முதலிய அரிய பெரிய நூல்களே சான்றாம். இவர் வைத்தியத்திலும் மகாபண்டிதத்தன்மை பெற்றுள்ளாரென்பதும் இவரியற்றிய நூல்களாகிய குணவாகடம், நிலக்கண்ணாடி, இதிலடங்கி யிருக்கின்ற நசகாண்டம், நவரத்தினச் சுருக்கமாலை, மகா வீரியச் சிந்தாமணி முதலியவைகளால் ஐயமின்றி விளங்கும்.

இவர் ஆங்கில வைத்தியத்திலும் மிக்க தேர்ச்சியுடையராதலின் தமக்கு மிகவும் பழக்கமாயுள்ள அந்த ஆங்கில வாகட வழியையும், இந்து வாகட வழியையும் நன்காராய்ந்து இரண்டின் வல்லபத்தாலும்



தாமே பல அரிய விஷயங்களைச் சித்தாந்தப்படுத்தி, அவைகளை எல்லோரு முணர்ந்துய்யும் பொருட்டு இலகுவில் தெள்ளிய செந்தமிழால் சந்தேகமற வைத்திய நூல்களை யியற்றியபடியால், இவரியற்றியவைகளுள் இலக்கண விலக்கிய நூல்களைக் காட்டிலும் வைத்திய நூல்களையே எவரும் இனிமையாகக் கொண்டாடி அருமை பாராட்டி வருகின்றார்கள். இவரியற்றிய வைத்திய கிரந்தங்களனைத்தும் நந்தமிழ் நாட்டார்க்கு இன்றி யமையாததாம். அவைகளியாவும் சித்தர் நூல்களைப்போன்ற மறைப்பு, பரிபாஷை, கடினம் முதலியவைகளுக் குள்ளாகாது, பிற்காலத்து வழக்கத்தைத் தழுவிச் செய்வதற்கு இலகுவான சந்தேக மற்றனவும், குணஞ் செய்வதிற் சிரேஷ்டம் பொருந்தியனவுமாகிய பல அரிய வாகடமுறைக ளமையப்பெற்றவைகளாகவும், எள்ளளவுஞ் சந்தேகத்திற் கிடங்கொடாத செந்தமிழ்ப் பாக்களா லமையப்பெற்ற வைகளாகவுமே விளங்குகின்றன. ஆயினும், உலகமுய்யும் பொருட்டு மெய்யன்பரால் இந்த மகான் செய்த மேற்கண்ட நூல்கள் பெரும்பான்மையும் அச்சிட்டு வெளிவரவில்லை. இரண்டொன்றே அச்சிடப்பட்டு வெளிவந்து விளங்குகின்றன. மற்றவை யனைத்தும் ஏட்டுச்சுவடிகளிலெழுதிக் கட்டிக் கபடமாக ஆங்காங்கே மறைக்கப்பட்டுக்கிடக்கின்றன. அவைகளுள்ளும் சில பெயரேயில்லாதபடி யடியோடழிந்தன.

உலகப் பிரயோசனமாகத் தோன்றிய இந்த மகானுடைய அருமைவாய்ந்த நூல்கள் இவ்வித நிலைமையடைந்திருப்பதைப்பற்றித் தமிழ் வாகடங்களிற் பிரியமுள்ள பல அரிய நண்பர்கள் பரிதாபமடைந்து

அவைகளை யெவ்வாறுயினும் தேடிச் சேகரித்து அகப்பட்டவரையி லச்சிட்டு வெளிப்படுத்தி எவர்க்கு முதவுமாறு உலகினுக்குப் பேருதவி புரியும்வண்ணம் பலநாளாக எம்மை இடைவிடாது தூண்டி வந்தனர். எமக்கும் அவர்களுக் கேற்பட்டது போலவே பெரும் அவா ஏற்பட்டிருந்தது. இக்காரணம் பற்றிச் சில தினங்களுக்கு முன்னர் மேற்கண்ட நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்னும் பெருங்காரியத்திற் பிரவேசித்து அந்நூல்களைத் தேட ஆரம்பித்தபோது எமது பரம்பரையாரால் பண்டைக்காலத்தில் தேடிப் பாதுகாப்பில் வைத்திருந்த ஏட்டுச் சுவடித் தொகுதிகளில் குணவாகடம், நசகாண்டம், மகா வீரியச்சிந்தாமணி முதலிய சில நூல்கள் அதிஷ்டவசத்தால் அகப்பட்டன. இதற்கனுகூலமாகச் சமையத்திலோர் கிறிஸ்தவ நண்பர் நவரத்தினச் சுருக்கமாலை யென்னும் ஓர் அரிய நூலின் ஏட்டுச் சுவடியை உதவினார். பின் நசகாண்டம் அச்சிட்ட புத்தகமொன்று கிடைத்தது. ஆகச் சேர்ந்த இவைகளைப் பரிசோதிக்குமளவில், நவரத்தினச் சுருக்கமாலை, மகா வீரியச்சிந்தாமணி ஆகிய இரண்டும் பூர்த்தி பெற்றவைகளாகவும், அநேகமாய் வழுக்களற்றவைகளாகவு மிருந்தன. நசகாண்டம் பூரணமாயிருந்தும் அச்சிட்ட புத்தகமானது பல அச்சுவழுக்கள் நிறைந்ததாகவும், பாட்டுக்கள் பலவாறு சிதைவுண்டதாகவும் முறைகேடாகிப் பார்ப்பவர்க்குப் பயன்தரக் கூடாததாயிருந்தது. குணவாகடம் சற்று பூரணமற்றுக் குறைவுற்றிருந்தது. ஆனதுபற்றி தற்போது கிடைத்தவரையில் பூரணமா யிருப்பவைகளை மட்டும் வழுவின்றி யச்சிட்டு வெளிப்படுத்தலா மென்



றும் மற்றவைகளைப் பின்னை சீர்செய்து வெளிப்படுத்தலா மென்றுங் கருதிக் குறைவா யிருந்த குணவாகடத்தை நீக்கி மற்ற வைகளைக் கைக்கொண்டு நசகாண்டத்தை எமது ஏட்டுப் பிரதியி லிருந்தபடி ஒத்துப்பார்த்து வழுக்களைக் கூடியவரையில் நீக்கிக் காப்பிசெய்தும், நவரத்தினச் சுருக்கமாலை, மகா வீரியச் சிந்தாமணி ஆகிய இரண்டையும் சுத்தமான சுவடிகளி லிருந்தபடியே எழுதுவித்தும் ஆக மூன்று நூல்களையும் ஒருங்குசேரத் திரட்டிப் பல புத்திமான்களி னுதவியால் கூடியவரை பிழைபறப் பரிசோதித்து மேலே காட்டிய வாகடத்திரட்டு என்னுந் திருநாமத்தோடு மேற்கண்ட மூன்று நூல்களிலுமுள்ள முறைகளை வசன ரூபமாகவும் எழுதி அதனதன் பின்னே சேர்த்து மிகவும் பிரயாசத்துடன் உலக நலத்தைக்கருதி ஆரம்பித்த சில தினங்களுக்குள்ளேயே அச்சிட்டு வெளிப்படுத்தினோம். இது இவ்வாறு விரைவில் முடிந்து வெளிப்படுதற்கு நமது அரிய நண்பர்கள் பலருஞ் செய்துவந்த தூண்டுதலும், எனது பேரவாவுமே காரணமாயின. இதனை அச்சிடுங் காரணமாக நமக்கு நேர்ந்த தேகசிரமம் பொருட்செலவு முதலியவைகளோ மிகவும் அதிகம். இவ்விஷயம் ஒவ்வொருவருக்குஞ் சொல்லாமலே விளங்கும்.

இதிலடங்கி யிருக்கின்ற மூன்று நூல்களும் மேற்படி வீரமாமுனிவர் செய்த வைத்திய நூல்களுள்

ளே மிகவும் உயர்ச்சி பெற்றவையென்பதும், எவர்க்கும் பிரயோசனப் படத்தக்கவை யென்பதும் இவைகளைப் பார்வையிடும் ஒவ்வொரு நண்பர்க்குஞ் சொல்லாமலே தெள்ளிதில் விளங்கும்.

இவைகளுள் நசகாண்டம், நூறும் நேரிசைவெண்பாக்களாலும், மகா வீரியச் சிந்தாமணி எழுநூறும் நேரிசை வெண்பாக்களாலும், நவரத்தினச் சுருக்கமாலை பத்தும் எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தங்களாலும் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

அப்பாடல்களோ சொன்னயம், பொருணயம், தொடைநயம் முதலியவைகளாற் சிறந்து பார்ப்பவர்கள் மனதை அப்பொழுதே கவரத்தக்க சுவைவாய்ந்தவைகளாய்ப் பரிபாஷை முதலிய முரண்பாடின்றி வெள்ளை நடையாய் உள்ளவற்றை உள்ளபடியே உணர்த்தும் செவ்விவாய்ந்து அம்மகானது தமிழ்க் கல்வித்திறத்தைச் சந்தேகமற உணர்த்துதற் கேதுவாயிருக்கின்றன. இப்பாடல்கள்மற்ற போலிக் கிரந்தங்களிலுள்ள செய்யுட்களைப் போன்று செய்யுளிலக்கணத்திற்கு மாறாய்ச் சிதைவுண்டு பாட்டினது ரூபமேயின்றிப் பல சந்தேகங்களுக்கிடனாய்ப் பொருள் மாறுபட்டுப் புன்மைப்படும் இயற்கை வாய்ந்தவைகளல்ல.

இந்நூல்களி லடங்கியிருக்கு முறைகளோ ஒவ்வொருவரும் மெச்சிக்கொண்டாடத் தக்க உயர்ச்சி பெற்றவைகளும், பல ஆயிர முறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவைகளுமாம். தேகத்தில் தாதுவிருத்தி, இரத்தபுஷ்டி முதலியவைகளை யதிகரித்து ரோ



யற்றிருக்கும் வாழ்வை விரும்பும் ஒவ்வொருவருக்கும் இம்முறைகள் இன்றியமையாதவைகளாம்.

இந்நூல்களுள், நசகாண்டத்தில், மாந்தக் கஷாயம், உதிரவாயுக் குடிநீர், விக்கல்சத்திச் சூரணம், அஷ்டபாகச் சூரணம், மேகாதிச் சூரணம், சிந்தாமணிக் குளிகை, திரிகடுகுங் குளிகை, சன்னிவாதக் குளிகை, சித்தர் குளிகை, மத்தியானக் குளிகை, கருங்குழம்பு, பலாண்டக் களிம்பு, கலிக்கம், பாடியான்மேசம், தாதுபுஷ்டி யுசிதம், இளநீர்க் கிருதம், வெள்ளை யெண்ணெய், குண்டலாதித் தைலம், வெள்வங்கபற்பம், தாளக பற்பம், நவச்சார பற்பம், பவழபற்பம், நாகச் செந்தூரம், அக்கினி குமார செந்தூரம், அயக்காந்த செந்தூரம், மால்தேவிச் செந்தூரம் முதலிய பல முறைகளும்;

நவரத்தினச் சுருக்கமாலையில், நவச்சாரக் கட்டு, நவச்சார மெழுக்கு, கெந்தகத் தைலம், பாஷாண மெழுக்கு முதலிய முறைகளும்;

மகாவீரியச் சிந்தாமணியில், சுகதாரமஞ்ஜுவராம், ஜீவாமிர்தலாடு, போகராஜ கோலிலம், இரசிதாமிர்த சஞ்சீவி, பிரமேக பைரவி, காமாக்கினி ஜீவாசம், மேற்பூச்சுத்திலா, பிரதாப லிங்காமிர்தம், மகாமேகாமிர்தம், விருத்த கௌமார சஞ்சீவி, பராக்கிரம சஞ்சீவி, மகாவீரிய லிங்க பஸ்பம், மகா வீரிய லிங்கசெந்தூரம், மகாவீரிய லிங்க மெழுக்கு, வீரிய விருத்திலேகியம், வீரியத்திலா, தாளகப் பற்பங்கள், இலிங்க செந்தூரம், ஜீவாமிர்த லிங்க பற்பம், விருத்தகௌமார சிவகாமி பற்பம், சர்வரோக சஞ்சீவி பற்பம், ஜ

ஷ்டரோக சண்டப்பிரசண்ட மாத்திரை, அப்பர்மாத்திரை, இராஜ தம்பன மாத்திரை, தாளக பற்பம், சஞ்சீவி லோக செந்தூரம், வீரசூர லிங்க செந்தூரம், கிராசை நிவார்ண இலா, கிராசை நிவாரண தெய், சஞ்சீவி சூத பற்பம், மகாவீரிய பாலரசாமிர்தம், தாம்பிர பற்பம், வெள்ளைப் பற்பம், லோக வீரியாமிர்தம், மகாவீரிய லிங்க செந்தூரம், அப்பிரக பற்பம், வெள்வங்க பற்பம், சுவர்ண அப்பிரேகம், வெள்வங்க பற்பம், இலகுபாஷாண பற்பம், காரபற்பம், வெள்ளிப் பற்பங்கள், இலிங்க செந்தூரம், கிருஷ்ண அப்பிரேக செந்தூரம் ஆகிய தாதுவிருத்தி முதலியவைகளுக்கு இன்றியமையாத பல முறைகளும் அடங்கி யிருக்கின்றன. இம்முறைகளை வசன ரூபமாக எழுதிச் சேர்க்கப்பட் டிருப்பவைகளில் உட்பிரிவாகப் பல அரிய முறைகளுஞ் சேர்த்தெழுதப்பட் டிருக்கின்றன.

இந்நூலினது பெருமையானது இதிலுள்ள முறைகளைச் செய்துபயில்விப்ப வர்களுக்குத் தானே விளங்கும். இது வைத்தியர், வைத்தியரல்லாதவர் முதலிய பலருக்கும் மிக்க பிரயோசனந்தரத்தக்கது. முரணான பல வைத்தியக் கிரந்தங்களை வாங்கி வாசித்துப் பயனின்றி மனம் வருந்துவதைக் காட்டிலும் இந்த ஒரு நூலை மட்டும் வாங்கிப் பார்த்தால், பார்த்தமட்டில் பலனடைவது திண்ணம். உலக நலத்தைக் கருதியே இது விஷயத்தில் நாம் எடுத்துக்கொண்ட அரும்பெரும் பி



ரயாசை முதலியவற்றை எதிர் நோக்காது இதற்கு மிகவுங் குறைந்த விலையே யேற்படுத்தி யிருக்கின்றோம். ஆதலின் நமது நண்பர்களியாவரும் இதற்குமுன் நாம் அச்சிட்டு வெளிப்படுத்திய பல கிரந்தங்களையும் பெருமை பாராட்டி வாங்கி நம்மைப் பலவிதத்தாலுங் கனப்படுத்தி வருவதுபோலவே எல்லா நூல்களினும் அருமை வாய்ந்ததாகிய இந்நூலையும் வாங்கி எமக்கு மேலும் மேலும் இவ்வித வேலைகளைச் செய்வதற்கா மூக்கத்தையும் கனத்தையும் உண்டாக்குமாறு வேண்டுகின்றேன்.

இதனை அச்சிடுங் காலத்துடனிருந்துதவி புரிந்த பல அரிய நேயர்கட்கும், எட்டுப்பிரதி முதலியன வுதவிய நண்பர்கட்கும் மனப்பூர்வமாக எப்பொழுதும் நன்றி செலுத்தக் கடமைப்பட் டிருக்கின்றேன்.

இப்போது இந்த மூன்று நூல்களையும் வெளிப்படுத்தினது போலவே இந்த மகானால்செய்த மற்ற நூல்களையு மச்சிட்டு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கின்றேன். ஆதலின், அம்மகானால்செய்யப்பட்ட இன்னும் வேறு பிரதிகளுள்ளோர் தயவுடன் லோகோபகாரமாக எமக்கு அனுப்புவாரேயாயின், அத்தகையார் பெயருடன் அவற்றை அச்சிட்டுவெளிப்படுத்தி என்றும் நன்றிபாராட்டுவேன். சுபம்.

அக்கீம்-பா-மு-அ.

முகவுரை முற்றுப் பெற்றது.

காணுங் கிரந்தி கணக்காம் பதினெட்டும்
பானமில்லாக் குஷ்டம் பதினெட்டும்-மோனமில்லா
மேகந்தொண் ணூற்றாறு மேவியிடம் விட்டகலும்
பாகமிகு பத்தியமாம் பார். (௯)

## (5) மேகாதிச் சூரணம்.

வெள்ளறுகு சங்கிளைது வேர்முத்தக் காசுகஞ்சா
வள்ளன்முடக் கொற்றான் வளர்குறிஞ்சா - தெள்ளும்
நவக்கரிச லாங்கன்னி கன்னியச மூலஞ்
சிவனரின் வேம்பதுவுஞ் சேர். (௧௦)

[லைக்

சேர்த்திடித்த சூரணத்தாற் றேன்மொழியே கேளுட
கார்த்திடித்த மேகவெள்ளை கையெரிவு - மாற்றமில்லா
மேகமொடு சூலே மேவும் வெடிசூலை
போகுமே வெவ்விஷமும் போற்று. (௧௧)

## (6) சிந்தாமணிக் குளிகை.

சிந்தா மணிக்குளிகை செய்முறைகேள் காகம்லிங்கம்
கெந்தியரி தாரங் கெடிநாவி - முந்தும்
திரிபாலே காரந் திரிகடுகுந் தாமே
அரியவக்கி ராகார மாம். (௧௨)

ஆன பதின்மூன்று மாயிழையே போர்கிறையாய்
மானமிகு மித்தொகைக்கு வாளமிடு - ஈனமில்லாத்
தேன் கரும்பின் சாற்றிற் றினமிரண்டி லாட்டியுண்
கான்சேர் சிறுபயறு காண். [டை (௧௩)

கண்டுசெய்த வுண்டைதனைக் கையாளின் சாற்றிலிடு
நன்றாம் விரேசனமா நங்கையரே - இன்றேலோ
மோரிற் கிராணிக்கா முன்னுபமுச் சாற்றில்விடம்
சாரும்வெலத் திற்போகுந் தான். (௧௪)

தாகம்போம் பித்தமறச் சர்க்கரையாஞ் சினியிற்கொள்
சாகயிருந் திபனமாந் தக்காளி - தாக
மருவுமற்ற நோய்களுக்கு வல்லாரைச் சாறும்
திரிசுரங்க ளுக்காகுந்தேன். (௧௫)

தேனொடுகுன் மந்தனக்குத் தேர்முருங்கைச்சாறுடனே
பானேருங் கோமயத்திற் பாய்ச்சிவிடு - வாயுதலே
நீர்மலக்கட் டிக்கு நிறைந்தபுளி நீரிற்கொள்
ஊர்புளியி லுட்டணம்போ முன். (௧௬)

உண்ணுமே குன்றிமணி யோங்குமிலைச் சாற்றிற்
சன்னிவா தச்சுரங்கள் சாராது - மன்னியநீ
காடெபடர் தாமரையும் நன்னும லோடிவிடும்
தேடியிஞ்சிச் சாற்றி லுண்டை சேர். (௧௭)

உண்டையிடு காடிதனி லோடுமண்ட வாதமெல்லாம்
பண்டுவாய் நாற்றமறும் பாரதனில் - கொண்டுபார்
பல்லுவலி கட்டெல்லாம் பாரிரண்டு காசிடையில்
நல்லெண்ணெ யிற்கொடுத்து நண். (௧௮)

## (7) திரிகடுகுக் குளிகை.

திரிகடுகு நற்குளிகை செப்பக்கேள் கெந்தி
அரிதார மக்கிரார மாகும் - நேரிவிஷமும்
நாவி திரிகடுகு நல்லரசம் நேர்வாளம்
சீவுங் கடுக்காயுஞ் சேர். (௧௯)

கடுக்காயு மிந்துப்புங் காணுங்கான் றிக்காய்
நெடுகடுகு ரோகணியு நேரே - அடைவாக்
குதிரைக் குளம்போடு கூடுபதி னைந்து
மதியாக வோர்நிறையாய் வாங்கு. (௨௦)



வாங்கி நன்றாய்ச் சுத்திசெய்து வாகுடனே கையான்சா
றேங்குவதேன் கல்வத்தி லேழுதினம் - ஓங்கியரை
குன்றிபோ லுண்டைசெய்து கட்டி நிழலுலர்த்திக்
கொண்டவனு பானமதிற் கொள். (௨௧)

கொள்ளும் பழச்சாற்றிற் கோடான கோடிவிஷம்
தள்ளுண்டு போகுங்காண் தைபலே-தெள்ளுஞ்
செருகருப்பஞ் சாறுதனிற் சேர்த்தாலீ யூட்டு
முறைவேக நஞ்சு முரியும். (௨௨)

முரியும்நெல்லிச் சாற்றின் முகக்கடுப்பு சன்னி
மரியுஞ் சைத்தியசுர வாதம் - இரியுமே
மேதித் தயிரிலிட மேவுமதி சாரமும்போம்
போதமிகு வேம்புசுரம் போம். (௨௩)

போகுமே சர்க்கரையுஞ் சீதமும் போற்றியிடு [ப்
சாகுமெட்டிக் குன்மவகை சாராது - தோகையரே
முள்ளிப்பழத்தி லுண்டை முன்னிவைத்தாக்கையிட
பில்லியொடு சூனியம்போம் பேய். (௨௪)

பேய்போஞ் சிறுநீரிற் பேர்த்திமைத் தாங் கண்ணிலிட
வாய்ந்தசன்னி வாதமும்போ மங்கையரே - காய்ந்த
சிறங்கைபுளிப் பட்டைச் சிறுசாம்பல் நீரில்
பறங்கிப்புண் போகுமே பார். (௨௫)

பார்த்துச்செய் யிம்மருந்தைப் பாலகர்க்கு விள்ளாதே
கூர்த்தமருஞ் சிற்றறிவால் கூறிவிட்டேன்-ஆர்த்ததிய
வேறெக் குளிகையொன்றும் வேண்டாமிதைச்செய்து
நீறுங்காண் வைத்தியர்கை வேல். (௨௬)

### (8) சன்னிவாதக் குளிகை.

இந்துப்பு கெந்தியுட னேற்றதொரு வெண்காரம்
உந்து திரிகடுகு மோர்கழஞ்சு - பந்தமிரு
வாளமதோ ரண்டு வளர்கடுகு ரோகணியும்
சாலமிரு நான்காகுந் தான். (௨௭)

ஆன சர்க்கிவற்றை யம்மிதனி லேய்ந்து
சனமில் லாப்பழச்சாற் றிட்டரைப்பாய் - ஊனமிலா
நல்லுளுந்து தன்னளவாய் நல்கியதோருண்டைதனை
வெல்லுமிஞ்சிச் சாற்றில்விடு மின். (௨௮)

மின்னலையாய்த் திரும் வியாதிதனைக் கோணங்கே
அன்னமே யெச்சுரமு மண்டாதே - மண்ணின்மிசை
தோஷமொடு ஜன்னி சூதான வாய்வனைத்தும்
பாசமறப் போமே பறந்து. (௨௯)

### (9) சித்தர் குளிகை.

சித்திரஞ்சேர் மூலமதோர் சிராக் கழஞ்சியொன்று
அத்திறஞ்சேர்பூர மதுகழஞ்சு - சத்தியங்கேள்
ஓம மொருகழஞ்சி யோதுபனை வெல்லமொடு
சாமம்ரண்டு சார்ந்தரைப்பாய் தான். (௩0)

அரைத்து மிளகளவா யாக்கியே யுண்ட
தரையிலே பத்துநாள் தானுண் - கிரைகுழலே
ஓதுமிர ணங்கிரந்தி யோர்யோனிப் புற்றுடனே
காதவழி யோடிவிடுங் காண். (௩௧)

மாறுமே சூலை வாட்கள்ளிப் பூக்கிரந்தி
நீறும்லிங்கப் புற்று கிறைபவுத்திரம் - தேறுத
கன்னப் பிளவைபக்கங் காணும் படுபிளவை
உன்மார்ச் சிலந்தி யோடும். (௩௨)



ஓடுமே விப்புருதி யோதுகின்ற குன்மமெட்டும்
நாடுதனில் மேகரணம் காடாது - மாடுகளே
காட்டதனில் மூலிகையைக் காணும லேயலைவீர்
வீட்டிலிருந் திம்முறைசெய் மின். (௩௩)

### (10) மத்தியானக் குளிகை.

நாதமொடு லிங்கம் நவிலுவேன் காரமுடன்
சீதச் சிலையினொடு திப்பிலியும் - பேதமில்லா
தேனுஞ் சுவர்ணப்பால் சேர்த்தரைத்தேயுண்டைகொள்
போன வுயிர்திரும்பும் போற்று. (௩௪)

திருவிஞ்சிச் சாற்றிற் றீருஞ் சுரங்கள்
விரும்புபழச் சாற்றால் விஷம்போம் - தெரிவையரே
இன்றுலோ வாந்திவிக்கல் தேனிலே சன்னிபித்தம்
நன்றாகுங் குன்மநெய்யில் காடு. (௩௫)

குன்மம்போமேகவகை கூர்பிரம்பின் வேர்ப்பொடியும்
உன்னு சருக்கரையு மூட்டியே - இன்னப்
படுபிளவை மேகம் பறங்கிப்புண் சூலைக்
கிடுமிளகுத் தூள்வெல்ல மென். (௩௬)

வெல்லமொடு சுக்கு மிகுமிளகு வாய்விளங்கம்
வல்லகில வாவாரை வாய்ந்திடித்துச் - சொல்லக்கேள்
உண்டை பொடிசேர்த் துண்ணவே யெப்போதும்
அண்டமுறுஞ் சூலைபறு மால். (௩௭)

மாலான முத்தம் வளரிஞ்சி பூவாக
மேலாங் கடுக்க விளங்குமுடன் - சீலமிகும்
வெந்நீர் லேபனைத்து மேவுசுர சந்நிவிட
அண்ணாக மாலை யறும். (௩௮)

வாறுமேகள் சங்கு வளரு முட்கொற்றான்
கூறுமேகள் வெள்ளறுகு கோவையுடன் - வீறுமேகள்
சார்ந்த குடிநீரிற் சாத்தியஞ்சேர் மேகமெலாஞ்
சுர்ந்தோடுஞ் சண்டையிட்டுக் கொண்டு. (௩௯)

நீலியொடு நாயுருவி நீர்முள்ளி சங்குடனே
சிலமுட னற்குடிநீர் செய்துமேகள் - காலையிலே
உண்டையிட்டுக் கொள்ள வுள்மூல மோடும்
கண்டிதமாய் மாலையிலுங் காண். (௪0)

காரையொடு செல்வி கருங்காலி நல்வேலி
பாரையுருஞ் சொர்க்கப்பா லாலரைத்துத் - தேரவே
ஊறுங் குளிகைதனை யுட்கொள்ள நீங்குமும்
பூறுஞ் சயரோகம் போம். (௪௧)

தானுகின்ற காந்திகழல் வேலிமிளா குள்ளி
பூனை வரைத்துப் புசியுண்டை - தோனுஞ்
சுழல்வாதங் கண்டவர்தஞ் சொந்தமாய் வெல்லாம்
விழலாகு மேநீ யிரும்பு. (௪௨)

## (11) கருங் குழம்பு.

கட்டாக வின்னங் கழறுகிறேன் வல்லத்துக்
கிட்டமொடு காந்தங் கிருபையாய் - நட்டமில்லா
நீரடியின் முத்து நிறையாய்க் கழஞ்சுமொன்று
சேர்வாளம் ரண்டாகு நேர். (௪௩)

நேர்ந்திந்த நாற்சரக்கை நேரிழையே சுத்திசெய்து
போந்தகிறை கல்வத்திற் போட்டரைப்பாய் - ஆர்ந்த
மேனைச்சிமிழில்வைத்து வேண்டிப்பணவெடைதான் [வெரு
பானைப் பனைவெல்லத்திற் பாய்ச்சு. (௪௪)



வெல்லமதி லுண்டிடப்பார் மெல்லியர்கள் சூதகமும்
அல்லலுறுங் கட்டிநீ ராமையுடன் - சொல்லக்கேள்
காணு மகோதரமுங் காமாலை காய்ச்சல்கட்டி
பூணும் பலவாய்வும் போம். (௪௫)

## (12) பலாண்டக் களிம்பு.

பச்சைக் களிம்பொன்று பாடுகிறேன் பங்காளப்
பச்சைகுங்கிலி யத்தோடு பாரிரசம் - நிச்சயங்கேள்
ஊமத் திலைச்சாற்றி லொக்க வரைத்தெடுத்து
ஆமிதனை யேகலத்தி லப்பு. (௪௬)

அப்புங் கலத்துளதை யானபசு வெண்ணெயிட்டுத்
தப்பாதே செம்புகொண்டு தானிழைப்பாய்-அப்பாகே
புற்றுங் கிரந்திகட்கும் பொல்லாத புண்புரைக்கும் [ள்
வெற்றிலையிற் பூசிவிடு வேண்டி. (௪௭)

## (13) கலிக்கம்.

பெருங்காயம் புங்கின்வித்து பேய்வித்து காரங்
கருக்கு மிளகுசுக்கு கண்ணை - வொருநிறையாய்
மேனிபினற் சாற்றின் மிகவரைநீ சாமம்ரண்டு
பேணியுண்டை செய்துகொள்வாய் பின். (௪௮)

கேள்சன்னி பற்கிட்டுங் கேளாத் தலைவலியும்
கோள்செய் பிடரிக் கொடுங்கனப்பும் - வாளான
மெல்லியர்தன் பாலிழைத்து மேவியிடு கண்ணினுக்கு
அல்லலற்றுப் போமென் றறி. (௪௯)

## (14) பாரியாள் நேசம்.

நிச்சியதின் பாலை யியல்பாக வாங்கிமேகள்
பச்சிமுடன் பாக்கில் பரிந்தாட்டி - நிச்சயங்கேள்
கையில்வைத்துக் கொண்டு கருங்குழலா ளுக்கீய
செய்யில்வைத்த நேசம்விடாள் மேவு. (௫0)

## (15) தாதுபுஷ்டி யுசிதம்.

பாங்காக் குறுஞ்சாவின் பத்திரியைக் காலைதனில்
தேங்காய்ப்பாலிற்றேய்த்துத் தின்னவே - சாங்கமற
மாதர் தமைக்கூட மனமுண்டாம் நாடோறும்
தாதுபுஷ்டி யுண்டாகுந் தான். (௫௧)

## (16) இளநீர்க் கிருதம்.

கல்விளநீர் காலிரண்டு நாடியதோல் சிலிக்கேள்
தென்னுமொரு நான்குநாட் சேற்றியுள்ளை-பின்னாய்
பின்பந்த நீரொடுத்துப் பேசுமிலவங்கம் [கேள்
பன்கோஷ்ட மாமதுரம் பார். (௫௨)

மதுரமொடு கந்தமிகும் வாரிஷுப்பைப் பூவுஞ்
சதுரமிகு சந்தனமுந் தானே - யிதமுடைய
முந்திரிகை யின்பிழமும் மோகமுறு கற்கண்டும்
அந்தமிகு சர்க்கரையு மாம். (௫௩)

ஆகுமிவை யொன்று யரைப்பாய்தன் னீர்கலந்து
பாகுமிகு நெய்காற் படியிட்டு - வேகவைத்துக்
கொண்டுபோர் நீரிழிவு கொள்கடுப்பு வெள்ளை வெட்டை
சண்டையிட்டுக் கொண்டோடுந் தானே. (௫௪)

## (17) வெள்ளை யெண்ணெய்.

அறுகைக்கே லொரெள்ளெண்ணெ யானைசக் கோரை
நிறையொன்று நேரித்து வாங்கி - யுறைகாண்டி
கொண்டுபோர் வெள்ளைவெட்டை கூறியகோ ரஸ்திரணம்
பண்டையிட்டம் போய்ப்பதுங்கும் பார். (௫௫)



## (18) குண்டலாதித் தைலம்.

குண்டலா தித்தைலங் கூறுகிறேன் சங்கின்வேர்
பண்டழிஞ்சிப் பட்டை பறங்கியதுங் - கண்டிதஞ்சேர்
வில்வமமுக் குராவேர் வேண்டுபலம் பத்து
வல்லவிடி நாணிசலம் வார். (௫௬)

நாணிசலமெட்டொன்றுத் தோகையரேகாய்ச்சிப்பின்
வேணுமுன்போ லெள்ளெண்ணெய் மேவவிடு-காண
வெடுபசுவின் பால்பலமுன் றேசர்க் கரையும்
முடுகாத்தை ரோகணியும் முன். (௫௭)

காணும் வலம்புரிக்காய் கைகண்ட சந்தனமும்
பூணும்பூ சுப்பத்திரி பூலாவேர் - வேணும்
செப்பு மிளகத்தித் திப்பிலியு மானேகேள்
அப்பலுங்கா ணலரைக்கா லாய். (௫௮)

தானச் சரக்குகளைத் தன்மையுட னூட்டியெண்ணெய்
பான மதிற்கலந்து பாச்சடுப்பில் - தேனே
மெழுகுபதம் பார்த்து மெள்ள வடித்துப்
பழுதறவே நீமுழுகிப் பார். (௫௯)

முழுகு மிவுப்பையதின் முற்றற்புண் ணூக்கில்
கொழுகுன்மம் வாதசன்னி குஷ்டம்-பழுதுசெய்யும்
பீனிசங்க ளுஞ்செவிநம் பேசாத காதிரைச்சல்
பூகிலத்திற் கண்டதைவும் போம். (௬0)

போமேக ரூலை புகல்கான் முடக்கதுவும்
வாம சருவாங்க வாதமுந்தான் - பூமிதில்
சென்னிதனி லுண்டான நீராத ரோய்களெல்லா
மென்னெயைக்கண் டாலோடு மேற்று. (௬௧)

## (19) வெள்வங்கபற்பம்.

பார்சிறந்த சம்புவின்வேர் பண்பா யதையரைத்து
சேர்ந்திடுவெள் வங்கத்தை நீபொதிவாய்-சேர்ந்ததனை
ஒதுங்கீழ்மேலுமிட்டே பொன்பொடியேயென்பதெரு
போடிபுட மாறியெடு போது. (௬௨)

ஆறியெடு பற்பமதா மாரிழையே செய்தேனில்
மாறிப் பண வெடையுண் மண்டலங்கால்-வீறான
மேக மதிசாரம் வெகுமஸ்தி வெட்டைபித்தம்
போகுமிரு வித்துண்டாம் போற்று. (௬௩)

## (20) தாளக பற்பம்.

பொய்யல்ல சத்தியமாய்ப் பொற்கொடியேபேசுகிறேன்
மெய்யாச்சோ தித்து மிகப்பார்நீ - ஐயமில்லை
தாளகத்தை வாங்கித் தயவாகச் சுண்ணம்பில்
காளகத்தி லேபொதிந்து நன். (௬௪)

நாளுந்தா னொன்றுசென்று நல்லசுத்தி நீயெடுத்துத்
தாளியதின் சாறுதனிற் றன்போடு - ஊனையற
ஊறிநாள் மூன்றுறு லொக்க வெடுத்துலர்த்தித்
தேறியமுன் சாற்றிலரை தேர்ந்து. (௬௫)

அரைத்ததொரு வில்லைதனை யன்பா யுலர்த்தி
நிரைதருமண் ணோட்டிட்டு நிற்கப் - பரையுரைத்த
பத்தெருவி லோர்புடஞ்செய் பற்பமதாங் கண்டூர்
மெத்தசய ரோகம்போம் மின். (௬௬)



## (21) நவச்சாரபற்பம்.

நீருஞ் சாரத்தின் சீரான பற்பங்கேள்
பூநீரு வேணமட்டும் போர்த்துகொள்ளவே - சீராக
அப்பாத் தெளிவிருத்துச் சுடாக வேயெரிக்க
வுப்பாகும் பின்பே யுகந்து. (௬௭)

உகந்தே யிவற்றினுட னுண்ணுகறி யுப்பும்
உகந்தருகல் லுப்பும்வெடி யுப்பும் - பகர்ந்த
இவையொவ் வொருகழஞ்சா யேற்றகல்வத் திட்டு
நவச்சார மோரிரண்டாய் நாட்டு. (௬௮)

நாட்டிப் பழச்சாற்றால் நாற்சாமம் மேயுகந்து
ஆட்டிவில்லை காயவைப்பா யன்பாகத் - தேட்டமுற
ஓடுகளின் மூடிமண்செய் யொக்க முழப்புடமாய்ப்
போடவே பற்பமதாம் பூண். (௬௯)

பூணுமிந்தப் பற்பமதைப் போற்றி மறுபடியும்
தோணப் பழச்சாற்றாற் றோயமே - காணமற
இப்படியே மூன்றுபுட மிட்டெடுத்தே யென்னுடைய
சொற்படிகேள் சுக்குருடைய நாள். (௭0)

நாளிற்பணவிடைகொள் நீரும்சோய்சொல்லுகிறேன்
வாழ்வுன்ன குன்மமெட்டும் வாய்வனைத்தும் - பாழான
சந்தேகிப்பு நீரு மெரிதல்ல வென்றோ
முன்னோரி லென்றுயார் முன்னி. (௭௧)

## (22) பவழ பற்பம்.

சொற்பமல்ல வென்றுபார் சொன்னவய ணங்கேள்
நற்பவழம் வாங்குவாய் நன்னுதலே - அப்புறங்கேள்
தென்று முப்பூநீக் கேடிபதி யேயிசபி
வற்றமதின் மூன்றுதினம் வை. (௭௨)

வைத்ததொரு கற்பமும் வாகான சுத்தியதாம்
தப்பா திலங்கையிலே தானரைப்பாய் - மெய்ப்பாக்
கவசமிட் டுரைந்து காணத் தெருவில்
சிவசமிட்டு நற்புடஞ்செய் நீ. (௭௩)

சீரான பற்பத்தைத் தேறுவின் வெண்ணெயிலுண்
டிருமந்தா ரக்காசஞ் செய்விதாய்ப் - பாருலகில்
நீரடைப்பு வெட்டைமுத லிங்கிமே விந்துநஷ்டம்
மாரடைப்பு மில்லை யகிழ். (௭௪)

வெள்ளரியின் சாறு வேண்டு மரைப்படியில்
கள்ளக்கா யத்தைக் கரைத்துவிட்டு - உள்ளதுகேள்
அல்லலொடு முண்டே யவன்முகங்கி மாய்ப்படுக்க
கல்லடைப்பாங் கல்லிறுகுங் காண். (௭௫)

(23) நாகச் செந்தூரம்.

சுத்திசெய்த நாகந் தலைக்குபல நான்காக
நத்துசட்டி யிட்டு நவிலக்கேள் - புத்தியுள்ள
காழி வெடியுப்பு கல்லோமஞ் சுக்குமஞ்சள்
வாழிபொடி யிட்டு வறு. (௭௬)

இட்டுவறுத் தத்தாளி லேங்காத காயுருவி
பொட்ட விடுத்ததையும் போட்டுவறு - கட்டமற
மாதளம்பூப் போல மாறின பழச்சாற்றுற்
போதமுற வேபுடத்தைப் போடு. (௭௭)

போட்டெடுத்தச் செந்தூரம் போற்றிப்பணவிடையாம்
சூட்டிக் கிரிகருக்குச் சூரணத்தில் - ஊட்டிடக்கேள்
குன்மம் பெருவயிறுங் கூடுகசை யாங்கஷசை
பண்ணுவலதின் மூலமும்போம் பார். (௭௮)



மூலமும்போ மேகவகை முன்னுதொண் ணூற்றாறுங்
காலுடனே கையெரிவுங் காணுது - வேல்விழியே
மேகத் தடிப்புகுஷ்டம் விந்துநஷ்டம் வெள்ளைகடற்
பாகத்திற் போய்ப்பதுங்கும் பார். (௭௯)

(24) அக்கினி குமார செந்தூரம்.

அயப்பொடியு மேகான் கனற்காந்த மெட்டு
பயமில்லாச் சூதம் பதினு - நயர்வுற்ற
கெந்தி யிதற்கிரட்டி கேள்குமரிச் சாறுவிட்டு
முந்தியிரு சாமமரை முன். (௮0)

அரைத்தமருந் தைக்கல்த்தி லப்பிவெப்பில் வைக்க
இரைத்தருந்தி பம்பேர லெரியும் - விரைக்குழலாய்
குன்ம மகோதரமுங் கூடுகசை யாங்கஷசை
பண்ணுமுனை மூலம்போம் பார். (௮௧)

மூல மகோதரமு மோசக் கிராணியொடு
ஏல வுறுபுளித்த வேப்பமறும் - காலமதில்
அண்டவா தஞ்சன்னி யானதற்கு மேபணந்தான்
உண்டுபா ரிஞ்சியிஞ்லா டும். (௮௨)

(25) அயக்காந்தச் செந்தூரம்.

பாந்தமாஞ் செந்தூரம் பாடுகிறேனும் பாவையரே
காந்த மரப்பொடியுங் கட்டாகச் - சேர்ந்தனையாய்
ஓர்நிறையாய்ச் சுத்தியுஞ்செய் நாட்டியரைகல்வத்தில்
ஏர்நிறைந்த காமப்பா விட்டு. (௮௩)

பாவிட் டரைத்துவில்லை பத்திரமாக் காயவைத்து
மேவிட்டோட் டில்மண்செய் மெல்லியரே - காவிட்ட
அஞ்ப தெருப்புடஞ்செ யாறியபின் னீயெடுத்துப்
பண்புடனே செய்முறையைப் பார். (௮௪)

பாருலகி லின்னம் பகருகொடிப் பைச்சாறு
நேருகரந் தைச்சாறு நீளவே - ஓர்நிறையாய்
நாம்சாம மாட்டி நயந்துருள் போற்புடஞ்செய்
தாம்ரமிலைச் செந்தூரந் தான். (அரு)

செந்தூரங் குன்றியிடை சேர்ந்தகுக்கின் றாரிற்கொள்
வந்தபடர் மேக மடியுமே - நந்திசொன்னார்
காமாலை சூலை கழல்வாதங் கால்வெடிப்பு
போமாலைப் பித்தவெட்டை போற்று. (அசு)

போற்றுங்கை காற்குடைச்சல் பொல்லாத குன்மமெல்
மாற்று மதிசார மாருமுதம் - தேற்றமிரு [லா
பத்தியஞ்செய் பெண்புகையும் பார்த்துப் புளியகற்று
சத்தியஞ்சொன் னேன்பிணிபோந் தான். (அஎ)

(26) மால்தேவிச் செந்தூரம்.

பாருலகி லின்னமொரு பாகம் பகருகிறேன்
சீருமால் தேவி சிலைலிங்கம் - கோரான
கெந்தி யரபொடியுங் கேணுகந் தூகமிது
முந்தியே யோர்நிறையாய் முன். (அஅ)

பின்னே யெழுமைகையும் வேண்டிக் கருவேம்பின் [சான்
தன்னுடைய சாறுவிட்டுத் தானரைப்பாய்-மன்னொரு
தப்பாமல் வில்லைசெய்து சாதகமா யைந்தெருவில்
அப்பா புடமிடவே தாய். (அகூ)

ஆறவெடுத் தப்பா சாரமிவர் செந்தூரம்
மீறுமற் குன்றியிடை வெண்ணெயி லீயவே - பாருதே
நோயுண்டோ மானிடர்க்கு நன்மையுடன் சொல்லு
ஆயகுன்மஞ் சூலையும்போ மால். [கிறேன் (கூ0)



போகுமே காசமெல்லாம் பொய்யல்ல மேகமெல்லாம்
சாகுமே குஷ்டந் தமர்வாயு - மேகுமே
பித்தங் கிறுகிறுப்பும் பேசுங்கை காலெரிவு
சத்திவிக்க லெல்லாம் போந் தான். (கூக)

விக்கல்போஞ் சன்னிசுர மேவு மிழுப்பிசிவும்
பக்கவா தங்களெல்லாம் பாழாகும் - மக்களுக்கு
மேகவெட்டை வெள்ளைபொடி மேவும் பிரமியமும்
தோகையர்க்குச் சூதகம்போஞ் சொல். (கூஉ)

மிக்க வழகுடைய மெல்லியரைக் கூடுதற்கு
தக்கபெருந் தத்துவமே தான்செயும் - ஒக்கவே
தேகமே பொன்னிறமாஞ் செப்பினேஞ் செந்தூரம்
பாகசெம்பிற் பத்திலொன்று பார். (கூங)

பத்திலொன்றை யீயப் பகர்ந்தேனே னேழையாம்
புத்தியுள்ள சீஷருக்குப் பொன்றுதும் - வெற்றியிதை
பாவிகளுக் கென்றும் பகராதே நீமடிவாய்
தேவியைநா டோறுஞ் செபி. (கூச)

கர்ம நிவர்த்தி.

வேதமுறும் பூவுலகில் மேவு மனுக்களுக்கு
வாதகர்மத் தாலுடலில் வந்தபிணி - பேதமில்லா
நல்மருந்தாற் றீர நாமுரைத்தோம் பண்டிதரே
வெல்லுகர்ம நீக்கி விடும். (கூரு)

நீக்கோர் புனக்கலசம் நீரோட்ட மானதின்மேல்
சிக்கிரத்திற் றெப்பையில்லை திர்க்கமாய் - காக்கவே
சங்குபா சம்மொருநால் தாளறுது வேர் நாலுந்
திங்கள்மா வோர் நாலிற் செய். (கூசு)

செய்துவா லேக்கித் திருப்பூசைப் பண்டமுமே
உய்த்துவைத்து நாற்றெட் டுருவீளா - செய்யதனை
முன்னவை யெதிர்கேயும் மோசமென்ன சொகத்தை
அன்னமே முன்வைத் துரை. (௧௭)

உரையுமே மூன்றுநா ளானகதிர் வாரம்
இரைபார்த்தோ ஷக்கருமஞ் சேருக் - கரைமீதில்
இல்லா தகன்பின்னே மேருந்தை யூட்டிவாய்
எல்லாப் பிணியும்போமே. (௧௮)

எல்லாரும் பண்டிதரோ வென்மகனே தற்கருமம்
இல்லா தகற்றிவை யீசனும் - நல்லதொரு
சாஸ்திரத்தின் றன்கிரியை சற்றும் பிசகாமல்
நேர்த்தியாய்ச் செய்வாழ்வாய் நீ. (௧௯)

பார்த்தலத்தி லிந்நூலைப் பாடினே னென்றுவால்
சீர்த்திகிறை குஸ்திரமாச் செப்பிலே - பார்த்தவுடன்
சிந்தைபொய் யென்று இறஞ்செய்வீர் லீறுகும்
முத்துமெய்யென் றேதமிழ்நூல் முற்று. (௨௰)

நசகாண்டமூலம் முற்றுப்பெற்றது.

---



கடவுள் துணை.

## நசகாண்டத் தெளிபொருள்

# விளக்கம்.

சகோதரர்களே! மேற்படி பெயர்பூண்ட வுரையை இதனுடன் எழுத நேரிட்ட காரணம் கீழ்கானும் விஷயங்களால் வெள்ளெனத் தெள்ளியதாய் விளங்கும். நசகாண்டம் நூறு என்னும் இந்நூலின் முகவுரையிற் சொன்னபடி இக்கிரந்தமானது யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளும்படியாய் மிகவும் தெளிவான தமிழ்ச் செய்யுட்களினால் செய்யப்பட்டிருப்பதால் இதற்கு உரை முதலியவைகள் அனாவசியமென முன்னர் உத்தேசிக்கப்பட்டது. ஆனால், அவற்றுள் அநேக பாகங்களில் நிறை, அளவு, பிரமாணம், செய்பாக முதலியவைகள் திட்டமாய்ச் சொல்லப்படவில்லையாதலின், அவ்விதபாகங்கள் அனுபவசாலிகளாகிய வைத்தியர்களுக்குப் பிரயோசனப் படுமேயொழிய மற்றவர்களுக்கு அவ்வளவாய்ப் பிரயோசனப்படா.

மேற்படி கிரந்தமானது மூல பாடமாயிருந்து தேர்ந்த வைத்தியர்களுக்கு மட்டும் பிரயோசனப்படத்தக்கதாயிருப்பினும் நம்மால் வெளிப்படுத்தப்படும் ஒவ்வொரு கிரந்தத்தையும் கைக்கொண்டு நம்மைப்பலவிதத்தாலும் ஆதரித்தும், உற்சாகப்படுத்தியும் வரும் ஒவ்வொருவருக்கும் இது பிரயோசனப்படவேண்டுமென்பதே நமது கருத்து.

அனுபவசித்தமானவைகளும் செய்வதற்கு மிகவும் சுலபமானவைகளும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவசியமானவைகளுமான அநேகமுறைகள் இக்கிரந்தத்தில் சொல்லப்பட்டிருப்பதால் இது மிகவும் முக்கியமும், அபூர்வமுமான கிரந்தங்களில் ஒன்றென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால் அவ்வகைக் கிரந்தமானது கூடியவரையில் விபரமாக இருக்கவேண்டியது மிகவும் அவசியகம்.

இன்னன பலவகைக் காரணங்களினால் இதிற் சொல்லப்படும் சிகிச்சைகள் முதலியவைகளைப் பலபெரிய நூற்களை பரிசோதித்தும், அனுபவத்தின் படியுமெழுதி ஆங்காங்கே முறைகளுக்கேற்பட்ட நிறை, அளவு செய்பாக முதலியவைகளை விபரமாகவுந் தெளிவாகவெழுதியிருக்கிறோம். ஆகையால் இது யாவருக்கும் பிரயோசனப்படுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஆகையால் சுதேசாபிமானமுள்ள கனவான்களும், மற்றவர்களும் எம்மா லியற்றப்பட்ட யூநானிவைத்திய தாதுவிர்த்திபோதினி முதலிய கிரந்தங்களை யங்கீகரித்து எம்மைப் பலவிதத்திலும் களிப்படுத்தி வருவதுபோல இந்த நசகாண்ட நூற்றையும், இனிமேல் அச்சிடும் பல கிரந்தங்களையும் அங்கீகரித்து ஆதரித்து வரும்படியாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

இக்கிரந்தத்தின் இரண்டாம் பிரயோசனமாவது:- பல சாஸ்திரப் பயிற்சியும்வெகுநாள் அனுபவமுமுள்ள ஒரு வல்ல பண்டிதர் சமீபத்திலிருந்து உற்றசமயத்தில் தம்முடைய தந்திரோபாயச் சிகிச்சைகளைச் செய்து உதவிசெய்வதைப் பார்க்கிலும் அதிசமாய் இக்கிரந்தத்தை ஆதியோடந்தமாய்க் கவனித்து முறையே நடப்பவர்களுக்கு மகா வியாதிகளினின்றுந் தப்பித்துக் கொள்ளு மார்க்கத்தையும், வைத்திய சிகிச்சாக் கிரமங்களையும், முறைகளையும், அறியாமையினால் நேரிடும் வீண் வைத்தியச்செலவை மீத்துக்கொள்ளு மார்க்கத்தையுங் காட்டி இது உற்றசமையத்தில் தெற்றென உதவி புரியுமென்பதே.





ஆகையால் நோயற்ற வாழ்வை விரும்பும் ஒவ்வொரு அறிவாளிகளும் தங்களுக்கும், தங்கள் மனைவி, மக்கள், சிநேகிதர்கள் முதலிய யாவருக்கும் பிரயோசனப்படும்படி இதனை ஆதியோடந்தமாய்க் கவனித்து இதன்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதே எமது கோரிக்கை.

ஆகையால் இக்கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிற பற்பலவகை முறைகளையும், பத்தியம் பாவனைகளையுங் கவனித்து அவற்றின்படி நடந்து கொள்பவர்கள் கடவுளினது கிருபையால் பலவகை நோய்களினின்றும் நீக்கப்பட்டுச் சுகானுபவங்களை யுடையவர்களாய் இம்மை மறுமைக்குரிய பயன்களை யடைந்து நீடூழி வாழ்வார்கள். ஆமீன்.

(1) மாந்தக் கஷாயம்.

நல்ல வேளைவேர், மேற்றோல் சீவினசுக்கு, வெந்தயம், மேற்றோல் நீக்கின வெள்ளைப்பூண்டு சமூல, வசம்பு, ஓமம், இவை வகை-க-க்கு விராகனெடை—உ.

செய்முறை:—மண் பாத்திரத்தை அடுப்பிலவைத்து வசம்பை நையநறுக்கிப்போட்டு அதைவறுத்துச்

சாம்பலாக்கி வெண்ணிறமான சாம்பலான பின்பு வெந்தயத்தைப்போட்டு அதனை இளவறுப்பாக வறுத்து வேளைவேரையும், வெள்ளுள்ளியையுஞ் சிதைத்துப் போட்டு இரண்டு நிமிஷம் சென்றபின்பு சுக்கையுந்தட்டிப்போட்டு முக்கால் ஆழாக்கு ஜலத்தைவார்த்து மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டித் திப்பிலிக்கிப் பானஞ் செய்விக்கவேண்டும். இவ்விதம் சமயோசிதமாக தினம் இரண்டு மூன்றுதடவை பானஞ்செய்விக்க எல்லாவகை மாந்தரோகங்கள், அஜீரணரோகங்கள், பால்கட்டு ரோகங்கள் முதலியவைகள் தீரும்.

## குறிப்பு.

மேற்கண்ட எடையானது ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்காம். இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மேற்கண்ட எடையை இரட்டித்துக்கொள்ளவேண்டும். மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மூன் எடையை மும்மடங்காக்கிக் கொள்ளவேண்டும். நான்கு வயதிலிருந்து பத்து வயது வரைக்கும் மேற்கண்ட அளவேயாம். பத்து வயதிலிருந்து பதினாறு வயதுவரைக்கும் நான்கு மடங்காக்கிக்கொள்ளவேண்டும். இதன் எடையை அதிகப்படுத்துவதும் குறைப்பதும் வியாதிபலம் தேகபலம் ஆகியவைகளைச் சார்ந்ததாகையால் சிகிச்சகர்கள் அந்தந்தச் சமயத்திற்குத் தக்கவாறு குறைத்தும் அதிகப்படுத்தியும் உபயோகிக்கவேண்டியது ஆவசியகமாம்.

மேற்கண்டபடி கஷாயமாகச் செய்து கொள்வது சில விடங்களில், சில சமயங்களில் கஷ்டமாக விருக்கும். ஆகையால் கீழ்க்கண்டபடி திராவகமாக இறக்கி வைத்துக் கொள்வதினால் எந்தச் சமயங்களிலும் உபயோகித்துக் கொள்வதற்குச் சுலபமாக விருக்கும். இன்னும் சிறு குழந்தைகளுள்ள குடும்பத்தில் இதனைச் சித்தப்படுத்தி வைத்திருப்பது மிகவும் ஆவசியகமாம். இதனால் அனேக சுகுணங்களுக் கேதுவாகும்.



## மாந்தத் திராவகம்.

வேளைவேர்த்தோல், மேற்றோல் சீவினசுக்கு, வெந்தயம், தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ், சுட்டெரித்த வசம்புச் சாம்பல், ஓமம் இவை வகை - க - க்குப் பலம் - கO.

செய்முறை:—வேளைவேரை மண் பாத்திரத்திற் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து வதக்கியெடுத்துக்கொள்ளவும். வெந்தயத்தைச் சட்டியிற்போட்டு இளவறுப்பாய் வறுத்துக்கொஞ்சம் மணம் வரும்படியாக வறுத்தெடுத்துக்கொள்ளவும். வெள்ளைப் பூண்டிதழ்களையும் சட்டியிற்போட்டு வறுத்து வதங்கின பதத்தில் எடுத்துக்கொள்ளவும். ஓமத்தையும் சட்டியிற் போட்டு மணம்வரும்படியாக வறுத்தெடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு ஆறு சரக்குகளையும் ஒன்றாகச்சேர்த்து உரலிலிட்டிடித்து நன்றாய் பிடிபட்டபின்பு இரண்டுபடி ஜலத்திற்போட்டு வாலையிலிட்டுப் பாகப்படி இரண்டு புட்டி திராவகமிறக்கிக் கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—உ-விராகனெடை முதல்-ரு-விராகனெடை வரையில் உபயோகிக்கலாம். பெரியவர்களுக்

குக் கால்பலமுதல் ஒருபலம் வரையில் உபயோகிக்கலாம்.

அனுபானம்:—முலைப்பால், தேன், வெந்நீர், சர்க்கரை முதலியவைகளாம்.

உபயோகம்:—குழந்தைகளுக்குண்டாகும் எல்லாவகை மாந்தரோகங்கள், அஜீரணரோகங்கள், பால்கட்டு ரோகங்கள் ஆகியவைகள் தீரும். அஜீரணத்தாலுண்டாகும் பலவகைப்பேதி, மந்தாக்கினிரோகம், குன்மரோகம், விஷபேதி முதலிய வியாதிகளில் பெரியவர்களுக்குங் கொடுத்துக் குணங்காணப்பட்டிருக்கிறது. பாலில்லாத குழந்தைகளுக்கு டின்பால், பசும்பால் முதலியவைகளை யுபயோகிக்க நேரிடும்போது அப்பாலானது சில குழந்தைகளுக்கு ஏற்றுக்கொள்ளாமல் வயிற்றுப்பிசம், வயிற்றுப்போக்கு முதலியபல வியாதிகள் உண்டாவது சுபாவம். அந்தச் சுபாவமுடைய குழந்தைகளுக்கு அவர்களுக் கூட்டும்பாலுடன் சமயத்திற்குத் தகுந்தபடி நான்கைந்துதுளி மேற்படி திராவகத்தைச்சேர்த்து ஊட்டி வருவதினால் மேற்கண்ட துர்க்குணங்கள் நீங்கிச்செவ்வையாக ஜீரணமாகும். மேற்படி திராவகத்தை வழமையாகவே பால்குடிக்கும் குழந்தைகளுக்குச் சமயத்திற்குத் தகுந்தபடி தினமொன்றிற்கு இரண்டு அல்லது, மூன்றுதடவை, அல்லது, வாரத்திற்கு இரண்டு அல்லது, மூன்றுதடவைவயதிற்குத் தகுந்தபடி அளவாக உபயோகித்து வருவதால் குழந்தைக்கு நல்ல ஜீரணசக்தி யுண்டாகி மாந்தம் முதலிய ரோகங்கள் உண்டாகாமல் சுகஸ்திதியிலிருக்க ஏதுவாகும்.



பிரமாணம்:—மாத்திரை-௧, ௨.

அனுபானமும் உபயோகமும்:—எலுமிச்சம்பழச்சாறு விராகனெடை-௨, தேன் விராகனெடை-௨. இரண்டையு மிஸ்ரமித்து மேற்படி ஒரு மாத்திரையை அனுபானித்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதஞ் செய்துவர எலிவிஷம், பாம்புவிஷம், தேள்விஷம், நாய்விஷம், நரிவிஷம், பூனைவிஷம், பெருச்சாளிவிஷம் முதலிய பல கடி விஷங்களுந் தீரும்.

நாணற்கரும்புச்சாறு விராகனெடை-௨, தேன் விராகனெடை-௨. இரண்டையுமிஸ்ரமித்து மேற்படி ஒரு மாத்திரையை அனுபானித்துப் பானஞ் செய்யவும். இவ்விதஞ் செய்தால் பாஷாணம், வீரம், பூரம், நாபி முதலியவைகள் விஷமித்துண்டான துர்க்குணங்கள் நீங்கி மேற்கண்ட விஷங்கள் முறிந்துபோகும். இன்னும் சட்டி மருந்தால் உண்டான துர்க்குணங்களும் நீங்கி மருந்தின் வேகமும் நீங்கிப்போகும்.

செல்லிப்பட்டைச்சாறு விராகனெடை-௨, தேன் விராகனெடை-௨. இரண்டையு மிஸ்ரமித்து மேற்படி ஒரு மாத்திரையை அனுபானித்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதஞ் செய்துவர முகக்கடுப்பு, ஜன்னி, சைத்தியம், சுரம் முதலியவைகள் தீரும்.

எருமைத்தயிர் விராகனெடை-௩, தேன் விராகனெடை-௧௩. இவ்விரண்டையுமிஸ்ரமித்து பானஞ்செய்யவும். இவ்விதஞ் செய்துவர அதிசாரம், கிராணிமுதலிய ரோகங்கள் தீரும்.

முற்றின வேப்பமரப்பட்டை விராகனெடை-௩௰ இதனை முக்காலாழாக்கு ஜலத்திற்போட்டுக்காய்ச்சித்

லாமூலக்காகச் சுண்டியின் சிறக்கி வடிகட்டித்திப்பிசிக்கின கஷாயத்துடன் இரண்டு விராகனெடை தேனையுஞ் சேர்த்துப் பானஞ் செய்யவேண்டும். இவ்விதஞ் செய்துவர புதுசுரம், பழையசுரம் முதலிய எல்லா சுரங்களும் தீரும்.

நற்சீரகத்தை வறுத்திடித்த சூரணம் விராகனெடை-க, சீனிசர்க்கரை விராகனெடை-க. இரண்டையுமிஸ்ரமித்து மேற்படி ஒரு மாத்திரையை அனுபானித்துக்கொள்ளவேண்டும். இவ்விதஞ் செய்துவர, எட்டுவகைக் குன்மரோகங்களுந் தீரும்.

உலர்ந்த கண்டங்கத்திரிப் பழம் - க. இதற்குள் மேற்படி ஒரு மாத்திரையை வைத்துப் பட்டுத்துணியில் முடிந்து, தான் வழிபடுங் கடவுளைத்தியானித்து புஜத்தில் கட்டிவைத்தால், பில்லி, சூனியம், பேய் முதலியவைகள் போம்.

சிறுநீரில் மேற்படியொரு மாத்திரையை இழைத்து எள் பிரமாணம் கண்ணிற் கலிக்கமிட, ஜன்னிவாத ரோக முதலியவைகள் தீரும்.

இரண்டுபலம் புளியம்புறணிச் சாம்பலைப்பத்துப் பலம் ஜலத்திற்போட்டு நன்றாய்க் கலக்கி ஒருநாள் தெளியவைத்துத் தெளிவை இறுத்துச் சீசாவில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்த ஜலம் விராகனெடை - உ, தேன் விராகனெடை-உ, இவ்விரண்டையுமிஸ்ரமித்து மேற்படி ஒரு மாத்திரையை அனுபானித்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதஞ் செய்துவந்தால், பறங்கிப்புண், பறங்கிக் குஷ்டம் ஆகியவைகள் தீரும்.



## குதிரைக்குளம்புப் பற்பம்.

குதிரைக்குளம்புச் சுத்தி:—குதிரைக்குளம்பை இராவின தூள், அல்லது, இடித்த தூள், பலம்-ரு. இதனை ஒரு பீங்கான் பாத்திரத்திலிட்டு அதில் இளநீரை விடவேண்டும். அந்த இளநீரானது தூளின் மீது ஒரு அங்குலம் நிற்கவேண்டும். இவ்விதம் விட்டு வெயிலில்வைத்து அந்த இளநீரெல்லாஞ் சுண்டின பின்பு மறுபடியும் முன்போல் இளநீரைவிட்டு வெயிலில்வைத்துச் சுவற வைக்கவேண்டும். இவ்விதம் மடக்கு மடக்கு 5 - தடவை சுவறவைத்தபின்பு வெயிலில் வைத்து ஈரமில்லாமலுலர்த்தி எடுத்துக் கொள்ளவேண்டும். இதுவே குதிரைக்காற் குளம்பின் சுத்தியாம்.

மேற்கண்டபடி சுத்திசெய்த குளம்புத்தூளைக்கல் வத்திலிட்டு வன்னியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு ஜாமநேரம் அரைத்துப் பில்லைசெய்துல ர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலையண் செ ய்துலர்த்திக் கவசத்தின் எரு பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுத்துக் கொள்ளவும். பிறகு அதனைக் கல்வத்திலிட்டு முன்போல் வன்னியிலைச்சாற் றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு ஜாமநேரமரை த்து முன்போற் கவசஞ்செய்துலர்த்தி கவசத்தின் ஆறுபங்கு வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுத்துக் கொள்ளவும். மூன்றாந்தடவையும் முன்சாற்றால் முன் போலரைத்து முன்போற் கவசஞ் செய்துலர்த்திக் கவ சத்தின் ஐந்துபங்கு வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுத்து நான்காந்தடவையும் முன்சாற்றையேவிட்டு முன்போலரைத்து முன்போற் கவசஞ்செய்து கவசத்

தின் நாலுபங்கு வறட்டியிற் புடமிட்டாறியபின் னெடுத்துக்கொள்ளவும். இவ்விதம் சுத்தப்படுத்தின குளம்புப் பற்பத்தை மேற்படி திரிகடுகுக் குளிகையிற் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

இந்தப் பற்பத்தைத் தனியாகவே இசிவு முதலிய பலரோகங்களுக் குபயோகப்படுத்தலாம்.

## குறிப்பு.

முன்கண்டபடி செய்துகொள்ள ஏலாதவர்கள் மேற்கண்டிருக்கிறபடி இளநீரில் ஒருதடவை சுத்திசெய்து வன்னியிலைச் சாற்றில் ஒருதடவை யாகிலும் புடமிட்டு மேற்படி மாத்திரையுடன் சேர்த்துக்கொள்ளவும்.

## 8. ஜன்னிவாதக் குளிகை.

இந்துப்புத்தூள், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகத்தூள், பொரித்த வெண்காரம், மேல்தோல் சீவின சுக்குச்சூரணம், மிளகுச்சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-கவ, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை-உ௰, கடுகுரோகணிச்சூரணம், விராகனெடை-ரு, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—வாளத்தைக் கல்வத்திலிட்டுப்பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து வெண்ணெய் போலானபின்பு மற்றச் சரக்குகளையும் சேர்த்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நாலுசாம நேரமரைத்து அரைக்குன்றிமணி யெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.



பிரமாணம்:—மாத்திரை-க, உ. தேகசுபாவத்தை நிதானித்து அதற்குத் தகுந்தபடி குறைத்தும் அதிகப்படுத்தியும் உபயோகித்துக் கொள்ளலாம்.

அனுபானம்:—இஞ்சிச் சாறு, சுக்குக்கஷாயம், தேன், முலைப்பால், சோம்புத்திராவகம் முதலியவைகளாம்; இன்னும் சுரரோகம், ஜன்னிதோஷம், வாயு முதலியரோகங்களில் அததற்குத் தகுந்தகஷாயங்களுடன் அனுபானித்துங் கொடுக்கலாம். (இந்த முறைகளெல்லாம் இதனுடன்சேர்த் தச்சிடப்பட்டிருக்கும் மேற்படி வீரமாமுனிவரவர்களாற் செய்யப்பட்ட குணவாகடத்தில் சொல்லப்பட்டிருப்பதால் அவசியமானபோது அந்த நூலையும் பார்த்து முன் சொல்லியிருக்கிற முறைப்படி செய்துகொள்ளவும்.

உபயோகம்:—எல்லாவகை சுரங்கள், எல்லாவகை தோஷங்கள், எல்லாவகை ஜன்னிகள், எல்லாவகை வாயுரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

## 9. சித்தர் குளிகை.

சித்திரமூல வேர்ப்பட்டைச் சூரணம், சுத்திசெய்த இரசகர்ப்பூரம், ஓமச்சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-கவ, பனைவெல்லம் விராகனெடை-கூ௰.

செய்முறை:—முன் மூன்று சரக்குகளையுங் கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்துப் பிறகு வெல்லத்தையுஞ் சேர்த்து ஆறுமணி நேரமரைத்து மிளகுப்பிரமாணம் மாத்திரைகள்செய்து சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ.

அநுபானம்:--சீனிசர்க்கரை, சுக்கையரைத்தவிழுது, வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:--இதனைக் காலை மாலை இரண்டுவேளையும் பத்துநாள் உபயோகித்தால் பற்பல விரணங்கள், ஓர்ந்திரோகங்கள், யோனிப்புற்று, சூலைகள், கள்ளிப்பூக்கிரந்தி, லிங்கப்புற்று, பௌத்திரரோகங்கள், கன்னப்பிளவை, பக்கப்பிளவை, மார்ச்சிலந்தி, விப்புருதி, எட்டுவகைக் குன்மரோகங்கள், மேகரணங்கள் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:--வியாதிபலம், தேகபலம் முதலிய வியாதிகளுக்குத் தகுந்தபடி புளியை நீக்கிவைத்து உப்பை வறுத்துச் சேர்க்கவும். புகை, பெண் ஆகியவைகளையும் நீக்கவேண்டியது.

## குறிப்பு.

இது அதிக உபயோகமான மருந்தாயினும் சில சுகுமாரதேகிகளுக்கு அதிகம் உபயோகப்படாதாகையால், இதனுடன் ஒன்றேகால் விராகனெடை கோரோசனையைச் சேர்த்தரைத்துக் கொண்டால் எல்லாத் தேகிகளுக்கும் உபயோகிக்கலாம். அதனால் மேற்கண்ட ரோகங்களெல்லாம் தப்பாமல் தீர்ந்துபோகும். இதற்குக் கோரோசனை மிளகென்றுபேர். நமது பரம்பரையில் அநுபவமான இன்னொருமுறையையும் இங்கெழுதுவாம்.

## கோரோசனை மெழுகு (வேறு.)

புதிதான சித்திரமூல வேர்ப்பட்டைச் சூரணம் விராகனெடை-௧௬, சுத்திசெய்த இரசகர்ப்பூரம் வி-



ராகனெடை-௨, கோரோசனை விராகனெடை-௨, குங்குமப்பூ விராகனெடை-௨, தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை:---குங்குமப்பூவைக் கல்வத்திலிட்டு தேனைச் சிறுகச் சிறுகவார்த்தரைத்துக் குங்குமப்பூ அரைபட்டபின்பு, இரசகர்ப்பூரத்தைச் சேர்த்தரைத்து அதுவும் அரைபட்டபின்பு கோரோசனையைச் சேர்த்தரைத்து அதுவு மரைபட்டபின்பு சித்திரமூலவேர்த்தூளைச்சேர்த்துத்தேனைச்சிறுகச்சிறுகவார்த்து எட்டுச் சாமநேரம் கைவிடாமலரைத்துப் பிங்கான் சிமிழிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:---குன்றிமணி யெடை ௧-௪-௫-தேகபலம் வியாதி பலத்திற்குத் தகுந்தபடி உபயோகிக்கவும்.

அநுபானம்:---சீனிசர்க்கரை, பனைவெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்:---சூலைரோகங்கள், அரையாப்பு, கண்டமாலை, நுணுக்காய்க் கிரந்தி, கள்ளிப்பூக் கிரந்தி, மேகரணங்கள், குதகவாயு, யோனிப்புற்று, லிங்கப்புற்று, கருப்பவாயு, உதிரச்சிக்கல், பிரசவஸ்திரீகளுக்குக் காணும் உதிரச்சிக்கல், உதிரச்சிக்கலினாலுண்டான ஜன்னிதோஷ முதலியவைகள் தீரும். சூதகம் கட்டுப்பட்டிருக்கிறவர்களுக்கும் இதனை உபயோகித்தால் அதையுடைத்து வெளிப்படுத்தும்.

பத்தியம்:---புளியை நீக்கவேண்டியது. காலை மாலை இரண்டுவேளையுமாக ஏழுநாள் உபயோகித்து எட்டாம் நாள் சிற்றாமணக்கெண்ணெயை, அல்லது, சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், பசுவின் நெய் ஆகமூன்றும் சேர்ந்தமுக்கூட்டெண்ணெயைத் தேய்த்-

ஞச் சனி புதன் ஆகிய நாட்களில் ஸ்நானஞ்செய்யவே
ண்டும். இவ்விதம் நாலைந்து ஸ்நானஞ்செய்து பிறகு
வழமைபோல் ஸ்நானஞ்செய்யவும். வியாதி இலகுவா
யிருந்தால் மூன்றுநாள், அல்லது, நான்குநாள் உப
யோகித்தால் போதுமானது.

குறிப்பு.

சில தேகிகளுக்கு வாய் பிடிக்குமாகையால் அத்
தகையினர்கள் தினம் நாலைந்து தடவை தாம்பூலம்
போட்டுக்கொள்வதினால் வாய் பிடிக்காது. அல்லது
கத்தகப்புளிப்பை ஜலத்திற்கரைத்து வாய் கொப்பளி
த்து வருவதினாலும் அதன் வேகம் நிராது. துஷ்டவியா
திகளுக்கு இது சஞ்சீவிக் கொப்பானதாகையால் அ
னுபவப்படி. இங்கெழுதப்பட்டிருக்கிறது. வேறெந்த
மருந்திலும் தீராத வியாதிகளுக்கு முடிவாக இதனை
உபயோகிக்கலாம்.

10. மந்திரியான குளிகை.

சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், சுத்திசெ
ய்த ஜாதிலிங்கம், பொரித்த வெண்காரம், சுத்திசெய்
த மனோசிலை, அரிசித்திப்பிலிச்சூரணம், இவை வகை
-க-க்கு விராகனெடை-உ, தேனையும், முலைப்பாலையும்
சமனாகக்கலந்து செல்லத்தக்க அளவு எடுத்துக்கொ
ள்ளவேண்டும்.

செய்முறை:—மனோசிலையைக் கல்வத்திலிட்டுப்
பொடித்து மற்ற மூன்று சரக்குகளையுஞ் சேர்த்தரை
த்து நுண்மையான பொடியானபின்பு திப்பிலிச் சூர
ணத்தையுஞ்சேர்த்து, தேனையும், பாலையுஞ் சேர்த்து
வைத்திருக்கிற திரவத்தைச் சிறுகச் சிறுகவார்த்து
நான்குசாமமரைத்து ஒரு குன்றிமணி யெடை

55



யுள்ள மாத்திரைகளாகச்செய்து பிங்கான் பாத்திரத்தி
ற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ.

அனுபானமும், உபயோகமும்:—இஞ்சிச்சாறு
விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விர
ண்டையுமிஸ்ரமித்து மேற்கண்ட மாத்திரையைப் பிர
மாணப்படி அனுபானித்துண்ண எல்லாவகைச் சுரரோ
கங்களுந் தீரும்.

எலுமிச்சம் பழச்சாறு விராகனெடை-க, தேன்
விராகனெடை-க. இவ்விரண்டையுமிஸ்ரமித்து மேற்
கண்ட மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்து
ண்ண எல்லாவகை விஷங்கள், வாந்தி, விக்கல் ஆகிய
வைகள் தீரும்.

தேன் விராகனெடை-க. இதில் மேற்படி மாத்தி
ரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்ண ஜன்னி
ரோகங்கள், பைத்தியரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

பசுவின்நெய் விராகனெடை-க, தேன் விராகனெ
டை-க. இவ்விரண்டையுமிஸ்ரமித்து மேற்கண்ட மாத்
திரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்ணக் குன்ம
ரோகங்கள் தீரும்.

பிரப்பங்கிழங்குச் சூரணம் விராகனெடை-க, வெ
ள்ளைச்சர்க்கரை விராகனெடை-க. இவ்விரண்டையுமிஸ்
ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனு
பானித்துண்ண மேகரோகங்கள் தீரும்.

மிளகுச்சூரணம், விராகனெடை-உ, வெல்லம் வி
ராகனெடை-க. இவ்விரண்டையும் சேர்த்தரைத்து

லேகிய பதத்திலெடுத்து அதற்குள் மேற்படி மாத்திரையைப்பிரமாணப்படிபொதிந்து உட்கொண்டுவரப் பிளவை ரோகங்கள், மேகப் புண்கள், பறங்கிப்புண், குலரோகம் ஆகியவைகள் தீரும்.

மேற்றோல் சீவின சுக்குத் தூள், மிளகுத் தூள், வாய்விளங்கத் தூள், குச்சிகாம்பு முதலியவைகளை ஆய்ந்து சுத்திசெய்த விலாவாரைச்சூரணம், இவை வகை-க க்கு விராகனெடை-வ, தேன் விராகனெடை — க. இவை யெல்லாவற்றையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்ண, அண்டவாயு, அண்டவீக்கம் முதலிய அண்டரோகங்கள் தீரும்.

கோரைக்கிழங்கு, மேற்றோல் சீவின இஞ்சி, பூவரசம்பட்டை, மஞ்சட் கடுக்காய்த்தோல், வாய்விளங்கம், இவை வகை-க-க்கு விராகனெடை—வ. இவையெல்லாவற்றையும் அம்மியில்வைத்து வெந்நீர் வார்த்தரைத்து வெண்ணெய்ப்போலானபின்பு இரண்டரைப்பலம் வெந்நீரிற்கரைத்து வடிகட்டித் திப்பிலிக்கிஷாரசத்தில் மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்டுவர, மஞ்சட் காமாலை, வுட்காமாலை முதலிய காமாலை ரோகங்கள் தீரும்.

சங்கம்வேர்ப்பட்டை, மூடக்கொற்றான் வேர்ப்பட்டை, வெள்ளறுகு சமூலம், கஞ்சாங்கோரை சமூலம், இவை வகை-க-க்கு விராகனெடை-ங. இவையெல்லாவற்றையும் கொஞ்சம் சிதைத்து எட்டுப்பலம் ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டின கஷாயத்துடன் ஒன்றரை விராகனெ



டை தேனையுஞ் சேர்த்து மேற்கண்ட மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துப் பானஞ் செய்துவர சாத்தியமான மேகரோகங்களெல்லாந் தீரும்.

அவுரிவேர், நாயுருவிவேர், நீர்முள்ளிவேர், சங்கம்வேர்ப்பட்டை, இவை வகை-க-க்கு விராகனெடை—ரு. இவை யெல்லாவற்றையும் செம்மையாகச் சிதைத்துப் பத்துப்பலம் ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டின கஷாயத்துடன்—ற—அல்லது-க—விராகனெடைசிற்றாமணக்கெண்ணெயைக் கலந்து காலையில் பானஞ்செய்துவர, உள்மூலம், வெளிமூலமாகிய மூலரோகங்கள் தீரும். வியாதி கடினமாயிருந்தால் மாலையிலும் உபயோகிக்கலாம். மாலையில் சமயோசிதம்போல சிற்றாமணக்கெண்ணெயைச் சேர்த்தும் சேர்க்காமலும் உபயோகிக்கலாம்.

காரைவேர்ப்பட்டை, செல்விமரப்பட்டை, கருங்காலி மரப்பட்டை, கொடிவேலி வேர்ப்பட்டை ஆகிய இவற்றின் தனித்தனிச் சூரணம் வகை-க-க்கு விராகனெடை—உ. இவற்றைக் கல்வத்திலிட்டு முலைப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்து வெண்ணெய்ப்போலானபின்பு பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்ளவும். இதில் எட்டுக் குன்றிமணியெடையெடுத்து ஒரு விராகனெடை தேனையுங் கலந்து அதில் மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்டுவர க்ஷயரோகங்கள் தீரும்.

கழற்சி வேர்ப்பட்டை, கொடிவேலிவேர்ப்பட்டை, மிளகு, தோலுரித்த வெள்ளைப் பூண்டுதம், இவை வ

ளை-௧-க்குக் குன்றிமணியெடை-௪. இவற்றை மைபோலரைத்து அதற்குள் மேற்படி மாத்திரையைப்பிரமாணப்படி அனுபானித்துக் கொண்டுவர, சுழல் வாதம், கெண்டைவாதம், வாயுவகைகள் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி இலகுபத்தியம் கடின பத்தியமாக ஏற்படுத்தவேண்டியது. மேகமுதலியரோகங்களுக்கும் புளியில்லாப் பத்தியமாகவும் வைக்கலாம்.

குறிப்பு.

இதுவுமொரு கைவல்யமான மருந்தாகையால் அனுபவசாலிகள் இதன் அருமையான குணத்தை அறிந்தோர் தெரிந்துகொண்டு இங்குச் சொல்லாத அநேகவியாதிகளுக் குபயோகிக்கலாம். இன்னும் அந்தந்த வியாதிக்குத் தகுந்தபடி தம்தமக்கு அனுபவமான கஷாயம் சூர்ணம் லேகியம் ஷர்பத்து முதலியவைகளிலும் அனுபானித்து உபயோகித்து வரலாம்.

## 11. சருங்சழம்பு.

பின் காண்கிறபடி சுத்திசெய்த திடமான கிட்டம் (வல்லத்துக் கிட்டம் சிரேஷ்டமானது,) சுத்திசெய்த காந்தம் (இது 7. ஊசி பிடிக்கும்படியானதா யிருந்தால் உத்தமம்) நீரடிமுத்துப்பருப்பு (இதனை வறுத்து மேல்தோல் உள்ளிலை முதலியவைகளை நீக்கிவிடவேண்டும்.) இம்மூன்றும் வகை-௧-க்கு விராகனெடை — கவ, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை — இரண்டரை, கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.



செய்முறை:——கிட்டத்தையும் காந்தத்தையும் பொடித்து நன்மையான நூளானபின்பு எடுத்துவைத்துக்கொள்ளவும். வாளப்பருப்பையும் நீரடிமுத்துப் பருப்பையும் கல்வத்திலிட்டு அரைத்து வெண்ணெய் போலானபின்பு முன் தூளிற் சிறுகச் சிறுகச் சேர்த்தரைத்து எல்லாம் சென்றபின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாம நேரமரைத்து மெழுகுபதமாக எடுத்துப் பீங்கான் சிமிழிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:——குன்றிமணியெடை-௧, ௨. தேகசுபாவம், தேகபலமாகியவைகளுக்குத் தகுந்தபடி கொஞ்சம் அதிகப்படுத்தியும் உபயோகிக்கலாம்.

அனுபானம்:——பனைவெல்லம், சீனிசர்க்கரை, மிளகையும் கையாந்தகரை இலையையும் சமமாய்ச் சேர்த்தரைத்த விழுது, வேப்பிலைக் கொழுந்தை யரைத்த விழுது முதலியவைகளாம்.

உபயோகம்:——குதகவாயு, குதகபந்தம், குதகக்கட்டி, நீரம் பற்கட்டி, மகோதரம், காமாலை, காய்ச்சற்கட்டி, பலவகை வாயுரோகங்கள் முதலியவைகள் தீரும்.

பத்தியம்:——வியாதி கடினமானதா யிருந்தால் புளியைநீக்கி வைக்கவும். வியாதிலகுவானதா யிருந்தால் இச்சாபத்தியம் வைக்கவும். சமயோசிதம்போல் பத்தியம் வைத்தும் பத்தியம் வைக்காமலும் உபயோகப்படுத்தலாம்.

### கிட்ட சுத்தி.

கிட்டத்தைத் தான்செய்து பின்காண் பாத்திரத்திற்போட்டு சீமை திராக்ஷிக்காடியை அல்லது காடி

க்காடியைத் தாளிலின்மீது ஒரு அங்குல மிருக்கும்படியா கவிட்டு வெயிலில்வைத்து அக்காடியெல்லாம் சுண்டினபின்பு மறுபடியும் முன்போற் காடியைவிட்டு முன்போற் சுவறவைக்கவேண்டும். இவ்விதம் மூன்றுதடவைகள் செய்துகொண்டால் கிட்டமானது சுத்தியாகிவிடும். அவசரமாக வேண்டிய காலங்களில் மேற்படி கிட்டத்தை இரும்புச் சட்டியிற்போட்டு முன் அளவு காடியைவிட்டு உலையில்வைத்து எரிக்காடியானது சுண்டினபின்பு மறுபடியும் முன்போற் காடியைவிட்டு அதுவும் சுண்டினபின்பு, மூன்றுந் தடவையுங் காடியைவிட்டு முன்போற் சுண்டவைத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் செய்வதால் இரண்டொரு மணிக்குள் வேலை நிறைவேறிவிடும். இதுவும் நல்ல சுத்தியாம்.

காந்த சுத்தி.

காந்தத்தை நெருப்பிற்காய்ச்சி வாழைக்கிழங்குச் சாற்றில் தோய்த்துக்கொள்ளவேண்டும். குளிர ஆறினபின்பு மறுபடியுங் காய்ச்சி முன்போல் தோய்த்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி 7 தடவைகள் செய்தால் காந்தமானது சுத்தியாகி விடும்.

## 12. பலாண்டக் களிம்பு.

வங்காளப்பச்சை, வெண்குங்கிலியத்தூள், சுத்திசெய்த இரசம், இவை வகை-க-க்கு விராகனெடை-உ௦, ஊமத்தையிலைச்சாறு செல்லத்தக்க அளவு. பசுவின் வெண்ணெய் பலம்-க௦.

செய்முறை:—இரசத்தைக் கல்வத்திலிட்டு ஊமத்தையிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து



ரசமடங்கினபின்பு வங்காளப் பச்சையைச் சேர்த்தரைத்துப் பிறகு குங்கிலியத்தூளைச் சேர்த்து முன் சாற்றையே சிறுகச் சிறுகவார்த்து-2 - ஜாமநேரமரைத்து இதனையெடுத்து ஒரு வெண்கலப் பாத்திரத்திற்போட்டு வெண்ணெயையுஞ் சேர்த்து தாம்பிரப் பாத்திரத்தினால் 2-ஜாமநேரம் தேய்த்துப் பீங்கான் செமிழ்ப்பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:—இந்தக் களிம்பை வெற்றிலையிற் கொஞ்சந்தடவி அவசியமான இடத்தின்மீது போட்டுவரப் புற்றுரணங்கள், கிரந்திப்புண்கள், புரைப்புண்கள், ஆறாதரணங்கள், காள்பட்டரணங்கள் ஆகியவைகளெல்லாந் தீரும். இன்னும் இதனைத் துணியில் தடவித் திரியாகச்செய்துலர்த்திக் கொளுத்தி இதன் புகையை புண் முதலியவைகளிற் படும்படி செய்வதினாலும் பிரயோசன முண்டாகும்.

பத்தியம்:—வியாதிபலம் தேகபலம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி பெண், புகை ஆகிய இவைகளை நீக்கிவைக்க வேண்டியதவசியம்.

## 13. கலிக்க மாத்திரை.

பெருங்காயம், பூவந்திக்கொட்டை ?வித்துப் பருப்பு, பேய்ப்பீர்க்கு ?விதைப்பருப்பு, பொரித்த வெண்காரம், மேல்தோல் சீவின சுக்குச்சூரணம், மிளகுச்சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-உ௦, குப்பைமேனி யிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—பெருங்காயத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து வெண்ணெய் போலானபின்பு மற்ற சரக்குகளையுஞ்

சேர்த்து மேற்படி சாற்றையே சிறுகச் சிறுகவார்த்து 2-ஜாமமோ அரைத்து நீண்டசிறு மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திக்கொள்ளவும்.

உபயோகம்:—இதனை முலைப்பாலிலிழைத்துக் கருப் பிரமாணம் கண்ணிலிட, பற்கிட்டு, ஜன்னி, தலைவலி, பிடரிநோய் முதலிய ரோகங்கள் தீரும்.

### குறிப்பு.

இதனைக் கண்ணிலிடுவதைப் பார்க்கிலும் முலைப்பாலிற்கரைத்து இரண்டு நாசியிலும் 1-அல்லது 2-துளி நசியஞ்செய்ய, மேற்கண்ட ரோகங்கள், பைத்திய ரோகங்கள், பில்லி, சூனியம் முதலியவைகளுந் தீரும்.

## 14. பாரியாள் நேசம்.

இச்சிப்பால் 1-பங்கு, தன்வா யெச்சில் 1-பங்கு இரண்டையுஞ் சமபாகமாகச்சேர்த்து அதிற் பாக்கை மெல்லியதாகச் சீவிப் போட்டுலர்த்திக் கொள்ளவேண்டும். மறுபடியும் முன்போற் போட்டுலர்த்திக் கொள்ளவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவைகள் செய்து எடுத்துக்கொள்ளவும்.

மேற்கண்டபடி சுத்தப்படுத்தின பாக்கு பலம்-க, குங்குமப்பூ விராகனெடை-க, பச்சைக் கர்ப்பூரம்விராகனெடை-ங, கஸ்தூரி விராகனெடை-அ, ஏலக்காய் விதை விராகனெடை-உ0, பன்னீர் பலம்-ரு, மேற்கண்ட சரக்குகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பன்னீரை வார்த்தரைத்து எல்லாஞ் செம்மையாக அரைபட்டபின்னெடுத்துப் பன்னீரிற் கரைத்து முன் பாக்கைப்போட்டு நன்றாய்ப் பிசறி வெயிலில் வைத்துப்



பன்னீரெல்லாஞ் சுண்டினபின்பும் வெயிலில் வைத்து ஈரமில்லாமலுலர்ந்த பின்பு ஒரு பாத்திரத்திற் கொஞ்சம் நெய்யை வார்த்துக்கொஞ்சஞ் சூடுகண்டபின்பு ஒரு விராகனெடை கொப்பரைத் தேங்காயைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து மேற்படி நெய்யிற் போட்டுக் கொஞ்சஞ் சூடுகண்டபின்பு முன் சுத்தப்படுத்தி வைத்திருப்பதையும் போட்டு இளம்பதமாக வறுத்துப் பிங்கான் டப்பியில்வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:—தன் பெண்சாதியானவள் தன்மீது பிரியமில்லாதவளாயிருந்தால் அவளுக்கு இதனைத் தாம்பூலத்துடன் உபயோகிக்கும்படி கொடுத்துக்கொண்டுவந்தால், தன்மீது அதிகப் பிரியமுள்ளவளாகவும், நேசமுள்ளவளாகவு மிருப்பாள்.

## 15. தாதுபுஷ்டி யுசிதம்.

குறிஞ்சான்பத்திரி யென்பது பூனாவில் மோமியாயியென்று பேர். இதுதான் பிரசித்தியான பேர். ஆகையால், இந்தப்பேரைச் சொல்லிக்கேட்டால் சாதாரணமாக எல்லா மருந்துக்கடையிலுங் கிடைக்கும். இது பலவகைகளுண்டு. இதனைச் சுத்திசெய்தும் விற்கிறார்கள். சரக்கின் தரத்திற்குத் தகுந்தபடி ஒரு ரூபாயெடை 2-ரூபாய் முதல், 50-ரூபாய் வரையில் விற்கப்படும். அவரவர்களுக்கிஷ்டமானபடி வாங்கிக் கீழ்க்கண்டபடி உபயோகித்துக் கொள்ளலாம்.

மோமியாயி குன்றிமணியெடை-க, தேங்காயின் தனிப்பால் விராகனெடை-க0. மேற்படி மோமியாயியை இதிலிழைத்து ரு-விராகனெடைகற்கண்டுத்தூளை

அல்லது, சீனிசர்க்கரையைச் சேர்த்துப் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் காலையில் ஒருவேளையாகப் பிரதிதினஞ் செய்துவந்தால், தாதுவிருத்தி, போகசக்தி, வீரியவிருத்தி முதலியவைகளுண்டாகும்.

## குறிப்பு.

குறுஞ்சான் பத்திரியென்பதைச் சிலர் குருசாவியோமத்தின் இலையென அருத்தம் செய்கிறார்கள். இது சாஸ்திரத்திற்கும் அநுபவத்திற்கும் ஒத்ததாகக் காணப்படவில்லை. குறுஞ்சான் பத்திரியென்பது தமிழ்ச்சொல். அது அதிகமாய் இங்கு வழங்கப்படுகிறதில்லை. ஆகையால், அது அரும்பதமாகக் காணப்படுகிறது. இதனைத் திசைச் சொல்லெனச் சொல்லலாம். மோமியாயி யென்பதுதான் அநுபவத்திற்கும் சாஸ்திரத்திற்கும் ஒத்ததாய்க் காணப்படுகிறது. மோமியாயியென்னும் இந்த வார்த்தையும் மம்மியெனச் சிதைந்து வழங்குகிறது. ஆகையால் அவரவர்கள் தம் தமக்கு இஷ்டமானால் தெரிந்தவர்கள் மூலம் விசாரித்து நிச்சயித்துக் கொள்ளவும். அல்லது, அநுபவத்தால் நிச்சயித்துக்கொள்வது உத்தமம்.

## 16. இளநீர்க் கிருதம்.

பருமனான இளநீர்-௮, (செவ்விளநீராயிருந்தால் உத்தமம்,) பசுவின் நெய் பலம்-௰, லவங்கம், கோஷ்டம், அதிமதுரம், இலுப்பைப்பூ, சந்தனம், திராக்ஷைப்பழம், சீனக்கற்கண்டு, சீனிசர்க்கரை, இவை வகை-௧-க்குப் பலம்-௫.

செய்முறை:—இளநீரின் மேல்தோலை மாத்திரம் சீவி உள் நாருடன் கான்குழி சேற்றில் புதைத்து



வைத்து மூன்றாநாளெடுத்து உடைத்து இளநீரை மாத்திரம் எடுத்துக்கொள்ளவேண்டும். இதனுடன் நெய்யைக் கலந்துகொள்ளவும். கடைச்சரக்குகளையெல்லாம் ஒன்றுப்படச்சேர்த்திடித்து வடிகட்டின சூரணத்துடன் திராக்ஷைப்பழம், கற்கண்டு, சீனி ஆகியவைகளையுஞ்சேர்த்து அம்மியிலரைத்துத் தண்ணீர்வார்த்துவெண்ணெய்போலரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதிற் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாலெரித்து நீரெல்லாஞ்சுண்டிக் கடுகுதிரள்பதத்திலிறக்கி வடிகட்டித் தெப்பிசீக்கிச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-௩, ௫.

உபயோகம்:—நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீர்ச்சுருக்கு, பிரமேகம், வெட்டைரோகம் ஆகியவைகள் தீரும்.

## 17. வெள்ளை எண்ணெய்.

நிற்குமணக்கெண்ணெய் பலம்-௨௰, பாலைநெருஞ்சிச்சாறு, ஆடாதோடையிலைச்சாறு இவை வகை-௧-க்குப் பலம்-௨௰.

செய்முறை:—இம்மூன்றையும் ஒன்றாகச்சேர்த்து, ௩-நாள் வெயிலில் இளஞ்சூடாகக் காட்டிவந்து ௪-ம் நாள் அடுப்பேற்றிச் சிறுதீயாலெரித்து நீரெல்லாஞ்சுண்டிக் கடுகுதிரள்பதத்தில் வடிகட்டித் தெப்பிசீக்கி, எண்ணெயைப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-௨, ௩, காலை மாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—பிரமேகம், வெட்டைரோகம், அத்திசுரம் ஆகியவைகள் தீரும்.

## 18. குண்டலாதித் தைலம்.

(a) சங்கம்வேர்ப்பட்டை, அழிஞ்சிற்பட்டை, பறங்கிப்பட்டை, வில்வவேர்ப்பட்டை, அமுக்கிராக்கிழங்கு இவை வகை-க-க்குப் பலம்-க0.

(b) *சன்னராஷ்டம், கடுரோகணி, வலம்புரிக்காய், வெண்சந்தனம், ஜாதிபத்திரி, பூலாவேர்ப்பட்டை, மிளகு, யானைத்திப்பிலி, இவை வகை க-க்குப் பலம்-உ.

(c) நல்லெண்ணெய் படி-க, பசுவின்பால் படி-க. கட்டிச்சர்க்கரை பலம்-ரு.

செய்முறை:—(a)ல் உள்ளவைகளை இடித்துச் சிதைத்து அ-படி ஜலத்திற்போட்டு ஒருநாளூறவைத்து மறுநாள் அடுப்பேற்றிக் காய்ச்சி க-படியாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டித் தெளியவிட்டுக் கஷாயத்தை இறுத்துக் கொள்ளவேண்டும். (b)ல் உள்ள சரக்குகளை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து சர்க்கரையையுஞ்சேர்த்து அம்மியில் வைத்து (c)ல் உள்ள பாலைக்கொஞ்சங்கொஞ்சமாகத் தெளித்து வெண்ணெய்போலவரைத்துக் கொள்ளவும். மிகுந்திருக்கிற பாலையும் எண்ணெயையும், கஷாயத்தையும் ஒன்றாகக் கலந்து முன்னரைத்து வைத்திருக்கிற சரக்குகளையுங் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்துக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டிக் கசிவை நீக்கித் தைலத்தைச் சேகரித்துப் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:—இந்தத் தைலத்தைச் சனி, புதனாகிய வாரங்களில் அல்லது, வாரமிருமுறை தேய்த்து [illegible]விட்டு, வெந்நீரில் ஸ்நானஞ்செ



[illegible]வர, குன்மரோகங்கள், வாதஜன்னி, குஷ்டரோகம், பீனிசரோகங்கள், செவிட்டுரோகம், காதிரைச்சல், மந்தப்பார்வை, மேகசூலை, கால்முடக்கு, சர்வாங்கவாதமுதலிய வாதரோகங்கள், சிரசிலுண்டான எல்லாவகை ரோகங்கள் ஆகியவை தீரும்.

பத்தியம்:—ஸ்நானஞ்செய்த தினம் புளிப்பு, சீதள பதார்த்தங்கள், பகல் நித்திரை முதலியவைகளாகா.

## 19. வெள்வங்க பற்பம்.

சுத்திசெய்த வெள்வங்கம் பலம்-க, (வெள்ளைச் சங்குத்தூள் பலம்-க,) நாவற்பட்டைச்சாறு செல்லத்தக்க அளவு, உலர்ந்த நாவற்பட்டை பலம்-உ0.

செய்முறை:—வெள்வங்கத்தை உருக்கி மேற்படி சங்குத்தூளைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கிராசங்கொடுத்துத் துழாவிவர வேண்டும். தூளெல்லாஞ்சென்றுவிட்டால் வங்கமானது சங்கும்சேர்ந்து பற்பமாயிருக்கும். இந்தப் பற்பத்தை அப்படியே யெடுத்துக்கல்வத்திலிட்டு நாவற்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துச் சிறுவில்லைகளாகச் செய்து வெயிலில்வைத்துச் செம்மையாக வுலர்த்திக் கொள்ளவேண்டும். பின்பு நாவற்பட்டையை யிடித்துத் தூள்செய்து ஒரு இரட்டுத்துணியிற் பரப்பி மேற்படி வில்லைகளை ஒன்றோடொன்று சேராமல் அதின்மேல் வைத்துச் சுருட்டிக்கட்டி அதின்மீது இரண்டு சீலைமண்செய்து ரு-பலமுள்ள 80-வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுக்கத் திவ்யமான பற்பமாயிருக்கும். எல்லாச்சோதனைக்கும் ஒத்திருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணிஎடை-உ, ௩.

அநுபானம்:—பசுவின்நெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:— மேகரோகங்கள், அதிசாரங்கள், அஸ்தி வெட்டை, பித்தரோகமாகிய இவைகள் நீங்கி இந்திரிய விருத்தியுண்டாகித் தாதுவிர்த்தி யுண்டாகும்.

## குறிப்பு.

இந்தப் பற்ப முறையையும்இன்னும் பின்காணுஞ் சில முறைகளையும் நமது அநுபவப்படி இங்கெழுதியிருக்கின்றோம். இதற்காக்ஷேபனை யுள்ளவர்கள் புஸ்தகத்திலுள்ள முறைப்படியுஞ் செய்து அநுபவமூலமாக நிச்சயித்துக்கொள்ளலாம். சித்தர்கள் நூலில் சில பொதுவான விஷயங்களை விட்டுச்சொல்வது வழமை. அவ்விதமே இங்குஞ் சொல்லப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறது. மேலும் நமது ஆசானும் இவ்விதமே அனுக்ரஹித்திருக்கின்றார். லோகோபகாரமாக நமக்குத்தெரிந்த விஷயத்தை எவ்வித மறைப்புமின்றி எழுதி வருகின்றோம்.

## 20. தாளக பற்பம்.

மடலரிதாரம் தேவையான அளவு. இதனைப் புளியங்கொட்டை யளவாகத் துண்டித்து ஒரு மெல்லிய வஸ்திரத்தில் முடிந்து வைத்துக்கொள்ளவும். இந்த முடிப்பிற்கு 20-பங்கு எடை சாளிக்காரக் கற்சுண்ணாம்பை இருபாகமாக்கி ஒருபாகத்தை ஒருசட்டியிற்போட்டு அதின்மேல் முன் முடிச்சைவைத்து அதின்மீது மறுபாதியைப் போட்டுத் தண்ணீரைக் குபி



றீ எழும்பும்படியாகக் காய்ச்சி, நீர் அகப்பையால் மொண்டு சுண்ணாம்பின்மீது விடவேண்டும். இதன் புகையெல்லாம் அடங்கிக் குளிர ஆறினபின்பு எடுத்து மறுசேலைத்துண்டில் முடிந்து முன்போற் சுண்ணாம்பிற் பக்குவப்படுத்தவேண்டும். இவ்விதம் 7-தடவைகள் மடக்கிமடக்கிச் செய்தால், தாளகமானது சுத்தியாகிவிடும்.

மேற்கண்டபடி சுத்திசெய்த தாளகம் பலம்-௧, சிறுக்காரம் பலம்-௧௦, தாளியிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—தாளியிலைச் சாற்றைப் பீங்கான் பாத்திரத்தில் விட்டு, அதில் முன் தாளகத்தைப்போட்டு ஊறவைத்து, காலாகாலமெடுத்து வெயிலிலுலர்த்தி, ஈரமில்லாமலுலர்ந்தபின்பு கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி புதிய தாளியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குஜாம நேரமரைத்து ஒரே பில்லையாகச் செய்து வெயிலிலுலர்த்தி எடுத்துக்கொள்ளவும். சிறுக்காரத்தைப் பொடித்து இருபங்காக்கி ஒரு பங்கை ஒரு சிறிய சட்டியிற்போட்டு, அதின்மீது மேற்படி பில்லையைவைத்து அதின்மீது மறுபாதி சிறுக்காரப் பொடியைப்போட்டு, மேற்சட்டிமூடி எழுசீலைமண் செய்துலர்த்தி, 5 - பலமுள்ள 10 - வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுத்து மேற்சட்டியை நீக்கி மெதுவாகப் பற்பத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். சிறுக்காரமும் பற்பமா யிருக்குமாகையால் இரண்டுங் கலந்திருக்கும். ஆகையால் மிக ஜாக்கிரதையுடன் கிரமமாகத் தாளகபற்பத்தை எடுத்துக்கொள்ளவேண்

டும். சிறுக்காரப் பற்பத்தையும் தனியே பொடித்துவைத்துக் கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—நாளகப்பற்பம் அரிசியெடை - க, உ, சிறுக்காரப்பற்பம் குன்றிமணியெடை-உ, ங.

அனுபானம்:—நாளகப் பற்பத்தை ஒரு வெற்றிலையில்வைத்து மென்று விழுங்கிவிடவேண்டும். தேனிலும் அனுபானித்துக்கொடுக்கலாம். வியாதி, தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம். மெலிந்த தேகிகளுக்கு 6 வேளைக்கதிகம் கொடுக்கலாகாது.

படிக்காரப்பற்பத்தை தேன், நெய், வெண்ணெய் ஆகிய இவைகளில் அனுபானித்துக் கொடுக்கலாம். இன்னும் வாதுமைப்பருப்பு, கற்கண்டு இரண்டையும் சமபாகமாகச் சேர்த்தரைத்து மெலிய பதமாக எடுத்து அதிலும் அனுபானித்துக் கொடுக்கலாம்.

உபயோகம்:—க்ஷயரோகம், காசரோகம், இருமல் முதலிய கபரோகங்கள் தீரும்.

பத்தியம்:—புளிப்பு, புளிப்புவஸ்து ஆகியவைகளை அறவே நீக்கவேண்டும். பசுவின்பால், பாற்கஞ்சி, பாலன்னம், வாதுமைப் பருப்புசேர்ந்த பாயசம் முதலியவைகளில் சிறுதித்திப்பாகக் கற்கண்டு, சீனிசர்க்கரை ஆகிய இவைகளைச் சேர்த்துபயோகித்துக் கொள்ளலாம். இன்னும் சமயோசிதம்போல அவசியமான பத்தியங்களையு மேற்படுத்தலாம்.

## 21. நவாச்சார பற்பம்.

பூநீறு படி - க, இதில் அ - படி கடல் நீரை அல்லது பெண்களின் மூத்திரத்தைவிட்டுச் செம்மை



யாக்கலக்கி மூன்றுநாள் வைக்கவேண்டும். ஒவ்வொருநாளும் இரண்டு மூன்றுதடவைகள் மூங்கிற்கொம்பால் கலக்கியும் வரவேண்டும். நாலாநாள் தெளிவை யிறுத்துக்கொள்ள வேண்டும்.

இம்மான பூநீர்படி அரை, மேற்படி சுண்ணாம்புத் தெளிநீர் படி - உ. இவ்விரண்டையுங் கலந்து நன்றாய்க்கலக்கி மூன்றுநாள் வைக்கவேண்டும். ஒவ்வொருநாளும் இரண்டு மூன்று தடவைகலக்கியும் வரவேண்டும். நாலாநாள் தெளிவையிறுத்து இரும்புச் சட்டியிற்போட்டுக் காய்ச்சிக் குழம்புப்பதமாக வருகையில் வெயிலில்வைத்துலர்த்தி உப்பாக்கிக் கொள்ளவேண்டும். இதற்குப் பூநீருப்பென்று பேர்.

மேற்படி பூநீருப்பு, கறியுப்பு, கல்லுப்பு, வெடியுப்பு இவை வகை-க-க்கு விராகனெடை-கவ. நவச்சாரம் விராகனெடை இரண்டரை, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு. கற்சுண்ணாம்பு படி-உ.

செய்முறை:—மேற்படி உப்புகளை ஒன்றாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச்சாற்றை துளிக்கணக்காக விட்டரைக்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், எல்லாம் ஜலமாகிப்போம். இவ்விதம் நாலு ஜாமநேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்திக் கொள்ளவேண்டும். ஒரு மண்காலத்தில் காற்படி சுண்ணாம்பைக்கொட்டிப் பரப்பி அதின்மீது முன் பில்லையைவைத்து அதின்மீது காற்படி சுண்ணாம்பைக்கொட்டி மேலும் மண்காலத்தால்மூடி ஏழு சீலைமண் செய்து முழுப்புடமிடவேண்டும். ஆறினபின் பெடுத்து திறந்தால் வைத்தவெடையிருந்தால் உத்தமம், எ

தேவைக்குறைந்தால் முன்கண்டவெடை ஐந்துப்புக ளையுஞ் சேர்த்தரைத்து அதில் குறைந்த அளவு எடுத் து இதனுடன் சேர்த்துக் கல்வத்திலிட்டு முன்போற் பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குஜாமமரை த்து முன்போற் பில்லைசெய்துலர்த்தி முன்போற் சுண்ணாம்புக்குள் வைத்து முன்போற் புடமிடவேண் டும். ஆறினபின் எடுத்து நிறுத்துப்பார்த்து குறைந் த எடை முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதிற் சேர்த் து முன்போலரைத்து முன்போற் புடமிடவேண்டும். மூன்றுபுடத்தில் வைத்த எடை நின்றுவிட்டால் உத் தமம் இல்லாவிட்டால், வைத்த எடை நான்கிறவ ரையில் புடமிட்டுத் தீரவேண்டியதுதான் கடமை. பி றகு எல்லா உப்புங் கட்டுப்பட்டுப் பற்பமாகி நின்றுவி டும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧, ௨.

அநுபானம்:—சுக்குத்தூள், மிளகுத்தூள் முத லியவைகளாம்.

உபயோகம்:—குன்மரோகங்கள், வாயுரோகங்க ள், இன்னும் பலபலவகை ரோகங்கள் ஆகியவைகள் தீரும். சமயோசிதம்போல அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்த லேகியம், சூரணம், கஷாயம், கிருதம் முதலிய வைகளிலும் அநுபானித்துக் கொடுக்க, அந்தந்த வி யாதிகளுந் தீரும். இன்னும் இது ஒரு வைத்திய முப்பு வாகையால் எல்லாவகை ஔஷதங்களிலும், அந்தந்த ஔஷதத்தின் அளவிற்குத் தகுந்தபடி இரண்டொரு விராகனெடை சேர்த்துபயோகிப்பதால் விசேஷகுண முண்டாகும்.



## 22. பவழ பற்பம்.

நற்பவழம் தேவையான அளவு, இதனைச் சிறுது ண்டுகளாகச்செய்து ஒரு பீங்கான் பாத்திரத்திற்போ ட்டு, அதில் முயல்ரத்தத்தைவிட்டு நன்றாய்ப்பிசறி வெயிலில் வைத்துலர்த்திக் கொள்ளவேண்டும். இல ந்தையிலையை அம்மியில்வைத்து வெண்ணெய்போல அரைத்து அரை அங்குலகனமுள்ள இரண்டு அடை யாகத் தட்டி, ஒரு அடையின்மீது முன் சித்தப்படுத் தி வைத்திருக்கிற பவழத்தைப்பரப்பி, அதின்மீதுமறு அடையால்மூடி இரண்டு உதடுகளையும் பொருத்தும்ப டியாகச்செய்து, அதின்மீது மூன்று சீலைமண்செய்து கொஞ்சம் ஈரமுலர்ந்தபின்பு, கவசத்தின் பத்துப்பங் கெடை வறட்டியிற் புடமிட்டாறினபின்னெடுக்கப் பற் பமாயிருக்கும்; சில சமயம் கருத்தாப்போலுமிருக்கும்; அவ்விதம் கருத்திருந்தால் அதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பசுவின்பாலைவிட்டு ஒருசாமமரைத் துப் பில்லைசெய்துலர்த்தி, ஓட்டில்வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் பத் துப்பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடு க்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨, ௩.

அநுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவின் நெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—மந்தாரகாசம், நீரடைப்பு, வெட் டை, பிரமேகம், மாரடைப்பு முதலியவைகள் தீரும். பித்தகஷ்டந்தீர்ந்து தாதுவிருத்தி, வீரியவிருத்தி மு தலியவைகளுண்டாகும்.

வெள்ளரிக்காய்ச்சாறு படி-௨, பெருங்காயம் விராகனெடை-௪, இதனை மேற்படிச் சாற்றிற் கரைத்து வைத்துக்கொள்க, ௪-குன்றிமணியெடை மேற்படி பற்பத்தை அரைப்பலம் பசுவின் வெண்ணெயிற் குழைத்துச் சாப்பிட்டுவிட்டு, அதன்மீது முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் வெள்ளரிக்காய்ச்சாற்றைப் பானஞ் செய்து, கவிழ்ந்து படுத்துக்கொண்டிருந்தால், மூத்திரத்தாரை வழியாக அங்குள்ள கற்கள் வெளிப்பட்டுப் போகும்.

## 23. நாகச் செந்தூரம்.

சுத்தநாகம் (முத்திரைக் கட்டியாயது) பலம்-௧0, இலுப்பை நெய்யையும், பசுவின் வெண்ணெயையும் சமபாகமாகச் சேர்த்து இரும்புக் கரண்டியில் நடவி, மேற்படி நாகத்தைப்போட்டுக் கொல்லுலையில் வைத்தூதி உருக்கி வெள்ளாட்டுப் பாலில் சாய்க்கவேண்டும். பாலானது இந்த நாகம் அமிழ்ந்து கிடக்கும்படியாகவுமிருக்கவேண்டியது. குளிர ஆறினபின்பு நாகத்தை யெடுத்து முன்போற் கரண்டியில் இலுப்பை நெய்யையும், பசுவின் வெண்ணெயையுங் கலந்து நடவி நாகத்தைப்போட்டு உருக்கி வேறு புதிய பாலில் சாய்க்கவேண்டும். இவ்விதம் மடக்கிமடக்கி இருபது தடவையுருக்கிச் சாய்த்தால் நாகமானது சுத்தியாகிவிடும். இதனை யெடுத்து வைத்துக்கொள்ளவும். இதுவேயிங்கு வேண்டிய நாகசுத்தியாம்.

வெடியுப்பு பலம்-௨0, ஓமம் பலம்-௧0, மேற்றோல்சீவின சுக்கு பலம்-௧, மஞ்சள் பலம்-௧. இவை யெல்லாவற்றையுந் தனித்தனி பிடித்துத் தூள்செய்து முடிவில் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும்.



முன் சுத்திசெய்த நாகம் பலம்-௫, இதனை ஒரு புதுச் சட்டியிலிட்டு உருக்கி, முன் கலந்து வைத்திருக்குந் தூளைச் சிறுகச் சிறுகக் கொஞ்சங் கொடுத்து வறுத்து வரவேண்டும். இந்தத் தூளெல்லாஞ் சென்றபின்பு நாகமானது தூளாகியிருக்கும். பிறகு செந்நாயுருவியைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து வைத்துக்கொண்டு, முன்போல் சிறுகச் சிறுகக் கொஞ்சங் கொடுத்துவரவேண்டும். மாதுளம்பூப்போல வருணமானபின்பு எடுத்துக் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றை விட்டு நான்கு ஜாமநேரம் அரைத்துப் பில்லை செய்துலர்த்தி மூட்டில்வைத்து மேலோடுமூடிச் சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஏழு பங்கெடை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் செந்தூரமாயிருக்கும். சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

அனுபானமும், உபயோகமும்:- மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றைத் தனித்தனி இளவறுப்பாக வறுத்துச் சித்தந் தனித்தனி சூரணம் வகை-௧-க்குச் சமனெடை. மேற்படி சூரணங்களை ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும். இதுவே திரிகடுகுச் சூரணம். இந்தத் திரிகடுகுச் சூரணம் விராகனெடை-௨, தேன் விராகனெடை-௪, இரண்டையுங் கலப்பித்து மேற்கண்ட செந்தூரத்தில் 2-குன்றிமணியெடை அனுபானித்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டு வேளையுமாக 40-நாள் உபயோகித்து வந்தால், ஈளை, இருமல், விக்கல், பக்ஷாரகாசம், க்ஷயசுவாசம், க்ஷயாசகாசம், அசீரணம், நெஞ்சுநோவு, கபரோகங்கள், பித்தரோகங்கள், உஷ்ணரோகங்கள், சுக்கிலப் பிரமிய ரோகங்கள், இந்தி

பகந்தர ரோகங்கள், கல்லடைப்பு, சதையடைப்பு, நீரடைப்பு, குன்மரோகங்கள், சோமரோகங்கள், பவுத்திர ரோகங்கள், முகவெரிச்சல், கைவெரிச்சல், கால்வெரிச்சல், ஆகியவைகள் தீரும்.

ஆவாரைப்பஞ்சாங்கச் சூரணம், அதாவது ஆவாரை வேர்ப்பட்டை, ஆவாரை மரப்பட்டை, ஆவாரைக் கொழுந்து, ஆவாரம்பூ, ஆவாரம்பிஞ்சு ஆகிய இவற்றைத் தனித்தனியுலர்த்தித் தனித்தனியாகஇடித்துத் தனித்தனியாக இறுத்துச் சமஎடையாக நிறுத்துக் கொள்ளவேண்டும். இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்துகொள்ளவும். இதுவே ஆவாரைப் பஞ்சாங்கச் சூரணமாம்.

ஆவாரை விதையைப் பல துவாரங்களுள்ள ஒரு தோண்டியிற் போட்டு பாகப்படிக் குழித்தைல மிறக்கிக்கொள்ள வேண்டும். இதுவே ஆவாரைத் தைலமாம்.

மேற்படி ஆவாரைப் பஞ்சாங்கச் சூரணம் விராகனெடை-க, மேற்படி ஆவாரைத்தைலம் விராகனெடை-க. இரண்டையும் மிஸ்ரமித்து இரண்டு குன்றிமணியெடை மேற்படி செந்தூரத்தை அநுபானித்துக்கொள்ளவேண்டும். இவ்விதம்காலைமாலை இரண்டுவேளையுமாக 40-நாள் உபயோகித்து வந்தால், எல்லாவகை ஜலக்கழிச்சல்கள், மூத்திரக் கிரிச்சரோகங்கள், உள்ளுருக்கி ரோகங்கள், எலும்புருக்கி ரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

சித்திரமூல வேர்ப்பட்டைச் சூரணம் விராகனெடை-ஐ, தேன் விராகனெடை-க, இவ்விரண்டை



யு மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண வேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டு வேளையுமாக 20-நாள் உபயோகித்தால், சத்திகுன்மம், ஆம்பல்ரோகம், ஆம்பல் பைத்தியம், சளைரோகம், இருமல்ரோகம், வாயுரோகங்கள், வாதரோகங்கள், குஷ்டங்கள், சிரங்குகள், சொறிகள், சேத்துமரோகங்கள், வயிற்றுக் கட்டிகள், உள்ளங்காலிலுண்டாம் கறுப்பு, தேகத்திலுண்டாகும் கருக் கழும்புகள், மூலக்கொத்து, மூலப்புற்று ஆகியவைகள் தீரும்.

பேய்ப் பீர்க்கங்காயை யுலர்த்தியிடித்த சூரணம் குன்றிமணி யெடை-௨, மேற்படி செந்தூரம் குன்றிமணி யெடை-௨, இவ்விரண்டையும் மிஸ்ரமித்துக் கொஞ்சந் தேனைவிட்டுக் குழைத்துத் தன்னுடைய மர்மஸ்தானத்திற் தடவிக்கொண்டு தன் பாரியாளுடன் சம்பந்தஞ் செய்ய, கருப்பையிலுள்ள புழுக்கள் செத்துக் கர்ப்பரோகங்கள் நீங்கி மலடற்றுப் புத்திரசந்தான முண்டாகும்.

இன்னும் இந்தப் பொடியை மூல முளைகளின் மீது தடவிவர, மூல முளையானது கரைந்து நிர்மூலமாகிப்போகும். மூலவாயு முதலிய ரோகங்களுந் தீரும்.

## விண்ணப்பம்.

அன்பர்களே! எமது கிரந்தங்களில் எழுதும் முறைகளைச் சற்று விரிவா யெழுதவேண்டுமெனச் சிலர் குறை கூறுகின்றார்; செய்யுட்களா யிருக்கப்பட்ட நூற்களில் முறைகள் பெரும் பான்மையும் சுருக்கிய

சொல்லப்பட்டிருக்கும். அவற்றை உள்ளபடி விரித்தெழுதாவிட்டால், சாதாரணமான எல்லோரும் தெரிந்துகொள்வது அசாத்தியமான காரியம். அந்த விஷயங்களெல்லாம் அனுபவசாலிகளுக்குத் தெரிந்திருக்குமென்பது உண்மையே யாயினும் மற்றவர்களும் அவர்களைப்போலத் தெரிந்தவர்களா யிருப்பார்களென்பது அசாத்தியம்; நாம் எழுதும் கிரந்தங்களெல்லாம் கற்றவர்கள், மற்றவர்கள், அனுபவசாலிகள், அஃதில்லாதவர்கள் ஆகிய எல்லோருக்கும் பிரயோசனப்படும்படி யிருக்கவேண்டு மென்பதே நமது பிரதானகருத்து. இதுவுமன்றி, நமது மூதாதைகளின் அனுபவம், அடியேனது அனுபவம், நமது நண்பர்களில் அருமைவாய்ந்த சிலரின் அனுபவம், நமது ஆசாரியனனுபவம், சாஸ்திரானுபவமாகிய இவ்வாதாரங்களில் ஒன்றை அல்லது, பலவற்றை அனுசரித்தே எழுதிவருகின்றோமேதவிர மனம்போனபடி எழுதி வைத்தவைகளல்ல; இதற்காக இரண்டொரு உதாரணங்களை இங்குக் கூறுகின்றோம். அவற்றைக் கனவான்கள் சற்றுகவனிக்கும்படியாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இதே நாகச்செந்தூர மென்னுமுறையில் (சுத்தி செய்த நாகம்) எனப் பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சரக்கிற்கும் அநேகவித சுத்திகளிருப்பன போலவே இந்த நாகத்திற்கும் பற்பலவகைச் சுத்தியுண்டு. இன்னும் ஒவ்வொரு முறைக்கும் அதற்குத் தகுந்த சுத்திகளுமுண்டு. ஆகையால் இச் செந்தூரமுறைக்கு ஏற்றது எந்தச்சுத்திமுறையென்பதை அனுபவத்தால் ஒருவர்சொல்லக் கேட்டே தெரிந்து கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாதவரா



யில் ஒருபோதும் அது உத்தமமான தாகாது. ஆகையால் அனுபவப்படி அல்லது அனுபவத்தால் நிச்சயமானவர்கள்மூலம் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியகம். ஆகையால் மேற்கண்ட வகைகளில்ஒருவகையாக நாம் நிச்சயித்தே மேற்கண்ட விதமாகவும் விபரமாகவு மெழுதி யிருக்கின்றோம்.

"நாழி வெடியுப்புகல்லோமது சுக்குமஞ்சள்" என இங்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நான்கு சரக்கினுள் (நாழி வெடியுப்பு) என்றதனால் வெடியுப்பு நாழியென ஏற்பட்டது. மற்ற மூன்று சரக்குகளின் எடையை எவ்விதமேற்படுத்த வேண்டியது? இச்செய்யுளின்படி, எல்லாச் சரக்குகளும் நாழி நாழியாக எடுத்துக் கொள்ள வேண்டியதா? அல்லது, வேறு அளவாக நிறுத்துக்கொள்ள வேண்டியதா? என்னும் விஷயம் அனுபவத்தாலேயே நிச்சயிக்கவேண்டி யிருக்கிறது. ஏனெனில், நான்கு சரக்கையும் மேற்கண்டபடி ஓரளவாக எடுத்துச் செந்தூரஞ் செய்வதால் பெரும்பாலுமது செந்தூரமாகாது. ஒருவேளை செந்தூரமானாலும் மேற்கண்ட குணங்களிரா; ஆகையால் இந்த விஷயமும் அனுபவசாலிகள் மூலமாகத் தெரிந்துகொள்ள வேண்டியதுதான் கடமை. இந்த விஷயமும் மேற்கண்டபடி மூன்று வகைகளில் ஒருவகையாக நிச்சயித்தே இங்கெழுதி யிருக்கின்றோம்.

"எங்காதே காயுருக்கு" என எழுதி யிருப்பதில் சாதாரணமானவர் கருகென ஏற்படுகிறது. செங்காயுருக்கில் சுத்தியென்பது அனுபவசாலிகளுக்கு நிச்

சயமாகத் தெரிந்த விஷயம். ஆகையால் அனுபவத்தினால் மற்றவர்களும் தெரிந்துகொள்ள வேண்டும். அல்லது அனுபவசாலிகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். இவ்வகையன்றி மறுவகையாகத் தெரிந்து கொள்வது அசாத்தியமான காரியம்.

ஒரு அவுடதத்தினால் குணமாகும் வியாதிகளில் சிலவற்றைமாத்திரம் குறிப்பா யெழுதுவது நூற்களின் முறைமை. அனுபவத்தில் அதிற் சொல்லப்படாத அநேகம் வியாதிகள் அனுபான பேதத்தால் தீர்ந்திருப்பதும் தீர்ந்து வருவதும் அனுபவ சாலிகளான ஒவ்வொருவருக்கும் மனப்பூர்வமாகத் தெரிந்தவிஷயம். ஒருமுறையே ஒருவருக்கு ஒருவிதமான அநுபவமாகவும், மற்றவருக்கு அதுவே வேறுவகை அனுபவமாகவுமிருந்துவருகிறது. ஆகையால், ஒருவர்மற்றொருவரைக் குறைகூறுவது யுக்தமாகாது. அவரவர்கள் தம்தம்முறையைச் சிலாகித்துப் பேசுவதும் மற்றவர்கள் முறையைத் தம்முறையைப்போலச் சிலாகித்துப் பேசாமல் மதிப்புக்குறைவா யெண்ணுவதும் உலக வழக்கம். ஆகையால் இன்ன மருந்தால் இன்னின்ன வியாதிகள் தீருமென்பதும் அநுபவத்தைச் சார்ந்ததே. இந்த விஷயமும் மேற்கண்ட ஆதாரங்களைக் கொண்டே எழுதப்பட்டிருக்கிறது.

நாம் கூடியவரையில் உலகத்தாருக்குப் பிரயோசனப் படும்படி ஜீவகாருண்யத்துடன் சர்வஜனோபகாரமாக மேற்கண்ட வகைகளாக நிச்சயப்படுத்தியே எழுதிவருகின்றோம். ஆகையால், நமது நண்பர்கள் அவ்விதக் குறைசொல்லாமல் சந்தோஷத்துடன் நாம்சொல்லி வருகிறபடி சற்றுக் கவனத்துடன் செய்வார்களாயின்



கடவுளினது கிருபையால்பெரும்பான்மையும் அங்ஙனஞ் சொல்லியிருக்கிறபடியே உண்மையான விஷயத்தை அனுபவத்தால் நிச்சயித்துக்கொள்ள ஏதுவாகும்.

## 24. அக்கினிகுமார செந்தூரம்.

சுத்திசெய்த அயஅரப்பொடி பலம்-க, சுத்திசெய்த காந்தம் பலம்-உ, சுத்திசெய்த இரசம் பலம்-ச, சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்-அ, சோற்றுக்கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- இரசத்தையுங்கெந்தகத்தையுங்கல்வத்திலிட்டு அரைத்து இரண்டும் செம்மையாகக் கறுத்த பின்பு தனியே யெடுத்துவைத்துக் கொள்ளவேண்டும். அயத்தையுங் காந்தத்தையுஞ் சேர்த்தரைத்து இரண்டுங் கூடினபின்பு முன்னெடுத்து வைத்திருக்கும் இரசகெந்தித் தூளையுஞ்சேர்த்துக் கொஞ்சநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு குமரிச்சாற்றைச்சிறுகச்சிறுகவார்த்துக் கைவிடாமலொருஜாமநேர மரைத்து வெண்கலப் பாத்திரத்திலப்பி நடும் வெயிலில்வைக்க, வெயிற்சூடுபட்டுப் புகைந்தெரியும். புகை யடங்கின பின்பு எடுத்து மறுபடியும் பொடித்துச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-க, உ, ங.

அனுபானம்:—தேன், நெய், வில்வாதிலேகியம், இஞ்சிச் சுரசம், இஞ்சிலேகியம் முதலியவைகளாம்; இன்னும் அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்த லேகியம், சூரணம், இன்னும் தகுந்த அனுபானங்களிலும் உபயோகிக்கக் கீழ்க்காணும் வியாதிகளும் இன்னும் பல வியாதிகளுந்தீரும்.

உபயோகம்:—குன்மரோகங்கள், மகோதரரோகங்கள், கலைக்கட்டி, வெள்ளைக்கட்டி, மூலரோகம், மூலமுளை, கிராணி, புளித்தேப்பம், அண்டவாதம், ஜன்னி முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—புளியை நீக்கிவைப்பது உத்தமம். கூடியவரையில் புளியைக் குறைவாகச்சேர்த்து வரவும்.

## 25. அயக்காந்தச் செந்தூரம்.

சுத்திசெய்த அயம் பலம்-௧, சுத்திசெய்த காந்தம் பலம்-௧, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் பலம்-௨, முலைப்பால் செல்லத்தக்க அளவு, கொடிப்பைச்சாறு, சிவகரந்தைச்சாறு, அல்லது, நாறுகரந்தைச்சாறு ஆகிய இரண்டும் சமனளவாகக் கலந்தசாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி இரண்டு சரக்குகளையுங் கல்வத்திலிட்டரைத்து இரண்டுந் தூளானபின்பு கெந்தகத்தைச் சேர்த்தரைத்து எல்லாமொன்றாக மிஸ்ரமானபின்பு, முலைப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குஜாம நேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடுமூடி, ௫-சீலைமண் செய்துலர்த்தி, ௫-பலமுள்ள, ௫0-வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுத்துக் கொள்ளவும்.

மேற்படி மருந்தையெடுத்து நிறுத்து அதற்கிரண்டுபங்கு கெந்தகத்தைச்சேர்த்துக் கொடிப்பைச்சாற்றையும் கரந்தைச் சாற்றையுங் கலந்த கலவையைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடு



மூடி ௫-சீலைமண் செய்துலர்த்தி ௫-பலமுள்ள ௫0-வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧.

அநுபானமும், உபயோகமும்:—மேற்சொல் சிவினா சுக்குச்சூரணம் விராகனெடை-௨, தேன் விராகனெடை-௧. இரண்டையு மிஸ்ரமித்து மேற்படி செந்தூரத்தைப் பிரமாணப்படி அநுபானித் துட்கொண்டுவர, கை கால் குடைச்சல், குன்மரோகங்கள், அதிசாரரோகம், சூலைரோகம், மேகரோகம், கழல்வாதம் ஆகியவைகள் தீரும்.

கையாந்தகரையிலை விராகனெடை-௨, மிளகு விராகனெடை-வ. இரண்டையும் வெண்ணெய்போலரைத்து மேற்படி செந்தூரத்தைப் பிரமாணப்படி அநுபானித் துட்கொண்டுவர, காமாலை ரோகங்கள், பித்தவெட்டை, பாண்டு, கால்வெடிப்பு, ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—பெண், புளி, புகை ஆகியவைகளை நீக்கவும். பாற்சாதம், பாற்பாயசம், பாற்கஞ்சி, ஆட்டிறைச்சிச் சூப்பு முதலியவைகளைச் சேர்த்துக்கொள்ளவும்.

## 26. மால்தேவிச் செந்தூரம்.

சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த ஜாதிலிங்கம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த அயமுரப்பொடி, சுத்திசெய்த நாகம், சுத்திசெய்த ரசம், இவை வகை-௧-க்கு விராக

னெடை-௧, கருவேப்பிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும், கெந்தகத்தையும் தொங்கித்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துக்கொள்ளவும்; மற்றச்சரக்குகளைத் தனித்தனிப் பொடித்துக்கொள்ளவும்; பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துப் பில்லைசெய்து வெயிலிலுலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடுமூடி. ௫-சீலைமண்செய்துலர்த்திச் செம்மையாயுலர்ந்தபின்பு ௫-பலமுள்ள ௫-வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧.

அநுபானம்:—வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்மம், சூலை, காசரோகங்கள், குஷ்டரோகங்கள், பித்தரோகங்கள், பித்தக் கிறுகிறுப்பு, கைகாலெரிவு, வாந்தி, விக்கல், ஜன்னி, சுரம், இளைப்பு, இசிவு, பக்கவாதம், பிரமேகம், வெட்டை, பிரமியம், குதகபந்தம் முதலியவைகள் தீரும். தாதுவிருத்தி, இந்திரிய விருத்தி ஆகியவைகளுமுண்டாகும்.

சுத்திசெய்த செம்பு வராகனெடை-௫, வெள்ளி வராகனெடை-௩, தங்கம் வராகனெடை-௧. இம்மூன்றையு முருக்கி உருக்குமுகத்தில் ஒரு வராகனெடை மேற்படி செந்தூரத்தைக் கொடுக்க, எழுமாற்றுள்ள வாதப்பொன்னாகும்.



## விண்ணப்பம்.

நண்பர்களே! இம்முறையில் கருவேப்பிலைச்சாற்றைச் சேர்க்கும்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கருவேப்பிலையானது சாறுவராத மூலிகைகளில் ஒன்றென்பது அநேகருக்குத் தெரிந்தவிஷயமாகையாலும், சாறுவராதமூலிகைகளில் சாறெடுக்கவேண்டுமானால் துருசுச்சுண்ணம்முதலியவைகளைச் சேர்த்து எடுக்கவேண்டிய தவசியமாகையாலும், அத்துருசுச் சுண்ண மெல்லோருக்குங் கிடைப்பது கூடாத காரியமாகையாலும், சாறுவராத மூலிகைகள், உலர்ந்த மூலிகைகள் முதலியவைகளின் சாறெடுக்கச் சுலபமான ஒருவகையை இங்கெழுதுகின்றோம். இந்தமுறைப்படி செய்து கொள்வதால் மூலிகையின் காரம், குணம், சுபாவம் முதலியவை கெட்டுப்போகாமல் பச்சை மூலிகையின் சாற்றால் எந்தக் குணமுண்டாகுமோ அந்தக்குணமே யுண்டாயிருக்கும். இப்பாகமானது அநுபோகப்படியும் சாஸ்திரப்படியும், நிச்சயிக்கப்பட்டது. இன்னும் இம்முறையானது இரசவாதிகளான முன்னோர்களால் பூர்வகாலந் தொடுத்துக் கையாண்டு வரப்படுகிறது. ஆனால், நம்மவர்களுள்இது அநேகருக்குத் தெரியாதபடியாலும், இவ்விடங்களில் அதிகங் கையாடப்படா திருக்கிறதினாலும் அநேகருக்கு இதில் அநுபவமில்லையெனச் சொல்லலாம். ஆகையால், இதன் வகைகளை விபரமாக எல்லோருக்குந் தெரியும்படியாகவும், எல்லோருக்கும் பிரயோசனப்படும்படியாகவும் கூடியவரையில் தெளிவாக எழுதுவாம்.

## சாறுவரா மூலிகைகள், உலர்ந்த மூலிகைகள் ஆகியவைகளின் சத்தெடுக்கும் வகை.

தாழ்ந்த லோகத்தை உயர்ந்த உலோகமாக மாற்றப்பட்ட சஞ்சீவியான மூலிகைகளுள் பெரும்பான்மையானவைகள் சாறுவரா மூலிகைகள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அவ்வித மூலிகையின் சாறெடுக்கும்போது நேரிடும் கஷ்டங்களால், சில சமயங்களில் நமது வைத்தியத்தைக் கைசோர விடும்படி நேரிடுகிறது. ஆகையால், இந்த முறையை பூர்வீக சாஸ்திரிகள் கண்டுபிடித்து இதைத் தாங்கள் உபயோகித்துவந்த போதிலும் இந்தவகை தெரிந்த ஒவ்வொருவரும் பரமரகசியமாக வைத்து வந்தார்கள். ஆரம்பத்தில் இந்த முறையானது இரசவாதத் தொழிலுக்கு அவசியமான சத்தெடுப்பதற்கு மாத்திரம் உதவியான தென உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஏனெனில், வருணத்தையுண்டாக்குகிற மூலிகைகளில் தாம்பிர முதலிய உலோகங்களின் சம்பந்தமிருக்கிறதெனத் தற்கால ரசாயன சாஸ்திரமூலமாகவும், அது நிமித்தமாகவே வர்ணமுண்டாகிறதெனவும், நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இவ்வகை மூலிகைகளை வாலையிலிட்டுத் திராவகம் இறக்கினால், அதிலுள்ள உலோக சத்துக்கள் தம் சுபாவ குணத்தினால் வாலையின் அடியில் தங்கிப்போய் அதன் ஆவிமாத்திரம் மேலுக்கெழும்பிப் பிறகு நீராகமாறி அதன் சத்துமாத்திரம் வெளியாகிவிடுமென்பதே.

ஆனால், (தஜர்றபாதே குஷ்ஹாலி) முதலிய இரசவாத கிரந்த கர்த்தாக்கள் உலர்ந்த மூலிகைகளை, அல்லது, சாறுவராத மூலிகைகளைக் கீழ்க்காணும் விதமா



கத்திராவகமிறக்கிச் சஞ்சீவிகளை (இரசவாத மருந்துகளைச்) செய்யும்படி தம்தம் கிரந்தங்களில் எழுதியிருக்கின்றார்கள். இன்னும் தாம் தாமும் அவ்விதமே செய்து சித்திபெற்றிருப்பதாகவு மெழுதியிருக்கின்றார்கள். இன்னும் சமீப காலத்திலுண்டான இரசவாதிகளும் எந்த மூலிகைச்சாற்றால் இரசவாத முறைகளைச் செய்து சித்திபெற்றிருக்கின்றார்களோ அந்தமூலிகைகளையே கீழ்க்காணு முறைப்படி திராவகமிறக்கி அதனால் மேற்படி ஔஷதங்களைச்செய்தும் சித்திபெற்றதாக வெழுதியிருக்கின்றார்கள். இந்த வகைக்கு அரபி பாஷையில் ஹம்மா மே மாரியா என்றுபேர். எவ்வித உலர்ந்த மூலிகையாயினும்கீழ்க்காணும் விதமாகச் செய்தால் சுத்தமான சத்தாக இறங்கும். அதுபால்போன்ற வெண்ணிறமான திரவமாயிருக்கும். குணத்தில் விகற்பப்படுகிறதில்லை.

## ஹம்மா மே மாரியா வென்னும் திராவகவாலை.

இது சாதாரண திராவகவாலையை அல்லது யந்திரத்தைப் போன்றது. (இதன் அதிக விபரத்தைப் பற்றி நமது யூனானி வைத்திய தாதுவிருத்தி போதினி 2-ம் பாகம் 665-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)

1 - 2 - 3-இந்த நம்பர்களடங்கினது வாலையின் பட்டி, அல்லது, வாலையின்மேல்மூடி என்று பேர்பெறும்.

இது வெள்ளி, துத்தநாகம், தகரம், மண் ஆகிய இவற்றால் செய்யப்படும்.

4. இந்த நம்பருடையது கீழ்ப்பாண்டம். இதன் விலாவில் ஏற்றிடப்பட்டிருப்பது அதன் உள்மத்தியில் வைக்கப்பட் டிருக்கும் தடையின் அறிகுறியாம்.

இத்தடையானது தாம்பிரத் தகட்டினாலிருப்பது உத்தமம். ஆனால் துத்தநாகம், தகரம் முதலியவைகளினாலும் வைத்துக்கொள்ளலாம். இத்தகட்டின் கீழ்ப்புறத்திலே ஜலமும் அதன் மேற்புறத்திலே சாறெடுக்க வேண்டிய மூலிகையு மிருக்கவேண்டியது.

இத்தடையின் சமீபத்தில் ஒரு குழாயொன்று வைக்கப்பட்டிருக்கின்றது. இதன் மூலமாக வாலைக்குள் ஜலத்தைவிடவும் திராவக மிறக்கும்போது தண்ணீ ராவி வெளியே செல்லவும் ஏதுவாகும்.


இந்தப்பாத்திரமும் மண், தகரம் முதலியவற்றாற் செய்யப்படும்.

1-பட்டி அல்லது மூடியின் வாய்; 2-திராவகம்வடியுங்குழாய்; 3. மேல்மூடியினின்று ஜலம் வடியுங்குழாய். 5. கீழ்ப்பாண்டத்தில் ஜலம் கிடக்கவேண்டிய இடம். இதற்கு ஜலத்தை இந்தப் பாண்டத்திலுள்ள தடைக்குச் சமீபத்தில் வைத்திருக்கும் குழாய் மூலமாக விடவேண்டும். மேலும் இதில் ஜலம் அரைப்பாகத்திற் கதிகமாக விடலாகாது.

A. மேல்மூடியுங் கீழ்ப்பாண்டமும் தனித்தனியாயிருக்கும் பாவனை.

B. கீழ்ப்பாண்டமும் மூடியும் பொருந்தியிருக்கும் பாவனை.






மேற்படி யந்திரத்தில் திராவகமிறக்கும் முறை.

4. நெம்பருள்ள கீழ்ப்பாண்டத்தின் மேற்புறத்தில் சாறெடுக்கவேண்டிய மூலிகைகளை வைக்கவேண்டும். அது அந்தப்பாகத்தில் அரைவாசிக்கதிக மிருக்கலாகாது. இப்பாண்டத்திலுள்ள குழாயின் மூலமாக ஜலத்தைவிடவேண்டும். இந்த ஜலம் அந்தப்பாகத்தில் அரைவாசிக்கதிக மிருக்கலாகாது.

பிறகு 1-2-3, நம்பருள்ள பட்டியை அல்லது மேல்மூடியை வைத்தழுத்திச் சந்தில்லாமல் கோதுமை மா, உளுந்துமா, களிமண் ஆகியவைகளி லொன்றைச் சேலைத்துண்டில் தடவிச் சந்துபந்தனஞ்செய்து அடுப் பேற்றி, 3. நம்பருள்ளகுழாயின் அடிப்புறத்தில், அல்லது நுனிப்புறத்தில் கெட்டித்துண்டை, அல்லது, துணியை யிட்டடைத்து மேல்மூடியிலுஞ் சுத்த ஜலம் வார்த்து மெதுவா யெரிக்கவேண்டும்.

நெ. 2-ல் உள்ள குழாயிலிருந்து வடியுந் திராவகம் விழும்படி ஒரு பாத்திரத்தை அதன் வாய்க்கு

நேரே வைக்கவேண்டும். அப்பாத்திரம் மூடப்பட்டு
அதன் மேல் மூடியில் இரண்டொரு துவாரமுள்ளதா
க விருப்பது உத்தமம்.

1 ம் செம்பரில் வார்த்த ஜலம் சூடாகிவிட்டால்
3 ல்வைத்திருக்கிற கெட்டியை, அல்லது, துணியை
யெடுக்க அந்தஜலம் உடனே வெளிப்பட்டுப்போம். மு
ன்போல் துவாரத்தை யடைத்து வேறு சுத்தஜலம்
விடவேண்டும். இப்படிச் சூடுகாணும் போதெல்லாம்
மேற்கண்டபடி ஜலத்தை மாற்றி மாற்றிக் கொண்டிரு
க்கவேண்டும். இவ்விதஞ் செய்வதால் ஜலத்திலாவியெ
ழும்பித் தகட்டிற்குத்தாவும். அந்த ஆவிச் சூட்டினால்
மூலிகைவெந்து அதிலிருந்து ஆவியுண்டாகி மேலே
செ. குழாய் மூலம் ஜலமாகவடியும். இவ்விதம் அங்
குள்ள மூலிகையானது கருகிப்போகாமலும் தண்ணீ
ர் கலப்பில்லாமலும் திராவகமிறக்கும். இவ்விதம் உல
ர்ந்த, அல்லது, சாறுவராத மூலிகையிலிருந்து திரா
வகமெடுத்து அதன் சாற்றைப்போல உபயோகிக்க
லாம்.

இவ்விதமே மேற்படி கருவேப்பிலையைத் திராவ
கமிறக்கி உபயோகிப்பது உத்தமமும் சிரேஷ்டமுமான
முறையாம்.

இந்த மூலிகையை எரித்துச் சாம்பலாக்கி உப்பெ
டுத்து அந்தமூலிகையை யிடித்துச் சேர்த்து ஒருநாள்
வைத்திருந்து மறுநாள் பிழிய ஜலமாகும். அந்த ஜலத்
தையும் உபயோகித்துச் செய்யலாம்.



இந்த இலையைப் பிட்டவிப்பதுபோலவித்துப் பி
ழிந்து சாறெடுக்கலாம்.

ஆனல் இந்த வகைகளிலெல்லாம் முதற்சொன்
ன முறைதான் சாஸ்திர யுக்தமானதும் அனுபவமான
துமான முறை. மற்றிரண்டு முறைகளும் முறையே
ஒன்றற்கொன்று தாழ்ந்தவையாம். ஆகையால், அவ
ரவர்கள் சாமர்த்தியம், ஊக்கம், புத்திநுண்மையாகிய
வைகட்குத் தக்கபடி தங்களுக்கிஷ்டமான விதமாகவு
ம் வேறு விதமாகவுஞ் செய்து சித்திபெறலாம்.

## குறிப்பு.

இந்த நூலிலுள்ள சில சரக்குகளுக்குச் சுத்தியா
வசியகம். ஆகையால், இங்குச் சொல்லப்படாத சுத்தி
முறைகளைப் பின்வரும் மேற்படியார் குணவாகடத்திற்
காணலாம். அவசியமானவர்கள் அதன்படி சரக்குகளை
ச் சுத்திசெய்து சேர்த்துக்கொள்ளவும்.

இராஜரிஷி
வீரமாமுனி மாகனுபாவர் அருளிச்செய்த
நசகாண்டத் தெளிபொருள் விளக்க வுரை
முற்றுப் பெற்றது.

கடவுள் துணை.

இராஜரிஷி

வீரமாமுனி மகானுபாவர்

அருளிச் செய்த

# நவரத்தினச் சுருக்கமாலை.

காப்பு.

சீரான பிதாச்சுதனை பிரித்து சாந்து
திருத்துவனும் ஏகபரன் பாதம் போற்றி
போரான கன்னிமரி திருந்தாள் போற்றி
பேரின்ப மந்திரிமிக்கேல் பாதம் போற்றி
சேரான மோக்ஷத்தார் திருத்தாள் போற்றி
நிறைந்திலங்கும் கவிலாச சபைதாள் போற்றி
கூரான நவரத்தினச் சுருக்கந் தன்னைக்
கூறுதற்குத் திருச்சிறுவை காப்புங்கேளே. (க)

நூல்.

நவச்சாரக் கட்டு.

கேளப்பா வொருபலமாஞ் சீனக் காரங்
கெடியான சாக்குருக்கும் பொரிக்காரந்தான்
ஆளப்பா மதமடக்கி நீரில் நேரா
யரைத்து நன்று வொருபலமாம் நவச்சாரத்தில்
நீளப்பா பொதிந்து சித்திர மூலமாட்டி
நிலைமேலும் பொதிந்தைந்து சீலை செய்து
நாளப்பா கோழிபுடம் போடக் கட்டும்
நவச்சாரக் கட்டிலே பலங்கால் வாங்கே. (உ)



நவச்சார மெழுக்கு.

வாங்கியே வெடியுப்பு பலந்தா னொன்று
வளமான பழுப்பெருக்கின் சாற்று லாட்டித்
தாங்கியே ரவிமுன்னே புலரக் காட்டிச்
சட்டிக்குள் கோழிக்காரம் பரப்பித் தூளாய்
ஓங்கியே யதினடுவே கவசம் வைத்து
உத்தமனே சிறுதீயா லெரிக்க மேலும்
தூங்கியே போகாமற் கோழிக் காரஞ்
சுகமான பொடிபோட மெழுகு மாமே. (ங)

ஆமப்பா கட்டினதோர் நவச்சாரந்தான்
அருமையிது கைகண்ட கட்டதாகும்
ஆமப்பா வொருகாலுங் கசிந்தி டாதே
யக்கினியிற் புடம்போட வுருகும் நின்று
ஆமப்பா அநேகவிதங் கட்டு முன்னை
யவனிதனிற் சொக்கமோர் பலத்துக்கேதான்
ஆமப்பா மஞ்சாடி மெழுகு நீட்ட
வைவிரண்டு வராகனடோ மமர்ந்திங் காடே. (

கேந்தகத் தைலம்.

ஆடப்பா பத்திரசம் விராகனுக
மானதோர் கெந்தகமுஞ் சரியாயாட்டி
நீடப்பா மண்டேகம் வாயில் ரண்டு
நிறையாக வேசெலுத்தி யிருவாய் தைத்து
நாடப்பா கயிறுகோத் துலர்த்தி நன்றாய்
நலமான குழிப்புடத்திற் றயிலம் வாங்கிப்
போடப்பா சுத்திசெய்த தாம்பிர மெட்டிப்
புகழான சொக்கம் ரெண்டிங் கூட்டிக்காய்ச்சே.

காய்ச்சப்பா வுருக்குமுகந் தனை யறிந்து
கைகண்ட தைலமிற் றவிதான் குத்து
போச்சப்பா பீடையென்ற தெல்லா மிப்போ
பொய்யல்ல மெய்யிது தான் புகலக் கேளு
நீச்சப்பா சித்தர்சொன்ன சுற்று மெந்த
நினைவாகச் செய்பாகங் கைபாகஞ் செய்
ஆச்சப்பா விள்ளாதே வயதெட் டாரு
மருமையா யித்தொழில்தா னருமை சாற்றே. (௬)

### பாஷாண மெழுக்கு.

சாற்றரிய பாஷாணக் கட்டி யொன்று
தான்வாங்கிப் பிங்கானில் முலைப்பால் விட்டுப்
போற்றரிய பொரிக்காரம் விராக னொன்று
பொடித்திட்டு வெண்கட்டி ரவியில் வைக்க
மாற்றரிய பால்குடிக்கும் புரட்டி நன்றாய்
மைந்தனே யுலர்ந்தபின்பு வாங்கிக் கொண்டு
ஆற்றரிய விலாங்குமீன் பிடித்து வந்தே
யதின்வாயிற் பாஷாணம் போட்டுத் தையே (௭)

தைத்தபின் புப்பிடித்துச் சட்டி தன்னிற்
சரியாக வரையிட்டே யதின்மேற் பின்றான்
வைத்ததின்மே லுப்பிட்டுச் சட்டி மூடி
வாய்சந்துச் சீலைமண்செய் தடுப்பி லேற்றி
நைத்துக்கம லாக்கினியாய் ரெண்டு சாமம்
நன்றாக வெரித்துப்பின் பிறகு வாங்கிப்
பைத்திருப்புக் காண்டிதனிற் பலந்தா ளிட்டுப்
பன்றியினெய்யரைப்படிதான் சுருக்குக்கூட்டே.



கூட்டியே வங்கபற்பங் கழஞ்சி யொன்று
குணமாகக் கட்டினபா ஷாண மொன்று
ஆட்டியே சுண்ணும்பு ஜலத்தை விட்டே
யள்ளியொரு கழஞ்சிவெள் வங்கக் காய்ச்சி
நீட்டியே யுருக்குமுகத் திடவும் வாங்கும்
நேர்துருத்தி கொளம்பே நாலு நாழி
வாட்டியே யெடுத்திதற்குச் சரி ரசத்தை
வளமான மேய்படி நீர் வார்த் தரைப்பாய். (௮)

அரைத்துவில்லை பிடித்துலர்த்தி யோட்டில் வைத்தே
யதன்மேலுஞ் சில்மூடிச் சீலை செய்து
மறைத்துநன்றாய்க் காடையென்ற புடமே போட்டு
வாகாக வெடுத்திடவு மெழுக தாகும்
உரைத்த செம்பு சுத்திசெய்து நாற்கழஞ்சு
முத்தமனே மஞ்சாடி யுருகும் போது
கரைத்திடுவாய் பத்தரையாம் வயதாம் பாரு
காசினியி னவர்க்கினா நூல்தான் முற்றே. (௧௦)

இராஜரிஷி
வீரமாமுனி மகானுபாவர் அருளிச்செய்த
நவரத்தினச் சுருக்கமாலை
முற்றுப் பெற்றது.

கடவுள் துணை.

# நவரத்தினச் சுருக்கமாலை.

## தெளிபொருள் விளக்கம்.

சகோதரர்களே! மேற்படி நாமம்பூண்ட உரையை இதனுடனெழுத நேரிட்டகாரணம் கீழ்க்காணும் விஷயங்களால் தெள்ளிதாய் விளங்கும்.

நவரத்தினமாலைச் சுருக்கமென்னும் இந்தப் பத்துச் செய்யுட்களும் யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளும்படி மிகவும் இலகுவான தமிழ்ச் செய்யுட்களினால் அமையப்பெற்றிருப்பினும் அதில் அநேக விஷயங்கள் ஆழ்ந்து கிடப்பதனால் அநுபவசாலிகளும் ஒருவர்மூலங் கேட்டுத்தெரிந்து கொள்ளாமல் அறிந்து கொள்வது அசாத்தியமான விஷயம். ஆகையால், அந்தச் செய்யுட்களை மாத்திரம் அச்சிட்டு வெளிப்படுத்துவதினால் பெரும்பாலார்க்கு அதிகப் பிரயோசனமற்றதாகவே யிருக்கும். நம்மால் வெளிப் படுத்தப்படும் ஒவ்வொரு கிரந்தத்தையும் கைக்கொண்டு நம்மைப்பல விதத்தினாலும் ஆதரித்தும், ஊக்கப்படுத்தியும், உற்சாகப்படுத்தியும் வரும் ஒவ்வொருவருக்கும் இந்த நூலும் பிரயோசனப் படுமென்பது நமது கருத்து. இதிற் சொல்லப்பட்டிருக்கிற முறைகள் இரசவாதத்திற்குப் பெரும்பான்மையும் உபயோகப்படுவதாயினும் கஷ்டமான அநேக வியாதிகளில் உபயோகித்துச் சிறந்த குணங்கண்டிருப்பதாலும் இவ்வித ஔஷதங்



களும் வைத்தியமுறைகளிற் பிரியமுள்ள ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கவேண்டியது அவசியமாகையாலும் இக்கிரந்தமும் கூடியவரையில் தெளிவாய் இருக்கவேண்டியதாவசியகம்.

இன்னன பலவகைக் காரணங்களினால் இதிற் சொல்லப்பட்ட பலமுறைகளை நமது ஆசான் முதலியவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டபடியும், அநுபவத்தின்படியும் இங்கு அவசியமாய் வேண்டிய சுத்திகள், பாகங்கள் முதலியவைகள் விபரமாகவும், தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்நூலும் யாவருக்கும் பிரயோஜனப்படுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அடியேனுக்குத் தெரிந்தவரையில் இதிலுள்ள மர்மங்களையும், இரகசியங்களையும் லோகோபகாரமாக எழுதியிருக்கின்றேன். ஆகையால், இதைத்தவிர வேறுபாயங்கள் தெரிந்த கனவான்கள் ஜீவகாருண்யத்துடன் வெளிப்படுத்த முன்வருவார்களாயின் உலகத்தார் இன்னும் அதிகப் பிரயோசனமடைவார்களென்பது திண்ணம். அதனால் அப்புண்ணியவான்களுக்கு இகபரமாகிய இரண்டிலும் பேரும், புகழும், கீர்த்தியுமுண்டாகுமென்பது ஒருவரும் மறுக்கக்கூடாத விஷயம்.

ஆகையால் சுதேசாபிமானமுள்ள கனவான்களும் மற்றவர்களும் அடியேனியற்றப்பட்டவைகளும், வெளிப்படுத்தப்பட்டவைகளுமான பல கிரந்தங்களையும் அங்கீகரித்து அடியேனைப் பலவிதத்திலும் உற்சாகப்படுத்தி ஊக்கமுண்டாக்கி வருவதுபோல இந்த நூலையும், இனி அச்சிடப்படும் நூற்களையும் அங்கீகரித்து ம-

ஆதரித்து வரும்படியாய் மிகவும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இன்னும் இதில் ஏதேனும் செய்பாக முதலியவைகளில் பேதமிருந்து அவை தெரிந்த கனவான்கள் அடியேனுக்குத் தெரியப்படுத்தினால் அவர்களுக்கு அடியேன் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருப்பதுடன் அவர்களுடைய அபிப்பிராயமானது சாஸ்திரம், அநுபவம் ஆகியவைகளுக்கு ஒத்ததாயிருக்கும் பக்ஷத்தில் அவர்கள் நாமத்துடன் இதன் மறுபதிப்பில் அல்லது தனியே வெளிப்படுத்தச் சித்தமா யிருக்கின்றேன்.

நவச்சாரக் கட்டு.

இந்த முறையை யெழுதுமுன் இதற்கவசியமான வேறுசில சுத்திமுறைகளையும், வேறு முறையையும் எழுதவேண்டியது அவசியகமாயிருக்கிறது. ஆகையால் அவற்றை முன்னரெழுதி இச்சாரக்கட்டின் முறையைப் பின்னரெழுதுவாம்.

வெடியுப்புக் கட்டு.

நாவாங்காய்ச்சல் கம்பிவெடியுப்பு வீசை-க, இதனையிடித்துத் தூள்செய்துகொள்ளவேண்டும். வாழைமரத்தின் அடிக்கட்டையையிடித்துப் பிழிந்தசாறு படி-௪. இவ்விரண்டையும் ஒருஜாடியிற்போட்டுக் கரைத்து உ-நாள் வைத்துத் தெளிவிறுத்துத்தெளிவைக்காய்ச்சிக் குழம்பானபதத்தில் இறக்கிச் சற்று ஆறவைத்து க-க உ-பலம் எலுமிச்சம்பழச்சாற்றுவிளையிடவேண்டும். அதாவது முன் குழம்பில் எலுமிச்சம் பழச்சாற்றைக் கொஞ்சம் விட்டு மூடி அசையாமல் அப்ப



டியே வைத்துவிடவேண்டும். மறுநாளெடுத்தால் உப்பு கட்டியிருக்கும். இந்த உப்பைப் பொடித்து இது கண்ட எடைக்கு மேற்சொன்ன பிரமாணப்படி முன்சொன்ன சாற்றைச் சேர்த்துக் கரைத்து இரண்டு நாள் வைத்துத் தெளிவிறுத்து முன்போலவே காய்ச்சிக் குழம்புப்பதத்தில் முன்போலவே எலுமிச்சம்பழச்சாற்றைப் பிரைக்குத்தி வைத்து உப்பையெடுத்து முன்போலவே பாகப்படுத்த வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மேற்கண்டபடி-உக-தடவைகள் காய்ச்சிச் செய்யின் வெடியுப்பானது கட்டுப்பட்டுப்போம். நெருப்பிலிட்டால் புகைந்தோடாது.

மதமடக்கி நீர்.

மேற்கண்டபடி சுத்திசெய்யப்பட்ட வெடியுப்பு பலம்-க0, கோதுகொட்டை முதலியவைநீக்கிச் சுத்தி செய்யப்பட்ட புளி பலம்-க0, இவ்விரண்டையுஞ் சேர்த்து மாஉரலிலிட்டு இடித்து மைபோலான பின்பு சிறு பில்லைகளாகச் செய்து அடுப்பில் இரும்புச் சட்டியை யேற்றி அதில் நவ்வாறு பில்லைகளாக வைக்க அவை ஒருவிதச் சீறலுடன் எரிந்து சாம்பலாகிவிடும். இவ்விதம் எல்லா பில்லைகளையும் வைத்தெரித்துப் பக்குவத்துடன் சாம்பலாக்கிக் கொள்ளவேண்டும். இதற்கு வெடியுப்புச் சுண்ணமெனவும் பேர்.

பின்பு பாகப்படுத்தின் வெண்காரம், படிக்காரச் சுண்ணம், பதங்கித்த நவச்சாரம், இவை நான்கும் வகை-க-க்குப் பலம்-க. இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டரைத்துப்பின்பு முன்சொன்ன சுண்ணத்தையுஞ் சேர்த்து இரண்டு ஜாம

செயநீரைத் தைப் பனியில்வைத்துக் கசியக் கசிந்த நீரெல்லாவற்றையு மொன்றாகச்சேர்த்து, சீஷாவிற் பத்திரப்படுத்தவும். (இவ்விதம் வைத்தசாரமெல்லாம் ஜலமாகிறவரையில் பனியில்வைத்து ஜலமாக்கிக்கொள்ளவேண்டும். அல்லது, செயநீர்க்குகையில் வைத்துநீராக்கிக்கொள்ள வேண்டும்.) இதற்கு வெடியுப்புஜெயநீரென்றும் மறுபேருண்டு. இந்தஜெயநீர்தான் மேற்படி நவச்சாரக்கட்டிற்கு அவசியமானது.

## வெண்கார பாகம்.

தேவையான வெண்காரத்தைக் கல்வத்தி லிட்டுப் பொடித்து வாழைக்கட்டைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு ஜாமநேரமரைத்து ஒரே பில்லையாகச் செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஏழுபங்கெடை வறட்டியிற் புட மிட்டெடுத்துக் கொள்ளவும். இதுவே வெண்காரத்தின் பக்குவமாம். இவ்விதம் பக்குவப்படுத்தின வெண்காரத்தை மேற்கண்ட பாகத்தில் மேற்கண்ட எடைசேர்த்துக் கொள்ளவும்.

## படிக்காரச் சுண்ணம்.

ஒரே கட்டியாயுள்ள படிக்காரம் பலம்-௫௦, அல்லது, ௱௦. இது எடை எவ்வள விருந்தபோதிலும் ஒரேகட்டியாய் மாத்திரம் இருக்கவேண்டியது. இக்கட்டியைத் தரையின்மீது வைத்து அதைச் சுற்றிலும் அரையடிக்கப்பால் செங்கற்களை, அல்லது மண்ணைத் தடையாகச்செய்து இந்தத்தடையின் ஒருபக்கத்தில் இரண்டு பெரிய துருத்திகளைவைத்துப் படிக்காரத்தின்மீது அது மறையும்படியாக காட்டுக்கரியைப்போட்டு அதில் நெருப்பைப்போட்டு ஊத ஆரம்பிக்கவே



ண்டும். போட்டகரி பற்றி யெரிந்துவிட்டால் மேன்மேலும் கரியைப்போட்டும் வரவேண்டும். இவ்விதம் ஆள் மாற்றி மாற்றிக் கைவிடாமல் நான்குஜாமம் ஊதவேண்டும். அடிக்கடி கரியையும் போட்டுவரவேண்டும். இதற்காக, ௪-அல்லது, [illegible] மணங்கு கரிசெல்லும். கருமார், கன்னார் இவர்கள் ஊதுகிறதுக்குவம் முதலியவைகளில் அநுபவப் பட்டவர்களாகையால் அவர்களில் சற்று புத்திக்கூர்மை யுள்ளவர்களை இதற்கு உதவியாக வைத்துக்கொண்டால் வெகுசுலபமாகவும் சீக்கிரமாகவும் வேலை நிறைவேறிப்போம். ஊதினது ஏறவேறப்படிக்காரமானது உருகியுருகிப் பொங்கிச் சுக்கானைப்போலாகிக் காரமுண்டாகிவரும். இந்தக் காரமானது ஊதவூதக் கிரமேணுயரப் அதிகரித்து வந்து முடிவில் ஆள் சமீபத்தில் நெருங்கக் கஷ்டமாகவுமிருக்கும். மேற்கண்ட பக்குவமாக, நான்குசாமம் ஊதி அப்படியே ஆறவிட்டு மறுநாள் எடுத்தால் கட்டியானது நுரைகிச் சுக்கானைப்போலிருக்கும். அதைப் பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும். இம்முறைகளிது மிகவும் சுலபமானதும் பலதடவை அநுபவப்பட்டதுமாகையால் அதிக சிரேஷ்டமான தென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இரசவாதத் தொழிலில் வெகுநாள் பண்பட்ட அநுபவசாலிகள் இதன் மார்க்கத்தைத் தெரிந்துகொள்வார்கள்; அநுபவ மில்லாதவர்கள் சற்று மயங்குவார்கள். ஆயினும் அவர்களும் நாம் முன் வற்புறுத்தி யிருக்கிறதுபோல விடாமுயற்சியுடன் அடுத்தடுத்து இரண்டொரு தடவைகள் செய்யின் இப்பாகத்தின் நுட்பத்தை யறிந்து தவறுமற் செய்து கொள்ளக்கூடும்.

மேற்கண்ட பாகப்படி செய்து முடித்ததற்குப் படிக்காரச் சுண்ணம் எனப்பெயர். இன்னம் இதற்குச் சினகுரு என்றும் ஒருபெயருண்டு.

## நவச்சாரப் பதங்கம்.

காட்டு நவச்சாரம், அல்லது, சீனை நவச்சாரம் பலம்-உ0, வாழைக்கிழங்குச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—நவச்சாரத்தை உரலில் போட்டிடித்துத் தூளாக்கிக் கல்வத்திலிட்டு வாழைக்கிழங்குச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்து வெயிலில்வைத்துலர்த்தித் தூளாக்கிப் பதங்கப் பாத்திரத்திலிட்டுப் பாகப்படி பதங்கித்துக்கொள்ளவேண்டும். (பதங்கப் பாத்திரமுதலிய விபரங்களை நமது இரசவாத சிந்தாமணியிற் காணலாம்.)

பிறகு அதனையெடுத்துக் கல்வத்திலிட்டு முன்போல் வாழைக்கிழங்குச் சாற்றைவார்த்து இரண்டுசாமநேரமரைத்து முன்போலுலர்த்தி முன்போற் பதங்கப்பாத்திரத்திற்போட்டுப் பாகப்படி பதங்கித்துக் கொள்ள வேண்டும்.

இவ்விதமே மடக்கிமடக்கி இரண்டிரண்டு சாமம் மேற்படி சாற்றையே வார்த்துப் பதங்கித்தெடுத்துக் கொள்ளவேண்டும். இதுவே நவச்சாரப் பதங்கமாம். இந்த முறைப்படி பதங்கித்து மேற்கண்ட ஜெயநீரைச் சேர்த்துச்செய்வது அனுபவசித்தி பெற்றவர்களின் அனுமதி.



## 27. நவச்சாரக்கட்டு முறை.

நவச்சாரம் பலம்-க. இது ஒரே கட்டியாயும், கரடுமுரடாயில்லாமல் எங்கும் சமமாகவு மிருக்கவேண்டும். முன் சொல்லியிருக்கிறபடி சித்தப்படுத்தின சினச்சுண்ணம் பலம்-க, முன் சொல்லியிருக்கிறபடி பாகப்படுத்தின வெண்காரம் பலம்-க. இவ்விரண்டையுங் கல்வத்தில் பொடித்து முன் சித்தப்படுத்தி யிருக்கிற மதமடக்கி நீரென்னும் வெடியுப்பு ஜெயநீரைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்து நவச்சாரக்கட்டியின்மீது எங்கும் சமமாயிருக்கும்படி உலர உலரப்பூசி முடிவாக நன்றாயுலர்த்தி ரு-பலம் சித்திரமூல வேர்ப்பட்டையை அம்மியில் வைத்து மேற்படி ஜெயநீரைக் கொஞ்சம் வார்த்து வெண்ணெய்போலரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற நவச்சாரக்கட்டிக்குக் கவசஞ்செய்து அதன்மீது ரு-சீலைமண்செய்து கொஞ்சம் ஈரமுலர்த்தி கூ-பலம் காட்டு வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கத் தந்தம்போலிறுகிக் கட்டியிருக்கும். இவ்விதஞ்செய்த நவச்சாரந்தான் பல முறைகளிலும் குருவாக உபயோகப் படுத்தப்பட்டுவருகிறது. இதுதான் பெரும்பான்மையும் இரசவாதமுறைகளில் உபயோகிக்கத் தகுந்தது. இது பார்வைக்குப்பெரிய பாகமாய்த் தோற்றினபோதிலும் முயற்சியுள்ளவர்களுக்கு இது இலகுவானது. கஷ்டத்திற்குத் தகுந்தகூலி யென்பதுபோல இவ்விதஞ்செய்த முறைக்குத் தகுந்த பிரயோஜன முண்டாமென்பதற் காக்ஷேபனையில்லை. இவ்விதஞ் செய்துகொள்ள வலாதவர்களுக்கும் உபயோகமாகும்படி வேறொரு பாகத்தையு மிங்கெழுதுவோம்.

## நவச்சாரக்கட்டு வேறு.

நாலாங்காய்ச்சல் வெடியுப்பு பலம்-௨௦, கோது கொட்டை முதலியவைகள் நீக்கப்பட்ட பழம்புளி பலம்-௨௦. இரண்டையுஞ் சேர்த்து மைபோல் உரலிலிடித்துச் சிறு பில்லைகளாகச்செய்து வைத்துக்கொள்ளவும். பிறகு இரும்புச்சட்டியை அடுப்பில்வைத்து இரண்டு மூன்று பில்லைகளாகப் போட்டு மெதுவாயெரிக்க ஒருவிதச் சீறலுடன் எரிந்து பற்பமாய்விடும். இவ்விதம் எல்லா பில்லைகளையும் எரித்துச் சாம்பலாக்கிப் பனியில்வைத்து அல்லது பனியில்லாத காலங்களில் ஜெயநீர்க் குகையில்வைத்து ஜெயநீராக்கிக் கொள்ளவும். இதற்கு இலகு மதமடக்கி நீரென்று பேர்.

நவச்சாரம் பலம்-௧, இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும். பொரித்த சீனக்காரத்தூள் பலம்-௧, வெண்காரத்தூள் பலம்-௧. இரண்டையுங் கல்வத்திலிட்டு மேற்படி இலகு மதமடக்கி நீரைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து மேற்படி நவச்சாரத்திற்கு உலர உலரக் கவசஞ்செய்துலர்த்தி இரண்டரைப்பலம் சித்திரமூல வேர்ப்பட்டையையும் இரண்டரைப்பலம் பூநீறையுஞ் சேர்த்து மேற்படி ஜெயநீரைவிட்டு மைபோலரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் சாரத்துக்கு எங்குஞ் சமமாகக் கவசஞ்செய்து அதன்மீது ௫.சீலைமண்செய்து கொஞ்சம் சாமுலர்த்தி ௧௫-பலம் வறட்டியைப்பொடித்து அடுக்கிக்கொளுத்திப் புகையடங்கின பின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற கவசத்தைப் புடத்தின் மத்தியில் வைத்து நாலுபக்கமும் ௫.சமமாக இருக்கும்படியாக வைத்துக் குளிர ஆறினபின் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதப் புடத்திற்கு அலிபுடமென்று பேர். பின்பு கவசத்தைப் பிரித்தெடுத்து முன்போல் பொரித்த படிக்காரத்தையும், வெண்காரத்தையும் முன்ஜெயநீர்விட்டரைத்து முன்போல் முன்சாரத்திற்குக் கவஞ்செய்து முன்போற் கொடிவேலி வேர்ப்பட்டையையும், பூநீறையுஞ் சேர்த்தரைத்துக் கவசஞ்செய்து முன்போல் ஐந்து சீலைமண்செய்து ௪௦-பலம் வறட்டியில் அலிபுடமிடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி எ-புடமிடவேண்டும். ஒவ்வொரு புடத்திற்கும் ஐந்தைந்து பலம் வறட்டியையும் அதிகப்படுத்தி வரவேண்டும். நவச்சாரமானது கட்டுப்பட்டுப்போகும். இதனைக் கொஞ்சம் நெருப்பில் வைத்துப் பரீக்ஷித்தால் புகையாமலிருந்தால் கட்டுப்பட்டு விட்டதென்பதற் கறிகுறியாம். புகைந்தால் மறுபடியும் முன்போல இரண்டொரு தடவை செய்துகொள்ள முழுக்கட்டாய் விடும். இதனையும் வாதவைத்திய மென்னுமிரு வகைகளிலு முபயோகிக்கலாம்.



பிரமாணம்:—கட்டின நவச்சாரத்தூள் குன்றிமணி யெடை-௨, ௩.

அநுபானம்:—சோம்புத் திராவகம், இளநீர், தேன், நெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்மரோகங்கள், அக்கினிமந்தரோகங்கள்; கௌசிக்கட்டு, மகோதரம், பாண்டுரோகங்கள், நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு ஆதியரோகங்களும், குதக்கட்டு, அக்கிரமருதகம் முதலியரோகங்களுந் தீரும்.

## 28. நவச்சார மெழுகு.

கட்டின நவச்சாரம் பலம்-வ, மேற்கண்டபடி சுத்திசெய்த வெடியுப்பு, அல்லது, காலாங்காய்ச்சல் வெடியுப்பு பலம்-க, எருக்கின் பழுப்பிலைச்சாறு செல்லத்தக்க அளவு. கோழியின் வெண்மையான மலம் படி-கவ, (இதனை யிடித்துத் தூள்செய்து மேற்கண்ட அளவு எடுத்துக்கொள்ளவேண்டும்.)

செய்முறை:—வெடியுப்பைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேம்படி பழுப்பிலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேர மரைத்து முன்நவச்சாரக்கட்டிக்குச் சமமாகக் கவசஞ்செய்து சற்று வெயிலிலுலர்த்தி அரைப்படி கோழியின் மலத்தூளை ஒரு சிறுகுண்டுசட்டியிற் போட்டமுத்தி அதன் நடுவில் முன் கவசத்தை வைத்து அதன்மீது அரைப்படி கோழியின் மலத்தின் தூளைப்போட்டமுத்தி அடுப்பின்மீது வைத்துச் சிறுதீயாக எரித்துவர வேண்டும். எரித்து வரும்போது வெடிப்புக்கண்டால் மீதியாய் வைத்திருக்கிற கோழியின் மலத்தூளை அந்த வெடிப்பிற்போட்டமுத்தி விடவேண்டும். இவ்விதம் நான்கு சாமநேரமெரித்து ஆறவைத்துக் குளிர ஆனபின்பு எடுக்க சாரமானது மெழுகைப்போல நைப்பாயிருக்கும். இதனைப் பீங்கான் செமிழிற் பத்திரப்படுத்தவும். இது வாதம், வைத்தியம் என்னுமிரு முறைகளுக்குமாகும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-க, உ.

அநுபானம்:—பனைவெல்லம், சீனிசர்க்கரை, பசுவின் வெண்ணெய், சுக்கையரைத்த விழுது, சீரகக்ஷாயம் முதலியவைகளாம்.



உபயோகம்:—மேற்கண்ட ரோகங்கள் எத்தனை காட்பட்டவாயினும் வேறெந்த மருந்திலுந் தீராதவாயினும் இந்த மெழுக்கினால் தீர்ந்துபோகும். இன்னும் இதனால் தேகத்திலுள்ள ரோகங்களெல்லாந் தீர்ந்து தேகம் வச்சிரகாயமாகும். இது ஒரு கற்பமாகையால் இதனைக்கற்ப விதிப்படி உபயோகித்தால் மேற்கண்ட குணங்களுண்டாகும்.

இன்னும் ஒருபலம் வெள்ளியையுருக்கி உருக்குமுகத்தில்-உஅ-அல்லது, கூ-குன்றிமணியெடை மேற்படி மெழுக்கைக்கொடுக்கப் பத்து மாற்றுள்ள இரசவாதப்பொன்னாகும்.

### நவச்சார மெழுக்கு வேறு.

மேற்கண்ட விதமாகச் செய்துகொள்ள இயலாதவர்கள் கீழ்க்கண்ட விதமாக நவச்சாரத்தை மெழுகாக்கிக் கொள்ளலாம். முறையைப்பார்த்த க்ஷணமே திகிலடையும் சுபாவமுள்ளவர்களும் சிலிருப்பார்களாகையால், அவர்களுக்கும் உபயோகமாகும்படி இலகுவான முறைகளையும் அடியேனது சக்தியானுசாரம் எழுதி வருகின்றேன். எவ்விதத்திலும் எல்லோரும் நமது கிரந்தத்தினால் பிரயோஜன மடையவேண்டுமென்பதே நமது பிரதான கருத்து.

கட்டின நவச்சாரம் க-பங்கு, கடையிலிருக்கிற நாயச்செந்தூரம், அல்லது, கடல்நுரை, அல்லது, அண்டவோட்டுச் சுண்ணம் ஆகியவைகளில் ஒன்று ஒருபங்கு. இவ்விரண்டையும் பொடித்து ஒரு மூசையிலிட்டுக் கோல்நுனியில் வைத்து ஊதவேண்டும். இது உருகி மெழுகாக வெகுநேரஞ்செல்லுமாகையால் அதி

கப் பொறுமையுடனும், அதிகநிதானத்துடனும் எடுக்கச் சாரமானது மெழுகாகியிருக்கும். இதனைப் பாகப்படி செய்தால் தவறாமல் மெழுகாகிவிடும். பிறகு மேற்கண்டிருக்கிறபடி உபயோகித்துக்கொள்ளவும்.

## 29, கெந்தகத் தைலம்.

முன்னர் இதிற் சேருகிற சரக்குகளைக் கீழேகண்டிருக்கிறபடி சுத்திசெய்து கொள்ளவேண்டும்.

கெந்தக சுத்தி:—நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்-௧௦, ஒரு இரும்புக் கரண்டியிற் கொஞ்சம் பசுவெண்ணெயைப்போட்டு அது உருகினவுடன் மேற்படி கெந்தகத்தைப் பொடித்துப்போட்டுச் சிறுதீயாக எரித்துக் கெந்தகம் உருகினவுடன் சோற்றுக்கற்றாழைச் சாற்றிற் சாய்க்கவேண்டும். இந்தச் சாறானது சுமார் ஒருபடி யிருக்கவேண்டும். குளிர ஆறினபின்பெடுத்து மறுபடியும் முன்போலுருக்கி முன்போற் சோற்றுக்கற்றாழைச் சாற்றிற் சாய்க்கவேண்டும். இவ்விதம் எ-தடவை மடக்கி மடக்கிச் சோற்றுக் கற்றாழைச் சாற்றிற் சாய்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு தடவையும் இந்தச் சாறானது புதிதாக விருந்தால் உத்தமம். இதன் பிறகு மேற்கண்டவாறே வெள்ளைப்பூண்டுத்தனிச்சாற்றில் எ-தடவைகள் சாய்த்துக்கொள்ளவேண்டும். பிறகு-௧-படி பச்சைப் பயற்றின் மாவை ஜலம்வார்த்துக் குழைத்து இரண்டடையாகச்செய்து ஒரு அடையின்மீது உ௦-பலம் பூண்டை யிடித்து இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை அதன்மீது பரப்பி அதன்மீது கெந்தகத்தை வைத்து அதன்மீது பாதி வெள்ளைப் பூண்டைப் பரப்பி அதன்மீது மறு அடை-



யை வைத்து உதடுகளைச் சந்தில்லாமற் சேர்த்து அதன்மீது உ-சீலைமண் செய்து அது கொள்ளும்படியான ஒரு பள்ளந்தோண்டி அதிலொரு அங்குலகனம் மணலைப்பரப்பி அதன்மீது முன் கவசத்தை வைத்து அதன்மீது இரண்டு அங்குல மணலைப்பரப்பி விடவேண்டும். இது பூமிக்குச் சமமாயிருக்க வேண்டும். பிறகு ௧௦-பலம் வறட்டியை அதன்மீது வைத்துப் புடமிடவேண்டும். குளிர ஆறினபின்பு கவசத்தைப் பிரித்துக் கெந்தகத்தை யெடுத்துக் கொள்ளவும். மறுபடியும் முன்போற் புடமிடவேண்டும். இவ்விதம் மடக்கிமடக்கி எ-தடவைகள் செய்துகொண்டால் கெந்தகமானது சுத்தியாய்விடும். இவ்விதம் சுத்திசெய்யப்பட்ட கெந்தகமானது தனியாகவு முபயோகப்படுத்தப்படுகிறது. இதனால் சருமரோகங்கள், புண்கள், சொறி, சிரங்குகள், கிரந்திரோகங்கள் முதலியவைகளுந் தீரும்.

இரச சுத்தி:—பாலரசம் பலம்-௫, இதனைக் கல்வத்திலிட்டுக் கம்மாருவெற்றிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேர மரைத்து இரசமெல்லாம் மாண்டபின்பு பதங்கப் பாத்திரத்திலிட்டுப் பதங்கித்துக் கொள்ளவேண்டும். பதங்கமேறின இரசத்தை யெடுத்து முன்போல் வெற்றிலைச்சாற்றை விட்டு முன்போ லரைத்து முன்போற் பதங்கித்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி எ தடவைகள் செய்துகொண்டால், இரசமானது சுத்தியாகி ஜெயரசமா யிருக்கும்.

நாகசுத்தி:—இதற்குமுன் உக-நெம்பரில் நாகசெந்தூரத்திற் சொல்லி யிருக்கிறபடி சிறுகண் நாகத்

தைச் சுத்திசெய்து கொள்வது உத்தம மானதாம். அப்படிச்செய்ய ஏலாதவர்கள் வாழைக்கிழங்குச் சாற்றில் நாகத்தை மடக்கி மடக்கி ௨௧-தடவை சுத்திசெய்து கொள்வதினாலும் நாகம் சுத்தியாகும். ஆனால் முன் முறைதான் இந்த முறைக்காக அதிகப் பொருத்தமானது.

அண்டத்தைலம் ;—௨௧-கோழிமுட்டைகளை வெந்நீரைக் குமிழெழும்படியாகக் கொதிக்கவைத்துச் செம்மையாகக் கொதித்தபின்பு மேற்படி முட்டைகளை அதிற்போட்டு ௧௦-நிமிஷநேரம் மூடிவைத்திருந்து ஆறினபின்னெடுத்து முட்டைகளை யுடைத்து மஞ்சட்கருவை மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு இரும்புச்சட்டியைக் கொஞ்சம் ஒருபக்கம் சாய்வாகவைத்து உயர்ந்திருக்கிற பக்கத்தில் மேற்படி மஞ்சட்கருக்களை வைத்து அடுப்பிலே மெதுவாக எரித்துவந்து கருக்களெல்லாங் கருகினபதத்தில் ௨-விராகனெடை பூநீரைப்பொடித்துத் தூவி மெதுவாயெரித்துவர எண்ணெய் புறப்படும். எல்லாக் கருக்களினுமிருந்து எண்ணெய் புறப்பட்டபின்பு அதையெல்லாமிறுத்து வடிகட்டிச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும். இதுவே இங்கலிசியமான அண்டத்தைலமாம்.

## கெந்தகத்தைல முறை விபரம்.

மேற்கண்டபடி சுத்திசெய்த இரசம் விராகனெடை-௧௦, மேற்கண்டபடி சுத்திசெய்த சிறுகண் நாகம் விராகனெடை-௧௦, மேற்கண்டபடி சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் விராகனெடை-௨௦, மேற்படி அண்டத்தைலம் செல்லத்தக்க அளவு, மேற்படி கட்டின நவச்சாரம் விராகனெடை-௧.



செய்முறை:—ஒரு சிறு மண் கின்னத்தில் கொஞ்சம் நல்லெண்ணெயை விட்டு அதில் இரசத்தை விட்டு வைக்கவேண்டும். நாகத்தில் கொஞ்சம் வெண்ணெயை அல்லது, ஆட்டுக்கொழுப்பைச் சேர்த்துருக்கி மேற்படி ரசத்தில் விட்டுப் புகைபோகாமல்சட்டி முதலிய பாண்டத்தினால் மூடிவிடவேண்டும். ஆறினபின்னெடுத்தால், ரசமும் நாகமும் தொந்தித்துச் சேர்ந்திருக்கும். இதனை யெடுத்துத் துணி முதலியவைகளினால் எண்ணெய்ப்பசையைநீக்கிச் சுத்திசெய்ய வேண்டும். பிறகு அதனைக் கல்வத்திலிட்டுக் கெந்தகத்தையும் நவச்சாரத்தையுஞ் சேர்த்தரைத்து எல்லாம் ஒன்றாக மிஸ்ரமான பின்பு மேற்படி அண்டத்தைலத்தைச் சிறுகச் சிறுக வார்த்துப் பனிரண்டு சாமநேரமரைத்துக் கால் விராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் வைக்கவேண்டும்.

பிறகு மணற்றவளை, அல்லது, பச்சைத்தவளை கொண்டுவந்து ஒவ்வொரு தவளையினும் இரண்டிரண்டு விராகனெடை மாத்திரைகளைச் செலுத்தி அவற்றின் வாயையும் ஆசனத்தையுந் தைத்துக் காலில் கயிற்றைக்கட்டி வேறொரு கயிற்றிற் றொங்கவிட்டு வெயிலிலுலர்த்த வேண்டும். காக்கை முதலியவைகள் கொண்டு போகாமலும் எறும்பு முதலியவைகள் சேராமலும் ஜாக்கிரதை செய்யவேண்டியது. செம்மையாக வுலர்ந்த பின்பு ஒரு இரும்புக்கம்பியில் இரண்டிரண்டு தவளையாகச் கோத்துக்கொள்ள வேண்டும். ஒரு சிறு தோண்டியின் அடியில்-௪-௫-துவாரமிட்டு மேற்படி கம்பிகளை உட்புறத்திலிருந்து துவாரங்கள் மூலமாகச் செலுத்தி வெளியில் ௪, அல்லது, ௫-அங்குலமிருக்கும்

படியாக விட்டுத் தோண்டியின் வாயின் குறுக்கில் ஒரு கட்டையைப்போட்டு மேற்படி கம்பிகளின் மறு முனையை அதில் சுற்றிவிட வேண்டும். இப்படிச்செய்து, தவலைகள் தோண்டிக்குள் மத்தியிலிருக்கவேண்டும். அதாவது தோண்டியின் பக்கங்களிற் படாமல் மத்தியிலிருக்கும்படியாகச்செய்யவேண்டியது. பிறகு தோண்டியின் வாய்க்கு ஓடிட்டு அதைச்சுற்றிலும் எ-சீலைமண் செய்தும் தோண்டியினடியில் ஒரு பீங்கான் பாத்திரத்தை வைத்து அதற்குள் மேற்படி கம்பிகளின் கீழ்ப்பாகமிருக்கும்படியாகப் பார்த்து தோண்டியோடு பீங்கான் பாத்திரத்திற் பொருந்தும்படியாகச் சீலைமண் செய்தும் வெயிலிலுலர்த்திக் கொள்ளவேண்டும். ஈரமில்லாம லுலர்ந்தபின்பு ஒரு சிறு பள்ளந் தோண்டி அதற்கு மத்தியில் கீழிருக்கும் பீங்கான் பாத்திரங் கொள்ளும்படியாகக் குழிதோண்டி அதற்குள் பீங்கான் பாத்திரத்தை வைத்து அதன் வாய்மட்டம் வரையில் மண்ணைத்தள்ளி விடவேண்டும். இன்னந் தோண்டியைச் சுற்றிலும் சுமார்-ச-ரு-அங்குலம் இடைவெளியிருந்தால் போதுமானது. தோண்டியின் வாயானது பூமியின் மட்டத்திற்குச் சரியாயிருக்க வேண்டியது. இந்தப் பள்ளங் கொள்ளும் வரையில் வறட்டியைப் பொடித்தடுக்கிப் புடமிடத் தைலமிறங்கிப் பீங்கானில் வடிந்திருக்கும். குளிர ஆறினபின்பு அதிக ஜாக்கிரதையுடனெடுத்துச் சீலைமண்ணைப் பிரித்துப்பீங்கான் பாத்திரத்திலுள்ள தைலத்தைச்சீஷாவிற்பத்திரப்படுத்திக்கொள்ளவும்.

பிரமாணம்:—துளிகள்-க, ரு.



அனுபானம்:—பொரியரிசிமா, சீனிசர்க்கரை முதலியவைகளாம்.

உபயோகம்:—சாத்தியமான எல்லாவகைக் குஷ்டரோகங்களுந் தீரும். கிரந்திப்புண்கள், மேகப்புண்கள், அழிரணங்கள், புரை ரணங்கள் முதலிய எல்லாவகை ரணங்களுந் தீரும். இன்னும் பிரமியரோகங்கள், வெட்டைரோகங்கள், கன்னப்பிளவை, கன்னப்புற்று, லிங்கப்புற்று, யோனிப்புற்று முதலியரோகங்களுந் தீரும். இதைத் தொடர்ச்சியாக ஒவ்வொருதுளி சாப்பிட்டுவந்தால், தேகத்திலெந்த வியாதியையும் அணுகவொட்டாமல் தேகத்தைப் பாதுகாத்துவரும். இன்னுமிந்தத் தைலத்தால் அநேக வியாதிகள் தீருமாகையால் அவரவர்கள் தம்தம் அநுபவத்தால் தெரிந்துகொள்ளக்கூடும். ஆகையால் இதைப்பற்றி விசேஷமாயெழுதாது நிறுத்தியிருக்கின்றோம்.

சுத்திசெய்த தாம்பிரம் அ-பங்கு, வெள்ளி உ-பங்கு. இரண்டையுமுருக்கி உருக்குமுகத்தில் மேற்படி தைலத்தில் உ-அல்லது, ௩-துளிவிட எட்டுமாற்றுள்ள இரசவாதப்பொன்னாகும்.

## 30. பாஷாண மெழுக்கு.

கீழ்க்கண்டபடி பாகப்படுத்தின பாஷாணத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். அதன் விபரமாவது: கஉ-பலம் வெள்ளைப் பாஷாணக் கட்டியை ஒரு பாத்திரத்திற்போட்டு அதில் ரு பலம் எருக்கம்பாலை விட்டு அடுப்பின்மீது வைத்துச் சிறுதீயாக எரித்துப்பாலெல்லாஞ் சுண்டிவருகிற பதத்தில் அந்தக் கட்டியை கைவிடாமற் பாலில்புரட்டிக் கொண்டிருக்க வேண்-

டும். அந்தப் பாலெல்லாங் கட்டியின்மீது பிடித்துக் கொள்ளும். பிறகு வேறு புதுஓட்டில் போட்டு வறுத்துக்கொண்டே யிருக்கவேண்டும். கட்டியின்மீதுள்ளதெல்லாம் எரிந்துபோன பிறகு கட்டியை யெடுத்து கத்தியின் முனையால் மேலுள்ளதைச் சீவி நீக்கிக் கட்டியைப் பெயர்த்துக்கொள்ளவும். பிறகு இந்தக் கட்டியை வேறொரு பாத்திரத்திற்போட்டு ரு-பலம் முலைப்பாலை அதில்விட்டுக் காய்ச்சவேண்டும். பால் சுண்டச்சுண்ட முன்போற் கட்டியைப் புரட்டிக்கொண்டும் வரவேண்டும். முலைப்பாலெல்லாஞ் சுண்டினபின்பு மறுபடியும் முன்போல் ரு-பலம் முலைப்பாலைவிட்டு முன்போற் சுண்டவைத்து வறுத்தெடுத்துக் கட்டியின்மீதுள்ள பற்றைச்சீவிச் சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். இதுவே பாஷாணத்தின் பக்குவமாம்.

இவ்விதம் பாகப்படுத்தின பாஷாணம் விராகனெடை-ரு, இதை ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைத்து அதன்மீது ரு-பலம் முலைப்பாலைவிட்டு ஒரு விராகனெடை வெண்காரத்தையும் ஒரு விராகனெடை கட்டின நவாச்சாரத்தையும் தூள்செய்து அதிற்போட்டு கடுவெயிலில்வைத்துப்பால் சுண்டச் சுண்டக்கட்டியின்மீது எங்கும்படும்படியாகப் புரட்டிக்கொண்டு வந்து எல்லா முலர்ந்தபின்பு பருமனான ஒரு விலாங்குமீனைப் பிடித்து அதன் வாய்க்குள் இதைச்செலுத்தி வாயையும், ஆசனத்தையுந் தைத்து வைத்துக்கொள்ளவும். க-படி உப்பை நீர் சுண்டும்படியாக வறுத்து இடித்துத் தூள்செய்து உ-பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சட்டியிலிட்டு அதன்மீது முன் சித்தப்படுத்தின விலாங்குமீனைவைத்து அதன்மீது மறுபாதியைப் போட்டு மூ



டிவிடவேண்டும். மீனின்மீது உ-அங்குலம் உப்பிருக்கவேண்டியது. உப்புபோதாவிட்டால் முன்போல் வறுத்துத் தூள்செய்து தேவையான அளவு சேர்த்துக்கொள்ளலாம். பின்பு மேற்சட்டி மூடி எ-சீலையண் செய்துலர்த்தி அடுப்பின்மீது வைத்துக் கமலாக்கினியாக உ-சாமநேர மெரித்து ஆறினபின்பு கட்டியையெடுத்துக் கொள்ளவும்.

இந்தக்கட்டியை ஒரு இரும்புக்கரண்டியிற் போட்டு வ-படி பன்றிநெய்யைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்கிடவேண்டும். நெய்யெல்லாஞ் சுண்டிவிட்டால் பாஷாணமானது நெருப்பிற் கோடாமல் கட்டுப்பட்டுப் போம். நெருப்பிலிட்டுப் புகைந்தால் மறுபடியும் வ-படி முன் நெய்யை முன்போற் சுருக்கிட முழுக்கட்டாய் விடும். இதுவே பாஷாணக்கட்டாம்.

மேற்படி பாஷாணம் விராகனெடை-கவ, இதற்காலு முறைப்படிச் சித்தப்படுத்தின வெள்வங்க பற்பம் விராகனெடை-கவ. இரண்டையுங் கல்வத்திலிட்டரைத்துச் சுண்ணாம்புத் தெளிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து உ-சாமநேர மரைத்துச் சிறு மாத்திரைகளாகச் செய்துவைத்துக் கொள்ளவும்.

சுத்திசெய்த வெள்வங்கம் விராகனெடை-கவ, இதனை யுருக்கி மேற்படி மாத்திரைகளைச் சிறுகச் சிறுகக் கொடுக்க எல்லாவற்றையும் வாங்கிக்கொள்ளும். இதனை யெடுத்து இதற்குச் சமனெடை முன் சொல்லியிருக்கிறபடி சுத்திசெய்த இரசத்தைச் சேர்த்துக் கல்வத்திலிட்டுச் சுண்ணாம்புத் தெளிநீரைச் சிறுகச் சிறுகவிட்டு உ-சாமநேர மரைத்துப் பில்லையாகச் செய்

உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5-சீலைமண் செய்துலர்த்தி ௯-பலம் வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்க மெழுகாயிருக்கும். இதனைப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨, ௩.

அநுபானம்:—பனைவெல்லம், சீனிசர்க்கரை முதலியவைகளாம்.

உபயோகம்:—அடங்காத தாதுவிருத்தி யுண்டாகும். பிறப்பிலிருந் துண்டான தாது நஷ்டம் தவிர மற்றெல்லாவகைத் தாதுநஷ்டத்திற்கும் இது சஞ்சீவிக் கொப்பானது. இதனை ௫-நாள் அல்லது, ஒருவாரத்திற்கதிகம் உபயோகிக்கலாகாது. அப்படி உபயோகிக்கும்படியான அவசியமிராது. மகா ரோகங்களான குஷ்டரோகங்கள், குன்மரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—பாலன்னம், பாற்பாயசம், வாதுமை ஹல்வா, கோதுமைப்பால் ஹல்வா, மிட்டாய் தினுசுகள் ஆகிய இவைகளையும் நெய்யிற் பொரித்த இறைச்சி வகைகளையும் அதிகமாய் உபயோகித்துவர வேண்டும். இதனை உபயோகிக்கும்போது அடங்காப் பசியுண்டாகு மாகையால் சமயத்திற்குத் தகுந்தபடி சத்துள்ள ஆகாரங்களை உபயோகிக்கவேண்டும்.

சுத்திசெய்த செம்பு விராகனெடை-௫. இதனையுருக்கி உருக்குமுகத்தில் ௨௫-குன்றிமணி யெடை மேற்படி மெழுக்கைக் கொடுக்க ௧௦௨-மாற்றுள்ள இரசவாதப் பொன்னாகும்.



இந்த மெழுக்கானது வாதம் வைத்தியமென்னு மிருவகைக்கும் உபயோகப்படுகிற படியால், புத்திமான்கள் சமயோசிதம்போலச் செய்து அநுபவித்து வருவார்கள்.

## வெள்வங்க பற்பம்.

வெள்வங்கசுத்தி:—வெள்வங்கத்தை மெல்லிய தகடாக அடித்துச் சிறு துண்டுகளாகக் கத்தரித்து வைத்துக்கொள்ளவும். சோளக்கொட்டைக் குழித்தைலத்தில் மேற்படி துண்டுகளைப்போட்டு ௨-மணி நேரங்கொதிக்க வைத்தெடுத்துக் கொள்ளவும். பிறகு பூநீர், வெடியுப்பு, உப்பு ஆகிய இம்மூன்றையுஞ் சமபாகமாகச் சேர்த்துத் திராவகமிறக்கி வைத்துக்கொள்ளவும். மேற்படி வங்கத்தை யுருக்கி இந்தத் திராவகத்தில் விடவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவை யுருக்கிச் சாய்க்கவும். பிறகு எலுமிச்சம் பழச்சாற்றிற்கொஞ்சம் நவச்சாரத்தைப் பொடித்துப் போட்டு மேற்படி வங்கத்தையுருக்கிச் சாய்த்துக்கொள்ளவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்றுதடவை சாய்த்துக்கொண்டால் வங்கமானது சுத்தியாகிவிடும்.

சுத்திசெய்த வெள்வங்கம் பலம்-௧, இதனைப் புளியிலைக் கனந் தகடாகச்செய்து சன்னமாகக் கத்தரித்து வைத்துக்கொள்ளவும். வெண்ணொச்சியை நிழலிலுலர்த்திப்பிடித்த தூள் வீசை-௨, இதனை ஒரு கோணித்துணியிற் பரப்பி அதன்மீது முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற வங்கத்தூளைத் தெளித்துக் கோணியைச் சுருட்டிக்கட்டி அதன்மீது கொஞ்சம் மண்ணைக்குழைத் துப்பூசி நூறுபலம் வறட்டியிற் புடமிட்டாறினபின்

னெடுத்தால் வங்கத்தகடானது வெண்ணிறமாகப் பொரிந்துபோயிருக்கும். வெண்ணிறமாயிருப்பதை மாத்திரம் எடுத்துக் கல்வத்திற் பொடித்து வைத்துக்கொள்ளவும்.

இந்தப் பற்பமானது இருமல், க்ஷயம் முதலிய கபரோகங்களுக் குபயோகமாம்.

இவ்விதம் தனியாக மூலிகையிற் செய்யப்பட்ட வேறுவகை வெள்வங்கப் பற்பத்தையும். மேற்படி முறையிற் சேர்த்துபயோகிக்கலாம். இவ்விதம் பலமுறைகள் மேது அனுபோக வைத்திய வேத முறையிற்சொல்லப்பட்டிருக்கின்றன. அவசியமானவர்கள் அக்கிரந்தத்தி னுள்ளபடியுஞ் செய்து சேர்த்துக்கொள்ளலாம்.

இராஜரிஷி வீரமாமுனி மகானுபாவர்
அருளிச்செய்த நவரத்தினச் சுருக்கமாலைத்
தெளிபொருள் விளக்க வுரை
முற்றுப் பெற்றது.

---

கடவுள் துணை.

இராஜரிஷி

வீரமாமுனி மகானுபாவர்

அருளிச்செய்த

# மகாவீரியச்சிந்தாமணி.

காப்பு.

வெண்பா.

மண்டலத்தில் மாமுனிவர் வாகடத்தின் மர்மமெலாங்
கண்டெடுத்துத் தொண்டருக்குக் காட்டவே—விண்
[டலத்தில்
எய்ந்த பெருவெளியா யெங்குநிறை சோதிபொன்றை
வாய்ந்தமன மேபணிது வாய். (௧)

அவையடக்கம்.

சித்தரெலா முன்னே தெரிந்துரைத்த நூலுட்பம்
இத்தரையி னோன்கண் டியம்புதற்கு—சத்தியந்த
தஞ்செற் பணிவரையை யற்புமச கந்நாக்க (௨)
நெஞ்சிற் குறித்தற்கு நேர்.

நூல்.

வெண்பா.

31. சுகாதார, மனோவாரம்.

செந்தா மரைமாமன் சேர்மனுபா னத்தாய்மா
கீர்த்திகு மோட்டுக் கவசத்தான்—வந்த
சதாசுகியுஞ் சார்வலைக்குத் தக்க பலமு
முதாரப் படைவிரண்டா மோர். (௩)

ஓருங் கருபதமு மொன்றுங்குல் கந்துபத்ர
நேருமிவை யொன்றாக நீகூட்டிச்—சோருங்
குழலாயி லேகியஞ்செய் கூறுபன்றே யற்றப்
பழமலய்க ணீங்கிவிடும் பார். (௪)

## 32. ஜீவாமிர்த லாடு.

கெக்கரிசு ரைக்காய் கிளர்பறங்கி பூசணிக்காய்
தக்க பருத்திமுலாஞ் சார்வெள்ள—ரிக்கொடியில்
வந்தபருப் பொவ்வொன்றும் வாகாச் சமனாக்கிப்
பிந்துகரு வேலின் பிசின். (௫)

பத்திரவைடு நீர்முள்ளி பண்பா விருபாலு
கத்துகற்கண் டைம்பாலு காடேலம்—பத்தியுடன்
பஞ்சமெனக் கொண்டினிய பாவா யிலாடியற்றி
யஞ்சாம லியார்க்கு மளி. (௬)

அளிசேர் குழன்மாதே யன்பா யருந்தக்
களிசேருஞ் சோரி கனமா—மொளிசேருந்
தாதகிக மாகுமுடல் தான்பலமுங் கொள்ளுமென
வோதநிக மாநீ புவந்து. (௭)

## 33. யோகராஜ கோகிலம்.

சித்திரமூ லங்கடுகு திப்பிலிவ சம்புசுக்கு
ஒத்தபெருங் காய முயர்கொச்சி—கத்துகரித்
திப்பிலிநற் சீரங் திகழ்கருஞ்சீ ரம்விளங்கஞ்
செப்புகண்டத் திப்பிலியுந் தேர். (௮)

அதிவிடயம் பாரங்கி யானவஜ மோதம்
வதியித்த ராயணியும் வாய்த்த—துதிசேர்
வலம்புரிக்காய் காணிஸ் வளர்கடுகு ரோணி
வலம்பெற வி ராகனிறை வாங்கு. (௯)



வாங்கியிவற் றிற்கிரட்டி வாகாங் திரிபலைசேர் [ன்
ஓங்குசுத்திக் குக்கிறனே யோதக்கேள்—கோங்கரும்பி
மென்முலையாய் முன்னிரண்டாய் மேயகூட் டத்திற்கு
கன்முறையா னோக காடு. (௧0)

காடி யிவற்றையெல்லா நற்கோ கிலஞ்செய்து
தேடியுணத் தீருநோய் செப்பக்கேள்—கேடமரும்
வாயுவரோ கங்கள் வயிற்றுநோய் காமாலை
காயுஞ் சுவாசரோ கம். (௧௧)

மந்தாக் கினியாம வாதம் பவுத்திரங்கள்
இந்திரிய ரோக மிருமல்கபம்—வந்து
வயிற்றிலுறு கட்டிகுட்டம் வாதரக்தஞ் சூலி
செயிர்க்காய் வரரோ கிகம். (௧௨)

பெரும்பாடு சங்கிரஹணி பேசியநீர்ப் போக்கு
வருந்திரிதோ டங்கேடு மன்றும்—பிரமியமா
காக்கைவலி தேகங் கலந்த சிராவகங்கள்
தாக்குமூ லம்போமே சாற்று. (௧௩)

## 34. இரசி தாமிர்த சஞ்சீவி.

பக்குவமாச் சுத்திசெய்த பால விரதத்தில்
மிக்கவே யாறு விராகனெடை—பொக்கவெடு
எற்ற நவச்சாரத் தெண்ணெயிலே மூன்றுதினம்
ஆற்றன் மிகவே யரை. (௧௪)

சிர யரைத்துச் சிறுகடுகி லைச்சாற்றிற்
பாராய்முன் சொன்ன படியரைத்து—நோய்ப்
பதங்கஞ்செய் தப்பிரகத்திற் பண்புடனே சேர்த்தங்
கிதம்பெறவெண் காயச்சாற் றில். (௧௫)

ஓதியநாற் சாமல லூமத்தை யின்சாற்றில்
நீதிபெற நாற்சாம நீசுறுக்குச் —சோதிபெறக்
காட்டி யெடுத்தேபின் கல்வத்தி லிட்டுபருங்
காட்டில்வளர் கற்றாழை' காண். (கசு)

கண்டே யதனுட் கசிந்துவருஞ் சாற்றையுங்கைக் [ஞ்
கொண்டே கலந்தரைப்பாய் கூறுவேன்—அண்டமுறு
சூரியனி னென்போலச் சொல்லுகின்ற சாமமட்டுங்
காரியமாப் பின்வெயிலிற் காட்டு. (கஎ)

பண்பா யுலர்த்தியதிற் பாதியெடை வெள்ளியிறசெய்
கண்பார்த் திடுமிரேக் கைச்சேர்த்துப்-பெண்பாவாய்
மாசில்லா துண்டை வளருகச் செய்துமனங்
கூசிடா தேயெடுத் துக் கொள். (கஅ)

ஓமங் குராசாணி யோம மஜமோதா
வோமஞ் சொரியோம மொவ்வொன்றும்—நேமப்
பலமொன் றரையேற்றுப் பச்சைச்சம் பங்கி
யிலையின்சாற் றைப்பின் னெடு. (ககூ)

எடுத்தவற்றில் விட்டே யிசைவுபெற வாட்டி [டை
அடுத்தெடுத்து முன்னே யழகாத்—தொடுத்தவுண்
வைத்துருட்டிச் சத்த வளச்சிலே மண்செய்து
பத்திருப தர்கும் பலம். (உ0)

காய்ந்த வறட்டி கனக்கப் பரப்பியதி
லேய்ந்த புடமிட் டெடுக்கவே—வாய்ந்தவுயர்
பற்பமா மானே பகரு மரிசியெடை
சொற்படியே யூட்டிவிடச் சொல். (உக)

123



கண்மூக்கு மூளைநா காதுதொண்டை பல்லீறு
எண்ணீரற் பையீர லேற்றநுரை—நண்ணீரல்
நெஞ்சா சனம்பீசம் நீர்ப்பை சிறியகுடல்
அஞ்சா நரம்பிரத்த மாண். (உஉ)

மர்மத்தா னந்தாது மங்கைக்குப் பையவளின்
மர்மத்தா னம்மிவற்றில் வாய்ந்தேதான்—கர்மத்தால்
அண்டிவந்து துன்ப மகேகஞ்செய் நோய்களமிகு
குண்டிக்காய் தங்கிமிகக் கோது. (உங)

காட்டிவரு கோப்முதலாங் காசிலரியி லுள்ளவரை
வாட்டமுறச் செய்கின்ற வன்பிணிகள்—நாற்றுடனே
ஐம்பதும்போந் தேகந் தழகே குடியிருக்கும்
நம்பினர்க்கே சேரு நலம். (உச)

## 35. பிரமேக பைரவி.

நெல்லிக்காய்க் கெந்தகத்தி னேரும் விராகனெடை
சொல்லிருபா னன்கு சுகஞ்செய்யு—நல்லேலம்
விள்ளுபதி னைந்தும் விரும்பியெடுத் தேயறுபான்
வெள்ளாட்டின் பாலே விடு. (உரு)

விட்டே யரைத்துலர்த்தி மேவு மதற்சிரட்டிக்
கற்றாழைச் சாற்றைக் கலந்தரைத்து-விட்டுமுன்போல்
வெள்ளையென்ற சாட்டரணை விண்டவுயர் சாற்றையுட
தள்ளாமற் சேர்த்துமிகத் தாக்கு. [ன் (உசு)

தாக்கியே யீரமெல்லாஞ் சற்றுமின்றிக் காய்ந்தபின்பு
நோக்கி யெடுத்தே நுவன்யன்னு—லாக்கியதோர்
சட்டிதனி லிட்டுத் தகுந்தமரு தாணிச்சா
றிட்ட வறுபா னெடு. (உஎ)

நீயெடுத்த சாற்றை நிகழ்த்துசட்டிக் குள்விட்டுக்
காயவைப்பாய் நற்பகலிற் காரிருளில்—நேயமுடன்
பின்பெடுத்து மேற்சட்டி பேணியே மூடிமண்ணால்
அன்பாகச் சீலை யமை. (௨௮)

அமைத்தே புலர்த்தி யடுப்பேற்றி முன்னே
சமைத்த விருந்தை தணிச்சேர்த்—திமைக்குமுனே
நல்ல நிறைபலமு நான்கேழ தாக்கியே
சொல்லுமதிற் பாதி சுடு. (௨௯)

சுட்டே தழலாக்கித் தோற்றமற்றப் பாதியையும்
இட்டமுடன் மேற்போட் டினியமேற்—சட்டியிலே
சாத் துணிபோட் டிசையைந்து நாழிகையா
னேரத் துடனெரிப்பாய் நேர். (௩௦)

சொன்னகணி தப்படியே தோன்றி யெரிந்தடங்கிப்
பின்னமிலா தேகுளிர்ந்த பின்னெடுத்து—நன்னயமாய்
கட்டுடைத்துப் பார்க்கக் கனகப் பதங்கமொளி [க்
விட்டிருக்கு மெய்தனை வேண்டு. (௩௧)

வேண்டி யெடுத்து மிளிர்பளிங்காற் செய்தழகு
நீண்டசெப்பிற் குள்ளாக்கி நேருடம்பிற்—பூண்ட
பிரமேகத் திற்சீயப் பேசாம லோடுந்
தரமறிந்து நல்லவர்க்குச் சாற்று. (௩௨)

### 36. காமாக்கினி ஜீவரசம்.

விள்ளுமடை யாளம் விராகனெடை மூன்றெடுத்துக்
கொள்ளுமதி லொன்றரையாக் கூறுபலம்-நல்லிருளைச்
சுற்றித் தழலிற் சுகமாக நான்குமுறை
முற்றக் கொளுத்தியெடு முன். (௩௩)



பற்றுசெங் கொட்டை பலநான் கரையெடுத்துக்
குற்றமிலா வாலுழுவைக் கோவரிசி—சொற்றதொரு
நான்குபலஞ் சேர்த்து நைய விடித்துண்டை
தேன்மொழியே சீரோங்கச் செய். (௩௪)

செய்தேமுன் சொன்ன சிவனையதற் குட்படுத்திப்
பையமண்ணு லாக்கியவோர்பாத்திரத்தில்-ஐயமின்றிச்
சேர்த்தடுப்பி லேற்றிச் சிறுதீயாற் சாமமட்டும்
பார்த்தெரித்துப் பின்னமறப் பண். (௩௫)

பண்ணி யெடுக்கப் பகாதுவுங் கட்டாகி
நண்ணி யிருக்குமுட னாடியே-என்னுமொரு
நல்லகல்வத் திட்டு நசுக்கிப் பொடித் தெடுத்து
வல்லமையா யோர்கலத்துள் வை. (௩௬)

இந்தப் பொடியி லியலரிசி யொன்றெடுத்தே
யந்தப்பா லேநெய்வெண்ணெ யானவற்றை—முந்தியனு
பானித் தருந்தப் பகர்நரம்பின் மேற்பூச
மேனிக்குட் டாது மிகும். (௩௭)

### மேற்பூச்சுத் திலா.

அந்தவக்கி ராகார மாமிலவங் கப்பட்டை
இந்திரநற் கோப மிவைபிடித்து—முந்தெருமைப்
பாலிலிரு சாமம் பரிந்தரைத்து வேணதெல
மேலிலிட வாண்மைதரு மே. (௩௮)

### 37. பிரதாப லிங்காமிர்தம்.

ஏற்ற வுலாந்தா லிலிங்கத்தை நீயெடுப்பாய்
சாற்றும் விராகனெடை தாறு—போற்றுமுபர்
வெள்ளி யிரேக்கோ விராகனிடை மூன்றுசேர்த்
தெள்ளாமற் கல்வத் திடு. (௩௯)

கொம்புக்கள் ளிச்சாற்றைக் கூடுமறு லேவிட்டு
நம்பிக்கை கொண்டாட்டு நாற்சாமம்—வம்பின்றிக்
கையால்வழித்துக் கனத்தவொரு வில்லையாச்
செய்தே வெயிலிடத்திற் சேர். (௪0)

ஈரமற்ற பிற்றை யெடுத்துக்கீழ் மேலுமிரு
காரவெருக் காமிலையைக் கையாலே—நேரவதிற்
சுற்றிமணற் குள்ளிட்டுச் சொல்லியநாற் சாமமெரி
பற்றவெரித் தேபொடித்துப் பார். (௪௧)

பார்க்கச்செந் தூரம் பளபளெனத் தோன்றுமதிற்
கூர்க்கவிரா கன்மூன்று கூறுமுயர்—மார்க்கமுறு
மான்மதத்தின் முக்கால் வளாய்பர் தாளையக்
கான் விளையுங் குங்குமப்பூ காண். (௪௨)

காணே யதுவுங் கனமிளகின் சூரணமும்
வீணேயில் திப்பிலியின் மென்பொடியும்-பூணேர்கொள்
தாழங்குழலாய் தனிநிறையு மூன்றிவற்றில்
தாழம்பூச் சத்தைவிட்டுத் தாக்கு. (௪௩)

விட்டே யொருசாம மேவியரைத் தோர்மிளகில்
திட்ட முறமாத் திரைசெய்தே—யிட்டநிழல்
காட்டி புலர்த்தியொன்றைக் காலையிலு மாலையிலுங்
கூட்டுமிரு வாரமட்டுங் கொள். (௪௪)

சொன்னவா றுண்டாற் சுறுசுறுப்பு முண்டாகும்
பின்னமிலா வூக்கம் பெருமகிழ்ச்சி—மன்னுமுயர்
ஆண்டன்மை சூர மடங்காப்பசி யனைத்து
மீண்டுவரு மென்றே நினை. (௪௫)



சுத்த விரத்தஞ் சுகத்தாது போகமுடன்
நத்துகின்ற தம்பனநல் ஞாபகமாம்—பத்தியங்கேள்
பெண்ணும் புளியுமிகப் பேணாதே மற்றதெல்லாம்
நண்ணுந் தெரிந்தவற்றை நாடு. (௪௬)

38. மகா மேகாமிர்தம்.

தக்கவிலந் தைப்பட்டைச் சாம்பர்பல முப்பதைநீ
சிக்குமொரு மட்பாத் திரத்திட்டு—ஒக்குங்
கடனீர் படியிரண்டிற் கரைத்தொரு நாளூறி
விடவேயொன் றுகிவிடு மேல். (௪௭)

மேலு மெடுத்து மிகுபனியில் வைத்திருகால்
சாலக் கலக்கிவைத்துத் தான்வருவாய்-கோலமுடன்
ஐந்துநாட் செல்லவதி லான தெளிவெடுத்து
வந்தபக னீமூடி வை. (௪௮)

வைத்தபின்பு மூன்று வராக னெடையிரச
கற்பூரங் கொண்டே கரும்பொன்னுஞ்—சட்டிநடு
அப்பிரே கம்வைத் ததன்மே லிதைவைத்துச்
செப்புதெளி விற்றுளியாச் சேர். (௪௯)

சேர்த்தே தழன்மூட்டித் தீபாக் கினியாகப்
பார்த்தெரித்து நீரெல்லாம் பற்றவே—வார்த்துச்
சுறுக்கிட் டெடுத்துச் சுகம்பெறவே கையில்
மறுப்பட் டிடாமலுடன் வை. (௫0)

பின்னையுறு சேங்கொட்டை பேசு பலமூன்று
ஒன்றுகா ரெண்மூன் றுயர்வாள—மொன்னரைதான்
கூட்டி யரைத்துக் குணமாக வுண்டைசெய்து
காட்டிமுன்பூ ரத்தை நடு. (௫௧)

கடுவைத்தோ ரங்குலத்தி னற்சிலை மண்செய்
தடுவெயிலிற் காட்டி யதன்பின்—வடிவிலரு
பாணிரட்டி யான பலவறட்டி யிட்டியுட
னை குழிப்புடமொன் றாக்கு. (ருஉ)

ஆன புடமெரிந்தங் காறியபின் னேயெடுத்துத்
தேனே பொடித்தரிய சீசாவி—லூனமின்றிக் [வை
கொட்டிவைத்திங் கொன்றரையாங் குன்றி மணியள
யிட்டமுறும் வெண்ணெயிற் சேர்த் தி. (ருங)

ஈயவே குட்ட மிழிவாம் பறங்கிப்புண்
பேயனைய நீண்ட பிரமேகம்—சாயவே
செய்யும் பவுத்திரங்கள் செப்புமே கச்சுரங்கள்
வெய்யவரை யரப்பு மிகும். (ருச)

பாவியத்தால் வந்த பலநோய்க ளிரடைப்பு
மாவியற்றுந் தாதுநட்ட மாள்கிரந்தி— நாவிதென
வாண்மர்மத் தான மடிசிறத்த லென்றபல
வீண்பிணிக ளற்று விடும். (ருரு)

தாததிக மாகுமுயர் சம்போக சத்தியுண்டாம்
ஓததிக தூர்ப்பலம்விட் டோடுமே—தாததிகஞ்
சேரு மலர்க்குழலாய் சேயுமுண்டா மிம்முறையை
ஆருங்கா ணென் றறி. (ருசு)

## 39. விருத்தகௌமார சஞ்சீவி.

வெள்ளைப்பா ஷாணம் விராகனிறை மூன்றெடுத்து
மெல்லியதோர் வத்திரத்தின்மேல்முடிந்-தொள்ளியநல்
ஆவின்பா லின்மூன் றரைப்படியை யோர்கலத்தில்
காவிவிட்டு முன்முடிப்பைத் தான். (ருஎ)



[லாங்
தொங்கவிட்டுத் தீயைத் தொடுத்தெரித்துப் பாலெல்
லங்கமுற வற்றியபின் சூழ்ந் தெடுத்தே-யைந்துபலம்
தின்றாற் கசப்புத் தெரியாது மைப்பருப்பை
நன்றா வரைத்ததற்கு ளூட்டு. (ருஅ)

உள்வைத் ததைத்தெங்கி னோர்கா யுடைத்தொன்றி
னுள்வைத்தொன் றன்மூடியோங்கும்பன்-மூள்வைத்த
பேரீச்சங் காய்வேப் பிலைச்சாறு விட்டரைத்து
வேரிட்டத் தெங்கின்காய் மேல். (ருகூ)

பூசிக் கவசமிட்டுப் பொற்பா கிழலுலர்த்தி
நேசித் திரண்டறுபா னேர்பலங்கொள்—மாசற்ற
கல்லெருவி லேபுடத்தை காட்டி யெரித்தெடுக்கப்
புல்லுமெழு காப்பொரியாப் போம். (சு0)

எப்படியாறு மியல்பொன் றெரிபினுக்குத்
தப்பியோ டாமற் றரிக்குமே—செப்புமிதில்
பாதி யரிசியெடை பார்த்துண்ணப் பாவைநல்லாய்
கோதில்லா வீரியமாங் கூறு. (சுக)

மண்டலத்தி லேதொடர்ந்த வன்பிணிக ளத்தனையும்
விண்டலத்தி லோடி விடுமேமா-கொண்டலுக்கு
நேர்குழலா யுற்றபசி நீண்டுவரு மாதலினால்
தேர்பானெய் யாகாரஞ் சேர். (சுஉ)

## 40. பராக்கிரம சஞ்சீவி.

பன்னுபல மூன்று மடலரிதா ரத்தையொரு
சின்னக்கல்வத்திலிட்டுத்தேய்த் தமுக்கால்-முன்னுபடி
மின்னெருக்கின்பால்சிறுக விட்டரைத்துக்கள்ளிப்பால்
பின்மூன்று மாக்கதனைப் பேண். (சுங)

பேணி யெடுத்துப் பிறங்குமதிற் சேர்த்தாட்டி
காணிவிடா மற்சிறுத்த நல்லவில்லை—கான்செய்
மானே யுலர்த்தி மணமுருக்கின் சாம்பரையோர்
பானையிலே போட்டுவிட்டப் பால். (௬௪)

வில்லைதனைக் கைப்பற்றி மேயவிதற் குள்ளாக்கி
யொல்லையின்மேற் சட்டி யுடன்மூடி-மெல்லியமண்
சீலைதனைச் செய்துலர்த்தித் தேர்பன் னிருவிசை
கோல விறகொடித்துக் கொள். (௬௫)

கொண்ட விறகடுக்கிக் கூறுகா டாக்கினியா
மண்டவெரித் தாறியபின் வாய்த்தெடுப்பாய்-பண்டா
மருந்தையங்கி காட்டு வளர்தூமங் காணில்
விரும்பி முன்போற் செய்து விடு. (௬௬)

உற்றிப் படிச்செய் யுயர்வே மிகத்திகழும்
மற்றிதிலோர் குன்றி மணிநிறையை-வெற்றிலையில்
வைத்தருந்த மேகம் வளர்கிரந்தி பல்பிணிபோம்
புத்திமிகுந் தாதுமுண்டாம் போற்று. (௬௭)

சாதிக்காய் குன்றிமணி தானன்மைத் தூளாக்கிக்
கோதற்ற முன்மருந்தைக் கூட்டியே—வாதற்
றருந்துவா யாகி லருந்தம் பனமும்
பொருந்துமென் மானே புகல். (௬௮)

## 41. மகாவீரிய லிங்க பஸ்பம்.

மூன்றே விராகனிறை முக்கண்ணனைத்தேடி
ஆன்றவா ளப்பருப்பி லாறிடையே—வேண்டியே
வாங்கியொருகல்வத்தில் வாரணத்தின்வெண்கருவைத்
தாங்கிவிட்டுக் கைகொண்டு சாடு. (௬௯)



சாடி வழித்தெடுத்துத் தானுவிற்கு மேற்பூசி
நீடியவெப் பத்திலிட்டு நீயுலர்த்திக்—கூடியே
முன்கவசம் பின்னு முறையாகச் செய்தெடுத்துப்
பன்கலத்தில் முக்காற் படி. (௭௦)

இரட்டித்த நன்மணலை யேற்கவே கொட்டிப்
பரப்பி யிரண்டு பலமாந்—திரத்தொரு
வாற்கிளிஞ்சிற் றூளை வளமா வதிலிட்டு
மேற்கவசம் வைத்து விடு. (௭௧)

அதன்மேன் முன் சொற்ற வளவாகுந் தூளை
யிதமாகச் சேர்பின் னிரண்டாம்—படிமணலிற்
காலிரண்டு நீக்கிக் கனக்கப் பரப்பியதன்
மேலிரண்டு கையாலும் வேண்டி. (௭௨)

உரத்தவொரு சட்டியெடுத் தோதுமட்க லத்திற்
றிரத்துடன்மேன் மூடிமண்ணூற் சீலை—சிரப்பியே
நாடி யடுப்பேற்றி நாற்சாம மட்டெரி
கூடியகற் பற்பமா கும். (௭௩)

பற்பத் திரண்டு பகர் தண்டு லத்தெடையை
நற்பசுவின் பால்வெண்ணெய் நாடியே-வைத்தருந்தப்
பத்திரட்டி யோர்தினத்திற் பண்பாம் பலந்தேக
சத்திதிட முண்டாகுந் தான். (௭௪)

பத்தியங்கேண் மானே புகர் புளியும் பெண்விருப்பும்
நத்துமெண்ணெ யுட்டணமே நண்ணிவரும்-வத்துக்க
ளாகாவிவற்றை யகற்றிவிட வேண்டு மன்றேற்
போகாதோ யென்றே புகல். (௭௫)

## 42. மகா வீரிய லிங்கச் செந்தூரம்.

பண்பா மிலிங்கம் பலமூன் றெடுத்திடுவாய்
எண்சிலைக் கார மிடித்த தூள்—நண்ணுறு
கொண்ட விராகன் குழிச்சிலையி லிட்டுக்கான்
மண்டுகள்ளிப் பாலையதில் வார். (எசு)

விட்டரைத்துப் பின்றை விரைந்துவழித்தேமுன்சொ
கட்டிக்குப் பூசிக் கவசமிடு—இட்டவுடன் [ல்
மாவிலவங் கத்தூளில் மன்னுபல மூன்றெடுத்துப்
பூவுறுமண் பாத்திரத்திற் போடு. (எஎ)

போட்டவுடன் கட்டிபொருத்திய தன்மேலுமுன்போற்
வாட்டமற்ற தூளை வகையுடன்போட்—டிட்டமுடன்
பாத்திரத்தின் வாய்மூடிப் பக்குவமாச் சீலைசெய்து
நேத்திரம்போல் வைத்துலர்த்து நீ. (எஅ)

காய்ந்தபிற்றை நூற்றிருபான் காட்டும் பலவறட்டி
ஏய்ந்த புடமிட் டெடுக்கவே—மாய்ந்திலங்கைத்
திங்கனியைப் போன்றநிறச் செந்தூர மாகிவிடும்
பாங்குறவே நீபதனம் பண். (எகூ)

பண்ணியிரு தண்டுலத்தைப் பாலாடை வெண்ணெயி
கலைக் கொடுத்துவிடு நங்கையே-வண்ணமிகும்[லே
ஆண்மைபற்றோர்க் காண்மைமிகு மாகத்திற்றுமுன்
பூண்மைய லோங்குமிதைப் போற்று. [டாம் (அ0)

போகம் புகையும் புளியு மிளகாயும்
ஆகம் பொருந்திவா லாகாது—சோகங்
கெடுக்குநெய்பால் நெய்யிற் கிளரப் பொரித்துக்
கொடுப்பவைக ளாமிவற்றைக் கூட்டு. (அக)



## 43. ஷை வேறு.

ஆறுபலத் தேனு மவ்வளவா நற்குமரிச்
சாறுங் கலந்திருப்புச் சட்டியிட்டுக்—கூறுமறு
மாவிரா கன்சிவத்தை வாய்ந்தவதிற் போட்டேநீ
ஏவமிலா வேரொடுப்பி லேற்று. (அஉ)

ஏற்றிச் சிறுக வெரித்துவிட்ட சாறனைத்து
மாற்றமின்றி வற்றும் வகைகண்டு—போற்றி
எடுத்ததன்மீ துள்ளபற்றை யேற்கவே நீக்கி
அடுத்து முன்சொல் மார்க்கம்போ லாக்கு. (அங)

ஆக்கியெடுத் தேசுறண்டி யானகல்வ மீதிட்டு
மாக்கூக் குடக்கருவின் மஞ்சளிற்றேய்-நாற்சாமம்
வில்லையொன்று செய்தகலின் மேலிட்டு மேன்மூடிச்
சொல்லுமைந்து சீலைமண்ணைச் சுற்று. (அச)

வழுத்துபல மாறும் வறட்டிதனைச் சேர்த்தே
அழுத்தப் புடமிட் டழலும்—பழுத்தாறி
விட்டபின்பு நீயெடுத்து மேல்வகையேமீண்டரைத்து
வட்டவெரு முன்னிரட்டி வாங்கு. (அரு)

வாங்கிப் புடமியற்றி மானேமுன் மார்க்கஞ்செய்
தாங்குப்தி னெண்பலத்திற் சார்புடத்தைப்—பாங்கி
லியற்றியே யம்முறைபோ லீண்டும் புரிந்து
நயத்த வெருவளவை நாடு. (அசு)

நாடுவாய் நாலாறு நற்பலத்தி லேபுடத்தைப்
போடுவா யாறியபின் பொற்கொடியே—தேடி
யெடுத்துப் பொடித்தே யியற்றுஞ் சீசாவுட்
படுத்துவாய் பின்மார்க்கம் பார். (அஎ)

குன்றியெடை யொன்றே குழித்தவதிற் பாதியோ
டொன்றுபாற் கட்டிவெண்ணெயுட்படுத்தி-குன்றியவர்க்
கீந்தா னரம்புமுறுக் கேறியே தேகமெல்லாங்
காந்திமிகும் போகசத்தி காண். (அஅ)

நெஞ்சிற் றிடமு நினைவிற் குதூகலமும்
வஞ்சியரைக் கூடி மருவுதற்கா—மிஞ்சியதோர்
வீரியமு மாகும் விளம்புவளி பெண்டள்ளு
காரியங்கை கூடுமெனக் காட்டு. (அகூ)

## 44. மகாவீரிய லிங்க மெழுகு.

தங்குமீ யம்பூசாத் தாம்பிரத்தின் சட்டியிலே
நங்கையே வாலுழுவை நல்லரிசி—பொங்குமிரா
கன்பதினெட் டிட்டுக் கருதுநிறை பன்னிரண்டாய்
மன்துருசை மேலேநீ வை. (கூ0)

வைத்துவெயில் வைத்துகிதம் வாகாப் புரட்டிவந்து
நத்தியிரு பத்தொன்று நாளிலெடு—பற்பமாம்
அள்ளிமுப்பத்தைந்துபல மாந்திருக்கொண்டிருக்குங்
கள்ளிப்பா றேடிக் கறந்து. (கூக)

கறந்தவந்தப் பாலிற் கனக்கவே போட்டு
மறந்துவிடா தோரிரவு வைத்துச்—சிறந்துவரு
மற்றைநாட் காலை வயங்குந் தெளிவிறுத்து
உற்றவொரு நற்கலத்தி லாற்று. (கூஉ)

கட்டினலிங் கத்திலொரு கட்டியை வராகனிறை
இட்டமுடன் மூன்றுக்கித் தோப்பிரே—கத்தகட்டின்
மீதுவைத்து முன்றெளிவான் மேலச் சுறுக்கிட்டாற்
கோதின்மெழு கென்னவா கும். (கூங)



ஆன மெழுகி லரையரிசி தானருந்த
ஊனரம் பெல்லா முறுதியாய்ப்—போனதொரு
நற்றுது மீறி நளிரில்வந்த நோயனைத்தும்
பற்றும லோடிவிடும் பார். (கூச)

வாயுவினைச் சார்ந்து வரும்பிணிகள் குன்றியங்கே
சாயு முடம்பில்வன்மை தானுண்டாம்—ஏயுஞ்சம்
போகசத்தி யாகும் புகல்பிறப்பி லுற்றவைகள்
போகமற்ற வீனமெல்லாம் போம். (கூரு)

## ஷை மெழுகின் இரசவாதம்.

வாதம் விரும்பினல் வண்மெழுகிற் பத்திலொன்றை
ஓதரிய வெள்ளி யுருக்கியே—நீதமுடன்
சேர்க்கப்பொன் னுமெளிநுந் தேர்ந்தவெள்ளி பத்தி
நீக்கமுற நற்றுயைச் சேர். [லொன்று (கூசா)

## 45. வீரியவிருத்தி லேகியம்.

மண்சருக்க ரைக்கிழங்கு மானே விராகனெடை
எண்பதினெந் தாகு மிபன்மதுரம்—முன்பாதி
வாதுமைபி னற்பருப்பும் வாழ்கசக சாவுமந்தக்
கோதின்மது ரத்தளவே கூறு. (கூஎ)

சாதிக்காய் நான்கரையாஞ் சார்பத் திரியுமதாம்
காதலுறு மஞ்சட் கடுக்காய்த்தோல்—ஓதே
மூரையாமா சிக்கா யமைமூன்று மாளி
விரையே முரையாம் விளம்பு. (கூஅ)

நல்லரிசித் திப்பிலிதா னுன்முக்கால் சிவுசுக்கு
மெல்லிபதி னைந்தாம் விளங்குநீர்—முள்ளிவிதை
நாற்பத்தைந் தாகுமே நாடியகத் தூரிமஞ்சள்
எற்கமூன் றுகு மிபம்பு. (கூகூ)

வென்றபூ னைக்காலி வித்தா றபினி கிறை
ஒன்றரையா மீதெல்லா மொண்டொடியே-ஒன்றும்
விராகனிறை யாமறிந்து மேவி யெடுத்துப்
பராபரத்தை மிக்க துதி பண். (௧௦௦)

துதிசெய் திவற்றைநன்றுச் சூரணித்துக் கொள்வாய்
நிதிசே ரரைப்படியா னெய்யை—மதியுடனே
வாங்கிச்சுத் தித்தகஞ்சா வாய்ந்தபலம் நான்கரையைப்
பூங்குழலாய் கொண்டதிலே போடு. (௧௦௧)

ஆத்திரமாக் காய்ச்சியதி லானகஞ்சா நீக்கிநெய்யை
மாத்திரநீ வேறு வடித்துவைப்பாய்—பாத்திரத்தில்
ஆறு விராக னருமுருங்கைப் பிஞ்சேனும்
கூறுபூ வேறுமுடன் கொள். (௧௦௨)

கொண்டரைக்கா லாகவிங்கு கூறும் படிதேனில்
அண்டவே போட்டாட்டி யத்தேனைத்—துண்டா
எடுத்துவைத்துப் பின்புதுலா மேற்றபதி னைந்தில்
அடுத்தகண்டு சீனியெடுத் தா. (௧௦௩)

நற்பா லரைப்படியை நாடியெடுத் தூற்றியே
சொற்போல பாகட்டுச் சூரணத்தைப்—பொற்பா
வடிகட்டிக் கொட்டி விளர்தேன் குழம்பை
உடன்விட்டு நன்று வுழக்கு. (௧௦௪)

கஞ்சாவி னெய்யைக் கருத்துடனே பின்புவிட்டங்
கஞ்சரமுற் கிண்டிமெழு காம்பதத்தில்—எஞ்சாமற்
கண்டிறக்கிக் கங்குலிலே காலுமனைத் தோலாவுட்
கொண்டிடிற்று அண்டாகுங் கூறு. (௧௦௫)



தேகம் பளபளத்துத் திங்களெனத் தோற்றியே
வேகம் பலமனைத்து மேவுமே—போகம்
புரியத் தகுதிவரும் பொற்கொடியார் விட்டுப்
பிரியாரென் றேபுகழ்ந்து பேசு. (௧௦௬)

## 46. ஷை (வேறு) லேகியம்.

கசகசா சுக்கு கறுவாப்பட் டைமா
நசைசேர் மிளகுமல்லி நன்மை—இசையுஞ்சா
திக்காய்சா திப்பத் திரிகிராம் பேலரிசி
தக்ககஞ்சா வொவ்வொன்றுந் தான். (௧௦௭)

ஒன்றே பலமா வுறுதியுடன் கொண்டுகஞ்சா
நன்றாகச் சுத்திசெய்து நாட்டியே—நின்ற
சரக்கனைத்தும் பொன்னிறத்தைச் சார வறுத்துத்
திரத்துடனே சூரணங்கள் செய். (௧௦௮)

செய்தபின்பு நற்குளத்திற் சேர்ந்த பலமூன்று
நொய்யபனை வெல்ல நுவலெட்டு—நெய்யாறுங்
காலுஞ்சேர்த் தப்பிசைந்து கான்சுண்டைக் காயளவு
மாலுடனுட் கொண்டுவரு வாய். (௧௦௯)

இன்னுமொரு மார்க்க மியம்பக்கே ளேந்திழையே
மன்பூமிச் சர்க்கரையின் மாமூலம்—பன்னு
நிலத்தின் பனைக்கிழங்கு நேர்பேதா ளுத்தூள்
தலத்துறுசா லாமிசிறி சார். (௧௧௦)

காகுல் மிசிறிமதன் காமப்பூ காதலுறு
மாகுணஞ்செ யும்றூமி மஸ்தகிதான்—ஆகும்வகைக்
கோர்பலமுங் குங்குமப்பூ வோரரைக்கா லுந்தலத்தில்
வேர்சேர்பூ னைக்காலி வித்து. (௧௧௧)

ஆனபதின் முப்பலமு மாரயின் று லாங்காலும்
மானமுடன் சேர்த்திடிப்ப வைபிடித்து—ஈனமின்றி
முன்மருந்தி லெல்லா முபங்கவே சேர்த்துவிட்டு
உன்சத்திக் கொத்தவா று. (௧௧௨)

பொன்னி ளிரேக்கு புகல்வெள்ளிப் பற்பமுடன்
சின்னமிலா வப்பிரக செந்தூரம்—மின்னுகின்ற
காந்தசெந் தூரங் கரும்பொன்செந் தூரமிவை
ஏந்திக் கலந்துகொள்வா யே. (௧௧௩)

இவ்வாறு செய்த விலேகியத்திற் கெம்மருந்து
மொவ்வாது வீரியத்தை யுண்டாக்கும்—எவ்வாறுஞ்
சோராது தேகதிடம் செவ்விரத்த மீறுமல்லல்
வாரா திதனால் வழுத்து. (௧௧௪)

## 47. வீரியத் திலா.

வீட்டுகரு நாயி விளம்புய்வா ளப்பருப்பு
கோட்டி லுறுமெட்டிக் கொட்டை யிகு—காட்டிலுறு
வெண்குன்றி யின்பருப்பு மேயவிவை யொவ்வொன்
கண்ணுன் கரைவிரர் கன். [றின் (௧௧௫)

முந்தி யெடுத்தேநீ மூவிருவி ராகனெடை
இந்திரகோ பத்தை யிசைந்தெடுத்தே—தந்திரமாக்
கொள்ளவொன் றுக் கூட்டிக் குலவிருபா னுன்குபலம்
வெள்ளாட்டின் பாலே விடு. (௧௧௬)

விடலின்றி யாட்டி மிளிர்மாத் திரைகள்
கடலையள வாப்புரிந்து கண்ணே—கெடலரிதாம்
நல்ல குழித்தயில காட்டமுட் டேனயிறக்கி
அல்லிலே தேர்ந்தெடுத்திங் காண். (௧௧௭)



குழியிற் றடவிவரக் கோணலடிப் பாகஞ்
செறிதா யிருத்தனுனி சேர்விட்—டறியப்
பெருத்திருத்தல் சோர்வடைதல் பேசுமிவை யாவும்
பொருத்தமுறப் போப்பலமாம் போற்று. (௧௧௮)

## 48. தாளகப் பற்பம்.

சுத்திசெய்த தாளகத்திற் றேற்றியவி ராகனிடை
பத்தியுடன் மூன்றெடுத்துப் பக்குவமே-பெற்றகல்வம்
தண்ணவைத்து நீபொடித்து நற்றுங் சுடங்கொடுத்த
வெண்முட்டை யின்கருவை விட்டு. (௧௧௯)

ஆட்டி யுருட்டியந்த வண்டத்தோட் டின்றுறவே
போட்டதனால் மூடிப் புகல்பத்தா—நாட்டிபலங்
கோதுமையின் மாவாற் குறித்துக் கவசமிட்டு
வாதிவிதற் காகான் மடங்கு. (௧௨௦)

புல்லும் வறட்டிப் புடம்போட் டதுசிவந்த
நல்ல சமையத்தை நாடிநீ—ஒல்லையிலே
அஞ்சா தெடுத்துச்சூ டாறியபின் னேபிரிப்பாய்
வஞ்சியே பற்பம் வரும். (௧௨௧)

ஆமிப்பற் பத்தி லரிசிபெடை நான்கெடுத்துத் [ளோர்
தோமில்லா வெற்றிலையிற் றேற்றவைத்துப்—பூமியுள்
தின்றூற்குட் டங்கிரந்தி நீரும்வெண்ணெய் சேர்த்தரு
பொன்றுத விந்து புகும். [ந்தப் (௧௨௨)

## 49. ௸ (வேறு.)

வெங்காய மொன்றை விரும்பியெடுத் தேபிதழ்க
ளங்கரத்தாற் போக்கி யதனடுவே—தங்குநல்ல
வுள்ளிக்குள் ளேதுளையிட் டுட்கொள் ளளவுசுத்தித்
தெள்ளியதோர் தாளகத்தைச் சேர். (௧௨௩)

எடுத்தவித மெல்லா மெடுத்தபடி சேரத்
தொடுத்தேழு மண்சீலை சுற்றி-அடுத்தநாற்
பான்பலவ ரூட்டி பரப்பி யவிபுடத்தை
வான்பெறவே போட்டு மகிழ். (கஉச)

ஆனந்த மாயெரித்தங் காறியபின் னேயெடுக்க
நானிந் திகழ்நுதலாய் நற்பற்பங்—தானந்த
மாத்திகழுங் குன்றி மணியொன் றரைவகிய
காத்திரத்தாற் குற்றவெண்ணெய் காண். (கஉரு)

வெண்ணெயினு மிக்க விருத்தருக்கு முந்திரிகை
வண்ணப்பழச்சாற்று மாட்டிவிடு—எண்ணரிய
பக்கவா தம்போய்ப் பசியமுக வாதமற்று
மிக்கதா தாகுமிது மேல். (கஉசா)

## 50. இலிங்கச் செந்தூரம்.

கட்டினவி லிங்கங் கரும்பொன்னின் சட்டியிட்டு
முட்டைத் தயிலத்தை முன்னிவிட்டே-இட்டமுடன்
எற்ற சுறுக்கிட் டெடுத்துப் பொடித்தரிசி
சாற்றும்வெண்ணெய் தேனிலே தான். (கஉஎ)

விரவிக் கொடுக்க விளங்குநரம் பெல்லாந்
தராமாப் பலத்துரிய தாதுந்—திரமாகுந்
தேகசத்தி யுண்டாந் திருவுண்டாம் சீர்பெறுசம்
போகசத்தி யுண்டாம் புகல். (கஉஅ)

## 51. ஜீவாமிர்த லிங்க பற்பம்.

கலிங்கத் தலைவெட்டக் காணுமொன் றின் கட்டி
யிலங்க விராக னெடுமூன்—றலங்கா
இலவங்கச் சூரணத்தி லேற்றவிரு முக்கால்
துலங்கும் படிக்காரத் தூள். (ககூஉ)



மூன்றுபலங் கொண்டு முழுமண் கலத்தில்முன்னே
ஆன்றபடிக் காரத் தரைப்பங்கை—ஏன்ற
வடியிட் டிலவங்கத் தாம்பொடியிற் பாதி
மிடியின்றி மேற்போட்டு மேல். (கங0)

கட்டிதனை வைத்துக் கருதிலவங் கத்தூளில்
விட்டிருந்த பாகத்தை மேற்போட்டே—அட்டியின்றி
நின்றபடிக் காரத்தி னேர்பொடியை யும்போட்டு
முன்றிகழும் பாத்திரத்தை மூடு. (கஙக)

பந்தகஞ்செய் தேழாப் பகர்சீலை மண்ணிட்டே
அந்தமுட னீரெழுபா னனபலம்—உந்தெருவில்
நற்புடத்தை யிட்டெடுக்க நாரணன்கை நந்தெனவே
பற்பந் திகழுமுடன் பார். (கஙஉ)

தண்டுலமி ரண்டேனுஞ் சாருமூன் றேனும்வெண்ணெ
மண்டுபா லேடிவற்றில் வைத்தருந்தப்-பண்டுற் [ய்
பனத்தில்வந்த தாதுநட்டம் பாறமற்ற தெல்லா
மனப்பரிவுற் றேடும் வழுத்து. (கஙங)

நாடி பலத்து நபுஞ்சகமெல் லாநீங்கிப்
பீடி லகு மாண்மை பிறங்குமே—நீடி
மனைக்கு மளகத்தாய் மாமருந்திற் குற்ற
குணத்தையெவர் சொல்லவல்லார் கூறு. (கஙச)

## 52. விருத்த கௌமார சிவகாமி பற்பம்.

வளர்ந்தசிவ காமி வராகனிரு முக்கால்
வளர்திகழ்நான் காங்காய்ச்சல் வாய்ந்தே—அளந்த
வெடியிலவ ணந்தான் விராகனிறை யாறு
கடிமிகுகு டன்னிரட்டி காண். (கஙரு)

மேவு மகவில் வெடியுப்புத் தூள்பாதி
யேவுறவே சேர்த்தக் குமரியைத்தான்—பாவையே
வைத்ததன்மே லின்ற மருபாதித் தூள்பரப்பி
நற்சூட் டிணைப்பொடித்து நாட்டு. (கஙசு)

போட்டமுத்தி மூடிப் புகமுழுமண் சீலையிணித்
தீட்டுசத நாற்பா னெனும்பலத்தில்-நாட்டுமெருத்
தன்னிற் புடமியற்றச் சார்ந்த வெடியுப்பு
மன்னுமுமை மாதுமங் கே வாய்ந்து. (கஙஎ)

நெகிழ்ந்தே வதியுமதை நேர்ந்தெடுத்து நீயு
மகிழ்ந்துபொடித் தேமான் மதத்தில்-புகழ்ந்துசமன்
கூட்டிவைத்துக் கொண்டு குறித்த விரண்டரிசி
நாட்டில்வெண்ணெய் பாலேட்டி னூட்டு. (கஙஅ)

நாடு மிலேகியத்தி னற்றொருகுறி யும்மாகும்
பீடுடன்சேர்த் துண்டுவரப் பேதையே—கூடும்
விருத்தனுங்கௌ மாரதிசை மேவுவா னென்றுந்
திருத்தியுறக் கூடுந் திரு. (கஙகூ)

தளர்வுற்ற நாடி தடித்துமுறுக் கேறி
வளர்வுற் றிடுமனதில் வன்மை—கிளர்வுற்று
கண்ணை யுடல்வலுக்கு நற்புகைகூ டெண்ணெய்புளி
பெண்ணைவிட்டு மற்றதெலாம் பேண். (கச0)

## 53. சர்வரோக சஞ்சீவி பற்பம்.

மாசுவிட்ட பாலாத மானே விராகனெடை
பேசுமோ ரரெறெடுத்துப் பேணுகல்வ—மூசுறவே
சேர்த்தத்திப் பாலைச் சிறுகவிட்டு நாற்சாமம்
ஆர்த்தரைத்தங் கோருருண்டை யாக்கு. (கசக)



செப்பிரண்ட டைப்பலமாந் தேர்ந்தபெருந் தேகத்தை
ஒப்புகல்வத் திட்டுமுன்பா லாற்றியே—தப்பிலிரு
சாமமரைத் தேயுருண்டை தன்னிற் கவசமிட்டு
நேமமுடன் மண்சீலை சேர்ந்து. (கசஉ)

மூன்றுசெய்து முப்பானில் மூவிரண்டு சென்றபலம்
ஆன்ற வறட்டி யடுக்கியே—தோன்ற
அவிபுடமிட் டாறியபின் னன்பா யெடுக்கப்
புவியிலுயர் பற்பமாம் போற்று. (கசங)

இப்பற்பத் தோடுசம னேற்றவுயர் மான்மதத்தை
அப்பொழுதே சேர்த்தங் கரைத்துவைப்பாய்—செப்பு [மிதைச
சேர்க்காம லும்பிணிக்குத் தேர்ந்தே செலுத்தலாம்
தார்க்குழலாய் பின்னுமிதற் றூன். (கசச)

கத்தூரி சேர்த்திரண்டு காண்மூன் றரிசியெடை
சுத்தவெண்ணெய் பாலேட்டிற் சூழ்ந்தருந்த-மெத்தவு [ந்தான்
நீர்த்துவிட்ட தாதிறுகி நேருமுயர் தம்பனமும்
ஆர்த்தகரம் பின்வலியு மாம். (கசரு)

கூறுகின்ற காயத்தூள் குன்றி மணியிரண்டு
மீறுசுக்குத் தூளுமங்கு மேயவெடை—வீறுடனே
ஒன்றாக்கிப் பற்பத் துடனுணவ சிரணமும்
பொன்றுக்குன் மப்பிணியும் போம். (கசசு)

விராக னிறைதேனில் மேவியுண்ணக் குட்டம்
பராவு கிரந்தியெல்லாம் பாறும்—தராதரங்கண்
டெண்குன் றிமணி யெடை படிக்காரத் தூளிற்
கொண்டபற்பத் தையெடுத்துக் கூட்டு. (கசஎ)

கூட்டிவெண் ணெய்யிற் குழப்பிக் குணமாக
கீட்டிவிடு மேகப்புண் ணீவிரணம்—விட்டுகின்ற
மேகவொழுக் கெல்லாம் விளம்புதினமூன் றினுக்குட்
சாருமிதை யாவருக்குஞ் சாற்று. (௧௭௮)

சாதிக்காய் குன்றியெடை தானிரண்டு குங்குமப்பூ
ஆதியுறும் பத்திரியு மவ்வெடையாம்—நீதியுடன்
தூளாக்கிப் பற்பந் தொடுத்துண்ணச் சோரியுடன்
வீழாத தாது மிகும். (௧௪௯)

## 54. குஷ்டரோக சண்டப்பிரசண்ட மாத்திரை.

ஆனைப்சேங் கொட்டை யமர்வா லுழுவையிவை
மானவகைக் குப்பலமா வாங்கிப்பின்—ஆன [ன்று
இரண்டையுங்கல் வத்திட் டிடித்துவெண்ணெய் போ
திரண்டுவரும் போதுநெய்யைச் சேர். (௧௫0)

கலந்துழக்கி யீயங் கலந்தொரு தாம்பிரக்
கலந்துலக்கி வைத்துக் கருத்தா—நலந்திகழும்
ஆறுவிரா கன்சிலத்தை யானவதற் குப்பண்வைத்து
மாறுகெட மேன்மூடி வாய். (௧௫௧)

வாய்மூடி யேழாகு மண்சீலை செய்துலர்த்திச்
சாய்வில்லா தேயடுப்பிற் றானேற்றி—ஏய்முதலில்
தீபாக் கினியாகச் செப்புமொரு சாமமெரி
தீபார்பின் முச்சாம நேர்ந்து. (௧௫௨)

ஓதுகம லாக்கினியா வோர்ந்தெரித்தங் காறியபின்
மாதுநல்லாய் கண்டெடுக்க மாசிலப்பாம்—சாதுவுடன்
விள்ளுமத னைப்பொடித்து மேய விராகன்னிறைதான்
கெள்ளா றெனப்பின் றூறி. (௧௫௩)



பற்றுப்பா டாணத்தின் பற்ப மெனினுமன்றி
உற்றபதங் கம்மேனுமோ தும்வெள்ளை—பெற்றதொரு
பாடாண மேனும் பகரும் விராகனிறை
கோடாத மூன்றென்றே கொள். (௧௫௪)

நவ்விமத மொன்று நசைகுங்கு மப்பூவொன்
றவ்விடத்தே சேர்த்திஞ்சி யாஞ்சாற்றைச்—செவ்வி
விட்டிருபத் தெட்டு மிகுசாம நீயரைத்து [பெற
வட்டமுறும் பானுமுன்னே வை. (௧௫௫)

தண்ணகன்ற பின்புகல்வந் தன்னிவிட்டுத் தூளாக்கி
வண்ண விலிகுசத்தின் மாச்சாற்றில்—திண்மையுடன்
பன்னிரண்டு சாமமட்டும் பாங்கா யரைத்துழுந்து
தன்னிலுறு மாத்திரையாத் தான். (௧௫௬)

உருற்றி பிழலி லுலர்த்திவைத்துக் கொண்டே
அருர்ப்படுவோர்க் கொன்றை யரிதான்—கருறும்
அதிகாலை வெண்ணெயிலிட் டாவலுட னூட்டிப்
புதியபசும் பாலருத்திப் போடு. (௧௫௭)

பாலருத்த நேரிழையே பாலியத்தின் சேட்டையால்
கோலமுட னுமான் குறிக்கோணல்—மால்மர
வந்த வடிச்சிறுமை வாய்ந்தநுனி தான்பெருத்த
விந்தக் குணங்களொழிந் தே. (௧௫௮)

ஆண்மைமிகும் வேறுமருந் தாற்றீரா நோயெனவே
காண்மைமிகு மப்பிணிகள் கன்றுமே—வாண்மையுறு
கண்ணுய் பசியுண்டாங் காசமுட னேயிருமல்
நண்ணும வோடும் நவில். (௧௫௯)

பருவந் தகித்த பலபிணிகட் கெல்லாந்
தருணத் துதவுதற்குச் சார்ந்தே—வருமிதுதான்

சஞ்சீவிக் கோப்பாங் கரணியிசை யெம்மருந்தும்
மிஞ்சா திதற்கென்றே விள். (கசு0)

## 55. அம்பர் மாத்திரை.

அம்பர்விரா கன்றொன் றரையாஞ்சா லாமிசிறி
உம்பராஞ் சூரணந்தா னோரிரண்டு—வம்பாம்
பருத்தி விதைப்பருப்பு பாவையே நான்காம்
கருத்திசேகத் தூரியுமைங் கால். (கசுக)

மாவிலவங் கத்தூரு மத்தகியின் சூரணமு
நாவிலுரை மான்மதத்தி னன்றிறையாம்—கோவிலுறை
இச்சரக்கெல் லாங்கல்வத் தேர்க்கசக சாச்சரும
மெச்சுகஷா யத்தையுடன் விட்டு. (கசுஉ)

நாற்சாம மாட்டி நவிலிரண்டு குன்றியெடை
ஏற்குநல்ல மாத்திரைக ளிட்டேயிங்—நூற்குளமை
தங்கத் தகடுசுற்றிச் சார்ந்தவொரு செப்பதிலே
தங்கச்செய் தேபுதிய தாம் (கசுஙு)

கறந்தவாப் பாலைக் கருந்துடன்கைக் கொண்டே
சிறந்தவொரு மாத்திரையைத் தின்று—சிறந்திகழுப்
பாலைக் குடிக்கப் பகர் வீரியமிகுந்து
மாலைக் கொடுக்கு மதி. (கசுச)

இம்மாத் திரைபா விலகுபிர யோசனத்தை
இம்மாத் திரமென் றியம்புதற்கெங்—கெம்மாலும்
ஆகா திதனுமை மானமத பாணமாம்
தோகாய் பலர்க்குமிதைச் சொல். (கசுரு)

## 56. இராஜ தம்பன மாத்திரை.

சேவலின்பீ சத்தைத் திரச்சுத்தி செய்திரட்டி
மேவுமிந்தி ராணியுப்பைவேண்டியே—காவலுடன்



சொப்பபொடி யாக்கி நுவலிரண்டு பங்கிட்டுச்
செய்பவொரு பங்கைச் சிறு. (கசுசு)

கலத்திலிட்டு மேலே கனபீசம் வைத்து
நலத்துடன்மற் றைப்பங்கா நாடும்—பலத்தவுப்பை
மீக்கொளப்போட் டேமூடி மேயமணற் குள்ளிட்டுச்
சூங்குமசாற் சாமஞ் சுடு. (கசுஎ)

சீதமுற்ற பிற்றை தெரிந்தெடுக்க வித்ததுவும்
போத மணறன்னைப் போன்றிருக்கும்—ஓததையுந்
தம்பனத்திற் காகத் தனித்துஞ் செலுத்தலாம்
தெம்புடன்பின் சொல்வதையுந் தேர். (கசுஅ)

ஆனமண லோர்கூறு மம்ப ரொருகூறும்
மானின் மதத்தில் வளரரையும்—வானமருங்
குங்குமப்பூ காலுமுடன் கூட்டித்தேன் விட்டரைத்து
செங்குன்றி போன்மாத் திரை. (கசுகூ)

பங்கயக்கை யாலுருட்டிப் பத்திமிக வைத்துவிடு
அங்கயற்கண் ணாயொன் றருந்தியே—துங்கமுறுங்
கண்டிட்ட பாலதனைக் காய்ச்சிப் பருகிவிடில்
மண்டிரத்தச் சத்து வரும். (கஎ0)

விரைந்த கலிதம் மிருகனவி லாகிக்
கரைந்த கலிதமிவை கட்டி—வரைந்த
படிநிற்குந் தேகம் பலக்கு மிதற்கிப்
படியினிக ரொன்றுமிலை பார். (கஎக)

## 57. தாளக பற்பம்.

விண்டுமனை யாட்டி விராகனிறை மூன்றெடுத்து
அண்டிகினிஞ் சிற்சுண்ண மவ்வெடையே—கொண்டே
[குக்கின்

வெண்ணாழுதை விட்டே விளம்புமிரு சாமந்தேப்த்
தென்னறு மறுநா ளெடுத்து. (௧௭௨)

சம்பிரச் சாற்றிலிரு சாமமெரித் தேவில்லை
கெம்பீர மாச்செய்து கேண்மையுடன்—வம்பான
வேப்பிலையிற் பன்னிரண்டு மேய பலமரைத்து
மாப்பெரிய வில்லையுள்ளே வை. (௧௭௩)

இட்டுப் போதிந்தங் கெழுசீலை மண்செய்தோர்
சட்டியிலே வைத்துமேற் சட்டியிட்டு-அட்டியின்றி
மேனுமைந்து சீலைசெய்து வேண்டியபுடப் பேற்றிரா
றுறுகொண்ட சாமமெரி நாட்டு. (௧௭௪)

சொற்றகனி தப்படிபே சூழ்ந்தெரிக்கத்தாளகந்தான்
பற்பமா குங்கண்டு பண்புடனே—உற்றெடுப்பாய்
குன்றியளை யாகுமுள்ளே கொள்ளு மளவிதற்கு
நன்றுடன்மேற் சொல்வதையு நாடு. (௧௭௫)

சாலா மிசிபித்தா டக்குன்றியெட்டுடனே
மேலாநீர் விட்டான் கிழங்கின்றாள்—தோலாத
அந்த வெடையு மருந்திருநீற் றுப்பச்சைச்
சொந்தவித்துச் சோடசமுந் தாங்கு. (௧௭௬)

தாக்கிக் கலந்துமுன்னே சொற்றபற்பங் கூட்டியே
நாக்கிலிட்டுத் தின்றுவிட நங்கையே—நோக்கும்பார்
இந்தியமு முண்டா மியன்மோரி லேயருந்த
முந்துபல பேதிகள்போ முன். (௧௭௭)

58. சஞ்சீவி லோக செந்தூரம்.

எஃகினது துண்டை பொடித்தே நெருப்பிலிட்டு
அஃதிடா மற்சுட் டருணத்தின்—வெஃகுபழச்



சாற்றிலிட்டு முன்போற் றழலிலிட்டு மீண்டுமங்கே
போற்றுமந்தச் சாற்றினிலே போடு. (௧௭௮)

இத்தகவி நாறுமுறை ஏற்கவே செய்தெடுப்பாய்
அத்தருணங் கல்வத் ததையிட்டு—நைத்தே
பலமிரண்ட மைப்பொடிக்குப் பன்னிருபா னென்கு
பலநெல்லிக் காய்ச்சாற்றைப் பார். (௧௭௯)

அச்சாற்றை விட்டே யடுத்த நிழலில்வைத்து
நிச்சயமாக் காய்ந்தபிற்றைநீ யெடுத்தால்-மெச்சுமுயர்
செந்தூர மாகுந் திகழ்குன்றி யொன்றிரண்டு
நொந்தவர்க்கிங் காநீ நுவல். (௧௮0)

அளவின் படியேநல் லாமலகச் சாறுங்
களவிலாத் தேனுங் கருத்தா—புளவகைக்கு
விள்ளு முப்ப விராகனெடை சேர்த்திட்டுக்
கொள்ளத்தா னுண்டாகுங் கூறு. (௧௮௧)

சீந்திற் சருக்கரையுஞ் சீரேலச் சூரணமும் [டுத்துச்
போந்தவிரா கன்வகைக்குப் போற்றுகால்-தேர்ந்தெ
சிக்கியசெந் தூரத்திற் சேர்த்தருந்த முப்பொழுதில்
மிக்க சுரம்போய் விடும். (௧௮௨)

செப்புவிரா கன்றேனிற் செந்தூரஞ் சேர்ந்தருந்த
ஒப்பில்பண்டை யாஞ்சுரமு மோடிவிடும்-இப்படியே
பாலேட்டி விட்டுன்னைப் பற்றிரார் றுர்ப்பலத்தின்
மாலோட்டி வைக்கும் வழுத்து. (௧௮௩)

பண்டைப் பனைவெல்லம் பற்றோர் விராகனிறை
கண்டமா வுப்பதிலே கால்சேர்த்தி—ரண்டையுமொன்
றாக்கிச்செந் தூர மமைத்தருந்த மூலத்தைப்
போக்கியுடல் காக்கும் புகுந்து. (௧௮௪)

## 59. வீரசூர லிங்க செந்தூரம்.

திருகமைந்த மூடியொன்று சேரிருப்புச் செப்பில்
வருமிலிங்க மோர்பலத்தை மாட்டித்—திருகியுடன்
மூடிவைத்துப் பின்றேனெய் முன்றுசேங் கொட்டை
நாடி வகைக்கிருபா னுன்கு. [யிவை (கஅரு)

சேரும் பலங்கண்டு சேங்கொட்டை யைப்பொடித்து
சேருநெய்தே னிற்கலந்து நீயியம்—சிருடனே
பூசியசெப் புச்சட்டி புக்கவிட்டு முன்சிமிழை
நேசமுட னுட்செலவே நீட்டு. (கஅசு)

போட்டவுடன் மேற்சட்டி பொக்கெனவே மூடியதிற்
கூட்டமுறச் சீலைகட்டிக் கூறடுப்பில்-நாற்சாமம்
இட்டுத்தீ பாக்கினியை யேற்கவெரித் தாறியபின்
பிட்டெடுசெந் தூரமாம் பின்பு. (கஅஎ)

சிலைக்கல்வத் திட்டுத் திகழெருக்கின் பாலை
மலைப்பின்றி விட்டு வலிகொண்-டலைத்தாநாற்
சாமஞ்சென் றேவழித்துத் தக்கவில்லை யிட்டங்கு
தாமதமி லாதோட்டிற ருக்கு. (கஅஅ)

ஓங்மேன் மூடி புயமொழுமன் சீலைசுற்றி
நாடு மிருபத்து நான்குபலம்—கூடு
எருவிற் புடமிட் டெடுகா லரிசி
உருவிற் கொடுக்குமளவு. (கஅகூ)

பசுவினவ நீதமதன் பால்வெண்ணெய்க் குள்ளிட்
டசுபங் கெடவென் றருந்த—வசமாஞ்
சுறுசுறுப்பு வீரந் தொடர்புருஷத் தன்மை
அறுநாம மின் புஷ்டிப்புமன் டாம். (கசு )



இம்மருந்தை புண்ணுங்கா லேற்றபுளி பெண்டள்ளி
மம்மர் மிகவே வரும்பசிக்கு—அம்மமருந்
தித்திப்பா காரஞ் சிறந்தமிட்டாய் வர்க்கங்கள்
நத்துவதே மிக்க நலம். (ககூக)

## 60. நிராசை நிவாரண தைலா.

கள்ளமறு மாவிலவங் கச்சூ ரணமதனுந்
தெள்ளுபட்டைத் தூளுஞ் சிறந்தமண-முள்ளதொரு
குங்குமப்பூ வெள்ளெருக்கிற் கொள்வேர்ப்பட்டைத் தூ
மங்காய் விராகன் வகைக்கு. [ளு (ககூஉ)

வேதமெனக் கொண்டு விளங்குகண்டங் கத்திரியிற்
போதவருஞ் சாற்றைப் புகழவிட்டங்-காதரவாய்
ஓரிரண்டு சாம முடனரைத்து மாத்திரைசெய்
சேரிருண்ட கூந்தலாய் தொட்டு. (ககூங)

வேண்டியபதோ ரேல்லை மிளிர்மாத் திரையொன்றை
ஈண்டுகண்டங் கத்திரிச்சாற் றிட்டிழைத்து-மாண்டவி
கண்டுமேற் பூசிவரு காலையிலே வெந்நீரை [டங்
மொண்டுகழு வச்சொலுவாய் முன். (ககூச)

இவ்வாறு செய்ய வியல்பா லியத்தினிலே
ஒவ்வா தனசெய் துடன்கொண்ட—அவ்வாதாம்
ஆணி னுறுப்பி லடைந்தமிகு சோர்வையெலா
நாணிடவே போக்கிவிடு நாடு. (ககூரு)

## 61. நிராசை நிவாரண நெய்.

மாசற்ற வானெய் வளரெருக்கின் பால்வகைக்கு
மூசுபல மொன்றெடுத்து மூட்டியே-பேசுமொரு
காமாத்தி லிட்டுக் கலந்தபால் சுண்டியபின்
ஏமமுறு நெய்யை யெடுத்து (ககூசு)

வெள்ளைக் கெவுரி விராகனெடை முக்காலே
அள்ளலுறுங் தூள்செய்ததிற்போட்டுத்-தெள்ளியதோர்
சிசாவி லூற்றிவைத்துச் செப்புகுன்றி மூன்றிரண்டு
பேசாமலேயெடுத்துப் பின். (௧௯௭)

கோசத்தி னுண்ணிதாக் கூறுதல நீக்கி
மாசுற்ற மற்றதல மாட்டிவிட்டு—நேசத்த
வெற்றிலை மேலிறுக்கி மேவியநாண் மூன்றுசெய
அற்றுவிடுங் கோணன் முதலங்கு. (௧௯௮)

## 62. சஞ்சீவி சூத பற்பம்.

வெண்மொள வுப்பை விரும்புமொரு சட்டியிட்டுக்
காண்டவுலை வைத்தூதிக் கட்டியபின்-ஆண்டெடுத்து
முன்னிப் பொடித்தவுடன் முப்பது விராகனெடை,
மன்னு மிரதத்தை வாங்கு. (௧௯௯)

வாங்கித் தசமாக்கி வாகாங் தருசுபலம் [கம்
தாய்குமைந்தைக் கொண்டத் தகையாக்கி - ஆங்குவங்
பற்றுத தாம்பிரத்தின் பாத்திரத்தி லுப்பின்றூள்
பொற்று மறைக்கையினும் பேரடு. (௨௦௦)

அங்குக் குழியொன் றமைத்திரதம் பத்திலொன்றைச்
செங்கைகொடு சேர்த்தே திகழ்துருசில்-தங்குமொன் [றை
மேற்சேர்த்து முன்னே விளம்புமுப்பின் றூளையதன்
பாற்சேர்த்துப் பள்ளமொன்றைப் பண். (௨௦௧)

இந்த விதமா யிருந்துபத்துப் பங்கினையும்
முந்த வியற்றி முடிவிலே—அந்தவுப்பை
மூட்டிப்பொதிந்துமேல் மூடியதை யேயரைத்து
நீட்டுகவ சங்கலத்திற் கிட்டு. (௨௦௨)



உத்தானத் தேற்றி யொருநாள் முழுதுநீ
அத்தானத் துற்ற வழறன்னைப்-புத்தியுடன்
கூட்டிக்கூட் டிக்கொளுத்திக் கொள்கலத்தின் மேற்பு
காட்டுமுவர் தோன்றமைய நாடி. [றத்தில் (௨௦௩)

உடனெடுத்துப் பார்க்கி லொளியிரத பற்பங்
கிடனுகிக் காணுமதிற் றேனே—எடையரிசிப்
பாதியெடுத் தாவின்வெண்ணெய் பானெயிவற் றாடு
நீதிபெற வூட்டிவிடு நேர். [வைத்து (௨௦௪)

ஆடுகரம் பெல்லா மடல்கொண் டுடன்வலுத்து
நீடுமுறுக் கேறி நிலைபெற்றுப்—பீடுடைய
மேனி மினுமினுத்து மிக்கபல முண்டாகும்
கானிலத்தி டில்லை நவில். (௨௦௫)

இம்மருந்தைப் போலவுமொன் றிப்புவியி லில்லைமின் [னே
எம்மருந்து மிம்மருந்துக் கீடாகா—நம்முறைகண்
டேற்ற படிசெய் திலேகியநெய் தன்னிலிட்டால்
ஏற்றமிக வுண்டா மியம்பு. (௨௦௬)

ஆவலுட னுன்சொல் லரியநூல் போற்றியெல்லாங்
காவலுடன் செய்தாலே கைகூடும்—பாவமுற
நிந்திப்பார்க் கெச்செயலு நோரது மானேநீ
முந்திப்பார்த் தன்பா முயல். (௨௦௭)

## 63. மகாவீரிய பாலரசாமிர்தம்.

[றக்
பால விரதத்திற் பன்னிரு விராகனெடை
சாலவெடுத் தவ்வெடைக்கற் சார்ந்தவெள்ளி—கோலமு
கொண்டதிலே நீசிறிதாக் கூழியதோர் மூசைசெய்து
லெண்டிர தத்தையுளே யூற்று. (௨௦௮)

செங்கலொன் றுதேடித்திகழ்மூசை கொள்ளும்வண்ண
மங்கலயாவேர்சூழியை வாய்ந்தகழ்ந்து-செங்கையுறு
மூசையதிற் சேர்த்ததன்வாய் முன்னங் குலமொன்று
தேசுடனே மேற்றெரியச் செய். (உ0௯)

அந்தச்செங் கல்லை யடுப்பின்மிசை வைத்திலங்கை
அந்தச் சுகவிறகிட் டாவலுடன்—முந்நெரி
பின்மூன் றரைவிசை பேரெலுமிச் சம்பழத்தை
மன்சா றெடுத்து வடி. (உ௧0)

கட்டியெடுத் தேமண் கலயத்தில் விட்டுசெ
யிட்டுத் துளசி பிழியற்றிமேற்—கட்டி
யிரதத்தொல் வோர்துளியா பேற்றிறங்கச் செய்தே
விரவுசுறுக் கிட்டு விடு. (உ௧௧)

பின்புமுப்பத் தைந்துபலம் பேசு பருத்தியிலை
யின்சாற்றி லுஞ்சுறுக்கக் கேற்றுச்செய்-முன்பரத்தின்
நற்கருணை யாலேமுன் றட்டிவைத்த மாவிரதம்
பற்பமாத் தோற்றிவிடும் பார். (உ௧உ)

இருகசக சாவி னடைபசுவின் வெண்ணெய்
தருமுயர்பா லாடையிவை தன்னில்-அருமையுடன்
மானேயுட் கொள்ள வளர்கிரந்தி மேகம்போம்
தானே யிரத்தந் தரும். (உ௧௩)

பசியுமிக வாகும் பகரிந் தியமாம்
கசியுந்தா தியாவுமுள்ளே கட்டாம்—நிசியிற்
கலக்கின்ற போகமாங் காணைக்தேழ் நாளில்
துலக்கமுற வீரியமாஞ் சொல்லு. (உ௧௪)

155



## 64. தாம்பிர பற்பம்.

நல்லதொரு தாம்பிரத்தி னொடும் விராகனொன்றை
மெல்லியதாச் சொல்தகடா மேலவடித்-தொல்லையிலே
அக்கினியி லிட்டங் கழல்போலக் காய்ச்சியே
மிக்க மிளகாயின் வேர். (உ௧௫)

தந்ததொரு சாற்றிலே தானெடுத்துப் போட்டுவிடு
முந்தைப் படிநாற்பான் முன்றுமுறை-தந்திடச்செய்
கண்ணே யெடுத்துக் கருதுபதின் மூன்றுபலந்
தண்ணுவற் கொட்டையிலே தான். (உ௧௬)

உளபருப்பு நாமிங்கே யோதுமளவான
மிளகா யிலையுமுடன் வேண்டிப்-பளபளக்கும்
வெண்ணெய்போ லாட்டி விளங்குதக டேபடுத்தி
மண்ணுன்முச் சீலைதனை மாட்டு. (உ௧௭)

பாங்கா வுலர்த்தியிரு பத்தேழாம் வீசையிலே
தாங்கும் வறட்டிகளைச் சூட்டியே—ஓங்குகுழி
அப்புடத்திற் சோக்க வதிற்பற்ப மாமளவு
செப்பரிசி யொன்றிரண்டாந் தேர். (உ௧௮)

சோகமில்லாப் பாலாடை சொல்வெண்ணெயிட்டருந்த
மேகமொடு குட்ட மிருகிரந்தி—மாகுன்மம்
அற்றேடித் தேகபுஷ்டி யாமிக் கியவிருத்தி
உற்றேவந் தெய்துமிதை போர். (உ௧௯)

## 65. வெள்ளைப் பற்பம்.

குற்றமற்ற வெள்ளை குறித்தவிரா கன்மூன்று
பெற்றிருப்புச் சட்டியிலே பேணிவைத்து-சுற்றடுப்பின்
மேல்வைத் திலந்தை விறகா லெரியெழுப்பிக்
கால்வயங்க வீரிரண்டு கண்டு. (உஉ0)

157



நாற்றிசையு முன்னே நவிலிருப்புச் சட்டிக்கு
மேற்பிசமு கட்டே மிளிர்துணியை-யேற்றநாற்
றம்பங் கனில்விரித்து சாரத் தொடுத்ததன்மேற்
றம்பமா நாயுருவி தான். (௨௨௧)

பட்டைப்ந்த சாம்பல் படிகாலைப் போட்டதினீர்
விட்டுவரு வாய்சிறுக மேவுசலஞ்—சொட்டுவதும்
பாடாண மீதிற் படும்வகையே செய்துவர
ஓடாம நாழிபத்திற் குள். (௨௨௨)

வெண்ணிறமாம் பற்பம் விளங்கு யரிசியொன்றை
வெண்ணெயிலே வைத்து விழுங்கிவிட-சன்னிபா
தங்களுடன் வாயுகப சம்பந்த நோய்களுடல்
பொங்கியமே கங்களுமே போம். (௨௨௩)

கீல்வா யுவுடன் கிரந்திநோ யும்பட்டு
மேல்வாய்க்கு மிந்தியமு மீறுமே-யால்வாய்க்கும்
பெண்புகையு மாபுளியும் பேணாதே நீயிவையே
நண்புவியிற் பத்தியமா நாடு. (௨௨௪)

## 66. லோக வீரியாமிர்தம்.

வேளாவள வெஃகின் விளங்கு பொடிதன்னைக்
காணவே கல்வமிட்டுக் கண்மணியே-நாணமின்றி
ஐந்தரைக்கா ணாழி யரைத்தப்பு விட்டுடனே
வந்தகரத் தாற்கழுவு வாய். (௨௨௫)

எண்செழுற் றடியே யிருநாற் றிருபதெனும்
பன்முறையிவ்வாறேசெய் பாவையே-முன்னெஃகுஞ்
சுத்தியதா மேயிதனைச் சூழ்மூார் கலத்திவிட்டு
மெத்தகிறை தூவிற்கு மேல். (௨௨௬)



அங்குலமு நான்கா மளவிருக்க வொட்டகத்தின்
பொங்குநீ ரேனும் புகழ்ப்பசுவிற்-றங்கியநீ
ரேனும்விட்டுக் காய்ச்சி யிசைந்தநீர் வற்றியபின்
காணுதயிர் விட்டுக் கலக்கு. (௨௨௭)

கலந்தே நிழலில்வைத்துக் கண்மணியே யீரம்
உலர்ந்தசரு ணத்தெடுத்தங் கோட்டில்-நலம்படவே
இட்டுமேன் மூடி யியல்கவஞ் சேர்த்துலர்த்தி
இட்டவெரு வீசையுமோ ரெட்டு. (௨௨௮)

எட்டிற் புடமிட் டெடுத்தந்த நற்பொடியில்
தொட்ட விராகன் றொடராறிற்-கிட்டவண்ட
மஞ்சட் கருவொன்று வாகாக் கணக்கிட்டு
மிஞ்சாமற் செல்லுமட்டும் வேண்டு. (௨௨௯)

வேண்டியதில் விட்டே விளங்கவிரு சாமமரைத் [கல்
தாண்டுவில்லை செய்துலர்த்தி யப்பொழுதே - நீண்டிடு
ஓட்டில்வைத்து மேன்மூடி யோர்மணங்கா மேரொருவில்
எற்று புடமிட் டெடு. (௨௩௦)

கணக்கின் படிபுடமுங் காதலுட னூற்ப
திணைக்குறப் போட்டுவிட்டா லேதும்-பிணக்கின்றி
ஒன்றாந் தராமா யுயர்செந்தூ ரந்திகழும்
நன்றா மிருபதிலே நாடு. (௨௩௧)

இரண்டாந் தரமா மியம்புபதி னொன்றில்
தரந்தான்மூன் றுமேயேழ் சாரத்—திரண்டதா
நான்காகு மைந்திலே நல்லெந்து மாகுமிதை
மான்பார்வைக் கண்ணாய் மதி. (௨௩௨)

ஒன்றி லரிசியரை யொன்றா மிரண்டிலே
ஒன்று முதலிரண்டா மோர்மூன்றில்—ஒன்றாம்

இரண்டுமுத ஞன்கா மியனுன்கி ஞன்கெட்
டிருந்தவைந்தி லெட்டிரட்டி யெண். (உகங)

பிரமாணத் தின்படியே பேசனுபா னத்திற்
றிரமாக வுண்டுவரச் செப்புஞ்-சிரமூனி
ஈர விரைப்பை யிருதயமி வற்றைவசி
சேரவே செய்யுந் தெரி. (உகச)

மெத்த விரத்தமிரும் விட்டகா லற்றுவரும்
அத்தாதைப் பற்றி யமர்பிணிக—ளத்தனையும்
மாளப் புரியு மருத்தின்ங்கட் குள்ளோகை
யாளத் தகுந்ததிதே யாம். (உகரு)

## 67. மகாவீரிய லிங்க செந்தூரம்.

வீரியவி விக்கத்தில் மேபல வொன்றரையுஞ்
சீரியரு தத்தின்மூன்பு செப்பெடையும்-சேரியனுங்
கற்குழியி யிட்டேவெங் காயச்சாற் றைப்பிழிந்த
திற்சிறுக விட்டுத் தினம். (உகசு)

நூன்றிற் கிருசாம மொப்பவரைத் திப்படியே
கன்றுடனே நாற்பதென்ற நாளரைத்து-ஒன்றுசிறு
காசளவில் வில்லைபல கண்மணியே செய்துசிமல்
மாசகல வேகாய வை. (உகஎ)

சாணென் றரையாளந் தக்காான் கங்குலத்திற்
பூணகல முள்ளகுழி பூமியிலே—காணச்செய்
தங்கேகற் சுண்ணம் பரையளவு போட்டமூத்தி
மங்காய்மேல் வில்லைகளை மாட்டு. (உகஅ)

வில்லையேல் முன்சுண்ண மீண்டுமுடன் போட்டமூத்தி
அல்லெகிர் கூந்தலா யக்குழியைப்—புல்லுபுடை



சுற்றிவர நான்காகச் சொல்லங் குலமிடைவிட்
டற்றவொரு பள்ள மமை. (உககூ)

பள்ளத்தி லேவீசை பத்தொன் றெனுமெருவை
உள்ளத் துறதியுட ஞேர்ந்தடுக்கிக்—கொள்ளத்தீ
நாற்றிசையு மோரமைய நாடிக் கொளுத்தியுட
னேற்றெரிந்த பின்கண் டெடு. (உசo)

ஐம்பதென்ற நாழி யளவா மெரிவதற்கு
நம்புவாய் பின்பற்ப நண்ணுமதில்—பின்பரிசி
ஒன்றிரண்டை நல்லகருப் புற்ற கடுக்காய்த்தோல்
மன்றன்மிரு மாவாது மை. (உசக)

காணும் பிசின்காச்சுக் கட்டி மருதாணி
பூணுங்கை யாந்தகரை போற்றியே—பேணுங்
காராலெல்பபி வற்றைத் தொடுத்தேது மன்றித்
தாராதாங்கள் கண்டே தனி. (உசஉ)

ஆக்கிபெனினு மடுத்துக் கஷாயமிட்டுச்
சீக்கிரத்திற் கூட்டியிடச் சேர்கிரந்தி-தாக்குகுட்டம்
ஓடிவிடு மானே யுடலிற் பலசுகங்கள்
கூடிவிடு நீயறிந்து கொள். (உசங)

பச்சையிலைச் சாறெனினும் பற்றுமதன் வித்தாற
இச்சையுடன் வந்தநீ ரேனுமிக—மெச்சும்விரா
கன்மூன்றுஞ் சீனியொன்றுங் காதலுட னேகலந்து
முன்றேன்று பற்பமதின் மூட்டு. (உசச)

மூட்டியுணச் சூட்டால் முயங்கியசோ யத்தனையுஞ்
சேட்டைவிட்டு நீங்குந் தெரிவையே-பிட்டிலவங்
கச்சூ ரணம்விரா கன்றென் றரைதேனில்
மெச்சவொன் றுஞ் சேர்த்துயர்வா விள். (உசரு)

மாமருந்தைக் கூட்டியுண மானிடர்க்குச்சிதளத்தால்
ஆமருநோய் பிணிசங்க ளற்றேடும்-தோமிலா
தாதுபுஷ்டி போகசக்தி தம்பனமு முண்டாகுந்
தீதுசற்று மில்லையெனச் செப்பு. (உசசு)

பிணிகட்குத் தக்கதாப் பேசுமனு பானந் [தெ
துணிவுடன்சேர்த் திம்மருந்தைத் தைய்ந்தால்—மணில
நோய்போகு மிங்கு நுவல்வளவுந் தன்னிதுவுந்
தாய்போன்ற தாமுரிந்து சாற்று. (உசஎ)

## 68. அப்பிரக பர்பம்.

இருட்டிணைவப் பிரேகத் தினருகவ நீதம்
தெருட்டுபல நான்குகல்வஞ் சேர்த்தே-வருத்தமின்றிக்
கோமயத்தை விட்டே குழிப்பாக வொன்றென்ற
சாமமைத்து வில்லையொன்று தட்டு. (உசஅ)

தட்டிப்பாண்டத்தோட்டிற்றுக்கியைக்குசீலைசெய்தே
எட்டென்ற வீசை யெருப்புடத்தை-யிட்டெடுத்துப்
பண்டைப் படிபேழு பற்பிச்செய் தேகுமரி
கொண்டசாற் றின்மூன்று கொள். (உசகூ)

கையாந் தகரையிலைக் காண்சாற்றில் முப்புடமும்
ஐயாங்கள் ளீப்பாவி லவ்வாறும்—மெய்பாக
ஆற்றி முடித்தாலவ் வப்பிரே கப்பற்பக்
தோற்றிவிடு மீரரிசி சூழ்ந்து. (உருo)

தோற்றரிசித் திப்பிலியின் சூரணம் விராகனெடை
சாற்றென் றரைதேனுந் தானென்று-போற்றியதை
காட்டிக் கொடுக்கக் கபசுரமு மக்கபத்தைக்
கூட்டுபிணி யாவும்போங் கூறு. (உருக)

சீந்திற் சருக்கரையிற் சேரரைவி ராகனுடன்
போந்தபசு நெய்யும் புகலெடைசேர்த்-தோர்ந்தபற்பம்



உள்ளிட் டருந்த வொடுங்கும் பிரமியங்கள்
உள்ளதிது கண்டிங் குணர். (உருஉ)

மஞ்சட் கடுக்காய்த்தோல் வைத்திடித்த சூரணமும்
மிஞ்சேலத் தானும் விராகனரை-கொஞ்சுகண்டுத் [தக்
தானொன்றுங் கூட்டித் தொடர்மருந்தைவைத்தருந்
கேவிரத்த தோடமெலாங் கெட்டு. (உருங)

கல்லிரத்த முண்டாந்தே னுடும் விராகனென்றில்
புல்லவைத்துட் கொண்டு புகல்கண்டு-மெல்லவிட்ட
வெப்பப்பா லைப்பருக மேபகிழத் தன்மைபோம்
அப்பப்பா தேகதிட மாம். (உருச)

தனித்தேன் விராகனென்றிற் றனருந்த மூலம்
சிறுக்கிரும லப்பொழுதே தீரும்—கணிக்குநெல்லி
வற்றல்தான் திக்காய்த்தோன்மஞ்சட்கடுக்காய்த்தோல்
சொற்றவகைக் குப்பலந்தான் றாக்கு (உருரு)

பெண்ணே யரையாம் பிறங்குமிது னீர்வார்த்து
எண்ணுகின்ற மூன்றிலொன்று யேற்றுவற்ற-புண்ணி
அதிலனுபா னித்தருந்த வம்பகத்தைச் சார்ந்த [உருசு)
மதிமபக்க யோடும் வழுத்து.

## 69. வெள்வங்கபற்பம்.

எற்றசுத்த வெள்வங்க மேழரை விராகனிறை
மாற்றமிலாச் சூதம் வழுத்ததுபோல்—சாற்றும்வெடி
யுப்பிருபா ஞன்கிங் குடனெரித்து முன்னிரண்டும்
செப்புகல்வத் தாகவைத்துத் தேப். (உருஎ)
[தெ

தேப்த்துவெடி யுப்பையும்பின் சேர்த்திரண்டு சாமமட்
சாய்த்தரைத்து மட்கலசந் தன்னிலிட்டு-வாய்த்தகலை

எழுசுற்றி மூடி யிரண்டிரட்டி வீசையெருச்
சூழுபுட மிட்டுத் தொடு. (௨௫௮)

தொட்டெடுக்கப் பற்பர் தலங்குமதைச் சுத்தநீ [பாய்
சிட்டரைத்து வைத்துப்பின் னேற்றதெளி-லைக்கழிப்
அவ்வாறே செய்துப் பகன்றபின்பு பானுமுன்னே
செவ்வாயி னுயதையுஞ் சேர். (௨௫௯)

பின்னேயெடுத்ததனிற்பேணுகுன்றியொன்றிரண்டை
உன்னேர்நெய் வெண்ணெய்தே னொன்றில்வைத்து-மி
ரிடையா யருந்த விபல்தாது முண்டாந் [ன்னே
தடையேது மில்லையெனச் சாற்று. (௨௬௦)

மேகக் குழலாய் விளம்புஞ் சிராவகம்போம்
மேகம்போம் பாண்டு விரைந்துசெலும்—தேகபல
மாகுந் தருந்த வனுபானத் திட்டருந்தச்
சாகும் பலபிணிக டாம். (௨௬௧)

## 70. சுவர்ண அப்பிரேகம்.

அத்தித்த வெள்வங்கஞ் சொல்விரா கன்னவமாம்
அத்தகைய சூதத்தி லாறு—வச்சாரம்
பத்தைந்து வெண்காரம் பற்றுமொன்ப தாங்கெந்த
கத்திலங் தக்கணக்கே காண். (௨௬௨)

சொற்றவங்கஞ் சூதத்தைத் தொங்கித்தரைத்துப்பின்
மற்றவையுஞ் சேர்த்திரண்டா வாய்சாமம்—உற்றரைத்
அஞ்சனம்போ லானபின்பங் கைக்து பலமாகுந் [து
தஞ்ச மருதாணிச் சாறு. (௨௬௩)



சிறுகச் சிறுகவிட்டுச் செல்லுமட்டு மாட்டிக்
குறுக வுலர்த்தியழல் கொண்டும்—அறுபடாச்
சீலைசெய்த சீசாவிற் சேரவைத்து மூடாமல்
மரலாங் கரிநெருப்பில் வை. (௨௬௪)

வைத்தெரித்து நல்லயத்தில் வாய்த்தகம்பி யொன்று
ஒத்துத் தழாவிமருந் தோரவே—நற்சிவப்புக் [லே
கொண்டபதம் பார்த்துக் குளிரவைத்துப் பின்பெடு
குன்றியெடை யுண்ணக் குறி. [த்துக் (௨௬௫)

மற்றுமொரு மார்க்கம் வழுத்துவன்கேள் சட்டியிலே
உற்றதுவா ரஞ்செய் தயர்சீசா—சட்டியின்மேல்
காள்கங் குலந்தோற்ற கட்டியடுப் பிட்டெரித்தும்
தேன்மொழியே கொள்ளலாந் தேர். (௨௬௬)

[வே
விள்ளுகணக் கின்படிநெய் வெண்ணெயிலுட் கொள்ள
கொள்ளைச் சிராவகம்போங் கோக்கருவி—வல்லபமாந்
தாதும் பலக்குந் தருந்தங்கை மேகம்போம்
ஓதிரைப்பை யின்பிணிசா மோர். (௨௬௭)

## 71. வெள்வங்க பற்பம்.

செவ்விதாம் வெள்வங்கஞ் செப்பும் பலமிரண்டு
சவ்வகன்ற வண்டத்தோ ருளதுவாம்-இவ்வதனைக்
கல்வத்திட் டுப்பொடித்துக் காணுகரும் பொற்கலத்தி
வெள்வங்கம் போட்டடுப்பின் மீது. [ல் (௨௬௮)

ஏற்றித் தழலிட் டெரித்தண்டத் தூள்சிறுகப் [தூள்
போட்டுத்தேய்ப் பாய்கரிய பொற்றுடுப்பல்-சாற்று
சென்றபின்பு நீபார்க்கச் சேர்ந்தவங்கம் பற்பமாம்
ஒன்றுகருப் பாயிருக்கு மோர். (௨௬௯)

மீண்டுங்கல் வத்திலிட்டு மெச்சுகும ரிச்சாற்றிற்
பூண்டநாற் சாமம் புகழ்ந்தரைத்து-வேண்டும்வில்லை
ஆக்கி யுலர்த்தி யழகுபெற வோட்டிவிட்டுப்
போக்கில் கவசம் புரி. (உஎ0)

பகர்ந்தகவ சத்தைப் பன்னிரண்டு வீசை
புகந்த வறட்டியிற்காற் றோட—திகழ்ந்தபுடம்
போட்டெடுக்கவாணரத்தைப் போன்றதிறப்பற்பமாம்
ஊட்டளவு குன்றியரை யொன்று. (உஎக)

சாற்றுசுக நீர்ப்பெருக்குந் தாதின் சிராவகமும் [றும்
தோற்றியநீர்ப் பையினது துர்ப்பலமும்-கேட்டையு
தேகபலந் தாதுபுஷ்டி சேருமொரு திங்கிலெயன்
வாகடத்தி லேயுறுதி வை. (உஎஉ)

## 72. இலகு பாஷாண பற்பம்.

குற்றமற்ற வெள்ளை குழித்தபல மொன்றெடுத்து
வற்றுந் திருகுகள்ளி வண்சாம்பல்—உற்ற
விருபான் பலத்தை யெடுத்தோர் கலத்தில்
அரைவாசி போட்டதன்மீ தங்கு. (உஎங)

காட்டியதன் மேலு நவில்சாம்பர் பாகியிட்டுக்
கூட்டி யழுத்திவாய்க் குச்சிலிட்டே—சட்டுமைந்து
மண்சீலை செய்தே வளர்கலச முற்றிலுமே
பின்சீலை யைந்தையிட்டுப் பேண். (உஎச)

பேணி யுலர்த்தியே பின்மூன் றரைவீசை
காணும் வறட்டியிட்டுக் கண்மணியே—பூணுபுடம்
ஆற்றியெடுக் கப்பற்ப மாகு மரிசிவெடை
பற்றுதிராக் கக்கனிபா லேடு. (உஎரு)



வெண்ணெயிலே புண்ண மிகுகிரந்தி குட்டமுடல்
மன்னுகுளிர்ச் சம்பந்த வன்பிணிகள்—விண்ணிலுறும்
தம்பனமு முண்டாந் தகுபோக சத்தியாம்
தம்பமிது மானிடர்க்குச் சாற்று. (உஎசா)

மானேநீ யிந்த மருந்துண் ணும் போதிலே
ஆனே தருநெய் யதிகஞ்சேர்—வீணும்
புளிப்பறவே நீக்கிப் புசிப்பாய்நான் சொல்லு
மொழிப்படியே செய்வதற்கு முன். (உஎஎ)

## 73. தார பற்பம்.

விண்டு மனைவி விராகனறு கான்கெடுத்துப்
பொன்றுக்கல் வத்திற் பொடியாக்கி—துன்றெருக்கின்
பானுற்பத் தெட்டுப் பலத்தைச் சிறுத்துவிட்டு
ஆனும துற்றங் கரை. (உஎஅ)

ஆனபின்பு கள்ளிப்பா லவ்வெடையை யப்படியே
மானவிட்டங் காட்டிப்பின் மாவழினி-தாரொருபா
ரொன்றும் விராகனெடை போதுபலம்பன்னிரண்டா
விண்டசலத் திற்கரைத்து மேல். (உஎகூ)

வடிகட் டினநீரை வாகுபெற வார்த்துத்
தடியிலையா யாட்டிப்பின் சொல்லுங்-கொடியபச்சை
கஞ்சா விலைச்சாறு காண்பலமா றெட்டேனும் [க்
அஞ்சாப் பலமிருப து. (உஅ0)

காய்ந்தகஞ்சாவோர்படியாங் கம்மிற்போட்டுக்காய்ச்சி
வாய்ந்த வரைப்படியா வற்றவைத்தங்—கேய்ந்துவடி
கட்டி யிறுத்த கஷாய மெனினுமதில்
விட்டரைத்துத் தட்டிவில்லை மெச்சு. (உஅக)

சூரியன்முன் வைத்துலர்த்திச் சொல்லுமணமுருக்கை
சேரியுஞ் சாம்பர் பல நீண்டுமுப்பான்—வாரியதில்
இட்டியத் தாம்பிரத்தின் கிண்ணியிலே பாதியிட்டுத்
தட்டியநல் வில்லைகளைத் தாக்கு. (உஅஉ)

மேலே மறுபாதி விள்ளுசாம் பற்கொட்டி
வேலேய் விழியாய் மிகவழுத்திச்—சீலையேழ்
முன்னிச்செய் தேகலத்தின் முற்றிலுமச் சீலைசுற்றி
அண்ணலடுப் பேற்றிப்பத் தாறு. (உஅங)

சாமமெரித் தாறியபின் றானெடுக்கப் பற்பமாம்
தாமமுறு மக்கினியிற் சொல்லுமதை—நேமமுடன்
காட்டுவாய் தாமமங்கே கண்டால் மறுபடியுஞ்
சட்டந்தச் சாம்பற்கு னெட்டு. (உஅச)

எனப்பகருஞ் சாம மெரித்தெடுக்க வோடாக்
கணக்குடைய பற்பமாங் காண்பாய்—மணக்குமிதில்
சொல்லு மரிசியரை தோற்றொன் றனுபானத்
துள்ளிட் டருந்திவிட வோர். (உஅரு)

குட்டங் கிரந்தி குறைக்குங்கீல் வாயு புண்கள்
கட்டிமூ லம்படைகள் காணுவே—கெட்ட
சிராவகம்போங் காசம்போந் தீரா விருமல்
தாாதலத்தி லோடிவிடுந் தான். (உஅசு)

எல்லாச் சுரங்களும்போ மிந்தியமுந் தம்பனமாம்
நல்லாய்கேள் போகசத்தி நாடுமே—பொல்லா
அடற்பிணிகட் கேற்ற வனுபானத் தன்ன
மடப்பிணிய நேகம்போ மாண்டு. (உஅஎ)

மெல்லியே யெல்லா வியாதிகட்கு மீதாகும்
சொல்லின் படியிதனைச் சூழ்ந்துசெய்தால்—எல்லாமு [ன்



கைகூடுங் கட்டங் கருதிவிட்டாற் றுன்பங்கள்
மெய்யாக பந்து விடும். (உஅஅ)

## 74. வெள்ளிப்பற்பம்.

வெள்ளியிலே மூன்று விராக னெடையெடுத்து
ஒள்ளியதோர் நற்றகட்டை யுண்டாக்கி-விள்ளுமரி
தாரத்தி லாறுகச் சாற்றும் விராகனிறை
ஆரத்தண் ணீர்வார்த் தரை. (உஅகூ)
[கவசம்

ஆட்டிவெண்ணெய் போலெடுத்தே யத்தகட்டின் மேற்
மாட்டி யுலர்த்தி வரையோட்டில்-போட்டோட்டின்
மூடியெழு சீலை முடிவாகச் செய்துலர்த்தித்
தேடியெட்டு வீசையெருச் சேர். (உகூ0)

சேர்த்த வெருவிற் றிகழ்புடத்தை யிட்டெடுத்துப்
பார்த்தவுடன் பற்பம் பளபளக்கும்—கோர்த்தியுடன்
குன்றியொன்றை வெண்ணெய் குறிக்குமிலேகியத்தில்
ஒன்றவைத்துப் பத்தி யுடன். (உகூக)

உட்கொள்ளத் தாதுநட்ட மோடிவிடும் வீரியமாங்
கட்கொள் மலர்க்குழலாய் காசினியில்—உட்கவரு
மார்பதிர்ச்சி தீர்ந்து வளர்காத் திரபலமும்
ஏர்மலிவு மிக்கவுண்டா மே. (உகூஉ)

## 75. வெள்ளிப்பற்பம் (வேறு.)

வெண்காரஞ் சாரம் விளய்பு படிக்காரம்
கண்பார்க்கும் வெள்ளை கறியுப்பு—பெண்பாவாய்
மேய வகைக்கு விராகனிறை மூன்றெடுத்துக்
காயகல்வத் தோர்சாம மாட்டு. (உகூங)

பார்த்தாட்டிப் பாகப் படிபதங்கித் திநிலரை
சேர்த்த விராகனெடை தேர்ந்தெடுத்து—சீர்த்தவுமி
நீராற் குழைத்து நிகழ்த்துவிரா கன்மூன்று
ஆரான வெள்ளியிலே யப்பு. (உகூச)

அப்பியுலர்த்தி யகலிவிட்டு மேன்மூடி
ஒப்பிமண்சீ லேசெய் துலர்த்தியே—செப்பிடும்வ்
வீசை வறட்டியிலே யிஞ்சுபுட மிட்டெடுக்க
ஆசைமிகும் வெள்ளிபற்ப மாம். (உகூரு)

பக்குவக்கே டாலொன்றிற் பற்பம்வரா விட்டாணீ
அக்கணத்தே வேறுபுட மாற்றிவிடு—தக்கபற்பங்
கைகூடு மூட்டளவு காணரிசி யொன்றுமுதற்
பையவே நான்காகும் பார். (உகூசு)

வெண்ணெய்தண் ணீரிலே மேவவைத்துட் கொண்டா
கண்ணே யிராச கருவிகளைத்—திண்ணமுறச் [லென்
செய்யுமே தாதுமிகுந் தேகபுஷ்டி யுண்டாகும்
மெய்யிற் றைரியமாம் விள். (உகூஎ)

## 76. இலிங்க சேந்தூரம்.

முக்கால் விராகனபின் மூன்றுநீர் விட்டரைத்து
முக்கிய விராகனிறை மூன்றுன—தக்ககட்டாம்
நற்சிவத்திற் பூசியதை நண்பா யுலர்த்திவிட்டுப்
பிற்புகனு மார்க்கமதைப் பேண். (உகூஅ)

செங்கொட்டை நெய்தேன் சிறந்தவகைக் காறுபலம்
பாங்கா யெடுத்திருப்புப் பாத்திரத்தில்—நீங்காத
நெய்தேனை விட்டு நிகழ்த்தியசேங் கொட்டைதட்டி
நொய்தாக்கிப் போட்டு நுவல். (உகூகூ)



கடாதனை நாப்பண் கனக்கவைத்துத் தீயடுப்பி
விட்டெரித்து நீரெல்லா மிற்றபின்பு—கட்டி
பிடித்தெரியு மாங்கே பிறங்குநெருப் பாறி
விடுத்தவுடன் நீயதனை வேண்டு. (ஙூ00)

மேவி யெடுத்து மிகவே பொடித்துச்சீ
சாவிலே வைத்துப்பின் சார்ந்தவர்க்கு-நீவிரைவாய்க்
குன்றிமணி யொன்றைக் குறித்ததிராக் கப்பழமா
நன்றாகும் வெற்றிலையி னூட்டு. (ஙூ0க)

நாட்டியிந்த நன்மருந்தை நாற்பதுநா ளூட்டுவிக்க
வாட்டமிலாத் தாது வளருமே—கூட்டுமுயர்
போகசத்தி தம்பனங்கள் பொன்றாதுண் டாகியே
தேகசத்தி நீண்டுவருந் தேர். (ஙூ0உ)

## 77. கிருஷ்ண அப்பிரேக சேந்தூரம்.

தங்கக் கிருட்டிணமாச் சொல்லப்பி ரேகத்திற்
றங்கப் பலமாறு தான்பொடித்துப்—பொங்கும்
இருபத்து நான்குபல மென்னெருமைப் பாலில்
ஒருசாமம் போட்டங் குடன். (ஙூ0ங)

எடுத்தவ் வளவா வியல்வேறு பாலுட்
படுத்தியட்டு மூன்றுகொதி பார்த்து-விடுத்தெடுத்து
முன்பாலிற் போட்டு முடுக்கிக்கை யாற்பிசைந்து
மன்பத்து நாழிமட்டும் வை. (ஙூ0ச)

[டுத்தப்
நாழிகைக்கொவ் வோர்முறையு நண்ணிப் பிசைந்தெ
பாழியுறும் பாலெல்லாம் பற்றவிட்டு—பூழி
எனவரைத்து முன்பா லிருபத்து நான்கா
மனுபலத்தி லேயூற வை. (ஙூ0ரு)

வைத்தெடுத்து முன்போல் வளர்பாலை விட்டட்டு
விட்டபா றன்னை விடுத்தூற—வைத்தபால்
தன்னைவிட்டுச் செல்லுமட்டுந் தானரைத்துநீயெடுத்து
முன்னைப்போற் செய்ய முயல். (௫௦௬)

இந்த விதமாக வேழுமுறை செய்துவில்லை
நிந்தை யற வாற்றி நிழலுலர்த்தி—முந்துமகல்
இட்டுமேன் மூடி யெழுசீலை செய்துலர்த்திப்
பத்துவீ சையெருவைப் பற்று. (௫௦௭)

பற்றிப் புடமிட்டுப் பாங்கா யெடுத்துவெண்மை
சுற்றுவெங்கா யச்சாற்றைச் சூழவிட்டு—சொற்றநாற்
சாம மரைத்துமுன்போற் சார்ந்தபுட மேழிட்டுக்
காமரெரு மிச்சங் கனி. (௫௦௮)

சாறுபல மேழெடுத்துச் சாற்றுமதிற் செல்லுமட்டும்
மீறுரு மற்சிறுக விட்டரைத்துக்—கூறுபுடம்
முன்போலொன் றிட்டு முடிவி யெடுத்ததிலே
மின்சாரு யத்தை விடு. (௫௦௯)

மேற்பலமே விட்டரைத்து மேவுமொரு வில்லைசெய்து
ஏற்க வுலர்த்தியோட் டிட்டுமேற்—காக்கவொரு
கல்லோட் டான் மூடி நலமாக் கவசித்துப்
புல்லுபத்து வீசையெருப் போட்டு. (௫௧௦)

மேவுபுட மிட்டெடுத்து மெல்லியதோர் வத்திரத்தில்
தாவுந் தளர்ச்சியாத் தான்முடிந்து—கோவுறநற்
சீசாவிற் குட்செலுத்தித் தேனோடீ வைத்துவிட்டுக்
கூசாதோர் பாத்திரத்தைக் கொள். (௫௧௧)

பாத்திரத்தி னன்னெய் பலமாறு விட்டுமுன்னைக்
கோத்தநூ மத்தங்காய் கூறிரண்டு—ஏற்றகுங்கு



மப்பூவி ராகன் வளரொன் றரைதாளி
சப்பத் திரியைங்கா ருன். (௫௧௨)

கூட்டி யிடித்துக் குறித்தவந்த நெய்யிலிட்டு
நாட்டிக் கலக்கிநீர் நண்ணுந்தாச்—சாற்றுபடி
விட்டுக் கலக்கியதில் மேவியசீ சாநாலக்
கட்டி விடுவாய் கதித்து. (௫௧௩)

நாலுஞ்சீ சாநீரின் நான்கங் குலத்திற்கு
மேலமையச் செய்து மிகுகலத்தின்—பாலுற்ற
வாய்மூடிச் சீலைசுற்றி வட்ட வடுப்பேற்றிக்
காய்நீ சிறுத்தெரியக் காட்டு. (௫௧௪)

சொன்ன படியெரித்துச் சூழ்ந்தசலஞ் சுண்டியே
பின்னுஞ் சிறிதிருக்கும் பெற்றிகண்டு—மன்னி
யெடுத்தாற்றிப் பார்க்க வியலுகருஞ் சாயல்
தொடுத்தசெந் தா ரம்மிருக்குஞ் சூழ்ந்து. (௫௧௫)

குன்றிபரை யொன்றிதிலே கொண்டு தகுந்தகலம்
ஒன்றுமனு பானங்கட் குட்படுத்தி—இன்னுடனே
கற்கண்டைக் கூட்டிமிகக் காய்ச்சியதோர் பால்பருகச்
சொற்படிநாற் பான்றினத்திற் சோர். (௫௧௬)

இத்தியமுங் கட்டி யிசைந்தவினை வாகுமுடன்
தம்பனஞ்சேர் போகசத்தி சார்ந்திடுமே—முத்தாங்
கரிதக் கலிதம்போங் குன்பத்திற்கு கஞ்சா
உரிமை பெறவிதைச்செய் தாய். (௫௧௭)

மகா வீரியச் சிந்தாமணி வெண்பா
முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

# மகாவீரியச்சிந்தாமணி.

## விளக்கச் சுருக்கம்.

---

சகோதரர்களே! மேற்படி நாமம் பூண்ட இப்பொழிப்பை இதனுடன் எழுத நேரிட்ட காரணமாவது:—

இதுவரையில் அச்சில் வெளிவராத இந்நூதன கிரந்தத்தில் அநேக அருமையான முறைகள் அடங்கியிருக்கின்றன. இம்முறைகளெல்லாம் நமது பரம்பரையில் வெகு காலமாகப்பலரால்கையாளப்பட்டுச்சித்திபெற்ற முறைகள். ஆனால், இம்முறைகளையெல்லாம் நமது பரம்பரைக்குள் ஒவ்வொருவரும் மறைவாகவும் இரகசியமாகவும் வைத்து வந்தார்கள். சில சமயங்களில் தகப்பன் தன் பிள்ளைக்கு மறைத்துவைத்தும், சகோதரர்கள் தமக்குள் ஒவ்வொருவரும் மற்றொவ்வொருவருக்கும் மறைத்தும் வந்தார்கள். ஆனால், ஜீவகாருண்ணியமும், பரோபகாரமும், சுதேசாபிமானமும் உள்ள அநேக கனவான்களும் நண்பர்களும் இத்தகைய கிரந்தங்களைக் கற்றோர் மற்றோர் முதலிய யாவரும் எளிதில் உணரும்படி எளிய தமிழ் வசன ரூபமாகக் கருத்துரையாவியற்றி வெளிப்படுத்த வேண்டுமென நம்மைப் பன்முறையும் வற்புறுத்தி வருகின்றபடியாலும், நமக்கு அவ்வித நோக்கம் எப்போதும் நம் மனதிற் குடிகொண்டிருப்பதாலும், அரிய கிரந்தங்களை மேற்கண்டபடி வெளிப்படுத்தப் போதுமான சக்தி



அடியேனிடத்தி லில்லாவிடினும் நமது பரம்பரையிலுள்ளவர்களெல்லாம் வைத்தியத்திற் றேர்ச்சியுள்ளவர்களாயிருந்து வழிவழியே சொல்லிவந்த கிரமப்படி அடியேனுக்குஞ் சொல்லி வைக்கப்பட்டுப் பழக்கமும் அநுபவமுமுடையவனாயிருப்பதாலும், கடவுள் கிருபையாலும், பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும், பற்பல பண்டித சிரோமணிகளின் உதவியாலும் லோகோபகாரமாக நம்மால் வெளிப்படுத்தப்பட்ட இந்யூநானி வைத்திய பற்பல நூல்கள் பலராலும் நன்கு மதிக்கப்பட்டு பலரும் நம்மைப் பல விதத்திலும் ஆதரித்துக் கனப்படுத்தி வருவதை நாம் மனதார அறிந்துள்ளோமாகையாலும்.

அவ்வூக்கத்தைக் கொண்டே இம் மகாவீரியச்சிந்தாமணி யென்னுங் கிரந்தத்தையும் வெளிப்படுத்தத் துணிந்தோம். இவ்வரிய கிரந்தத்தில் வைத்திய சாஸ்திரங்களிற் றேர்ந்தெடுத்துப் பலதடவைகள் அநுபவசித்திபெற்ற பலவகை அரிய முறைகள் அடங்கியிருக்கின்றன. அவை பெரும்பான்மையும் தாதுவிருத்திக்கு உபயோகமாம் மகா மேலான முறைகளாம். வீண்டம்ப விளம்பரங்களில் வெகுவாய் விரித்துச்சொல்லும் தாதுவிருத்தி ஔஷதங்களை வாங்கி உபயோகித்தும் ஏமாந்திருப்பவர்கள் அநேகரென்பது நமக்கு வரவிடுத்த கடிதங்களாலும் நேர்நேராகவும் அறிந்து வருகின்றோம். அவ்விதம் மோசம் போகாமல் தாம் தாமே செய்து அநுபவிக்க ஏதுவாகும்படி இக்கிரந்தத்தை வெளிப்படுத்த முன் வந்தோம். ஆனால், இம்முறைகளெல்லாம் சுவை மிகுந்தபாற்கடலைக்கடைந்து அமுதத்தைத்

தேர்ந்தெடுத்துக் கொண்டதுபோல அநேக சாஸ்திரங்களிலுள்ள பலமுறைகளையுஞ் சேர்த்து வெண்பாவாகப் பாடப்பட்டிருக்கின்றன. இப்பாடல்களின் கருத்தையும் அம்முறைகளின் செய்பாக முதலியவைகளையும் அனுபவசாலிகளான கல்விமான்கள் மாத்திரந் தெரிந்து செய்து அனுபவிக்கக்கூடுமே யொழிய ஏனையோர்களுக்கதிகம் பிரயோசனப்படா? ஆகையால் செய்யுட்களில் அடங்கியுள்ள அம்முறைகளை யாவரு மெளிதிலுணர்ந்து கொள்ளுமாறு எளிய தமிழ் வசனநடை ரூபமாக எழுதியுஞ் சேர்த்திருக்கின்றோம். அம்முறைகளின் சிறப்பையும் மேன்மையையும் இங்கெழுதுவதானால் இச்சிறிய கிரந்தம் அதிக விரிவெய்துமென அஞ்சி அவற்றை இங்குநீக்கி அவற்றின் செய்பாகம் முதலியவைகளை வகைவிபரமாக வெழுதியிருக்கின்றோம். அவரவர்கள் தாம் தாமேசெய்து அவற்றின் பிரயோசனங்களை அனுபவசித்தமாகத் தெரிந்து கொள்ளும்போது அவற்றின் அருமை பெருமைகளெல்லாம் தாமே விளங்கிபோம்.

இக்கிரந்தத்தைப் பழைய காலத்து ஏட்டுப்பிரதிகளிலிருந்து ஆராய்ந்தெடுத்து இதனைச் சுத்தப்படுத்தியெழுதி இந்த ரூபமாகக்கொண்டு வந்ததினாலுண்டான தேகசிரமம், மனோசிரமம் முதலியவைகள் அனுபவசாலிகளான அன்பருக்கு இத்தன்மையன வென்பது ஒருவரெடுத்துக் காட்டாமலே தாமே நன்கு விளங்கும்.

மேற்கண்ட காரணத்தாலும் மனுஷ சுபாவத் தவறுதலாலும் இவற்றுள் ஏதேனுஞ் சில தோஷங்கள் ஏற்பட்டிருந்தால், கற்றறிந்த கனவான்களும் மற்ற



அனுபவசாலிகளான பண்டிதர்களும் தயவுடன் அடியேனை மன்னித்து அவைகள் இத்தன்மைத்தென உடன் தெரிவிப்பார்களேயானால், அவை உத்தமமானவையாயின் அந்தப்படியே மறுபதிப்பில் அச்சிட்டு வெளிப்படுத்துவதோடு அவர்கள் பேரையும் பிரசுரித்து அவர்களுக்கு மிகுந்த நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஆகையால், சுதேசாபிமானமுள்ள கனவான்களும் மற்றவர்களும் அடியேனா லியற்றப் பட்டவைகளும் வெளிப்படுத்தப்பட்டவைகளுமான ஞானி வைத்திய தாதுவிருத்தி போதினி முதலான பல கிரந்தங்களையும் மனப்பூர்வமாக அங்கீகரித்து அடியேனைப் பலவிதத்திலுங் கனப்படுத்தி வருவதைப்போல் இக்கிரந்தத்தையும் இனி அச்சிடப்படும் கிரந்தங்களையும் அங்கீகரித்துக் கைக்கொண்டு ஆதரித்து வரும்படியாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

இக்கிரந்தத்தாலுண்டாகும் பிரயோசனமாவது:- பல சாஸ்திரப்பழக்கமும்வெகுநாள் அனுபவமுமுள்ள ஒருவல்ல பண்டிதர் சமீபத்திலிருந்து உற்ற சமயத்திலூன்றுகோல் போலாகித் தக்க சமயத்தில் தம்முடைய தந்திரோபாயச் சிகிச்சைகளைச் செய்து உதவிசெய்வதுபோல இக்கிரந்தத்தை ஆதியோடந்தமாகக் கவனித்து இதிற் சொல்லப்பட்டிருக்கிற முறைகளின்படி செய்து ஆங்காங்கு சொல்லியிருக்கப்பட்டபடி உபயோகித்தால் மகா ரோகமான தாதுநஷ்டம் நீங்கி தேகபலம், மனோபலம், தேகதிடம், புத்திர சந்தானம் முதலியவைகளுண்டாக ஏதுவாகும். இன்னும் துஷ்

டரோகங்களான குஷ்டம், சூலைநோய், பிரமேகம், விரணமேகம், சூலை, குன்மம் முதலிய மகா கஷ்டரோகளினின்றுந் தப்பித்துக் கொள்ளவும், விண்டம்ப விளம்பரங்களிற் கண்டிருக்கிறதாதுவிருத்திலேஹியங்களை நம்பி வாங்கி ஏமாந்து போவதினாலுண்டாம் வீண் செலவை மீத்துக்கொள்ளவும், அவற்றாலுண்டாகும் நானாவித நூதன வியாதிகளிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் உற்றசமயத்தில் தெற்றென உதவி புரியுமென்பதிற் சந்தேகமில்லை.

ஆகையால் நோயற்ற வாழ்வையும் தேகதிடம், தேகபலம் முதலியவைகளையும் விரும்பும் புத்திமான்கள் தம் மித்திரர் முதலிய யாவருக்கும் பிரயோசனப்படும்படியாக இதிற் சொல்லியிருக்கிற முறைகளைக் கவனித்துச் செய்து இதன்படி நற்பிரயோசனத்தையடைய வேண்டுமென்பதே அடியேன் கோரிக்கை.

ஆகையால், இக்கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிற பற்பலவகை முறைகளையுங் கவனித்துச் சமயோசிதம்போற் செய்து உபயோகிப்பவர்கள் கடவுளினுடைய கிருபையாலும், பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும், தாதுநஷ்ட முதலிய ரோகங்களினின்று நீக்கப்பட்டுச் சுகானுபவங்களையுடையவராய் இம்மைமறுமைக்குரிய பயன்களை யடைந்து நீடூழி வாழ்வார்களாக.

ஆமீன்

---

177

பிஸ்மில்லாஹி.

## மகா வீரியச் சிந்தாமணியிற் சொல்லப்பட்டிருக்கும் முறைகள்.

—:(o):—

### 31. சுகாதார மனோவாரம்.

ரோஜாப்பூச் சூரணம், விதைநீக்கின திராக்ஷைப் பழம், மேற்றோல் நீக்கின வாதுமைப்பருப்பு, சூரத்து நிலவாரைச் சூரணம், இவை வகைக-க-க்குப் பலம்-உ, பாலில் வேகவைத்துச் சுத்திசெய்த சிவதைவேர்ச் சூரணம் பலம்-க, குல்கந்து பலம்-கம.

செய்முறை:—திராக்ஷைப்பழத்தைக் கல்வத்திலிட்டு வெண்ணெய்போலரைத்துத் தனியே யெடுத்து வைத்துக் கொள்ளவும்; வாதுமைப் பருப்பைக்கொஞ்சம் நெய்யிற் சிவக்க வறுத்துத் தனியே கல்வத்தில் வெண்ணெய்போலரைத்தெடுத்துக் கொள்ளவும்; குல்கந்தையுங் கல்வத்தில் தனியே யரைத்தெடுத்துக்கொள்ளவும். பிறகு எல்லாவற்றையு மொன்றாகச்சேர்த்து க-மணி நேரமரைத்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—பலம்-0, க. இதனை இராக் காலங்களிற் சாப்பிடலாம்; காலையிலுஞ் சாப்பிடலாம். ஆனால், இராக்காலங்களிற் சாப்பிடுவதுதான் உசிதம்.

உபயோகம்:—மலபந்தம், மலச்சிக்கல், மலாக்கிரமம் ஆகியவைகளைத் தீர்த்து, மலத்தைக் கிரமப்படுத்தித் தேகத்திலுள்ள எல்லாவியாதிகளையுந்தீர்த்துச் சுகானுபவத்தை நிலைத்து நிற்கச் செய்யும்.

குறிப்பு.

பெரும்பான்மையும் எல்லா வியாதிகளிலும் முக்கியமாய் தாதுநஷ்டச் சிகிச்சையில் மலக்கிரமத்தை யனுசரித்துச் சிகிச்சை செய்யவேண்டிய. தவசிய மாகையால், மலக்கிரமத்தை ஒழுங்காக்கும் ஒரு சிறந்த முறையை ஆரம்பத்தி லெழுதி யிருக்கின்றார் போலும்.

செந்தாமரை மாமன்—ரோஜாப்பூ; மதுபானத்தாய்-திராக்ஷைப்பழம்; ஓட்டுக் கவசத்தான்—வாதுமைக் கொட்டை; சதாசிகி-சூரத்துநிலாவாரை; துருபதம்-சிவதைவேர்; குல்கந்து—ரோஜாப்பூவையுங் கற்கண்டையுஞ் சேர்த்துப் பாகப்படுத்தப்பட்ட ஒருவகைக் கிலேதம்.

## 32. ஜீவாமிருத லாடு.

கெக்கரிவிதைப் பருப்பு, சுரைவிதைப் பருப்பு, பரங்கிவிதைப் பருப்பு, பூசனிவிதைப் பருப்பு, பருத்திவிதைப் பருப்பு, முலாம்பழ விதைப் பருப்பு, வெள்ளரிவிதைப் பருப்பு, இவைவகை-க-க்குப் பங்கு-௪, வெண்ணிறமான கருவேலம் பிசின் பங்கு-௨0, கற்கண்டு பங்கு-௫, ஏலரிசி பங்கு-௫.

செய்முறை:—பருப்புகளை யெல்லாம் இளம் வறுப்பாக வறுத்து அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவேண்டும். (இஷ்டமானால் இப்பருப்புகளை நெய்யில் வறுத்துக்கொள்ளலாம்) நீர்முள்ளி விதையைக் கொஞ்சம் மணம்வரும்படியாக வறுத்துச் சூரணஞ்செய்து மேற்கண்ட எடை நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். கருவேலம் பிசின்



நெய்யிற் பொரித்து அம்மியில் வைத்துவெண்ணெய்போலரைத்தெடுத்துக் கொள்ளவேண்டும். ஏலரிசியை, அல்லது, ஏலக்காயை இளம் வறுப்பாக வறுத்து அதிக நண்மையான தூளாகச் செய்யாமற் சற்றுப் பருமனான தூளாகச் சிதைத்துத் தனியே வைத்துக்கொள்ள வேண்டும். கற்கண்டைப் பாகுசெய்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கின்ற பருப்பினங்களைப்போட்டுக் கடைந்து, பிறகு நீர்முள்ளி விதைச்சூரணத்தைப்போட்டுச் சற்றுநேரங் கடைந்து, பிறகு கருவேலம்பிசினைச் சேர்த்துச் செம்மையாகக் கடைந்து முடிவாக ஏலப்பொடியைத் தூவிச் செம்மையாகக்கிளறிக் கொடுத்துக் கீழே இறக்கி இளஞ்சூட்டுடன் சுமார் ஒருபலமுள்ள லாடுகளாகப் பிடித்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—பசிதீபனத்திற்குத் தகுந்தபடி -௧, அல்லது, ௨-லாடுகளைச் சாப்பிடலாம். காலையில் ஒருவேளை மாத்திரம், அல்லது, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம். சிறு பிள்ளைகள், வயது சென்றவர்கள், ஸ்திரீகள் முதலிய எல்லோரும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—இரத்தவிருத்தி யுண்டாகி, தேகபுஷ்டி, தேகபலம், தேகதிடம், தாதுவிருத்தி, சந்தானவிருத்தி ஆகிய இவைகளுண்டாகும். இதனைத் தொடர்ச்சியாக உபயோகித்துவந்தால், துரும்புபோலிருக்கிற தேகமானது தூண்போற் பெருத்து வலுத்துப் போகும். சிறுவர்களுக்குச் சாதாரணமான மிட்டாய் தினுசுகளைவாங்கி உபயோகித்து அவர்கள் தேகசுகத்

தைக் கெடுப்பதைப்பார்க்கிலும் இந்தலாடுவைப் பட்சணமாக உபயோகித்துவந்தால், அநேகவித நன்மைகளுஞ் சுகிர்தங்களு முண்டாகும்.

### குறிப்பு.

இது ஔஷத ஆகாரமாகிய ஓர் சிறந்த முறை. இதனை எல்லோரும் உபயோகிக்கலாம். தாதுவிருத்திக்குப் பிரதானமானது இரத்தவிருத்தியாகையால், இரத்த விருத்திக்கு ஹேதுவான இதனையு மிங்காரம்பமாகச் சொல்லி யிருக்கின்றார்போலும்.

## 33. யோகராஜ கோகிலம்.

சித்திரமூலவேர்ப்பட்டை, கடுகு, அரிசித்திப்பிலி, வசம்பு, மேற்றோல்சீவின சுக்கு, பொரித்த பெருங்காயம், வெண்ணொச்சி வேர்ப்பட்டை, யானைத்திப்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம், வாய்விளங்கம், கண்டத்திப்பிலி அதிவிடயம், சிறுதேக்கு, அஜமோதா ஓமம், உலர்த்தின ஆற்றுத்தும்மட்டிக்காய்ச்சதை, வலம்புரிக்காய், கடுகுரோகணி, இவற்றைத் தனித்தனி இடித்த சூரணம் வகை-௧-க்கு விராகனெடை-௧, மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல், இவற்றைத் தனித்தனி இடித்த சூரணம் வகை-௧-க்கு விராகனெடை ௧௨, சுத்திசெய்த மைசாக்ஷி விராகனெடை-௫௪.

செய்முறை:—எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டு வெண்ணெய்போலாகிற வரையிலிடித்துப் பீங்கான்பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-௨, ௧.



அனுபானம்:—சீனிசர்க்கரை, பனைவெல்லம், வெண்ணெய், நெய், தேன், சுக்குக் கிஷாயம், இஞ்சிச்சாறு, முள்ளங்கிக் கிழங்குச்சாறு, ரஸ்தாளி வாழைப்பழம் முதலியவைகளாம்.

உபயோகம்:—வாயுரோகங்கள், பலவகை வயிற்றுநோய்கள், காமாலைரோகங்கள், சுவாசகாச ரோகங்கள், சுவாசரோகங்கள், மந்தாக்கினி ரோகங்கள், ஆமவாத ரோகங்கள், பவுத்திரரோகங்கள், இந்திரிய சிராவகரோகங்கள், இருமல் ரோகங்கள், கபரோகங்கள், வயிற்றிலுண்டாம் பலவகைக் கட்டிகள், வாதரத்தரோகங்கள், அரோசிகரோகங்கள், பெரும்பாடு ரோகங்கள், சங்கிரஹணிரோகங்கள், நீரிழிவு, நீர்ப்போக்கு, திரிதோஷ விகற்பரோகங்கள், பிரமேக ரோகங்கள், உஷ்ணசம்பந்த ரோகங்கள், காக்கைவலி, வெள்ளை நீரொழுக்கு, மூலரோகங்கள் முதலிய அநேக ரோகங்கள் தீரும்,

### குறிப்பு.

யோகராஜ கோகில மென்னும் ஔஷதமானது ஒரு சிறந்த ஆயுர்வேத ஔஷதம். பாகடமுதலிய பல சமஸ்கிருத கிரந்தங்களில் இம்முறைகளைப் பற்றி அதிக விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அம்முறைகளுள் பெரும்பாலான வைகளில் அநேகவித அபூர்வசரக்குகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் இந்நாட்டில் அகப்படக் கூடாத வைகள். ஆகையால் அம்முறைகளை யெல்லாம் ஆராய்ந்து தேர்ந்தெடுத்து, செய்வதற்குச் சுலபமான தாகவும் குணத்தில் விசேஷமானதாகவும் இருக்கிற இம்முறை

ங்குச்சொல்லப்பட்டிருக்கிறது. தாதுவிருத்தி சிகிச்சையில், தாதுநஷ்டத்திற்கு ஆதிகாரணமாயிருக்கிற மேற்கண்ட வியாதிகளை முன்னர் தீர்த்து, பிறகு அதற்குச் சிகிச்சை செய்யவேண்டிய தவசிய மாகையால், இந்த முறைஇங்குச் சொல்லப்பட் டிருப்பதுபோலும். அனுபவ சாலிகளான பண்டித சிரோமணிகளுக்கு இதன் அருமை பெருமைக ளெல்லாஞ் செவ்வனே விளங்குமாகையால், இதைப்பற்றி இங்கதிக மெழுதாது விடுத்தனம்.

பத்தியம்:—இந்த திவ்விய ஔஷதத்திற்கு எவ்வித பத்தியமு மில்லை. ஆயினும், வியாதிக்கு மூலகாரணமாயுள்ள வஸ்துக்களையும் ஆகாரங்களையும், சதா கடவடிக்கைகளையும் நீக்கவேண்டியதே முக்கியமான பத்தியமாம்.

## 34. இரசிதாமிருத சஞ்சீவி.

சுத்திசெய்த பாலரசம் விராகனெடை-ரு, கல்வத்தில் விட்டுப் பின் சொல்லப்பட் டிருக்கிறபடி சித்தப்படுத்தப் பட்ட நவசார எண்ணெயைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்று நாளரைத்துப் பிறகு கடுகிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ௩-நாள் அரைத்து, ஒரு சட்டியில் வைத்து மேல்சட்டிக்கு ஊமத்திலைச் சாற்றைச் சுவறச் சுவறப் பூசி புலர்த்தி மூடிச் சந்துவா யில்லாமற் பதினொரு சீலைமண் செய்துலர்த்தி அடுப்பின் மீதேற்றி, தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினியாக முறையே ௬-சாமநேர மெரித்து ஆறவிட்டெடுத்தால், ரசமெல்லாம் பதங்கித்துப்போயிருக்கும். இந்தப் பதங்கத்தைச் ஜாக்கிரதையுடன்



சுரண்டியெடுத்து, அபிரேக்குத் தகட்டின்மீது வைத்து வெங்காயச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ௬-சாமநேரஞ் சுருக்கிடவேண்டும். பிறகு ஊமத்திலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ௬-சாமநேரஞ்சுருக்கிடவும். பிறகெடுத்துக் கல்வத்திலிட்டுக் கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ௧௨-சாமநேரமரைத்து வெயிலில் வைத்து ஈரமில்லாம லுலர்த்தி நிறுத்துக் கண்ட எடையிற் பாதிப்படை வெள்ளிரேக்கைச் சேர்த்தரைத்து உருண்டையாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

ஓமம், குராசாணி ஓமம், அஜ்மோதா ஓமம், சொறியோமம் இவை வகை-௧-க்குப் பலம்-௧௨. இவற்றைச் சூரணித்துக் கல்வத்திலிட்டுச் சம்பங்கியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து வெண்ணெய்போலரைத்து, முன் சித்தப்படுத்தின உண்டையை இதற்குள் வைத்து எங்கும் சமமாக விருக்கும்படியாகச் செய்து இதன்மீது ஏழு சீலைமண் செய்துலர்த்தி ௨௦௦-பலம் வறட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்க, கடவுளினது கிருபையால் ரசமும் வெள்ளியுஞ்சேர்ந்து பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-௧.

அநுபானம்:—தேன், நெய், வெண்ணெய், அந்தந்த வியாதிக்கான லேகியங்கள், கஷாயங்கள், சூரணங்கள் முதலியவைகளாம்.

உபயோகம்:—மூளை சம்பந்தமான வியாதிகள், கண், மூக்கு, காது, பல்லீறு முதலியவைகளி லுண்டாகும் வியாதிகள், ஈரல், நுரையீரல், நெஞ்சு, தொ

ண்டை, பெருங்குடல், சிறுகுடல், பெண் மர்மஸ்தானம், ஆண் மர்மஸ்தானம் பீஜம் முதலியவைகளிலுண்டாகும் நானாவித ரோகங்கள் ஆகியவைகள் தீரும். இதனால் நூற்றைம்பது ரோகங்கள் தீருமெனச்சொல்லப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட ரோகங்கள் தீர்ந்து நரம்புகள் முறுக்கேறிப் பலப்பட்டு, தேகபலம், தேகதிடம், தேகவன்மை, உற்சாகம், மனோபலம், ஊக்கம் முதலியவைகளுண்டாகும். புத்திர சந்தானத்திற்கும் ஹேதுவாகும்.

குறிப்பு.

இது ஒரு சிறந்த கற்பமாகையால் எல்லாவற்றிற்கும் முதலாவதாகச் சொல்லப்பட்டிருக்கிறதுபோலும். இது செய்வதற்குக் கொஞ்சம் கஷ்டமாயிருந்தாலும் இதன் பிரயோஜனத்தை நோக்குமிடத்து அந்தக்கஷ்டம் எவ்விதத்திலும்பிரமாதமானதாகாது. ஊக்கமுள்ளவர்கள் எவ்விதத்திலுஞ் செய்தேதீர்ப்பார்கள். சோம்பலாயுள்ளவர்களுக்கு எல்லாப் பாகமுங் கஷ்டமாகவேயிருக்கும்.

## நவச்சார எண்ணெய்.

நவச்சார எண்ணெய் வகைகள் பல கிரந்தங்களிலும் பலவகையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆயினும் அனுபவசித்தமான இலகுவான உ-பாகங்களை மாத்திரமிங்கெழுதுவாம். அவை பின்வருகிற விதமாம்.

1. வாயகலமான படிகக்கிளாஸ் ஒன்றைச்சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். அதன்வாயில் மெல்லிய வஸ்திரத்தைப்போட்டு அதன் கழுத்தில் மெல்லிய



கயிற்றைச்சுற்றிப் பலமாக இறுகக்கட்டி விடவேண்டும். பிறகு கிளாசின் உதட்டைச் சுற்றிலும் 2-அங்குல உயரம் கோதுமைமாவைக் குழைத்து, அல்லது, உளுந்துமாவைக் குழைத்துக் காலங்குலகனமுள்ள சுவரைப்போல் வைக்கவேண்டும். பிறகு முன் கட்டியிருக்கிற வஸ்திரத்தின்மீது ஆறு விராகனெடை வெண்காரத்தைப் பொடித்துப் போட்டுப் பரப்பி அதன்மீது மூன்றுபலம் நவச்சாரத்தைத் தூள்செய்துபோட்டுப் பரப்பி அதன்மீது மறுபடியும் ஆறுவிராகனெடை வெண்காரத்தைத் தூள்செய்து பரப்பி ஒரு இரும்புச்சட்டியை முன் சுவரின்மீது வைக்கவேண்டும். உள்ளிருக்கிற சரக்கானது சட்டியினடியிற் படாமற் சற்றுயரமாயிருக்கும்படியாகப் பக்குவமாகப் போடவேண்டியது. பிறகு அந்த இரும்புச்சட்டியில் இருபத்திநாலுபலம் கரியைப்போட்டு நெருப்பிட்டு விசிறிக்கொண்டேயிருக்கவேண்டியது. இரும்புச்சட்டியின் சூட்டேறவேற நவச்சாரத்திலிருந்து எண்ணெய் கக்கப்பட்டுக் கிளாசில் இறங்கிநிற்கும். இப்படி இறங்கும்போது கிளாசை அடிக்கடி பார்வையிட்டுக் கொண்டிருக்கவேண்டியது. ஏனெனில், மேற்படி எண்ணெய் சொட்டுவது நின்றுவிட்டால், உடனே நிறுத்திவிடவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், நவச்சாரத்தின் திப்பியுங் கூட இறங்கி எண்ணெயுடன் சேர்ந்துபோகும். இது மிகவும் சூட்சமும் அருமையுமானமுறையாம். இதைச் சந்நியாசிகள், பைராகிகள் முதலியவர்கள் ரகசியமாகச்செய்து வைத்திருப்பார்கள். இதனால் அனேக காரியங்களாகும். சமயம் வாய்க்கும்போது விபரமாயெழுதுவாம்.

2. வேண்டிய அளவு நவச்சாரத்தை மடக்கி மடக்கிப் பதங்கித்துக்கொள்ளவேண்டும். நவச்சாரத்தைப் பதங்கிக்கும் முறைகள் நமது இரசவாத சிந்தாமணியிற் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள் இஷ்டமான முறைப்படி செய்தெடுத்த நவச்சாரப்பதங்கம் - ௧-பங்கு, அண்டவோட்டுப் பற்பம்-௧-பங்கு. இவ்விரண்டையுஞ் சேர்த்தரைத்துக் கொண்டிருந்தால், தானே எண்ணெயாகி விடும். அதனைச்சீஷாவிற் பத்திரப்படுத்தவும். அண்டவோட்டுப் பற்பமுறைகள்பல நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள் இஷ்டமான ஒன்றைச்செய்துகொள்க.

இந்த எண்ணெயைத் தனியாகவும் உபயோகிக்கலாம். சுரக்கட்டி, அஜீரணரோகம், குன்மரோகம் ஆகியவைகள் குணமாம்.

மேற்கண்ட இருவகைகளில் இஷ்டமான முறைப்படிசெய்த எண்ணெயை மேற்கண்ட இரசபற்பத்தில் மேற்கண்டபடி உபயோகிக்கவும்.

## 35. பிரமேக பைரவி.

—சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் விராகனெடை-௨௪, ஏலரிசிச்சூரணம் விராகனெடை - ௧௫, வெள்ளாட்டுப்பால் விராகனெடை-௬0, சோற்றுக் கற்றாழைப்பால் விராகனெடை-௧௨0, வெள்ளைச் சாட்டரணைச்சாறு விராகனெடை-௧௨0.

செய்முறை:—ஆரம்பத்திலுள்ள இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டு அரைமணிநேரம்அரைத்துப் பிறகு வெள்ளாட்டுப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து



அரைக்கவேண்டும். அந்தப் பாலெல்லாஞ் சென்றபின்பு, நிழலில்வைத்து ஈரமில்லாம லுலர்ந்தபின்பு கற்றாழைப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்தரைக்கவேண்டும். அந்தப் பாலெல்லாஞ் சென்றபின்பு முன்போல் ஈரத்தையுலர்த்தி, வெள்ளைச் சாட்டரணைச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து அந்தச் சாறெல்லாஞ் சுண்டினபின்பு முன்போல் ஈரத்தை யுலர்த்திப் பொடித்து ஒரு சிறு மண்சட்டியிற்போட்டு அதில் அறுபது விராகனெடை மருதோன்றியிலைச் சாற்றை விட்டுப்பகலில் வெயிலிலும், இரவிற்பனியிலும் வைத்துவரவேண்டும். அந்தச்சாறெல்லாஞ் சுண்டின பின்பு மேற்சட்டிமூடி எழுசீலைமண்செய்து செம்மையாக உலர்த்தி அடுப்பின்மீது வைத்து ௨௮-பலம் கரியைப்போட்டு நெருப்பிட்டு எரிக்கவேண்டும். முன்னர் ௧௪-பலம் கரியை நெருப்பாக்கி அடுப்பிற்போட்டு அதன்மீது மீதிக் கரியைப்போட்டு விசிற அது பற்றியெரியும். இவ்விதம் செய்யும்போது மேற்சட்டியின்மீது ஈரத்துணியைப்போட்டு வைக்கவும்வேண்டும். இவ்விதம் இரண்டு மணிநேரம் பூரணமாகச் சென்றபின்பு நெருப்பை நீக்கிவிட்டு அடுப்புடன் சட்டியை விட்டு விடவும். குளிர ஆறினபின்பு பாத்திரத்தை யிறக்கிக் கவசத்தைப்பிரித்து அதிலுள்ள பதங்கத்தைச் சுரண்டி யெடுத்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும். பதங்க மேறாதிருந்தால் மறுபடியும் முன்போல் நெருப்பிட்டு எரித்தெடுத்துக் கொள்க.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-௮, ௧௨.

அனுபானம்:—தேன், வெண்ணெய், நெய், வில்வாதிலேகியம், வெள்ளறுகை யரைத்த விழுது, பிரம

கண்டுச்சாறு முதலியவைகளாம். இதனை யுட்கொண்டவுடன் பசுவின்பாலை ஜீரண சக்திக்குத் தகுந்தவாறு உபயோகிக்கவேண்டும்.

உபயோகம்:—பிரமேகம், நீரெரிச்சல், நீர்ப்பைஅழலை, நீர்த்தாரை அழலை, நீர்ப்பை, நீர்த்தாரை ஆகியவைகளின் புண், முதலியவைகள் தீரும். பிரமேகமானது எத்தனைநாட் பட்டதாயினும் தீர்ந்துபோகும்.

பிரதமதண்டு இலைச்சாறு பலம்-க, வெள்ளறுகுச்சாறு பலம்-க, நல்லெண்ணெய் பலம்-உ. இம்மூன்றையும் மிஸ்ரமித்து மேற்படி பதங்கத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இரத்தப் பிரமேகம், மஞ்சட் பிரமேகம், வறட் பிரமேகம் ஆகியவைகள் தீரும். நீரடைப்பு, கல்லடைப்பு ஆகியவைகளும் தீரும்.

பத்தியம்:—வியாதி பலத்திற்குத் தகுந்தபடியும் தேக பலத்திற்குத் தகுந்தபடியும் புளி, புகை, பெண் ஆகியவைகளை நீக்கவேண்டியது.

குறிப்பு.

மேற்படி பதங்கத்தால் புண்கள், சொறிகள் முதலிய கருமரோகங்களுந் தீர்ந்திருக்கின்றன.

## 36. காமாக்கினி ஜீவரசம்.

ஜாதிலிங்கம் விராகனெடை-௩, (இது ஒரே கட்டியா யிருக்கவேண்டும்.) இதன்மீது ஒன்றரைப்பலம் தலைமயிரைச் சுற்றிக்கொளுத்திவிட வேண்டும். (இந்த ரோமத்தைச் சோப்பு, சிகைக்காய் முதலியவைக



ளைச் சேர்த்துக் கொஞ்சமும் எண்ணெய்ப் பசையில்லாமற் கழுவிச் சுத்திசெய்து ஈரமில்லாமற் செம்மையாக உலர்த்திப் பிறகு மேற்கண்ட விதமாகச் சுற்றியெரித்தெடுக்கவேண்டும்.) எரிந்தடங்கின பின்பு மேலிலுள்ள கருக்கைக் கூரிய கத்திமுனையாற் சுறண்டி நீக்கிவிட்டு, இரண்டாந் தடவையும் ஒன்றரைப்பலம் முன்போற் சுத்திசெய்த உரோமத்தைச் சுற்றிக்கொளுத்தி எரித்தெடுக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி நான்கு தடவைகள் செய்தெடுக்க லிங்கமானது சுத்தியாகி ஒருவிதக் கட்டும் ஆகியிருக்கும். பிறகு சேராங்கொட்டை பலம்-௪உ, வாலுளுவை யரிசி பலம்-௪. இவ்விரண்டையும் கல்லுரலிலிடித்து வெண்ணெய்போலான பின்பு ஒரு உருண்டையாகச் செய்து அதற்குள் முன் பாகப்படுத்தின லிங்கத்தை வைத்து எங்கும் சமமா யிருக்கும்படியாகப் பொதிந்து ஒரு மண் சட்டிக்குள் வைத்து மேலும் மண் சட்டிமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றிச் சிறு தீயாக நான்கு சாமநேர மெரித்து அடுப்புடன் விட்டுக் குளிர ஆறினபின்பு கவசத்தைப் பிரித்தெடுத்து, லிங்கத்தின் மீதுள்ள கருக்கைக் கூரிய கத்திமுனையால் மெதுவாகச் சுறண்டி நீக்கி, லிங்கத்தை மாத்திரமெடுத்துக் கொள்ளவேண்டும். இது கட்டுப்பட்டிருக்கும். நெருப்பிற்போட்டால் சிறு புகையாயிருக்கும். இதனை யெடுத்துக் கல்வத்திற்பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை-க, உ.

அனுபானம்:—பாலேடு, வெண்ணெய், நெய், முதலியவைகளாம்.

உபயோகம்:—நரம்புகள் முறுக்கேறி தாதுவிரு
த்தி, வீரியவிருத்தி, புருஷத்தன்மை முதலியவைகளு
ண்டாகும்.

இதனை யுபயோகிக்கும்போது கீழ்க்கண்டிருக்கிற
மேற்பூச்சையும் உபயோகித்து வந்தால் மிகவுஞ் சிரே
ஷ்டமான குணத்தைத்தரும்.

### மேற்பூச்சுத் திலா.

அக்கிராகாரத்தூள், லவங்கப்பட்டைத்தூள், இ
ந்திர கோபப்பூச்சி, இவை வகை-௧-க்கு விராகனெடை
-௪, எருமைப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மூன்று சரக்குகளையுங் கல்வத்தி
லிட்டுப் பொடித்து அரைமணிநேரஞ் சேர்த்தரைத்துப்
பிறகு மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்
டு சாமநேரமரைத்து வெண்ணெய்போலான பின்பு வ
ழித்துப் பீங்கான் சிமிழில், அல்லது, கொம்புச்சிமிழி
ற்பத்திரப்படுத்தவேண்டும்.

உபயோகிக்கும் விதம்:—இராக்காலங்களில், அ
ல்லது, சாவகாசமான காலங்களில் மேற்படி மெழுக்கி
ல் -௧௨- குன்றிமணியெடை யெடுத்து அவசியமான
பாகத்தில் மலர், தைபற்பாகம் ஆகிய ஸ்தானங்கள்
நீங்கலாக மற்ற விடங்களிற் பூசி, நெருப்பில் வாட்டி
வதக்கின எருக்கின் பழுப்பை, அல்லது, வாட்டின
வெற்றிலையை, அல்லது, வாட்டின ஆலம்பழுப்பை அ
தன்மீது வைத்து நூலாற் சுற்றிக் கட்டிவைக்க வேண்
டும். பத்து, அல்லது, பனிரண்டு மணிநேரம் சென்ற
பின்பு கட்டை யவிழ்த்து நீக்கிவிட்டு இளஞ்சூடான
வெந்நீரை விட்டுக் கழுவிச் சுத்திசெய்து விடவேண்



டும். இடையில் பத்துமணி நேரம் சாவகாசம் விட்
டு மறுபடியும் முன்போற் பூசி முன்போற் கட்டிவை
க்க வேண்டும். இவ்விதம் ஒருவாரம், இரண்டுவாரம்
வியாதியின் பலத்திற்குத் தகுந்தபடி செய்துவர வே
ண்டும். இதனை உபயோகிக்கும்போதும், இதனை உப
யோகித்து விட்டபின்பு ஒருவாரம் வரையிலும் ஸ்தி
ரீ சங்கமத்தை நீக்கிவைக்க வேண்டியது ஆவசியகம்.
இதனால் மேற்கண்ட குணங்களெல்லாம் அதிசீக்கிர
மாகவும், விசேஷ மாகவும் உண்டாகும். இதனைத்
தனியாகவும் உபயோகிக்கலாம். இதனால் நரம்புகளி
ன் தளர்ச்சி, அவற்றின் சோர்வு, அவற்றின் மெலிவு,
அடிசிறுத்து நுனி பெருத்திருத்தல், வளைந்திருத்தல்
முதலியவை தீரும்.

## 37. பிரதாப லிங்காமிர்தம்.

சுத்திசெய்த உலாந்தா லிங்கம் விராகனெடை-
௩, வெள்ளி அரப்பொடி, அல்லது, வெள்ளிரேக்கு வி
ராகனெடை-௩, கொம்புக் கள்ளிச்சாறு செல்லத்தக்
அளவு.

செய்முறை:—லிங்கத்தையும் வெள்ளியையுங்க
ல்வத்திலிட்டு ஒருமணி நேரமரைத்து இரண்டுங் கல
ந்தபின்பு மேற்படி கள்ளிச்சாற்றைச் சிறுகச் சிறுக
வார்த்து நான்கு சாமநேரமரைத்து ஒரே பில்லையா
கச் செய்து வெயிலிலுலர்த்தி நன்றாயுலர்ந்தபின்பு அத
ன்மீது ஏழு, அல்லது, பதினொரு, எருக்கிலையை ஒன்றி
ன்மேலொன்றாகச் சுற்றி ஒரு சிறு பானையில் அரை
ப்படி மணலைக்கொட்டி, அதன்மீது வைத்து அதன்மீ
து முக்காற்படி மணலைக் கொட்டவேண்டும். இந்த ம

ளைலானது அந்தப் பாத்திரம் நிறைந்திருக்கும்படியாக இருக்கவேண்டும். பானையின் வாயை மண் தாலத்தால்மூடி ஐந்துசீலைமண்செய்து அடுப்பேற்றி, ஆரம்பத்தில் தீபாக்கினியாகவும், பிறகு கமலாக்கினியாகவும் நான்குசாமநேரம் எரித்து அடுப்புடன்விட்டுக் குளிரஆறினபின்பு எடுத்துக் கல்வத்திற் பொடித்து வைத்துக் கொள்ளவும். இது இரண்டும் சேர்ந்து செந்தூரமாகி யிருக்கும்.

மேற்படி செந்தூரம் விராகனெடை-௫, குங்குமப்பூ விராகனெடை-௫, அரிசித்திப்பிலிச் சூரணம் விராகனெடை-௫, மிளகுச் சூரணம் விராகனெடை-௫, உயர்தரமான கஸ்தூரி விராகனெடை-ஒ, அம்பர்விராகனெடை-௨, தாழம்பூத் திராவகம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்குகளை யெல்லாம் கல்வத்திலிட்டுத் தாழம்பூத் திராவகத்தைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமநேர மரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧, ௨.

அனுபானம்:—வெண்ணெய், நெய், தேன், சர்க்கரை முதலியவைகளாம். இதனைச் சாப்பிட்டவுடன் பசிதீபனத்திற்குத் தகுந்தபடி காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின் பாலையும் பானஞ் செய்துவர வேண்டும். காலையில் ஒருமாத்திரையும் மாலையில் ஒருமாத்திரையுமாக இரண்டுவேளை உபயோகித்தாற்போதுமானது. அவசியமானால் இஷ்டமான வரையிலும் உபயோகித்துக் கொள்ளலாம்.



உபயோகம்:—சுறுசுறுப்பு, ஊக்கம், மனோதைரியம், மனோற்சாகம், ஆண்மை, சூரத்தன்மை, முதலியவைகள் அடங்காத விதமாக உண்டாகும். அடங்காப்பசியுமுண்டாகும். இரத்தத்திலுள்ள தோஷங்கள் நீங்கி, அது சுத்தப்பட்டு, அது விருத்தியுமடையும். தாதுவிருத்தி, போகவிருத்தி, நிருவாக சத்தி, தம்பனசக்தி, ஞாபகசக்தி ஆகியவைகள் அதிகப்படும்.

பத்தியம்:—பெண், புளி, புகை ஆகியவைகளை நீக்கவேண்டியது. இன்னும் தேக சுபாவத்திற் கொவ்வாத பதார்த்தங்களையும், அசுத்த ஆகாரமான பதார்த்தங்களையும் நீக்கவேண்டியது. பாற்பாயசம், பாற்கவ்வா, மிட்டாய்த் தினுசுகள், கோதுமைப்பாலல்வா, வாதுமை ஹல்வா, தேங்காய்ப்பாற் சோறு, தேங்காய்ப்பால், கிச்சடிச் சாதம், பலாவு, பறவைகளின் இறைச்சி, முதலிய சத்துள்ள ஆகாரங்களை உபயோகித்து வரவேண்டும். இன்னும் அவரவர்களின் சக்திக்கியன்றவாறு சுத்தமாகவும், சத்துள்ளதுமான ஆகாரங்களை யுபயோகித்து வருவது சிரேஷ்டம்.

## 38. மகா மேகாமிர்தம்.

இலந்தைப் பட்டையை ஈரமில்லாம லுலர்த்தி எரித்துச் சாம்பலாக்கிக் கொள்ள வேண்டும். (இலந்தையிலை, இலந்தை விறகு முதலிய இலந்தை சமூலத்தையும் எரித்துச் சாம்பலாக்கிக் கொள்ளலாம். எல்லா வற்றிற்கும் குணம் ஒன்றுதான்) இந்தச் சாம்பல் பலம்-௫௦, இதனை ஒருமண் பாத்திரத்திற் போட்டு அதில் ஒன்றரைப்படி கடல் ஜலத்தைவிட்டு இராக்காலங்களில் பனியில் வைக்கவேண்டும். பகலில் குளிர்ச்

சியான இடத்தில் மூடி வைத்துவர வேண்டும். இராக்காலங்களில் இரண்டொரு தடவை செம்மையாகக் கலக்கியும் விடவேண்டும். இவ்விதம் ஐந்துநாட்கள் செய்து ஆறாவதுநாள் கலக்காமல் விட்டுத் தெளிவை யிறுத்துக் கொள்ளவும். இரச கற்பூரம் விராகனெடை-௩, இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும். ஒரு இரும்புச் சட்டியின் நடுவில் ஒரு அப்பிரேகத் தகட்டை வைக்கவேண்டும். இந்தத் தகட்டின் மத்தியானது இரும்புச் சட்டியிற் படாமல் சற்று உயரமாக இருக்கவேண்டியது. அந்தத் தகட்டின்மீது மேற்படி இரச கற்பூரத்தை வைத்துச் சட்டியை அடுப்பின்மீதேற்றி மேற்படி தெளிவை ஒவ்வொரு துளியாகக் கட்டியின்மீது சுறுக்குக் கொடுக்க வேண்டும். நெருப்பானது தீபாக்கினியா யிருக்கவேண்டும். நெருப்பு அதிகப்பட்டால் மருந்து வீணாகி விடும். நெருப்பு குறைவா யிருந்தால் அது முடியச் சற்று தாமதஞ்செல்லும்; ஆயினும் பாதகமில்லை. அந்தத் தெளிவெல்லாஞ் சென்றபின்பு இரச கற்பூரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டும்.

சேராங் கொட்டை பலம்-௩, கருப்பு எள் பலம்-௩, நேர்வாளப் பருப்பு பலம்-௧௨. இம்மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்து வெண்ணெய் போலானபின்பு ஒரு உருண்டையாகச் செய்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற இரச கற்பூரக் கட்டியை அதற்குள் வைக்கவேண்டும். கட்டியின் எல்லாப் பக்கங்களிலும் மருந்தானது சமபாகமாக இருக்கும்படி கவசஞ் செய்யவேண்டியது. அதன்மீது ஒரு அங்குலகனம் சீலைமண் செய்ய வேண்டியது. ஒரு சீலை செய்



து அது உலர்ந்தபின்பு மறுசீலை செய்ய வேண்டியது. ஒரே தடவையாகச் செய்தால் மேலில் மாத்திரம் உலர்ந்து உள்ளே யீரமாக இருக்கநேரிடும். அதனால் மருந்து கிரமப்படி முடியாது. இவ்விதம் சீலைசெய்து செம்மையாக உலர்ந்த பின்பு -௨௰- பலம் வறட்டியில் குழிப்புடமிடவேண்டும். புடமானது குளிர ஆயினபின் எடுத்துக் கவசத்தைப் பிரித்துக்கட்டியை யெடுத்துக் கல்வத்திற்பொடித்துச் சீசாவிற்பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧, ௨.

அநுபானம்:—வெண்ணெய், நெய், சிற்றாமணக்கெண்ணெய் முதலியவைகளாம். ஆனால், ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலத்திற்குக் குறையாம லிருக்கவேண்டும். இரச கற்பூரமானது வாய் பிடிக்கும் சுபாவமுடையது. மேற்கண்ட விதமாகச் சுத்தப்படுத்தப்பட்ட இரச கற்பூரமானது வாய் பிடிக்காது. ஆயினும் சில சுகுமார தேகிகளுக்கு வாய்பிடிக்கும் சுபாவம் இதற்கிருக்கின்றபடியால் மேற்கண்டவைகளை அதிகமாகச்சேர்த்து உபயோகிப்பதினால் அந்தத் துற்குணம் நீங்கிப்போய் விடுகிறது. இது செய்வதற்கு அதிக சுளுவானதுங் குணத்தில் அதிக விசேஷமானதுமாம். ஆகையால் சிகிச்சகர்கள் இதனைத் தகுந்த விதமாகத் தகுந்த அநுபானத்தில் உபயோகிப்பார்களேயாயின் மிகுந்த லாபத்தையும், பெருமையையும், கீர்த்தியையும் அடைய ஹேதுவாகும்.

உபயோகம்:—பறங்கிப்புண், புராதனப் பிரமேகம், பவுத்திர ரோகம், குஷ்ட ரோகங்கள், பாலியச் சேஷ்டையினாலுண்டான அநேக ரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

க வியாதிகள் தீரும். முக்கியமாக நரம்புகள் அடிசிறுத்து நுனிபெருத்திருத்தல், மெலிந்துபோயிருத்தல், சுருங்கித் தளர்ந்திருத்தல், முதலியவைகள் தீரும். இந்திரிய சிராவகம், இந்திரியம் நீர்த்துப்போயிருத்தல், துரிதஸ்கலிதம், நீரடைப்பு, அரையாப்பு, கிரந்திப்புண்கள், மேக சுரங்கள், வேறுவகை யிரணங்கள் முதலியவைகளெல்லாம் தீரும். தாதுவிருத்தி, போகசத்தி, ஊக்கம், தைரியம் முதலியவைகளுண்டாகும். இந்திரியம் இறுகிக்கட்டுப்படும். இந்திரியத்திற் சத்துண்டாகிப் புத்திரசந்தானத்திற்கும் ஏதுவாகும்.

பத்தியம்:—இது ஒரு சிறந்த மருந்தாகையாலும், அனேக கடினமான வியாதிகளில் உபயோகிக்கத் தகுந்ததானபடியாலும், தேகசுபாம், வியாதிபலம், தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி உப்பு, புளி முதலியவைகளைத் தள்ளிப் பத்தியம் ஏற்படுத்த வேண்டும்.

## 39. விருத்த கௌமார சஞ்சீவி.

வெள்ளைப் பாஷாணம் விராகனெடை - ௧, இதனை ஒரு மெல்லிய வஸ்திரத்துண்டில் முடிந்துகொள்ளவும். ஒரு பாத்திரத்தில் மூன்றரைப்படி பசுவின்பாலைவிட்டு அதில் முன்சித்தப்படுத்தின முடிச்சைக் கிழிக்கட்டித் தொங்கவைத் தெரிக்கவேண்டும். இந்த முடிச்சானது பாத்திரத்தின் அடியிற்படாமல் சற்று உயரமாகத் தொங்கவிடவேண்டும். பாத்திரத்தின் அடியிற்பட்டால் மருந்து எரிந்து தீய்ந்துபோக ஏதுவாகும். தீயையும் அதிகமாக எரிக்கலாகாது. மெதுவாக எரித்துவரவேண்டும். தீ அதிகரிக்கப் பட்டாலும் பால்



பொங்குவதற்கும் தீய்ந்துபோவதற்கும் இன்னன பல விதகெடுதிகளுக்கும் ஏதுவாகும். ஆகையால், இவ்விஷயங்களைச் சற்று கவனித்து நிதானமாகச் செய்யவேண்டும். பாலெல்லாஞ் சுண்டினபின்பு, அடுப்புடன் ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு பாஷாணத்தை யெடுத்து வைத்துக் கொள்ளவும்.

ஐந்துபலம் கசப்பு வாதுமைப்பருப்பை அரைத்து வெண்ணெய்போலானபின்பு அதையெடுத்து ஒரு உருண்டையாகச்செய்து அதற்குள் முன் சித்தப்படுத்தின பாஷாணத்தை வைத்துக் கவசஞ்செய்து வைத்துக்கொள்ளவும். ஒரு தேங்காயின் மேற்புறத்தில் மேற்படி உருண்டை கொள்ளும்படியாக ஓட்டை உளியால் வெட்டியெடுத்து அதற்குள் இந்த உருண்டையைவைத்து முன்னெடுத்த ஓட்டைவைத்துப் பொருந்தும்படியாகச்செய்து எழுபலம் பேரீச்சங்காயை அம்மியில்வைத்து வேப்பிலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து வெண்ணெய்போலரைத்துக்கொள்ளவேண்டும். பேரீச்சங்காயை அரைப்பதற்கு முன்பு கல்லுரலிற் போட்டு மைபோலிடித்துக்கொண்டு பிறகு முன்சாற்றை விட்டரைப்பது சுலபமான மார்க்கம். ஆரம்பத்தில் இடிக்காமலரைத்தால் செம்மையாக அரைபடாமலிருப்பதுடன் அரைப்பதற்கும் வெகு கஷ்டமாக இருக்கும். ஆகையால் சமயோசிதமாக வெண்ணெய்போலரைத்துத் தேங்காயின்மேல் கவசஞ்செய்து ஒருநாள் நிழலில்வைத்து, அதன்மீது இரண்டு சீலைமண் செய்து, இருபதுபலம் வறட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின்பு எடுக்கவும். உள்ளேயிருக்கிற பாஷாணமானது சில சமயம் மெழுகாகியிருக்கும். சிலசமயம் பொரிந்

துபோயிருக்கும். இப்படியாவது நெருப்பின் விகற்பத்தாலாம். எப்படியாயினும், குணமொன்றே. ஆனால் நெருப்பிற்கோடாமல் கட்டுப்பட்டிருக்கும். மெழுகாயிருந்தால் அரை அரிசியெடையுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும். பொரிந்துபோ யிருந்தால் கல்வத்திற் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—அரிசியெடை-உ-ஞ-க.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவின் நெய், சர்க்கரை முதலியவைகளாம்.

நெய் விராகனெடை - க, சீனிசர்க்கரை விராகனெடை-கஉ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து லேகியம் போலச்செய்து அதற்குள் முன் மருந்தைப் பிரமாணப்படிவைத்து உபயோகிக்கலாம். பால்கவ்வா, பாலேடு, அல்லது, பசுவின் வெண்ணெய் இவற்றுள் ஏதாயினுமொன்று, விராகனெடை-உ, சீனிசருக்கரை விராகனெடை-க. இவ்விரண்டையுமிஸ்ரமித்து மேற்கண்ட மருந்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ணலாம்.

உபயோகம்:—குஷ்டரோகங்கள், மேகரோகங்கள், புண், புரை முதலிய சருமரோகங்கள் ஆகியவைகள் தீர்ந்து, மகா வீரியவிருத்தி, தாதுவிருத்தி, போகசக்தி முதலியவைகளுண்டாகும். பசிதீபனம் அதிகப்படுமாகையால், பால், நெய், இறைச்சி முதலியவைகளை அதிகமாகச்சேர்த்து வரவேண்டும்.

### 40 பராக்கிரம சஞ்சீவி.

படலரிதாரம் பலம்-ங, எருக்கம்பால் படி - ஞ, கள்ளிப்பால் ஆழாக்கு-ங, கல்யாண முருக்குச் சமூலத்தை யெரித்த சாம்பல் படி-க.



செய்முறை:—தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து அந்தப் பாலெல்லாஞ் சுண்டினபின்பு கள்ளிப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்துச்சிறுபில்லைகளாகச் செய்துலர்த்தி வைத்துக்கொள்ளவும். கல்யாண முருக்குச் சாம்பலில் மூன்றிலொரு பாகத்தை ஒரு சிறு மண்பானையிற்போட்டு அதன்மீது முன் சித்தப்படுத்தின பில்லைகளை வைத்து அதன்மீது மீதிச்சாம்பலைப் போட்டு மூடி மெதுவாக அழுத்திவிட்டு மேற்சட்டி மூடிச்சட்டிகளின் வாய்க்கு ஏழுசீலைமண் செய்துலர்த்தி இரண்டுசட்டி முழுவதும் ஏழுசீலைமண் செய்துலர்த்தி அடுப்பின் மீதேற்றி கஉ-வீசை விறகைக் காடாக்கினியாக எரித்து அடுப்புடன் குளிர ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு கவசத்தைப்பிரித்துப் பில்லைகளையெடுத்துக்கொஞ்சம் நெருப்பிற்போட்டு பரீக்ஷித்துப்பார்க்கவேண்டும். புகையாதிருந்தால் உத்தமம். புகைந்தால் மறுபடியும் முன்போற் சாம்பலுக்குள் வைத்து முன்போற்கவசஞ்செய்து முன்போலெரித்துக்கொள்ளவும். நெருப்பிற்கோடாமல் நின்றுபோம்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க.

அனுபானம்:—வெற்றிலையில் வைத்துச் சாப்பிடவும்.

உபயோகம்:—கிரந்தி ரோகங்கள், மேக ரோகங்
அநேக ரோகங்கள் தீரும்.
கள் முதலிய அநேக ரோகங்கள் ஜாதிக்காய்த் தூளு
நான்கு குன்றிமணியெடை, அனுபானித் தால்
டன் மேற்கண்ட பிரமாணப்படி யுண்டாகும்.
ணை, ஸ்தம்பன சக்தி முதலியவை

பத்தியம்:—புளிப்பு வஸ்துக்கள், புகை முதலியவைகளை நீக்கிவைக்கவும். சுத்தமான ஆகாரங்களை உபயோகிக்க வேண்டும்.

## 41. மகா வீரிய லிங்கபற்பம்.

லிங்கம் விராகனெடை-க, இது ஒரேகட்டியாக இருக்கவேண்டும். சேர்வாளப்பருப்பு விராகனெடை-உ, கிளிஞ்சல் தூள் பலம்-ச, முட்டை வெள்ளை அம்புலி செல்லத்தக்க அளவு, ஆற்றுமணல் படி-க.

செய்முறை:—வாளப்பருப்பை-உ-பாகமாக்கி க-பாகத்தைக் கல்வத்திலிட்டு அரைத்துப் பொடித்து வெள்ளையம்புலியைச் சிறுகச் சிறுகவார்த்து க-சாமமரைத்து மேற்படி லிங்கத்திற்குக் கவசஞ்செய்து வெயிலில்வைத் துலர்த்திக்கொள்ளவேண்டும். சாமுலர்ந்தபின்பு மறுபாதி வாளத்தைக் கல்வத்திலிட்டு, முன்போலரைத்து முன்போற்கவசஞ் செய்துலர்த்திக் கொள்ளவும். ஒன்றரைப்படி மணலை ஒரு மண்பாத்திரத்திற்போட்டு அதனடுவில் இரண்டு பலம் கிளிஞ்சில் தூளைப்பரப்பி, அதன்மீது முன் கவசத்தைவைத்து அதன்மீது இரண்டுபலம் கிளிஞ்சில் தூளைப்போட்டு மூடி அழுத்திவிட்டு, அதன்மீது ஒன்றரைப்படி மணலைக்கொட்டிப் பானைவாயை மண்தாலத்தால் மூடி. ஏழு சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றி நான்குசாமநேரந் தீபாக்கினியாக எரித்து, அடுப்புடனாறவிட்டுக் குளிர ஆறினபின்னெடுக்கக் கடவுளினுடைய கிருபையால் லிங்கமானது வெண்ணிறமான பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—இரண்டு அரிசி யெடை.



அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவின் பாலாடை, பசுவின்நெய், வாதுமைஹல்வா முதலியவைகளாம்.

உபயோகம்:—இதனைக் காலை மாலை இரண்டுவேளையுமாக இருபத்தொருநாள் உபயோகித்துவர, அடங்காதபலம், தேகசத்தி, தைரியம், வர்க்கம் முதலியவைகளுண்டாகித் தாதுபுஷ்டியுண்டாகும்.

பத்தியம்:—பெண், புளி, புகை, எண்ணெய் வஸ்துக்கள், உஷ்ணவஸ்துக்கள் ஆகிய இவைகளை நீக்கவும்.

பாலன்னம், பாற்பாயசம், மிட்டாய் தினுசுகள், கோதுமைப்பால் ஹல்வா, வாதுமைஹல்வா, நெய், பால் முதலியவைகளை அதிகமாக உபயோகிக்கவும்.

## 43. மகா வீரிய லிங்கச் செந்தூரம்.

லிங்கக்கட்டி விராகனெடை-க, சிறுக்காரத்தூள் விராகனெடை-அ, லவங்கச் சூரணம் பலம்-க, கள்ளிப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—சிறுக்காரத் தூளைக் கல்வத்திலிட்டுக் கள்ளிப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து மேற்படி லிங்கக்கட்டிக்குக் கவசஞ்செய்துலர்த்தி ஒரு சிறுமண் சட்டியில் க-பலம் இலவங்கத்தூளைப்போட்டுப் பரப்பி அதன்மீது முன்சித்தப்படுத்தின லிங்கக் கட்டியை வைத்து அதன்மீது க-பலம் இலவங்கப் பொடியைப்போட்டு மூடி மறுசட்டி மூடி கூ-சீலைமண் செய்துலர்த்தி சாக்கிரதையுடன் காடைவைத்து, ௧௨௦ பலம் வறட்டியிற் புடமிட்டாறினபின்னெ

டுக்க இலந்தைப்பழ வருணமுள்ள செந்தூரமாயிருக்
கும்.

பிரமாணம்:— அரிசியெடை-௨.

அனுபானம்:—பாலேடு, பசுவின் வெண்ணெய்,
பசுவின் நெய், பால் ஹல்வா, வாதுமை ஹல்வா, கோ
துமைப்பால் ஹல்வா முதலியவைகளாம்.

உபயோகம்:—தேகத்திலுள்ள நரம்புகள் முறுக்
கேறித் தேகம் பலப்பட்டு, தாதுவிருத்தி, தேகசக்தி மு
தலியவைகளுண்டாகும். எந்தக்காரணத்தினாலும் இழ
ந்துபோன ஆண்மை மறுபடியும் முன்போலுண்டாகி
விடும்.

பத்தியம்:—பெண், புகை, புளி, மிளகாய் ஆகிய
வைகளை நீக்கவேண்டியது. பொரித்தவஸ்துக்கள், நெய்,
பால் ஆகியவைகளை அதிகமாகச் சேர்த்துவரவேண்
டும்.

குறிப்பு.

இதன் மூலத்தில் லிங்கம் பலம் மூன்றென எழு
தியிருக்கிறது, அது இலவங்கத்தூள் பலம் மூன்றென்
றும் லிங்கம் விராகனெடை மூன்றென்றும் இருக்க
வேண்டியது. எதுகாரணத்தினால் இப்படி நேரிட்ட
தெனத் தெரியவில்லை. ஆனால் இந்தப்பாகமானது நம
க்குப் பலதடவை அனுபவப்பட்டிருப்பதால், நமதனு
பவப்படி இங்கெழுதி யிருக்கின்றோம். அனுபவமே பிர
மாணமாகையால், அனுபவத்தைப் பற்றியே போகவே
ண்டும். பாட்டை யொட்டியுள்ளபடி இங்கெழுதி யிருக்
கின்றோம். அனுபவத்தில் எது உண்மையென்பது தா
னே விளங்கிப்போகும்.



## 43. மேற்படி வேறு.

தேன் பலம்-௮, சோற்றுக் கற்றாழைச் சாறுபல
ம்-௮, (சோற்றுக் கற்றாழைப் பாலா யிருந்தால் உத்த
மம்) இரண்டையு மிவ்வாயித்து ஒரு இரும்புப் பாத்
திரத்தில் விட்டு ஒரே கட்டியாயுள்ள ௬-விராகனெ
டை லிங்கத்தை அதிற்போட்டு அடுப்பின் மீதேற்றிச்
சிறுதியாக எரித்து திரவமெல்லாஞ் சுண்டின பின்பு
லிங்கக் கட்டியை யெடுத்து அதன் மீதுள்ள பற்றை
க் கத்தி முனையால் மெதுவாய்ச் சீவி நீக்கி இரண்டா
ந்தடவையும் முன்போற் சோற்றுக் கற்றாழைச் சாற்
றைச் சேர்த்து முன்போல் முன் பாத்திரத்தில்விட்டு
முன் சித்தப்படுத்தின லிங்கக் கட்டியையும் போட்டு
முன்போற் சுண்ட எரித்தெடுத்து அதன் மீதுள்ள
பற்றை நீக்கி அதனைக் கல்வத்திலிட்டு முட்டை மஞ்ச
ட் கருவைச் சிறுகச் சிறுக வார்த்து -௫- சாம
நேரமரைத்து ஒரே பில்லையாகச் செய்துலர்த்தி அக
லிலிட்டு மேலகல்மூடி ௫-சீலைமண் செய்துலர்த்தி ௩-
பலம் வறட்டியிற் புடமிட்டெரித்து ஆறினபின் னெ
டுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து மஞ்சட்கருவை
ச் சிறுகச் சிறுக வார்த்து-௫-சாம நேரமரைத்து மு
ன்போற் பில்லை செய்துலர்த்தி முன்போற் கவசமுஞ்
செய்துலர்த்தி ௩௨- பலம் வறட்டியிற் புடமிட்டாறி
னபின் னெடுத்துக் கொள்ளவும். மூன்றாந் தடவையு
ம் முன்போலரைத் துலர்த்திக் கவசஞ்செய்து ௩௮-ப
லம் வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடுத்து நா
ன்காந் தடவையும் முன்போலரைத்துச் சித்தப்படுத்
தி-௨௫-பலம் வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடு
த்துப் பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ, க.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவின் பாலாடை, பால் ஹல்வா, லேகியங்கள் முதலியவைகளாம்.

உபயோகம்:—தளர்ந்த நரம்புகள் பலப்பட்டு முறுக்கேறி தேகசக்தி, போகசக்தி ஆகியவைகளுண்டாகும். மனோற்சாகம், தைரியம் முதலியவைகளுண்டாகித் தாதுவிருத்தியு முண்டாகும்.

பத்தியம்:—பெண், புளி, புகை ஆகியவைகளை நீக்கவும்.

## 44. மகா வீரிய லிங்க மெழுக்கு.

மயில்துத்தம் விராகனெடை-கஉ, வாலுழுவையரிசி விராகனெடை-கஅ, வாலுழுவையரிசியை ஒரு ஈயம் பூசாத தாம்பிரப் பாத்திரத்திற்போட்டு அதன்மீது மேற்படி துருசுக்கட்டியைவைத்து நாள்முழுவதும் வெயிற்படும்படியான விடத்தில் வைக்கவேண்டும். பிரதிதினமும்-ரு-சு-தடவைகள் அதிற் செம்மையாகப் படும்படி துருசுக்கட்டியைப் புரட்டிக்கொண்டும் வரவேண்டியது. இவ்விதஞ் செய்வதால் வாலுழுவையரிசியின் தைலமானது அந்தக் கட்டியின்மீது சுவறி யூறுவதற் கேதுவாகும். இவ்விதம்-உக-நாட்கள் செய்துவந்தால், அந்தத் துருசானது வெண்மையாக வெளுத்துப்போகும். இதற்குத் துருசு வெள்ளையென்று பெயர்.

இந்தத் துருசுவெள்ளையை முப்பத்தைந்துபலம் திருகுக்கள்ளிப் பாலிற்போட்டு ஓரிரவு வைத்திருந்து மறுநாட்காலையிற் பார்த்தால், முத்துப்போல அந்தப்



பால் தெளிந்துபோயிருக்கும். அந்தத் தெளிவை மாத்திரம் இறுத்துக்கொள்ளவும்.

மூன்று விராகனெடை கட்டின லிங்கக்கட்டியை அப்பிரேகத் தகட்டின்மீதுவைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து மேற்படி தெளிவைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்குக்கொடுத்துவந்தால் அந்த லிங்கமானது மெழுகாகிவிடும். இதனைப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை-உ.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவின் பாலாடை, நெய், சர்க்கரை, வாதுமை ஹல்வா, பால் கல்வா முதலியவைகளாம்.

உபயோகம்:-நரம்புகள் பலப்பட்டு முறுக்கேறித் தாது விருத்தியுண்டாகும். வாயு சம்பந்தமான ரோகங்கள், சீதள சம்பந்தமான ரோகங்கள் ஆகியவைகள் தீர்ந்து தேகசக்தி, போகசக்தி, ஸ்தம்பன சக்தி முதலியவைகளுண்டாகும். பிறப்பிலிருந்துண்டான நபுஞ்சகத் தன்மை நீங்கலாக மற்றெல்லாவகை நபுஞ்சகத்தன்மையுந்தீர்ந்து ஆச்சரியப் படும்படியான ஆண்மை, தேகபலம் முதலியவைகளுண்டாகும்.

இரச வாதத்திற் பிரியமுள்ளவர்கள் வெள்ளியையுருக்கி உருக்கு முகத்தில் பத்திற்கொன்று மேற்படி மெழுக்கைக் கொடுத்தால், இரசவாதப் பொன்னாகும். ஆனால், வெள்ளியுடன் பத்திற்கொன்று தாயைச்சேர்த்துக்கொள்ளவேண்டும்.

## 45. வீரிய விருத்தி லேகியம்.

பூமிசர்க்கரைக் கிழங்குச் சூரணம் விராகனெடை-௧௫, மேற்றோல் சீவிபிடித்த அதிமதுரச்சூரணம் விராகனெடை-௭½, மேற்றோல் நீக்கின வாதுமைப் பருப்பு விராகனெடை-௭½, கல் முதலியவைகள் ஆய்ந்து சுத்திசெய்த கசகசா விராகனெடை-௭½, மஞ்சட்கடுக்காய்த்தோற் சூரணம், விராகனெடை-௭½, ஆளிவிதைச்சூரணம் விராகனெடை-௭½, ஜாதிக்காய்ச்சூரணம் விராகனெடை-௬½, ஜாதிப்பத்திரிச்சூரணம் விராகனெடை-௬½, மாசிக்காய்ச்சூரணம் விராகனெடை மூன்று, அரிசித்திப்பிலிச் சூரணம் விராகனெடை-௫, கஸ்தூரி மஞ்சள் சூரணம் விராகனெடை-௫, பூனைக்காலி விதைச்சூரணம் விராகனெடை-௪, மேற்றோல் சீவினச் சுக்குச்சூரணம் விராகனெடை-௧௫, நீர்முள்ளிச்சூரணம் விராகனெடை-௪௫, அபின் விராகனெடை-௧½, சடைக்கஞ்சா பலம்-௪½, பசுவின்நெய் பலம்-௨௫, தேன் பலம்-௪, முருங்கைப்பிஞ்சு அல்லது, முருங்கைப்பூ விராகனெடை-௪, கற்கண்டு பலம்-௪, சீனிசர்க்கரை பலம்-௪, பசுவின்பால் படி-௧.

செய்முறை:—கஞ்சாவை ஜலத்தில் ஊறவைத்துச் செம்மையாகக் கசக்கி ஜலத்தில் அலம்பிக் கழுவ வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி எழு தடவைகள் செய்தால், கஞ்சா சுத்தியாய்விடும். இந்தக்கஞ்சாவை நெய்யிற்போட்டுக்காய்ச்சி முறு முறுத்த பதத்திற் கம்பளியால் வடிகட்டி நெய்யைத் தனியே வைத்துக் கொள்ளவும். முருங்கைப்பிஞ்சை அல்லது, முருங்கைப்பூவைஅம்மியில் வெண்ணெய்போலரைத்து உ-ப்படி பசுவின்பாலிற் போட்டுக்காய்ச்சிக் கை... -ரயல் துழா



கிவந்து பாலானது கவ்வாவான பின்பு தனியேயெடுத்து வைத்துக்கொள்ளவும். அபினியைக் கல்வத்திலிட்டுப் பசும்பாலைச் சிறுகச் சிறுகவார்த்தரைத்து எல்லாமரைபட்டபின்பு ஒருபலம் பாலில் கலக்கிவைத்துக் கொள்ளவேண்டும். மேற்படி சூரணங்களை யெல்லாமொன்றாகச்சேர்த்துத் தனியே வைத்துக்கொள்ளவேண்டும். பாலில் சீனியையுங் கற்கண்டையுஞ் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் முன் கலந்துவைத்திருக்கிற சூரணத்தைத் தூவிக் கிண்டிக்கிளறி முருங்கைப்பிஞ்சு அல்லது முருங்கைப்பூவைச் சேர்த்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற கஞ்சா நெய்யையுஞ்சேர்த்து நன்றாய்க் கிண்டிக்கிளறி ஆறினபின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற அபினியையுஞ் சேர்த்து மறுபடியுஞ் செம்மையாகக்கலந்து சக்தியுள்ளவர்கள் தங்கரேக்கு, வெள்ளிரேக்கு, முத்துப்பற்பம், பவளப்பற்பம் ஆகியவைகளைத் தங்கள் சக்திக்கியன்ற அளவு சேர்த்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-௧, ௧½.

இராக்காலங்களிற் சாப்பிட்ட பின்பு இதனைச்சாப்பிடுவது உசிதம்.

உபயோகம்:—தாதுபுஷ்டி, தேகதிடம், தேகபுஷ்டி, வீரிய விருத்தி, ஸ்தம்பன சக்தி முதலியவைகளுண்டாகும்.

### குறிப்பு.

இது ஒரு சிறந்த முறை. இது லாகிரிப் பழக்கமுள்ளவர்களுக்கு அதிக அனுகூலமானது. இன்னும்

தனால் அநேக ரோகங்கள் நீரும். அஜீரண ரோகம், மந்தாக்கினி ரோகம் முதலியவைகளும் நீரும். லாகிரியிற் பிரியமில்லாதவர்கள் மேற்கண்ட கஞ்சாவையும், அபினியையும் குறைந்த அளவாகச் சேர்த்துக் கொள்ளலாம். அல்லது அறவே நீக்கியும் விடலாம்.

### 46. மகா வீரிய லேகியம்.

(a) கசகசா, மேற்றோல் சீவின சுக்கு, லவங்கப்பட்டை, மிளகு, கொத்துமல்லிவிதை, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, லவங்கம், ஏலரிசி, சுத்திசெய்த கஞ்சா இவை வகை-க-க்குப்பலம்-க. இவைகளைப் பொன்னிறமாக வறுத்து சூரணித்துச் வைத்துக் கொள்ளவும். சீனிசர்க்கரை பலம்-கூ, பனைவெல்லம் பலம்-அ, நெய் பலம்-கூவ.

செய்முறை:—எல்லாச் சூரணங்களுடன் பனைவெல்லம், சர்க்கரை, கற்கண்டு, நெய், ஆகியவைகளையுங்கலந்து அம்மியில் அல்லது கல்வத்திலரைத்துலேகியம்போற் செய்துகொள்ளவும். இந்த லேகியத்திற்கு தண்ணீரும் நெருப்புமாகாது. அதாவது தண்ணீரைச் சேர்க்கலாகாது. நெருப்பில்வைத்துப் பக்குவப்படுத்தலாகாது.

பிரமாணம்:—விராகனெடை-ஐ, க. காலை மாலை இரண்டுவேளையு முபயோகித்துவரலாம். இன்னும் இதனை விசேஷ குணமுள்ளதாகச் செய்துகொள்ள வேண்டுமானால், பின்கண்ட வைகளையுஞ் சேர்த்துச் செய்துகொள்ள வேண்டியது.

(b) பூமிசர்க்கரைக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, மதனகாமப்பூ, பேதாளுவிதை, சாலாமிஸ்றி, ஷகாகுல்



மிஸ்றி இவை வகை-க-க்குப் பலம்-க, பூனைக்காலிவிதைபலம்-கஉ, றூமிமஸ்தகி பலம்-க, (இதனைத் தனியே பொடித்துவைத்துக் கொள்ளவும்.) அபின் விராகனெடை-சு.

(c) பொன் ரேக்கு வெள்ளிப் பற்பம், அயச் செந்தூரம், காந்த செந்தூரம், அப்பிரேக செந்தூரம் இவை வகை-க-க்கு விராகனெடை-க. (இவற்றுள் கிடைத்தவைகளிலேயும் தம் தம் சக்திக்கேற்ற அளவுஞ் சேர்த்துக்கொள்ளலாம். இவற்றை அறவே நீக்கியுஞ்செய்து விடலாம்) சீனிசர்க்கரை, அல்லது, கற்கண்டு பலம்-உ௦.

செய்முறை:—அபினியைக் கல்வத்திலிட்டுக்கொஞ்சம் பால்விட்டரைத்து வைத்துக் கொள்ளவேண்டும். குங்குமப்பூவைக் கல்வத்திலிட்டுக் கொஞ்சம் பசும்பாலைவிட்டு வெண்ணெய்போலரைத்துத் தனியே எடுத்துவைத்துக் கொள்ளவேண்டும். சாலாமிஸ்றி நீங்கலாக மற்றவைகளையெல்லா மொன்றாகச் சேர்த்திடித்துச் சூரணமாகச் செய்து வஸ்திரகாயஞ் செய்து குங்குமப்பூவையுஞ் சேர்த்து அம்மியில்வைத்துச் சர்க்கரை அல்லது கற்கண்டைச் சேர்த்தரைத்தெடுத்து மற்றவைகளையுஞ்சேர்த்து ஒன்றாக மிஸ்ரமித்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—விராகனெடை-ஒ, க.

(a) யிலி உள்ளதையும் (b) யில் உள்ளதையுமொன்றாகச் சேர்த்தரைத்து உபயோகிக்க வேண்டியதுதான் முறை. அப்படிக் கூடாதகாலங்களில் தனித்தனியாக மேற்கண்டபடி செய்து உபயோகித்துக் கொள்ளலாம்.

உபயோகம்:—இரத்த விருத்தி, வீரியவிருத்தி, தாது புஷ்டி, தேகபுஷ்டி, தேகதிடம், மனோதிடம், தேகவசீகரம், முகவசீகரம் முதலியவைகளுண்டாகும். இதுவுமொரு சிறந்தமுறை. இஷ்டமானவர்கள் இதைச் செய்தனுபவித்து நிச்சயித்துக்கொள்ளவும்.

## 47. வீரியத் திலா.

கருநாபி விராகனெடை-௪௨, எட்டிக்கொட்டை விராகனெடை-௪௨, நேர்வாளப்பருப்பு விராகனெடை-௪௨, வெண் குன்றிமணிப்பருப்பு விராகனெடை-௪௨, இந்திரகோபப்பூச்சி விராகனெடை-௪௨, வெள்ளாட்டுப்பால் பலம்-௨௪.

செய்முறை:—எட்டிக் கொட்டையைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துப் பாலிற்போட்டு இரண்டுநாளூறவைத்துச் சைப்பாக்கிக்கொள்ளவேண்டும். வெண்குன்றிமணிப் பருப்பையும் அவ்விதமே ஊறப்போட்டு சைப்பாக்கிக் கொள்ளவேண்டும். கருநாபியைத் தூள்செய்து கொள்ளவேண்டும். பிறகு எல்லாவற்றையு மொன்றுகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு வெள்ளாட்டுப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து அரைத்துப்பாலெல்லாஞ் சென்றபின்பு கடுகுப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவிற்போட்டுப் பாகப்படி குழித்தைலமிறக்கிக்கொள்ள வேண்டும்.

உபயோகம்:—இந்தத்தைலத்தில் அ-குன்றிமணியெடை எடுத்து இராக்காலங்களில் அவசியமான பாகத்தில் மலர், தையற் பாகம் ஆகியவைகள் நீங்கலாகப் பூசி வெற்றிலையை வதக்கி மேல்வைத்து மெதுவாகக் கட்டிவைக்கவேண்டும். இவ்விதம் ௧-வாரம் அல்லது



௪௦-நாள் செய்துவர நரம்புகளின்கோணல், அடிசிறுத்து நுனிபெருத்திருத்தல், அவை மெலிந்துபோயிருத்தல், அவை சோர்வை யடைந்திருத்தல், பாலியச்சேஷ்டையினாலுண்டான துர்க்குணங்கள் ஆகிய இழிகுணங்களெல்லாந் தீர்ந்து, நரம்புகள் பலப்பட்டுப் பெருத்து ஆண்மை, போகசக்தி முதலியவை யுண்டாகும்.

## 48. தாளக பற்பம்.

சுத்திசெய்த தாளகம் விராகனெடை-ந, இதைக் கல்வத்திலிட்டுப் பொடித்து-ந-முட்டையின் வெள்ளை அம்புலியைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து ஒரு உருண்டையாகச் செய்து ஒரு முட்டை யோட்டுக்குட்போட்டு அதன் வாயை வேறு முட்டைத் தோலாலடைத்து மூடி-௧௦-பலம் கோதுமைமாவைத் தண்ணீர்விட்டுப் பிசைந்து முன் முட்டைக்குக் கவசஞ்செய்து கவசத்தின் நான்கு பங்கெடைவறட்டியிற் புடம்போட்டுக் கவசஞ்சிவந்த பதத்தில் ஜாக்கிரதையுடனெடுத்துக் கொள்ளவும். அப்படி ஜாக்கிரதையுடனெடுக்காவிட்டால், மருந்து வீணாகிவிடும். அப்படி யெடுத்துவைத்துத் தானே குளிர ஆறினபின்பு ஜாக்கிரதையுடனெடுக்கத் தாளகமானது பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-௪.

அனுபானம்:—ஒரு வெற்றிலையில் வைத்து மென்று தின்னவும்.

உபயோகம்:—குஷ்டம், கிரந்தி ரோகங்கள் ஆகியவைகள் தீரும். தாது நஷ்டப்பட்டிருக்கிறவர்களுக்

ரு-க-விராகனெடை பசுவெண்ணெயில் மேற்கண்டபடி அநுபானித்துக் கொடுக்க தாதுநஷ்டந்தீர்ந்து தாதுவிருத்தி, தாதுபுஷ்டி ஆகியவைகளுண்டாகும்.

பத்தியம்:—வியாதியின் பலத்திற்குத் தகுந்தபடி புளி; புகை ஆகியவைகளை நீக்கவேண்டியது.

## 49. தாளக பற்பம் வேறு.

சுத்திசெய்த தாளகக்கட்டி விராகனெடை-க ஒரு பருமனான வெங்காயத்தை இதழிதழாகப் பிரித்து நடுவிலிருக்கிற வெங்காயத்தில் துவாரஞ் செய்து மேற்படி தாளகக்கட்டியை வைத்து மூடி அதன்மீது முன் பிரித்த வெங்காய இதழ்களை முறையே வைத்து-எ-சீலைமண் செய்துலர்த்தி - சுo - வறட்டியில் அவிபுடமாகச் சாக்கிரதையுடன் போட்டெடுக்கப் பற்பமா யிருக்கும்.

பிரமாணம்;—விராகனெடை உ-க.

அநுபானம்:—வயதானவர்களுக்கு வெண்ணெயிலும் முதுமை யடைந்தவர்களுக்குத்திராக்ஷப்பழத்தை யரைத்தவிழுதிலும் அநுபானித்து உபயோகிக்கவேண்டும்.

உபயோகம்:—பக்ஷவாதம், முகவாதம், நரம்புத்தளர்ச்சி ஆகியவைகள் தீர்ந்து தாதுவிருத்தி, போகசக்தி ஆகியவைகளுண்டாகும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபல மாகியவைகளுக்குத் தகுந்தபடி புளி, புகை முதலியவைகளை நீக்கிவைக்கவும்.



## 50. லிங்கச் செந்தூரம்.

கட்டின லிங்கம் பலம்-க. இதனை இரும்புச் சட்டியில் வைத்து அண்டத் தைலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து-அ-சாமநேரஞ் சுருக்கிட்டு எடுத்துப் பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை-க.

அநுபானம்:—வெண்ணெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—நரம்புகளின் தூர்ப்பலம் நீங்கி அது பலப்பட்டு தாதுவிருத்தி, தேகசக்தி, ஆண்மை முதலியவைகளுண்டாகும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலமாகிய வைகளுக்குத் தகுந்தபடி சமயோசிதம்போல புளி, புகை முதலியவைகளை நீக்கவேண்டியது.

## 51. ஜீவா மிருதலிங்க பற்பம்.

உலாந்தா லிங்கம் விராகனெடை-ரு, (இது ஒரே கட்டியாயிருக்கவேண்டும்) லவங்கச் சூரணம் விராகனெடை-சு, படிக்காரத் தூள் பலம்-ரு.

செய்முறை:— படிக்காரத்தை-உ-பாகமாக்கி ஒரு பாகத்தை ஒருமண் பாத்திரத்திற் பரப்பி அதன்மீது அரைவாசி லவங்கத்தூளைப் பரப்பி அதன்மீது லிங்கக் கட்டியை வைத்து அதன்மீது பாதி லவங்கத்தூளைப் போட்டு அதன்மீது பாக்கி படிக்காரத்தூளைப்போட்டு மறு பாத்திரத்தால் மூடி எ-சீலைமண் செய்துலர்த்தி - கசு - பலம் வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்க வெண்ணிறமான பற்பமா யிருக்.

பிரமாணம்:—அரிசியெடை-௨, ௩.

அனுபானம்:—பாலேடு, வெண்ணெய், தகுந்தலேகிய முதலியவைகளாம்.

உபயோகம்:—பிறவித்தாது நஷ்டத்தைத் தவிர மற்றெல்லாவகைத் தாதுநஷ்ட வகைகளுந் தீரும். தளர்ந்த நரம்புகள் பலப்பட்டு முறுக்கேறி ஆண்தன்மை முதலிய புருஷலக்ஷணங்களுண்டாகும். இதன் குணம் அநேகமாகையால், அனுபவத்தில் அவரவர்கள் தாம் தாமே தெரிந்துக்கொள்ளகூடும்.

பத்தியம்:—தேக சுபாவம், வியாதிபலம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி புளி புகை ஆகியவைகளை அறவே நீக்கியும் குறைவாகச் சேர்த்தும் சமயோசிதம்போ லேற்படுத்தவேண்டும். இதனை உபயோகிக்கிறவரையிலும் இதனை உபயோகித்த - ௪0 - நாள் வரையிலும் ஸ்திரீ சங்கமத்தை நீக்கிவைக்கவேண்டியது. புஷ்டியான ஆகாரம், மிட்டாய் தினுசு முதலியவைகளை அதிகமாகச் சேர்த்து வரவும்.

## 52. விருத்த கௌமார சிவகாமி பற்பம்.

சுத்திசெய்த கௌரிப் பாஷாணம் விராகனெடை-௧0, நாலாங்காய்ச்சல் வெடியுப்பு விராகனெடை-௬, தீபகர்ப்பூரத் தூள் விராகனெடை-௧௨.

செய்முறை:—ஒரு அகலில் அரைவாசி வெடியுப்புத் தூளைப் பரப்பி அதனடுவில் கௌரிக் கட்டியை வைத்து அதன்மீது மறுபாதி வெடியுப்புத் தூளைப் போட்டு அதன்மீது தீப கர்ப்பூரத் தூளைப் போட்டு மூத்தி மறு அகலால்மூடி-எ-சீலமண் செய்துலர்த்தி



௪0-பலம் வறட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் பெடுக்க வெடியுப்பும் கௌரியும் கலந்துருகியிருக்கும். இதனைப் பொடித்து அதற்குச் சமனெடை கஸ்தூரியைச் சேர்த்துப் பொடித்துச் சீஷாவிற்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை-௨.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவின் பாலேடு, தகுந்த லேகியங்கள் முதலியவைகளாம்.

உபயோகம்:—வயது தளர்ந்தவர்களுக்கும் யௌவன புருஷபலமுண்டாகும். தளர்ந்த நரம்புகள் பலப்பட்டு முறுக்கேறி, தேகதிடம், மனதிடம், ஊக்கம், தைரிய முதலியவைகளெல்லாமுண்டாகும்.

பத்தியம்:—உஷ்ண பதார்த்தங்கள், புளிப்பான பதார்த்தங்கள், எண்ணெய் சம்பந்தமான பதார்த்தங்கள், பெண், புகை ஆகியவைகளை நீக்கவேண்டியது.

## 53. சர்வ சஞ்சீவி பற்பம்.

சுத்திசெய்த பாலரசம் விராகனெடை-௬, அத்திப்பால் செல்லத்தக்க அளவு; திறமான பெருங்காயம் பலம்-௨0.

செய்முறை:—பாலரசத்தைக் கல்வத்திலிட்டு மேம்படி அத்திப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்துக்கைவிடாமல் நான்கு சாமநேரமரைத்து ஒரு உருண்டையாகச் செய்துகொள்ளவும். பெருங்காயத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி பாலைச் சிறுகச்சிறுகவார்த்து ௨-சாமநேரமரைத்து முன் உருண்டைக்கு எங்குஞ் சமமாயிருக்கும்படி கவசஞ்செய்துலர்த்தி, ௩ - சீலமண்

செய்துவர்த்தி உசு-பலம் வறட்டியில் அவிபுடமாகஇப்
டாறினபின்னெடுக்க வெண்ணிறமான பற்பமாயிருக்
கும்.

இந்தப் பற்பத்துக்குச் சமனெடை கஸ்தூரியைச்
சேர்த்தரைத்துச் சீஷாவிற்பத்திரப்படுத்தவும். இதனை
மேற்கண்டபடி கஸ்தூரியைச் சேர்க்காமல் தனியாக
வும் உபயோகிக்கலாம். இன்னும் அந்தந்த வியாதிக
ளுக்குத் தகுந்த அனுபானங்களிலும் உபயோகிக்கலா
ம். இது பெரும்பான்மையும் எல்லா வியாதிகளுக்கு
முபயோகமாகும்.

பிரமாணம்:—அரிசியெடை-உ, ங.

அனுபானமும், உபயோகமும்:—கஸ்தூரியையு
ம் இந்தப் பற்பத்தையும் சமனாகச்சேர்த்து மேற்கண்ட
பிரமாணப்படி வெண்ணெயில், அல்லது, பாலேட்டில்
அனுபானித்துபயோகித்துவர, நீர்த்துப்போன தாது
வானது கெட்டிப்பட்டு, புருஷசக்தி, தம்பனசக்தி ஆ
கியவைகளுண்டாகும். தளர்ந்த நரம்புகள் பலப்பட்டு
முறுக்கேறி உற்சாகமுண்டாகும்.

பெருங்காயத் தூள், மேற்சொல் சீவின சுக்குத்
தூள், இவைவகை-க-க்குக்குன்றிமணி யெடை-உ. இ
வ்விரண்டையுமிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பி
ரமாணப்படி யனுபானித்துண்ண, அஜீரணரோகம்,கு
ன்மரோகம் முதலிய இரைப்பை சம்பந்தமான பல வி
யாதிகள் தீரும். இது இரைப்பை வியாதிக்குச் சஞ்சீ
விக்கொப்பானது.

தேன் விராகனெடை-க, இதில் மேற்கண்ட பற்
பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, குஷ்



ரோகங்கள், கிரந்திரோகங்கள் ஆகியவைகளை வேரறு
த்து நாசமாக்கும்.

பொரித்த படிக்காரத்தூள் குன்றிமணியெடை-
அ, வெண்ணெய் விராகனெடை-ரு. இவ்விரண்டையு
மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி ய
னுபானித்துண்ண, பிரமேக ரணம், பிரமேகப்புண், பி
ரமேக வொழுக்கு முதலிய பிரமேக சம்பந்தமான எல்
லா வியாதிகளையும் மூன்று முதல் ஏழு நாளைக்குள்நிர்
மூலமாக்கும்.

ஜாதிக்காய்த்தூள், ஜாதிப்பத்திரித்தூள், குங்கும
ப்பூ இவை வகை-க-க்குக் குன்றிமணி யெடை-உ. இ
வை யெல்லாவற்றையுஞ் சேர்த்தரைத்து இதனுடன்
மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்து
ண்ண, இரத்தவிருத்தியுண்டாகி, இந்திரிய விளைவு அ
திகப்பட்டுத் தாதுபுஷ்டி, வீரியவிருத்தி, ஊக்கம்,தைரி
யம், ஆகியவைகளுண்டாகும். இரத்தத்திலுள்ள தோ
ஷமெல்லாம் நீங்கிச் சுத்த இரத்தமுண்டாகும். இது
ஒரு கற்பத்துக்குச் சமானமானதாகையால் புத்திமான்
களுக்குக் கைவல்யமாகும்.

## 54. துஷ்டரோகச் சண்டப்பிரசண்ட மாத்திரை.

பசுவின்நெய், சேராங்கொட்டை, வாலுழுவையரி
சி இவை வகை-க-க்குப் பலம்-உ.

பின்சொல்லப்பட்டிருக்கின்ற இரண்டு சரக்குக
ளையும் சேர்த்திடித்து வெண்ணெய்ப்போலான பின்பு,
பசுநெய்யையுஞ் சேர்த்துப் பிசைந்து சயம்பூசி
ன தாம்பிரப் பாத்திரத்தில்வைத்து, அதனடியில் ஆ
று விராகனெடை லிங்கக்கட்டியை வைத்துப் பாத்தி

த்தின்வாயைமூடி ஏழு சீலைமண்செய்துலர்த்தி அடுப்பின்மீதேற்றி ஆரம்பத்தில் ஒரு சாமம் தீபாக்கினியாக எரித்துப் பிறகு கமலாக்கினியாக மூன்று சாமமெரித்துக் குளிர ஆறினபின்பெடுத்து லிங்கத்தைப் பொடித்து வைத்துக்கொள்ளவும்.

இந்த லிங்க செந்தூரம் விராகனெடை-௪, முன் சொல்லியிருக்கிற பாஷாண பற்பங்களில் இஷ்டமான ஏதேனும் ஒரு முறையாகச் செய்யப்பட்ட பற்பம் விராகனெடை-௨, அல்லது, சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணப் பதங்கம், அல்லது, சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் விராகனெடை-௨, கஸ்தூரிவிராகனெடை-௧, குங்குமப்பூ விராகனெடை-௧. இவை யெல்லாவற்றையும் ஒன்றுகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இருபத்தெட்டுச்சாமம் அரைக்கவேண்டும். பிறகு அதனை வெயிலிலுலர்த்திக்கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்துப்பனிரண்டுசாமநேரமரைக்கவேண்டும். பிறகு உழுந்துப்பிரமாண மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய். இதனையுட்கொண்டவுடன் புதிதாகக்கறந்த பசுவின்பாலைப் பானஞ் செய்யவேண்டும்.

உபயோகம்:—பாலியச் சேஷ்டையினு லுண்டான நரம்புகளின் தளர்ச்சி, அவற்றின் சோர்வு, அவற்றின் கோணல், அவை அடிசிறுத்து நுனிபெருத்தி



த்தல் முதலிய இழிகுணங்கள் தீர்ந்து சுபாவமான புருஷசக்தி, ஆண்மை, முதலியவைகளுண்டாகும். வேறெந்த மருந்துகளினாலும் தீராத இந்தத் துஷ்ட வியாதியும் இந்த மருந்தினால்தீரும். பாலியச் சேஷ்டையினு லுண்டாம் வியாதிகளுக்கெல்லாம் இது வச்சிராயுதம் போன்றது. பசிதீபனம் அதிகப்பட்டு ஆகாரம் அதிகமாகச் செல்லும். தேகத்தில் சுத்தமான இரத்தமுண்டாகும். இருமல், சுவாசகாசம் முதலிய வியாதிகளும் நீங்கித் தேகதிடம், தேகபலம் முதலியவைகளுண்டாகும்.

## 55. அம்பர் மாத்திரை.

உயர்ந்த அம்பர் விராகனெடை-௧௨, உயர்ந்த கஸ்தூரி, ஜாமிமஸ்தகிச் சூரணம், இலவங்கச் சூரணம் இவை வகை-௧-க்கு விராகனெடை-௧௰, சாலாமிஸ்திரிச் சூரணம் விராகனெடை-௨, பருத்திவிதைப் பருப்பு விராகனெடை-௪, சசகசாத்தோற் கஷாயம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி கஷாயத்தைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேர மரைத்து இரண்டு குன்றிமணி யெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து அதன்மீது தங்கரேக்கைச் சுற்றி வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பாலேடு, முதலியவைகளாம். இந்தமாத்திரையை யுட்கொண்

டவுடன் புதிதாகக் கறந்த பசுவின்பாலைப் பானஞ் செய்யவேண்டும்.

உபயோகம்:—காமக்கிளர்ச்சியை அதிகமாக உண்டாக்கும். தளர்ந்த நரம்புகள் முறுக்கேறிப் பலப்பட்டு, தாதுவிருத்தி, போகசக்தி ஆகியவைகளுண்டாகும். இன்னும் தம்பனசக்தி, வீரியவிருத்தி முதலியவைகளுண்டாவதுடன் இது புருஷர்களுக்கு அதிகப் பிரயோசனத்தைக் கொடுக்கும். இதற்கு மன்மதபாணமென்னும் மறுபெயருமுண்டு.

கசகசாத்தோற் கஷாயம்:—விதை நீக்கப்படாத கசகசாக் கூடாயிருந்தால் உத்தமம், அவ்விதக் கசகசாக்கூடு பலம்-க. அரைப்படி ஜலத்தில் இதனை இடித்துப்போட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாட்காலையிற் காய்ச்சி எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி இளஞ்சூட்டுடனேயே வடிகட்டிக்கொள்ள வேண்டும். கசகசாவோடுள்ள கூடானது வடதேசத்திற் கிடைக்கக்கூடும். ஆனால், தென்தேசத்திற் கிடைப்பதரிது. அந்தச் சமையங்களில் இவிடத்திற் கிடைக்கும் கசகசாத்தோல் பலம்-க. கசகசா பலம்-க. ஆகிய இரண்டையும் சேர்த்திடித்து முன் சொல்லியிருக்கிற பாகப்படி கஷாயஞ்செய்து கொள்ளவும். இது சற்றேறக்குறைய முன் கஷாயத்திற்கு ஒத்ததாகவே யிருக்கும்.

## 56. இராஜ தம்பன மாத்திரை.

யௌவனமுள்ள ஜாதிச் சேவலின் பீஜத்தைச் சுத்திசெய்து வைத்துக்கொள்ளவும். அதற் கிரண்டு பங்கு இந்திராணி உப்பைத் தூள்செய்து இரண்டு பங்காகச்செய்து ஒருபங்கை ஒரு சிறு கலயத்திற்குட்ப



ரப்பி அதன்மீது முன் சுத்திசெய்து சித்தப்படுத்தி வைத்திருக்கிற பீஜத்தைவைத்து அதன்மீது மறுபாதி இந்திராணி உப்புத்தூளையும் போட்டு வாய்பந்தனம்செய்து அரைப்படி மணலை ஒரு மண் பானையிற் போட்டு அதன்மீது அந்தக் கலயத்தைவைத்து அதன்மீது அரைப்படி மணலைப்போட்டு மூடிவிடவேண்டும். மணலானது பானையின்வாய்மட்டம் நிறைந்திருக்கும்படியாகக் கொட்ட வேண்டியது. பானைவாயை மண்தாலத்தால் மூடி இரண்டொரு சீலைமண்செய்து நான்குசாமநேரம் கமலாக்கினியாக வெரித்து ஆறினபின்னெடுத்தால் கலயத்திற்குள் மணலைப் போலிருக்கும். இதனைச் சீஷாவிற் பத்திரப்படுத்தவேண்டும்.

இதனைத் தம்பனத்திற்காகத் தனியாகவும் உபயோகிக்கலாம். ஆனால் கீழ்க்கண்ட முறைப்படிசெய்து உபயோகிப்பது உத்தமம்.

மேற்படி பீஜமணல் ஒருபங்கு, உயர்ந்த அம்பர் ஒருபங்கு, உயர்ந்த கஸ்தூரி அரைப்பங்கு, குங்குமப்பூ காற்பங்கு.

இவைகளெல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்துப் பொடித்துத் தேனைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாமநேரமரைத்துக் குன்றிமணிப் பிரமாண மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பாலேடு முதலியவைகளாம். இதனை யுட்கொண்டவுடன் காய்ச்சிக் கற்கண்டிட்டபாலைப் பானஞ்செய்யவேண்டும்.

உபயோகம்:—நீர்த்துப்போ யிருக்கிற இந்திரியமானது இறுகிக் கெட்டிப்படும். அரிதஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம், இந்திரிய சிராவகம், இந்திரியக் கசிவு ஆகியவைகள்தீர்ந்து, போகசக்தி, தம்பனசக்தி, ஆண்மை, வீரியம், புருஷலக்ஷணம் ஆகியவைகளுண்டாகும். சோர்ந்து தளர்ந்த நரம்புகள் முறுக்கேறிப் பலப்பட்டு மகா ஊக்கத்தையும் மனோற்சாகத்தையும் கொடுக்கும். இதைப்பற்றி விசேஷமா யிங்கெழுத இடமில்லை யாகையால், அவரவர்கள் தம் தம் அனுபவத்தால் நிச்சயித்துத் தெரிந்துகொள்வார்களாக.

## 57. தாளக பற்பம்.

கிளிஞ்சிற் சுண்ணாம்பு விராகனெடை-௫, சுத்தி செய்த அரிதாரம் விராகனெடை-௫, எருக்கம்பால் செல்லத்தக்க அளவு, வேப்பிலை பலம்-௧௨.

செய்முறை:—மேற்கண்ட இரண்டு சரக்குகளையுங் கல்வத்திலிட்டு அரைத்துப் பொடித்து எருக்கம்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்து மறுநாள் எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாம நேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி மேற்படி வேப்பிலையை வெண்ணெய்போலரைத்து அதற்குள் பில்லையைவைத்து ஏழு சீலைமண்செய்து கொஞ்சம் ஈரமுலர்த்தி ஒரு சட்டியில்வைத்து மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண்செய்து அடுப்பேற்றிப் பதினாறுசாமம் கமலாக்கினியாக எரித்து ஆறவிட்டெடுக்க, இரண்டு சரக்குஞ்சேர்ந்து வெண்மையான பற்பமாக விருக்கும். எடை குறையாமல் வைத்த எடை சரியாயிருக்கும்.



பிரமாணம்:—அரிசியெடை-௪.

அனுபானமும் உபயோகமும்:—சாலாமிஸ்றிச் சூரணம், தண்ணீர்விட்டான் கிழங்குச்சூரணம் இவ்விரண்டும் வகை-௧-க்குக் குன்றிமணியெடை-௮, திருநீற்றுப்பச்சைவிதை குன்றிமணியெடை-௧௮, (இதனை இடிக்காமல் முழுசாகச் சேர்த்துக்கொள்ளவும்.) இம்மூன்றையும் மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இந்திரிய சிராவகம், இந்திரியம் நீர்த்திருத்தல் ஆகியவைகள் தீர்ந்து, தாது புஷ்டியு முண்டாகும்.

புளித்தமோர், அல்லது, புளித்த தயிர்பலம்-௧. இதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, பலவகைப்பேதிகள், சீதபேதி, சங்கிரகணி ஆகியவைகள் தீரும்.

## 58. சஞ்சீவிலோக செந்தூரம்.

அசல் தரமான *எஃகுத்துண்டு தேவையான அளவு. இதனைக் கரிநெருப்பிற் பழுக்கக்காய்ச்சித் தித்திப்புக் குமட்டிப்பழச்சாற்றிற் றோய்க்கவேண்டும். குளிர ஆறினபின்னெடுத்து முன்போற்காய்ச்சி முன்போற் றோய்க்கவேண்டும். இவ்விதம் இருபத்தொரு தடவைகள் மடக்கி மடக்கிக் காய்ச்சித் தோய்த்தால் எஃகுவானது நொறுங்கும் பக்குவமாகிவிடும். சில சமயம் பன்னிரண்டு, பதினான்கு தடவைகளில் நொறுங்கும் பக்குவமாகிவிடும். அப்படியானால் அதுவே பக்குவமென நிறுத்திக்கொள்ளலாம். ஆயினும், இருபத்தொருதடவைகள் காய்ச்சித் தோய்ப்பதுதான் உத்தமமான வழி.

பிறகு இதனைக் கல்வத்திலிட்டுத் தூள்செய்து இரண்டரைப்பலம் தூளிற்கு இருபத்துநான்கு பலம்வீதம் நெல்லிக்காய்ச் சாற்றை வார்த்துக் குழப்பி நிழலில் வைத்துவரச்சாறெல்லாஞ்சுண்டி எஃகும் செந்தூரமாகிவிடும். ஏதேனும் கொஞ்சம் குறைவாயிருந்தால் அதனைப்பொடித்து முன்போல் நெல்லிக்காய்ச்சாற்றை வார்த்துவைக்கச் செந்தூர மாகிவிடும். இஷ்டமானால் நெல்லிக்காய்ச்சாற்றை விட்டரைத்துப் பில்லைசெய்துலர்த்திப் புடமிட்டாலுஞ் செந்தூரமாகிவிடும். சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க, உ.

அனுபானமும், உபயோகமும்:—நெல்லிக்காய்ச்சாறு விராகனெடை-உ, தேன் விராகனெடை-உ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இந்திரியஸ்ராவகந்தீர்ந்து இரத்தவிருத்தி, இந்திரியவிருத்தி, தாதுபுஷ்டி முதலியவைகளுண்டாகும்.

சீந்திற் சர்க்கரை, ஏலரிசிச் சூரணம், இவை வகை-க-க்கு விராகனெடை-வ. இரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, மூன்று வேளையில், அல்லது, மூன்று நாளைக்குள் எல்லாவகை சுரங்களும் குணமாகி விடும்.

தேன் விராகனெடை-க. இதிற் மேற்படி செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, நாட்பட்ட சுரங்கள் குணமாகும்.

பசுவின் வெண்ணெய், அல்லது, பாலேடு விராகனெடை-க. இதில் மேற்படி செந்தூரத்தைப் பிரமா



ணப்படி யனுபானித்துண்ண, சாலின் தூர்ப்பலம், ஒழுங்கீனம் ஆகியவைகள் நீங்கி அது பலப்பட்டுத் தேகாரோக்கிய முண்டாகும்.

பழமையான பனைவெல்லம் விராகனெடை-க, மாவுப்பு விராகனெடை-வ. இரண்டையுஞ் சேர்த்தரைத்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, மூலரோகங்கள் தீர்ந்து, தேகபலம், தேகதிடம் முதலியவைகளுண்டாகும்.

குறிப்பு.

தித்திப்புக் குமட்டி யென்பதற்கு "கர்பூஜ்" என்று ஹிந்துஸ்தானியில் சொல்லப்படும். சிறு பூசணிக்காயைப் போன்று, அறுத்தால் உள்ளே சிவப்பாகவும் விதைகள் கருப்பாகவும் ஜலம் நிறைந்துள்ளதாகவு மிருக்கும்.

## 59. வீரசூர லிங்க செந்தூரம்.

சுத்திசெய்த உலாந்தாலிங்கம் பலம்-க, தேன் பலம்-உச, நெய் பலம்-உச, சேராங்கொட்டை பலம்-உச, மரைவைத்த இருப்பு டப்பி ஒன்று, எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—லிங்கத்தை இரும்பு டப்பியிற் போட்டு மரையை முடுக்கிக் கெட்டிப்படுத்தி விடவேண்டும். சேராங் கொட்டையை மைபோலிடித்து, நெய், தேன் ஆகிய இரண்டையும் சேர்த்துக்கரைத்து ஒரு ஈயம்பூசின செப்புச்சட்டியில் விட்டு அதில் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிறடப்பியைப் போட்டுச் சட்டிவாயை மூடிச் சீலைமண்செய்து அடுப்பேற்றி நான்கு சாமம் தீபாக்கினியாக வெரித்து ஆறினபின் னெ

இக்கச் செந்தூரமாகி யிருக்கும். இதனைக் கல்வத்திலிட்டு எருக்கம்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடுமூடி எழு சீலைமண் செய்துலர்த்தி இருபத்து நான்குபலம் வறட்டியில் அவிபுடமிட்டாறினபின் னெடுத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—அரிசியெடை-௨.

அநுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவினெய், பசுவின் பாலா[illegible] முதலியவைகளாம்.

உபயோகம்:—அடங்காத வீரத்தம்[illegible] சுறுசுறுப்பு, ஊக்கம், தைரியம், புருஷத்தன்மை முதலியவைகளுண்டாகும். தளர்ந்த நரம்புகள் பலப்பட்டு முறுக்கேறிப் போகசக்தியுண்டாகும்.

பத்தியம்:—இதனை உபயோகித்து வரும்போது பெண், புளி ஆகியவைகளை நீக்கவேண்டும். இதனாலதிகப் பசியுண்டாகு மாகையால், ஜீரணசக்திக்குத் தகுந்தபடி சுத்தமான ஆகாரம், மிட்டாய் தினுசுகள், மதுரவஸ்துக்கள் ஆகியவைகளை உபயோகித்து வரவேண்டும். இன்னும் இதனுடன் தகுந்த லேகியங்களை உபயோகித்து வந்தால் இன்னும் விசேஷ குணத்தைக் காணலாம்.

## 60. நிராசை நிவாரண திலா.

இலவங்கச் சூரணம், இலவங்கப்பட்டைச் சூரணம், குங்குமப்பூ, நிழலிலுலர்த்தி பிடித்த வெள்ளெருக்கின் வேர்ப்பட்டைச் சூரணம், இவை வகை-க-க்கு விராகனெடை-அ. இவற்றைக் கல்வத்திலிட்டுக் கண்டங்கத்திரிச் சமூலச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்



து இரண்டு சாமநேரமரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணமுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:—ஒரு மாத்திரையைக் கண்டங்கத்திரி யிலைச்சாற்றில், அல்லது, கண்டங்கத்திரிக் கஷாயத்தில் இழைத்து அவசியமான பாகத்திற் பூசிப் பனிரண்டு மணிநேரஞ் சென்றபின்பு வெந்நீரை வார்த்துக் கழுவிவிடவேண்டும். இவ்விதம் [illegible]ருவாரம், அல்லது, இரண்டுவாரம் செ[illegible]ர்லியச் சேஷ்டையினால் தளர்ந்[illegible] குறுகிக் கோணின அவயவங்கள் சீர்பட்டுப் புருஷத்தன்மை யுண்டாகும்.

## 61. நிராசை நிவாரண நெய்.

சுத்தமான பசுவின் நெய் பலம்-க, எருக்கம்பால் பலம்-க. (இது வெள்ளெருக்கம் பாலாயிருந்தா லுத்தமம்) இரண்டையுமிஸ்ரமித்து அடுப்பேற்றிச் சிறுதீயாகஎரித்துப் பாலெல்லாஞ் சுண்டினபின்பு நெய்யை மாத்திரம் எடுத்துக்கொள்ளவும். வெள்ளைப் பாஷாணம் விராகனெடை-ஒ, இதனை மைபோற் பொடித்து மேற்படி நெய்யிற் கலந்து புட்டியிற் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:—இதில் இரண்டு, அல்லது, மூன்று குன்றிமணியெடை யெடுத்துத் தையல், மலர் ஆகிய ஸ்தானங்கள் தவிர மற்ற இடங்களிற்பூசி வெற்றிலையை வதக்கி அதன்மீது வைத்துக் கட்டவேண்டும். இவ்விதம் தொடர்ச்சியாக மூன்றுநாட்கள் செய்யின் பாலிய சேஷ்டையினாலுண்டான சோர்வு, தளர்ச்சி, கோணல், அடிசிறுத்து நுனிபெருத்திருத்தல் முதலிய இ

ழிகுணங்களெல்லாம் நீங்கி, சுபாவஸ்திதியிலாகிச் சேர்ப்பட்டு, ஆண்மை புருஷத்தன்மை முதலியவைகளுண்டாகித் தாதுவிருத்தி யுண்டாகும்.

## 62. சஞ்சீவி சூதப் பற்பம்.

தேவையான அளவு கறியுப்பை ஒரு சட்டியிற் போட்டுக் கொல்லுலையில்வைத்து ஊதி அது கட்டியான பக்குவத்திலெடுத்து வைத்துக் கொள்ளவும். இதற்குப் பாகப்படுத்தின உப்பென்று பெயர்.

சுத்திசெய்த இரசம் வராகனெடை மூன்றரை, இதனைப் பத்துப்பாகமாகச் செய்து வைத்துக் கொள்ளவேண்டும். தூள்செய்த துருசுபலம்-௫, இதனையும்பத்துப்பாகமாகச்செய்து வைத்துக்கொள்ளவேண்டும்.

ஒரு ஈயம்பூசாத தாம்பிரப் பாத்திரத்தில் முன் பாகப்படுத்தின உப்புத்தூளைக் கொஞ்சம் போட்டுப் பரப்பி அதன் நடுவில் ஒரு சிறுகுழிசெய்து அதில் முன் இரசத்தின் ஒருபாகத்தைவிட்டு அதன்மீது துருசுத்தூளின் ஒரு பாகத்தைத் தூவி அதன்மீது முன்போல் உப்புத்தூளைப்பரப்பி அதனடுவில் ஒரு சிறு குழிசெய்து அதில் இரசத்தின் ஒரு பங்கைவிட்டு அதன்மீது துருசுத்தூளின் ஒருபாகத்தைப் போட்டுவிடவும். இவ்விதமே அடுக்கடுக்காய் உப்புத்தூளைப் பரப்பி அதனடுவிற் குழிசெய்து இரசத்தைவிட்டு அதன்மீது துருசுத்தூளை முறையேபோட்டு மேலடுக்கில் உப்பை மாத்திரம் பரப்பி, பாத்திரத்தின் வாயைமூடி உப்பையரைத்துச் சந்தில்லாமற் கவசஞ்செய்து அடுப்பேற்றிப்பனிரண்டு மணிநேரம் கமலாக்கினியாக எரிக்கவேண்டும். ஆனால், ஒவ்வொரு மணியிலும் தீயை



அதிகப்படுத்திக் கொண்டே வரவேண்டியது. இதிலுள்ள இரகசியமெல்லாம் அக்கினியை மணிக்கு மணி கிரமேணுவாக அதிகப்படுத்துவதேயாம். இதனைக்கைபாகமாக முறைப்படிசெய்தால், இரசமானது பற்பமாகியிருக்கும். இந்தப்பற்பம் குறைவின்றிப் பூரணமாமுடிந்ததற்கு அறிகுறியாவது இதனை வைத்தெரித்த தாம்பிரப்பாத்திரத்தின் மேற்புறத்தில் உப்பு படிந்திருப்பதேயாம்.

பிரமாணம்:—அரிசியெடை-௨.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவினெய், பாலாடை, பால்கவ்வா முதலியவைகளாம்.

உபயோகம்:—தளர்ந்து நடுக்கலெடுத்த நரம்புகள் பலப்பட்டுப்பெருத்து இறுகி முறுக்கேறித்தேகபலம், போகபலம் ஆகியவைகளுண்டாகும். தாதுவிருத்திக்காம் சிறந்த மருந்துகளில் இது முதற்றரமானது. ஆகையால், சமையோசிதமாகத் தகுந்த லேகியங்கள், கிருதங்கள் ஆகியவைகளில் அனுபானித் துபயோகித்துவந்தால், அதிகசிரேஷ்டமான குணத்தைத் தருமென்பதில் எவ்வித ஆக்ஷேபணையுமில்லை. புத்திமான்களுக்கும், யோகவான்களுக்கும் இம்முறையானது கைகூடிவரும்.

## 63. மகாவீரிய பால ரசா மிருதம்.

சுத்திசெய்த பாலரசம் வராகனெடை-௧௨, மூலாம் வெள்ளி வராகனெடை-௧௨. இந்த வெள்ளியால் சிறிய மூசையொன்று செய்துகொள்ள வேண்டும். கனமான ஒரு செங்கல்லினடுவில் இந்தமூசை யடங்கும்படியான ஒரு குழிதோண்டி, மூசையில் மேற்படி

இரசத்தைவிட்டு அந்தக்குழிக்குள் வைக்கவேண்டும். மூசையின் உதடானது கல்லின் மட்டத்திற்கு மேல் ஒரு அங்குல மிருக்கவேண்டும். இவ்விதம் சித்தப்படுத்திச் செங்கல்லை அடுப்பின்மீது வைத்து இலந்தைவிறகாலெரிக்கவும். மூன்றரைவீசை யெலுமிச்சம்பழங்களை கிறுத்தெடுத்து அவற்றைச் சாறுபிழிந்து எவ்வளவு சாறு வருகிறதோ அவ்வளவையும் வடிகட்டித்திப்பிநீக்கிப் பிங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது. ஒவ்வொருதுளியாக மேற்படி இரசத்திற்குச் சுறுக்குக்கொடுக்க வேண்டும். சாறெல்லாஞ் சுண்டினபின்பு எடுத்துக்கொள்ளவும்.

முன்போல் இரசத்தை வெள்ளிக் குகையில் வார்த்து முன்போல் வைத்துப் பக்குவப்படுத்தி முப்பத்தைந்துபலம் பருத்தியிலைச் சாற்றை முன்போல் துளித்துளியாகச் சுறுக்கிட வேண்டும். சாறெல்லாஞ் சென்றவுடன் கடவுளினது கிருபையால் இரசமானது பற்பமாயிருக்கும்.

### குறிப்பு.

இதனைத் துளித்துளியாக விட்டுக் கொண்டிருப்பது அதிகக் கஷ்டமாகையால் ஒரு சிறு கலயத்தினடியில் ஊசி கொள்ளும்படியான ஒரு துவாரமிட்டு அதில் மேற்படி சாற்றைவிட்டு இரசம் வைத்திருக்கிற மூசைக்கு நேரே கட்டித் தொங்கவைத்தால், இந்தத் துவாரத்தின் வழியாகச் சாறானது துளித் துளியாகத் தானே கசிந்து விழுந்து கொண்டிருக்கும். துளித்துளியாகச் சுறுக்கிடுவதற்கு இது மிகவும் சுலபமான மார்க்கம்.



பிரமாணம்:—கசகசா எடை-௨.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், அல்லது பாலாடை.

உபயோகம்:—கிரந்தி ரோகங்கள், மேகரோகங்கள், புண்கள், புரைகள் முதலிய அநேக சண்டிரோகங்கள் தீர்ந்து, இரத்த சுத்தி, இரத்த விருத்தி யுண்டாகும். பசி தீபனம் அதிகப்பட்டு ஆகாரம் அதிகமாகச் செல்லும். இந்திரியவிளைவு அதிகப்பட்டுத் தேகபுஷ்டி, தாதுபுஷ்டி, போக விருத்தி, ஆகியவைகளுண்டாகும். ஐந்துநாள், அல்லது, ஏழு நாளைக்குள் அடங்கா வீரிய முண்டாகும்.

பத்தியம்:—புகை, புளி, பெண் ஆகியவைகளை நீக்கவேண்டும். புஷ்டியான ஆகாரங்கள், மதுரமான வஸ்துக்கள், பால், நெய், இறைச்சி ஆகியவைகளை ஜீரணசக்திக்குத் தகுந்தபடி உபயோகித்து வரவேண்டும்.

## 64. தாம்பிர பற்பம்.

சுத்திசெய்த தாம்பிரம் விராகனெடை-௧, இதனை மெல்லிய தகடாக அடித்துக் கரிநெருப்பிற் பழுக்கக்காய்ச்சி மிளகாய் வேர்ச்சாற்றில் தோய்க்கவேண்டும். குளிர ஆறினபின்பு எடுத்து முன்போற் காய்ச்சி முன்போல் தோய்க்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி நாற்பது தடவைகள் செய்து எடுத்துக் கொள்ளவும்.

மிளகாயிலை பலம்-௧௫, நாவற்கொட்டைப் பருப்பு பலம்-௧௫. இவ்விரண்டையுஞ் சேர்த்தரைத்து

வெண்ணெய்போலரைபட்ட பின்பு எடுத்து உருண்டையாக உருட்டி அதற்குள் முன் சித்தப்படுத்தின தாம்பிரத் தகட்டை வைத்து மூன்று சீலைமண் செய்துலர்த்தி-உ௱-வீசை வறட்டியில் குழிப்புடமிடவும். குளிர ஆறினபின் னெடுத்தால் தாம்பிரமானது வெண்ணிறமான பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-க-உ.

அநுபானம்:—பசுவின் வெண்ணெய், பாலாடை முதலியவைகளாம்.

உபயோகம்:—மேக ரோகங்கள், கிரந்தி ரோகங்கள், குஷ்ட ரோகங்கள், குன்ம ரோகங்கள் முதலிய அநேக மகா ரோகக்கள் தீரும். இரத்த விருத்தி, தேகபுஷ்டி, தாதுபுஷ்டி, ஆகியவைகளுண்டாகித் தேகபலம், போகபலம், மனோபலம் முதலியவைகளுண்டாகும். இதன் சிறந்த குணம் இன்னும் அநேக மிருக்கின்றன. அநுபோகத்தில் நிச்சயித்துத் தெரிந்து கொள்ளக் கூடும்.

## 65. வெள்ளைப் பற்பம்.

சுத்திசெய்த வெள்ளைப் பாஷாணம் விராகனெடை-ந, (இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும்) இதனை ஒரு இரும்புச் சட்டியில் வைத்து அடுப்பின் மீதேற்றி இலந்தை விறகால் சிறுதீயாக எரித்துவரவேண்டும். இந்தப் பாஷாணச் சட்டியின் நான்கு பக்கங்களிலும் நான்கு சிறுகற்களை நட்டுவைத்து அவற்றில் ஒரு வஸ்திரத்துண்டை நான்கு பக்கமு முடிந்து அதனடுவில் காற்படி நாயுருவிச் சாம்பலைப் போட்டு அதில் சிறுகச் சிறுக ஜலத்தை விட்டுக் கொண்டிருக்க



வேண்டும். சாம்பல் மூலமாகச் செல்லும் ஜலமானது துளித் துளியாக பாஷாணக் கட்டியின்மீது விழும்படியாக மேற்படி வஸ்திரத்துண்டைத் தொட்டிலைப்போற் கட்டித் தொங்கவிட வேண்டும். இவ்விதம் நான்குமணிநேரம் சுறுக்கிட்டால் பாஷாணமானது பற்பமாகிவிடும்.

பிரமாணம்:—அரிசியெடை-க.

அநுபானம்:—வெண்ணெய், பாலாடை முதலியவைகளாம்.

உபயோகம்:—சன்னி பாதங்கள், வாயுசம்பந்தமான ரோகங்கள், கபசம்பந்தமான ரோகங்கள், சீல்வாயு, கிரந்தி ரோகங்கள், மேக ரோகங்கள் ஆகியவைகள் தீரும். தாதுவிருத்தி, தேகசக்தி, போகசக்தி ஆகியவைகளுண்டாகும்.

பத்தியம்:—புளி, புகை, பெண் முதலியவைகளை நீக்கவும்.

## 66. லோக வீரியாமிர்தம்.

எஃகு அரபொடி தேவையான அளவு. இதனைக் கல்வத்திலிட்டுத் தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்துக்கால்மணி நேரமரைத்து ஜலத்தைவிட்டுக் கழுவிச் சுத்திசெய்யவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி நூற்றிருபது தடவைகள் அரைத்தரைத்துக் கழுவ எஃகு சுத்தியாம்.

பிறகு மேற்படி எஃகுவை ஒரு பாத்திரத்திற்போட்டு அதன்மேல் நான்கங்குலம் நிற்கும்படியாக ஒட்டகையின் மூத்திரத்தை, அல்லது, பசுவின் மூத்திரத்

தை விட்டு அடுப்பேற்றிக் காய்ச்சவேண்டும். மூத்திரம் சுண்டினபின்பு புளித்ததயிரை விட்டுப் பிசைந்து நிழலிலுலர்த்தவேண்டும். கொஞ்சமும் ஈரமில்லாமலுலர்ந்தபின்பு ஓட்டில் வைத்துச் சீலைமண்செய்துலர்த்தி எட்டுவீசை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுத்துக்கொள்ளவும்.

இந்தப்பொடி ஆறு விராகனெடைக்கு ஒரு முட்டை மஞ்சட்கரு வீதமாகத் தேவையான மஞ்சட் கருக்களைச் சேர்த்து இரண்டு சாமநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடு மூடி எட்டு வீசை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுத்துக் கல்வத்திலிட்டு முன் கணக்கின்படி மஞ்சட் கருவை விட்டு முன்போலரைத்து முன்போற் பில்லை செய்துலர்த்தி முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கிமடக்கி நாற்பது புடமிட்டுத் தீர்ந்தால், முதற்றரமான செந்தூரமாகும். இருபது தடவை புடமிட்டுத் தீர்ந்தால், இரண்டாந்தரமான செந்தூரமாகும். பதினொரு தடவை புடமிட்டெடுத்தால் மூன்றாந்தர செந்தூரமாகும். எழு தடவை புடமிட்டெடுத்தால் நாலாந்தரமான செந்தூரமாகும். ஐந்துதடவை புடமிட்டெடுத்தால் ஐந்தாந்தரமான செந்தூரமாகும்.

பிரமாணம்:—முதல்தரம் அரை யரிசியெடை முதல் ஒரு அரிசியெடை வரையில்; இரண்டாந்தரம் ஒரு அரிசியெடை முதல் இரண்டரிசியெடை வரையில்; மூன்றாந்தரம் இரண்டரிசி முதல் நாலரிசி யெடை வரையில்; நாலாந்தரம் நாலரிசி முதல் எட்டரிசியெடை வரையில், ஐந்தாந்தரம் எட்டரிசிமுதல் பதினாறு அரிசியெடை வரையில்.



அனுபானம்:-பசுவின் வெண்ணெய், பாலாடை, தேன், நெய் முதலியவைகளாம். இன்னும் தகுந்த ஊறல்வாக்கள், லேகியங்கள் ஆகியவைகளிலும் அநுபானித்துக் கொடுக்கலாம்.

உபயோகம்:—தலைமூளை, இரப்பை, இருதயம், ஈரல் முதலிய இராஜ கருவிகளைப் பலப்படுத்தும். சுத்தமான இரத்த விளைவையுண்டாக்கும். கைவிடப்பட்ட தாதுநஷ்ட ரோகங்களை அறத்தீர்க்கும். அசுத்த இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, இரத்த சம்பந்தமான அநேக வியாதிகளைத் தீர்க்கும். சுத்த இரத்தத்தைவிருத்திசெய்து, தாதுபுஷ்டி, தேகபுஷ்டி, தேகவன்மை, தேகதிடம் ஆகியவைகளையுமுண்டாக்கும். மகா அருமையான மருந்துகளில் இதுவுமொன்று.

## 67. மகா வீரிய லிங்க செந்தூரம்.

உலர்ந்த லிங்கம் பலம்-௧௨, சுத்திசெய்த இரசம் பலம்-௧௨, வெங்காயச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—முன் இரண்டு சரக்குகளையுங் கல்வத்திலிட்டுப் பொடித்து வெங்காயச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்துக் கல்வத்துடன் ஈர முலரும்படியாக விட்டுவிட வேண்டும். மறுநாட்காலையில் அரைக்க ஆரம்பித்து முன் சாற்றையே சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்து முன்போல் கல்வத்துடன் உலரவிட்டு விடவேண்டும். இவ்விதம் தினமொன்றிற்கு இரண்டு சாம

வீதமாக நாற்பதுநாளரைத்து ஒரு தம்பிடி அகலமுள்ள சிறு பில்லைகளாகச் செய்து நிழலிலுலர்த்திக்கொள்ளவும்.

பூமியில் ஒன்றரைச்சாண் ஆழமும், நாலங்குல அகலமுமுள்ள ஒரு குழிதோண்டி அதில் அரைவாசி கற்சுண்ணாம்பைப்போட்டுக் கொஞ்ச மழுத்திவிட்டு, அதன்மீது முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற பில்லைகளைப் பரப்பி வைத்து அதன்மீதும் கற்சுண்ணாம்பைக் கொட்டி யழுத்தி இக்குழியைச் சுற்றிலும் நாலங்குலத்திற்கப்பால் பள்ளந்தோண்டிப் பதினொருவிசைவறட்டிகளைச் சுற்றிலுமடுக்கி நாலு பக்கங்களிலும் ஏககாலத்தில் நெருப்பிட்டு எரித்துச் செம்மையாகக் குளிர ஆறினபின்பு எடுக்கவேண்டும். இது சுமார் இருபதுமணிநேரமெரியும். இரசமும் லிங்கமும் தொந்தப்பட்டுச் செந்தூரமாகியிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-க-உ.

அனுபானமும், உபயோகமும்:——கறுப்புக் கடுக்காய், காய்ச்சுக்கட்டி, வாதுமைப்பிசின், கையாந்தகரை, ஆராவெல்பை, மருதோன்றியிலை ஆகியவைகளிலொன்றை, அல்லது, அகப்படக்கூடிய பலவற்றைக்கஷாயஞ்செய்து மேற்படி செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, கிரந்தி ரோகங்கள், குஷ்டரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

திருநாற்றுப் பச்சை யிலைச்சாறு அல்லது அதின் விதையை ஊறவைத்து எடுத்த கோழைவிராகனெடை-ரு, சீனிசர்க்கரை விராகனெடை-க. இவற்றை மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்



படி யனுபானித்துண்ண, உஷ்ண சம்பந்தமான வியாதிகள், உஷ்ண தேகிகளுக் குண்டாகும் வியாதிகள் ஆகியவைகள் தீரும்.

இலவங்கச் சூரணம், விராகனெடை-உ, தேன் விராகனெடை-க. இரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, சீதள சம்பந்தமான வியாதிகள், சீதள தேகிகளுக் குண்டாகும் வியாதிகள் முதலியவை தீரும்.

கசகசாத்தோற் கஷாயம் விராகனெடை-உ, தேன் விராகனெடை-உ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து, மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, நாட்பட்ட பீனிச ரோகங்கள் தீரும். பீனிச ரோகத்திற்கு இது சஞ்சீவிக் கொப்பானது.

நீர்முள்ளிச் சூரணம் விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இந்திரிய விருத்தி, தாதுபுஷ்டி, தேகசக்தி, போகசக்தி முதலியவைகளுண்டாகும். இது தாது விருத்திக்கு உபயோகப்படு முறைகளில் அருமையான ஒன்று.

## 68. அப்பிரேக பற்பம்.

கிருஷ்ண அப்பிரேக நவநீதம் பலம்-உ, (நவநீதம் எடுக்கும் விதம் நமது இரசவாத சிந்தாமணியிற் சொல்லப்பட்டிருக்கின்றது) இதனைக் கல்வத்திலிட்டுக் கோமயத்தைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாம நேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி எட்டுவிசை

வரட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுத்து முன்போல் கோமயத்தைச் சிறுகச் சிறுகவிட்டரைத்து முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கிக் கோமயத்தில் ஏழுபுடமும், கற்றாழைச்சாற்றில் மூன்றுபுடமும், கையாந்தகரைச் சாற்றில் மூன்றுபுடமும் ஆகப் பதிமூன்றுபுடமுந் தீர்ந்தால் அப்பிரகமானது பற்பமாகியிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-உ.

அனுபானமும், உபயோகமும்:—அரிசித்திப்பிலிச்சூரணம் விராகனெடை-ஒ, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, கபசுரம், கபசம்பந்த வியாதிகள் ஆகியவைகள் எத்தனை நாட்பட்டவாயினும் தீரும்.

சீந்திற்சர்க்கரை விராகனெடை-ஒ, நெய் விராகனெடை-ஒ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, எல்லாவகைப் பிரமியரோகங்களுந் தீரும்.

மஞ்சட் கடுக்காய்த்தோற் சூரணம், ஏலரிசிச் சூரணம் வகை-க-க்கு விராகனெடை-ஒ, கற்கண்டுத்தூள் விராகனெடை-க, இவற்றை மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண இரத்தத்திலுள்ள தோஷங்கள் நீங்கி நல்ல இரத்தமுண்டாகும்.

தேன் விராகனெடை-க. இதில் மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்டு, அதன்மீது காய்ச்சிக் கற்கண்டிட்டபாலைப் பானஞ் செய்துவர



சர்ப்பலம், கிழத்தன்மை ஆகியவைகள் நீங்கித்தேகந்திடப்பட்டு யௌவனதிசை யுண்டாகும்.

தேன் விராகனெடை-க, இதில் மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இருமல் மூலரோகம் ஆகியவைகள் தீரும்.

மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல் இவை வகை-க-க்குப் பலம்-ஒ. இவற்றில் ஒரு ஆழாக்கு ஜலத்தைவார்த்து மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டின கஷாயத்தில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, கண்பார்வை மந்தம் முதலிய கண்ணிலுள்ள தோஷங்கள் நீங்கிக் கண்ணொளி, பார்வைசக்தி ஆகியவைகளதிகப்படும்.

இன்னும் அந்தந்த ரோகங்களுக்குத் தகுந்த அனுபானங்களிற் கொடுக்க அநேக வியாதிகள் தீரும். இது வைத்தியர்களின் யுக்திப் பிரமாணத்தையும் அனுபவப் பிரமாணத்தையுஞ் சார்ந்தது.

## 69. வெள்வங்க பற்பம்.

சுத்திசெய்த வெள்வங்கம் விராகனெடை-எஒ, சுத்திசெய்த இரசம் விராகனெடை-எஒ, கம்பி வெடியுப்பு விராகனெடை-உச.

செய்முறை:—ஈயத்தையும் இரசத்தையும் தொந்தித்து வெடியுப்பையுஞ் சேர்த்து இரண்டு சாமமரைத்து ஒரு பெரிய கலசத்திற்குட் போட்டு அதன் வாயை மண்தாலத்தால் மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி நான்கு வீசை வரட்டியிற் புடமிட்டு ஆறினபி

ன் னெடுக்க எல்லாம் மலர்ந்து பஸ்பமாகி யிருக்கும். இதனை வைக்குங் கலயமானது சற்று பெரிதாக இருக்கவேண்டும். இதனைக் கல்வத்திலிட்டு ஜலம் வார்த்தரைத்துத் தெளிய வைத்துத் தெளிவை யிறுத்துவிடவேண்டும். இவ்விதம் கழுவிக் கழுவி உவர்ப்புப்போகிற வரையில் தெளிவை யிறுத்துச் சுத்திசெய்து வெயிலிலுலர்த்திப் பஸ்பத்தை யெடுத்துப் பத்திரப்படுத்தவேண்டும். இது ஒரு இலகுவான முறையா யிருந்த போதிலும் காரியத்தில் அதிக விசேஷகுண முள்ளது.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-௨.

அனுபானம்:—தேன், நெய், வெண்ணெய் முதலியவைகள்.

உபயோகம்:—இது பிரதானமாய் இந்திரிய சிராவக ரோகத்தைக் கண்டித்து இந்திரிய விளைவை அதிகப்படுத்தி தாதுபுஷ்டி, தேகபுஷ்டி, போகசக்தி முதலியவைகளை யுண்டாக்குவதில் இது மிகவுஞ் சிறந்தது. மேகரோகங்கள், பாண்டுரோகங்கள் ஆகியவைகளுந் தீரும். இன்னும் அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்த அனுபானங்களிலுபயோகிக்க அநேக ரோகங்கள் தீரும்.

### 70. சொர்ண அப்பிரேகம்.

சுத்திசெய்த வெள்வங்கம் விராகனெடை-௰, வெண்காரம் விராகனெடை-௰, கெந்தகம் விராகனெடை-௰, சுத்திசெய்த இரசம் விராகனெடை-௰, நவச்சாரம் விராகனெடை-௧௫.



செய்முறை:—இரசத்தையும் வெள்வங்கத்தையும் தொந்தித்துக் கல்வத்திலிட்டு மற்றச்சரக்குகளையுஞ் சேர்த்து இரண்டு சாமநேரமரைத்து மைபோலான பின்பு ஐந்துபலம் மருதாணியிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்துச் சாறெல்லாஞ் சென்றபின்பு கொஞ்சமும் ஈரமில்லாமலுலர்த்திப் பொடித்துச் சீலமண்செய்த அக்கினி சீஷாவிற்போட்டு வாய்பந்தனஞ் செய்யாமல் கரிநெருப்பில் வைத்து எரிக்கவேண்டும். அல்லது ஒருசட்டியினடுவில் துவாரமிட்டு அதில் சீஷாவை விட்டு நான்கங்குலம் கீழிருக்கும்படியாகச் செய்து அடுப்பின்மீது வைத்தெரிக்கவும். எரிக்கும்போது இரும்புச்சலாகையால் துழாவிவரவேண்டும். அடிக்கடி துழாவிவராவிட்டால் மருந்தானது சீஷாவின் கழுத்திற்பற்றிப் பிடித்துக்கொள்ளும். மருந்து பூரணச்செம்மையாகச் சிவந்துவிட்டால் பதமெனஆறவிட்டு உலர்ந்தபின்பு எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧.

அனுபானம்:—வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—இந்திரிய சிராவகத்தைக் கண்டித்து தாதுபுஷ்டி, தாதுவிருத்தி ஆகியவைகளை யுண்டாக்கும். இராஜ கருவிகளைப் பலப்படுத்தும் முக்கியமாய் இரைப்பையின் வியாதிகளையுங் கண்டிக்கும். ஸ்திரீ மேகவொழுக்கையும் நிறுத்தித் தேகத்தைப் பலப்படுத்தும்.

## 71. வெள்வங்க பற்பம் (வேறு.)

சுத்திசெய்த வெள்வங்கம் பலம் - உ, உள் ஐவ்வை நீக்கிச் சுத்திசெய்த அண்டத்தோல் பலம்-உ, சோற்றுக்கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—முட்டை யோட்டைக் கல்வத்திலிட்டு நுண்மையாகப் பொடித்துக்கொள்ளவும். வங்கத்தை இரும்புப் பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி வங்கமுருகினவுடன் மேற்படி முட்டைத்தோற் றூளைச்சிறுகச் சிறுகக் கிராசங்கொடுத்து இரும்புக் குழவியால்அல்லது இரும்புக் கட்டப்பாரையால் தேய்த்து வரவும் வேண்டும். தோடெல்லாஞ் சென்று வங்கமும் பற்பமாகிவிடும். ஆனலது, வருணத்திற் கருப்பாயிருக்கும். இவை யெல்லாவற்றையும் கல்வத்திலிட்டுச் சோற்றுக்கற்றாழைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாமநேரமரைத்து வில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்திப் பனிரண்டு வீசை வறட்டியிற் காற்றில்லாத விடத்திற் புடமிட்டு ஆறினபின்னெடுக்க வெண்ணிறமானபற்பமாகியிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-க.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், நெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—இந்திரிய சிராவகம், சுகநீர்ப் பெருக்கு, நீர்ப்பைத் துர்ப்பலம் ஆகியவைகள் நீங்கி தேகபலம், தாதுபுஷ்டி முதலியவை யுண்டாகும்.



## 72. இலகு பாஷாண பற்பம்.

சுத்திசெய்த வெள்ளைப் பாஷாணம் பலம்-க, திருகுகள்ளிச் சாம்பல் பலம்-உ0.

செய்முறை:—மேற்கண்ட யாவும் அடங்கத்தக்க சிறு கலயத்தில் மேற்படி திருகுகள்ளிச் சாம்பலில் அரைவாசியைப் போட்டழுத்தி அதன்மீது பாஷாணக் கட்டியைவைத்து அதற்குமேல்மறுபாதித் திருகுகள்ளிச் சாம்பலைப்போட்டு நன்றாயழுத்திவிட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு ரு-சீலைமண் செய்து பிறகு கலயமுழுமையுஞ்சேர்த்து ரு-சீலைமண்செய்துலர்த்திக் கொஞ்சமும் ஈரமில்லாம லுலர்ந்தபின்பு கூஉ-வீசை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுத்தால் பாஷாணமானது பற்பமாகியிருக்கும். எடுத்துப் பத்திரப் படுத்திக்கொள்ளவும்.

பிரமாணம்:—அரிசியெடை-க.

அனுபானம்:—வெண்ணெய், பாலேடு, திராக்ஷைப்பழம் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைச் சீதளவியாதிகள், மேகவாயுக்கள், கிரந்திகள், குஷ்டங்கள் முதலிய துஷ்டரோகங்கள் நீங்கி தாதுபுஷ்டி, தம்பனசக்தி, போகசக்தி ஆகியவைகளுண்டாகும். இது இலகுவான முறையாயிருந்தபோதிலும் குணத்தில் மிகவும் விசேஷம் பொருந்தியது.

பத்தியம்:—இதனை உபயோகிக்கும்போது நெய் அதிகமாகச்சேர்த்து வரவேண்டும். புளிப்பு வஸ்துக்களை அறவே நீக்கியும் வரவேண்டும். தேக சுபா

வத்திற்கேற்ற சத்துள்ள பதார்த்தங்களையே சேர்த்து வருவது நலம்.

### 73. தாரபற்பம்.

சுத்திசெய்த மடலரிதாரம் விராகனெடை-௨௫, எருக்கம்பால் பலம்-௪௮, கள்ளிப்பால் பலம்-௪௮, ௧௧-விராகனெடை அபினியை ௧௨-பலம் ஜலத்திற் கரைத்து வடிகட்டினபாகு, பச்சைக்கஞ்சா விலைச் சாறு பலம்-௪௮, (பச்சைக்கஞ்சா அகப்படாவிட்டால்-௨0-பலம் உலர்ந்த கஞ்சாவை ஒருபடி ஜலத்திற் போட்டுக் காய்ச்சி அரைப்படியாகச் சுண்டினபின்பு பிசைந்து வடிகட்டின கஷாயத்தைச் சேர்த்துக் கொள்ளலாம்.) கல்யாண முருக்கின் சாம்பல் பலம்-௩0.

செய்முறை:—தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம்பாலைச் சிறுகச்சிறுக வார்த்தரைக்கவேண்டும். அந்தப் பாலெல்லாஞ் செலுத்தியபின்பு, கள்ளிப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து முன்போலரைக்க வேண்டும். பிறகு அபின் பாகைவிட்டு முன்போலரைக்கவேண்டும். அதன்பிறகு கஞ்சாவிலைச்சாற்றை அல்லது, கஞ்சாவிலைக் கஷாயத்தைச் சிறுகச் சிறுகவார்த்து முன்போலரைக்கவேண்டும். பிறகு சிறு பில்லைகளாகச்செய்து வெயிலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவேண்டும். சயம்பூசின ஒரு தாம்பிரக்கிண்ணியில் கல்யாண முருக்கின் சாம்பலில் அரைவாசியைப் போட்டுக் கொஞ்சமழுத்தி அதனடியில் முன் சித்தப்படுத்தின பில்லைகளைவைத்து அதன்மீது மறுபாதிச் சாம்பலைப்போட்டுச் செம்மையாக அழுத்தித் தாம்பிரத்தாலத்தினால் வாய்பந்தனஞ்செய்து வாய்க்கு எழு சீ



லைமண்செய்து உலர்த்திப் பிறகு பாத்திரமுழுவதும் எழுசீலைசெய்து உலர்த்தி அடுப்பேற்றிக் கமலாக்கினியாகப் பதினாறுசாமநேரமெரித்துக் குளிர ஆறின பின்னெடுக்கப் பற்பமாகியிருக்கும். இதனைக் கொஞ்சம் நெருப்பிலிட்டுப் பரீக்ஷித்தால் புகையாமலிருந்தால் உத்தமம் புகைந்தால் முன்போல முன்சாம்பலுக்குள்வைத்து முன்போற் சீலைசெய்து எட்டுச்சாமநேர மெரிக்கவேண்டும். கடவுளினது கிருபையால் நெருப்பிற்கு ஜெயமாகி திவ்யமான பற்பமாயிருக்கும். இதனைச் செய்வதற்கு தேகசிரமமும் திரவியச்செலவும் அதிகமாயினும் ஒருதடவை செய்துகொண்டால் ஆயுள்முழுவதும் உபயோகமாகும். இது மிகவும் அருமையான முறைகளில் ஒன்று. கஷ்டத்திற்குப் பால்மாறாமலும் பணச்செலவிற்குப் பின்வாங்காமலும் செய்து கொள்பவர்கள் அதிக அதிஷ்டசாலிகளென்று சொல்லவேண்டும். எல்லா வியாதிகளிலும் இதனை உபயோகிக்கலாம். இது ஒரு சஞ்சீவிக்கொப்பானது.

பிரமாணம்:—அரிசியெடை-௨-௧.

உபயோகம்:—கிரந்திரோகங்கள், குஷ்டரோகங்கள், கிவ்வாயுகள், மூலரோகங்கள், பவுத்திரரோகங்கள், புண்கள், கட்டிகள், படைகள், நாட்பட்ட இந்திரிய ஸ்ராவக ரோகங்கள், சுவாசகாசம், எந்தமருந்திலுந் தீராதென்ற இருமல் முதலியரோகங்களும், எல்லாவகைச் சுரரோகங்களும் தீரும். போகசக்தி, தம்பனசக்தி, தாதுபுஷ்டி முதலியவைகளுமுண்டாகும். இன்னும் அந்தந்த வியாதிகளுக்காம் தகுந்த அநுபானங்களுடன் உபயோகிக்க அநேக வியாதிகள் தீரும்.

## 74. வெள்ளிப் பற்பம்.

மூன்று விராகனெடை யளவுள்ள வெள்ளித்தகடு-க. மடலரிதாரம் விராகனெடை-சு.

செய்முறை:—மடலரிதாரத்தைத் தண்ணீர்வார்த்து வெண்ணெய்போலரைத்து வெள்ளித்தகட்டின் இருபுறங்களிலும் கவசஞ்செய்துலர்த்தி அதை ஒரு ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஏழு சீலைமண்செய்துலர்த்தி எட்டுவிசை வறட்டியிற் புடமிட்டெடுக்க ஆகாயநிறம்போன்ற பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க.

அனுபானம்:—வெண்ணெய், லேகியங்கள் முதலியவைகளாம்.

உபயோகம்:—மார்பதிர்ச்சி, தாதுநஷ்டம் ஆகியவைகள் தீர்ந்து தேகபலம், தேகதிடம் முதலியவைகளுண்டாகும்.

## 75. வெள்ளிப்பற்பம் (வேறு)

படிக்காரம், கறியுப்பு, வெள்ளைப் பாஷாணம், வெண்காரம், நவச்சாரம் இவைவகை-க-க்கு விராகனெடை-கூ, சொக்கவெள்ளி விராகனெடை-கூ. (இதனைப் புளியிலைக்கனமுள்ள தகடாக அடித்துக்கொள்ள வேண்டும்.)

செய்முறை:—முன்கண்ட ஐந்து சரக்குகளையும் கல்வத்திலிட்டு ஒருசாமநேர மரைத்துப் பாகப்படி பதங்கித்துக் கொள்ளவும். இந்தப் பதங்கம் விராகனெடை-உ இதனை உமிநீரால் குழைத்து வெள்ளித்தகட்டின்மீது பூசியுலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐ



ந்து சீலைமண்செய்து மூன்றுவிசை வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்க வெள்ளியானது நீறி மலர்ந்து பற்பமாகிவிடும். இதனைக் கிரமப்படியும் பாகப்படியுஞ் செய்தால் ஓரேபுடத்திற் பற்பமாகிவிடும், பாக விகற்பத்தால் ஓரே புடத்திற் பற்பமாகாதிருந்தால் முன்போல் மறுபுடம்போடப் பற்பமாகிவிடும். இது காரசாரத்தினுலான பற்பமாயினும் மூலிகையினுலான பற்பத்திற்கு எத்தனையோ மடங்கதிகமான மேலான குணத்தைத் தரும். இது செய்வதற்கு மிகவும் சுலபமானது. குணத்திலதிக விசேஷமுள்ளது.

பிரமாணம்:—அரிசியெடை-க-சு.

அனுபானம்:—வெண்ணெய், தண்ணீர் முதலியவைகளாம்.

உபயோகம்:—இராஜ கருவிகளைப் பலப்படுத்தி தாதுபுஷ்டி, தேகபுஷ்டி ஆகியவைகளையுண்டாக்கும். தேகம், முகம் ஆகியவைகளில் பளபளப்பையும், மினுமினுப்பையு முண்டாக்கும். தேகதிடம், மனோதிடம், ஊக்கம், தைரியம் முதலியவைகளையும் விருத்தி செய்யும்.

## 76. லிங்க செந்தூரம்.

கட்டின லிங்கம் விராகனெடை-கூ, அபின் விராகனெடை-ரு, தேன், நெய், சேராங்கொட்டை இவை வகை-க-க்குப் பலம்-கூ.

செய்முறை:—அபினைக் கல்வத்திலிட்டு ஜலம்விட்டரைத்துக் குழைத்து மேற்படி லிங்கக்கட்டிக்குக் கவசஞ்செய்து வெயிலில் வைத்துலர்த்திக் கொள்ள வேண்டும். ஒரு இரும்புப் பாத்திரத்தில் நெய்யை

யும் தேனையும் விட்டுச் சேராங்கொட்டையை மை போலடித்துப் போட்டுக்கலக்கி முன் சுத்தப்படுத்தின லிங்கக்கட்டியை அதனடுவில் வைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாகஎரித்துவர, திரவமெல்லாஞ் சுண்டித் தானே நெருப்புப் பிடித்தெரிந்து அடங்கின பின்பு குளிர ஆறவைத்து லிங்கத்தை யெடுத்துப் பொடித்துச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-க.

அனுபானம்:—திராக்ஷபழம், வெற்றிலைமுதலியவைகளாம்.

உபயோகம்:—இதனை காற்பதுநாள் தொடர்ச்சியாக உபயோகித்துவந்தால் தாதுபுஷ்டி, போகசக்தி, தம்பனசக்தி ஆகியவைகளுண்டாகித்தேகபலம், தேக இடம் முதலியவைகளு மதிகரிக்கும்.

## 77. கிருஷ்ண அப்பிரேக செந்தூரம்.

கிருஷ்ண அப்பிரேகம் பலம்-ஈ, இதனைத் தூள் செய்து உச-பலம் எருமைப்பாலிற் போட்டு ஒருசாம நேரம் ஊறவைத்து எல்லாம் அடியிற் படிந்தபிறகு அந்தப்பாலை வேறு பாத்திரத்தி லிறுத்துக்கொண்டு வேறு இருபத்து நான்குபலம் எருமைப்பாலை அந்த அப்பிரேகத்தில் விட்டுக்காய்ச்ச வேண்டும். இரண்டு மூன்று கொதிவந்த பின்பு அதிலிருந்து அப்பிரேகத்தை யெடுத்து முன் பாலிற்போட்டுக் கையாற்பிசைந்து நான்கு மணிநேரம் ஊறவைக்கவேண்டும். ஒருமணி நேரத்திற்குள் இரண்டொரு தடவை பிசைந்து கொண்டிருக்கவும் வேண்டும். பிறகு கல்வத்திலிட்டு மேற்படி பாலைச் சிறுகச் சிறுகவார்த்து அரைக்கவேண்டும்.

249



அந்தப் பாலெல்லாஞ் சென்றபின்பு மறுபடியும் இருபத்து நான்குபலம் எருமைப்பாலில் ஊறப்போடவேண்டும். நான்குமணிநேரம் ஊறினபின்பு வேறு இருபத்து நான்குபலம் எருமைப்பாலிற்போட்டு இரண்டு மூன்று கொதிவந்தபின்பு இறக்கிக்காய்ச்சின பாலை யிறுத்துவிட்டுக்கல்வத்திலிட்டு முன்னூறவைத்தபாலைச் சிறுகச்சிறுகவார்த்து அரைக்கவேண்டும். அந்தப்பாலெல்லாஞ் சென்றபின்பு மறுபடியும் இருபத்து நான்குபலம் எருமைப்பாலில் ஊறப்போடவேண்டும். நான்கு மணிநேரம் ஊறினபின்பு வேறு இருபத்துநான்கு பலம் எருமைப்பாலிற்போட்டு அடுப்பேற்றி இரண்டு மூன்றுகொதிவந்தபின்பு இறக்கிக்காய்ச்சின பாலையிறுத்துவிட்டுக் கல்வத்திலிட்டு முன் ஊறவைத்த பாலைச் சிறுகச் சிறுகவார்த்தரைக்கவேண்டும். அந்தப் பாலெல்லாஞ் சென்றபின்பு முன்போல் இருபத்து நான்குபலம் எருமைப்பாலில் ஊறவைத்து முன்போல் புதிய பாலிற் போட்டுக் காய்ச்சி இறுத்து நீக்கி முன்போல்முன்ஊறவைத்த பாலிற்போட் டரைக்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் புதியபாலில் ஊறவைத்தும் மடக்கி மடக்கிப் புதியபாலிற் காய்ச்சி அந்தப்பாலை நீக்கித்தள்ளிவிட்டு முன் ஊறவைத்த பாலாலரைத்தும் ஏழுதடவைகள் மடக்கிச் செய்யவேண்டும். பிறகு வில்லைசெய்து நிழலிலுலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி ஏழுசீலை மண்செய்துலர்த்திப் பத்துவிசை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுத்துக் கல்வத்திலிட்டு வெண்ணிறமான வெங்காயச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு

சாமநேரமரைத்துப் பில்லை செய்துலர்த்தி முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கிமடக்கி மேற்படி வெங்காயச்சாற்றில் எழுதரம் புடமிடவும். பின்பு எலுமிச்சம்பழச்சாறு பலம்-எ, இதனைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்துச் சாறெல்லாஞ் சென்றபின்பு முன்போற் புடமிடவும்.

பிறகு திறமான பிராண்டிச் சாருயம் பலம்-எ, இதனையும் சிறுகச் சிறுக வார்த்தரைத்துச் சாருயமெல்லாஞ் சென்றபின்பு பில்லை செய்துலர்த்தி ஓட்டிவிட்டு மேலோடுமூடி முன்போற் பத்துவிசை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுத்துக் கொள்ளவும்.

இந்தச் செந்தூரத்தை ஒரு மெல்லியவஸ்திரத்தில் தளர்ச்சியாக முடிந்து ஒரு சீஷாவிற்குட் செலுத்தி வைத்துக்கொள்ளவும். நெய் பலம்-சு, ஊமத்தங்காய்-உ, தாளிசப்பத்திரி விராகனெடை-கவ, குங்குமப்பூ விராகனெடை-கஉ, இந்தச்சரக்குகளை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்திடித்து மேற்படி நெய்யிற் கலக்கி அதில் ஐந்துபடி ஜலத்தைவிட்டுக் கலக்கி ஒரு மண்பாத்திரத்தில் விட்டு முன் சித்தப்படுத்தின சீஷாவை அதற்குள் தொங்கவிடவேண்டும். இந்தப்பாத்திரத்தினடியில் சீஷாபடாமல் நான்கு அங்குலம் மேலேயிருக்கும்படியாக ஜலத்திற்குள் தொங்கவிட வேண்டும். பாத்திரத்தின் வாயைமூடிச் சீலைமண்செய்துலர்த்தி அடுப்பின் மீதேற்றிச் சிறுதீயாக எரிக்கவும். ஜலமெல்லாஞ் சுண்டிக்கொஞ்சம் ஜலம் பாக்கியாயிருக்கும் பதத்திலிறக்கி ஆறவைத்துச் சீஷாவிலுள்ள



செந்தூரத்தை யெடுத்து வேறு சீஷாவிற் பத்திரப்படுத்தவும் இது கறுஞ் சாயலான செந்தூரமாகியிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-க.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவினெய், தேன் முதலியவைகளும் இன்னும் அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்த அனுபானங்களுமாம். வியாதிக்குத் தகுந்தபடி இருபதுநாள், நாற்பதுநாள் உபயோகிக்கவும். இதனை யுட்கொண்டு அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பாலைப் பானஞ்செய்துவர வேண்டும்.

உபயோகம்:—இந்திரியவிளைவு அதிகரிக்கும். நீர்த்துப்போன விந்து கெட்டிப்படும். இந்திரிய ஸ்ராவகம், அரிதஸ்கலிதம் முதலியவைகள் நீங்கி தாதுபுஷ்டி, தம்பனசக்தி, போகசக்தி முதலியவைகளுண்டாகும். இது செய்வதற்குச் சற்று கடினமான தாயினும் இதனாலுண்டாகும் பிரயோசனம் அதிக மானதையால் இம் முறையையும் இதனுடன் சேர்த்திருக்கின்றார் போலும்.

மகாவீரியச்சிந்தாமணி

விளக்கச் சுருக்கம்

முற்றுப்பெற்றது.

## விண்ணப்பம்.

இந்த மகா வீரியச் சிந்தாமணியானது சுமார் 750 செய்யுட்களால் அமையப்பெற்ற ஓர் அருமையான கிரந்தம். இதிலுள்ள ஒவ்வொரு முறையும் அநேகமுறைகளைத் திரட்டி ஆராய்ந்து, தேர்ந்து தெளிந்தெடுக்கப்பட்டதாகும். இத்தகைய முறைகளின் அருமை பெருமைகளெல்லாம் வெகுநாள் அனுபவ சாலிகளுக்கும், இவைகளைக் கிரமப்படி செய்து உபயோகிப்பவர்களுக்குமாத்திரம் தெரியவரும். இதனுடன் தொடர்ச்சியாக மற்ற செய்யுட்களையும் அச்சிடலாமெனின், இக்கிரந்தம் உத்தேசத்திலும் அதிகம் விரிவெய்தி விட்டது. ஆகையால் முதற்பாகமென இதுவரையில் நிறுத்தி வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. கடவுளினது கிருபையாலும், பெரியோர்களினது ஆசீர்வாதத்தினாலும் இதன் அடுத்த பாகத்தையும் கூடிய சீக்கிரம் வெளிப்படுத்துவோம்.